V2)1,31'N91
N91.37.1
144897

வெளியீடு 3-6-1991 Issued 3-6-1991

18 ஜுலை 991
பூர், சென்னை-600
1535

# தமிழ்நாடு
## சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
### செயலக வெளியீடு

# TAMILNADU
## LEGISLATIVE ASSEMBLY DEBATES
### OFFICIAL REPORT

புதன்கிழமை, சனவரி 23, 1991-தொகுதி 37-எண் 1

Wednesday, the 23rd January 1991-Volume 37-No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009.**

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

பக்கங்கள்

(ஆ) வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள மலை வாழ் மக்களுக்கு காலனி வீடுகள் கிடைக்காதது குறித்து. .. .. ... .. 120–123

6. அறிக்கைகள் அளித்தல்—

(அ) பொதுக் கணக்குக் குழு. 124

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 124

7 அறிவிப்புகள்—

(அ) பொது விற்பனை வரி(இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.) .. ... 125

(ஆ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த)சட்ட முன்வடிவு, 1991 (ஆ.இ.).. ... ... 126

8. சட்ட முன்வடிவுகள்—(அறிமுகம் செய்தல்)—

(அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1991 .. .. ... 125

(ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 .. .. .. 125–126

(இ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு, 1991 .. ... .. 126

(ஈ) இயக்கூர்திகள் (தனிவகை முறைகள்) நீத்தறவுச் சட்ட முன்வடிவு, 1991 ... 127

9. ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானம்—விவாதம்—தொடர்ச்சி.

திரு. அ. கணேசமூர்த்தி .. ... .. 127–135

திரு. வ. அன்பழகன் ... ... ... 135–141

திரு. கோ. வீரையன் .. .. ... 141–153

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் ... 153–180

10. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் ... 180–182


144897 D

V211,31'N91

N91.37.1

தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

ஆளுநர்—திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

| | | |
|---|---|---|
| 1. | முதலமைச்சர் | மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர், மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உட்பட) மற்றும் ஆயத்துறை |
| 2. | கல்வி அமைச்சர் | மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : கல்வி, (தொழில் நுட்பக் கல்வி உட்பட) ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ்ப் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல். |
| 3. | சட்ட அமைச்சர் | மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்—அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல், சீட்டு நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உட்பட) மற்றும் வக்ஃப். |
| 4. | வருவாய்த்துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: வருவாய், மாவட்ட வருவாய்த்துறைப் பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர்கள், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம். |
| 5. | போக்குவரத்துத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : போக்குவரத்து, அரசுடைமையாக்கப் பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி. |

உள்ளடக்கம்.

23—1—1991.


| | பக்கங்கள் |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும். Personnel of the Government of Tamil Nadu — | iii–ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள், | xi-xiv |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல். (அகர வரிசைப்படி.) | xv–xxvi |
| 1. வினாக்கள்—விடைகள்— | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் .. — | 1–42 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் .. — | 42–68 |
| 2. தகவல் கோரல்— | |
| (அ) கோரிக்கைகளை வலியுறுத்தி உதவி மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் பொது மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு. | 68–74 |
| (ஆ) உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், எஸ். டி. உகம்சந்த், ஆகியோரின் அணியை "அ.இ.அ.தி.மு.க.–2" கட்சியாக அங்கீகரித்துள்ளது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து. — — .. | 74–112 |
| 3. அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையில் பேரவைத் தலைவரைத் தாக்கியது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு. | 112–115<br>123–124 |
| 4. விதி 111-ன் கீழ் அமைச்சரின் அறிக்கை— | |
| வேளாண்மைத்துறை அமைச்சர் 21-4-1990ஆம் நாளன்று ஆற்றிய உரையில் திருத்தம் .. | 116 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (அ) திருப்பூர் பகுதியிலுள்ள பனியன் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து. .. .. | 116–120 |

# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU

## THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | | |
|---|---|---|
| 1 | Chief Minister .. | **The Hon. Dr. M. Karunanidhi :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2 | Minister for Education | **The Hon. Dr. K. Anbazhagan :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Sciencs and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps., Ex-Servicemen and Archaeology. |
| 3 | Minister for Law .. | **The Hon. Thiru S. J. Sadiq Pasha :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4 | Minister for Revenue | **The Hon. Thiru Nanjil K. Manoharan :** Revenue, District Revenue Establishments, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5 | Minister for Transport | **The Hon. Thiru M. Kannappan :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |
| 6 | Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. Kandasamy :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |

| | |
|---|---|
| 7 Minister for Rural Development and Local Administration. | **The Hon. Thiru KO. SI. Mani:** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness. |
| 8 Minister for Food and Co-operation. | **The Hon. Thiru Pon. Muthuramalingam :** Food, Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 9 Minister for Agriculture. | **The Hon. Thiru Veerapandi S. Arumugam :** Agriculture, Agricultural Re-finance, Agricultural Engineering and Service Co-operarive Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 10. Minister for Public Works. | **The Hon. Thiru Durai Murugan :** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation, Programme Works, Highways and Electricity. |
| 11 Minister for Social Welfare and Rural Industries. | **The Hon. Thirumathi Subbulakshmi Jagadisan:** Social Welfare, including Chilcren and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |
| 12 Minister for Public Health | **The Hon. Dr. K. Ponmudi *alias* Deivasigamani** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |
| 13 Minister for Information and Labour. | **The Hon. Thiru K. N. Nehru :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census Employment and Training, Indian Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control Stationery and Printing, Government Press and Milk. |



| | |
|---|---|
| 14 Minister for Handlooms and Urban Development. | **The Hon. Thiru S. Thangavelu :** Handlooms, Textiles, Town Planning, Urban Development, Accommodation Control and Slum Clearance Board. |
| 15 Minister for Animal Husbandry. | **The Hon. Dr. K. Chandrasekaran :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 16 Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Thiru K. Sundaram :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| Parliament Secretary to Chief Minister. | **Thiru L. Ganesan.** |

| | |
|---|---|
| 6. அறநிலையத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : அறநிலையத் துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா. |
| 7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. கோ. சி. மணி : நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் கிராமப்புறக் கடன் சம்பந்தப்பட்டவை |
| 8. உணவு—கூட்டுறவுத்துறை அமைச்சர் | மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம்: உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள். |
| 9. வேளாண்மைத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட, பிரதம, கூட்டு இணைப்பு அமைப்புகள் உட்பட) மற்றும் உணவு உற்பத்தி. |
| 10. பொதுப்பணித் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. துரைமுருகன் : பொதுப்பணிகள், சிறு பாசனம், (சிறப்பு சிறு பாசனம் உட்பட) திட்டப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் மின்சாரம். |
| 11. சமூக நலம்—ஊரகத் தொழிற் துறை அமைச்சர். | மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உட்பட) பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உட்பட), கதர் வாரியம், பூமி தானம் மற்றும் கிராமதானம். |
| 12. மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுப்படுத்தல். |



| | |
|---|---|
| 13. செய்தி-தொழிலாளர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு, கே. என், நேரு : செய்தி மற்றும் விளம்பரம், திரைப் படத் தொழில், நுட்பவியல், திரைப் படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகைக் கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம் மற்றும் பால் வளம். |
| 14. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, இடவசதிக் கட்டுப்பாடு மற்றும் குடிசை மாற்று வாரியம். |
| 15. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சிக் கழகம். |
| 16. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. க. சுந்தரம் : ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர். |
| முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர். | திரு, எல். கணேசன். |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர் :

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி

மாற்றுத் தலைவர்கள் பட்டியல் :

திரு. சா. சிவசுப்பிரமணியன்.

திரு. எம். இராமச்சந்திரன்.

திரு. ஆ. நடராசன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி.

திரு. பி. வி. இராஜேந்திரன்.

திரு. செ. நூர்முகமது.

செயலாளர் :

திரு. த. ப. டில்லிதுரை.

டி2 53-364—C

## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### அ—தொடர்ச்சி.

18. ஆசையன், திரு. பெ. .. ஆண்டிப்பட்டி.

19. ஆண்டி அம்பலம், திரு. மெ. .. நத்தம்.

20. ஆறுமுகம், திரு. த. .. .. அரியலூர்.

21. ஆறுமுகம், திரு. வீரபாண்டி. சோ. சேலம்—2.

### இ

22. இரகுமான்கான், திரு. அ. .. பூங்கா நகர்.

23. இராசமாணிக்கம், திரு. இரெ. குத்தாலம்.

24. இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. மேலூர்.

25. இராசன், திரு. வி. பி. .. ராஜபாளையம் (செ.வ.)

26. இராசு, திரு. வி. கே. .. அரக்கோணம் (செ.வ.)

27. இராசு, திரு. வெ. .. .. குளத்தூர் (செ.வ.)

28. இராசேந்திரன், திரு. அ. .. போளூர்.

29. இராதா, திரு. எஸ். ஆர். .. மதுரை கிழக்கு.

30. இராதாகிருஷ்ணன், திரு. தே. சோழவந்தான்.

31. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்.

32. இராமசாமி, திரு. ஆ. மு. .. ஆத்தூர்.

33. இராமசாமி, திரு. கே. ஆர். .. திருவாடானை.

34. இராமசாமி, திரு. கே. வி. .. கரூர்.

35. இராமசாமி, திரு. மொஞ்சனூர் ப. அரவக்குறிச்சி.

36. இராமசாமி, திரு. வே. .. திருச்செங்கோடு.



## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### இ—தொடர்ச்சி.

37. இராமசுப்பு, திரு. எஸ். எஸ். ஆலங்குளம்.

38. இராமச்சந்திரன், திரு. எம். திருவோணம்.

39. இராமச்சந்திரன், திரு. கி. மன்னார்குடி.

40. இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். .. விளாத்திகுளம்.

41. இராமச்சந்திரன், திரு. செ. திருப்பரங்குன்றம்.

42. இராமச்சந்திரன், திரு. ந. .. செஞ்சி.

43. இராமநாதன், திரு. மு. .. கோவை மேற்கு.

44. இராமலிங்கம், திரு. செ. .. திருவிடைமருதூர்.

45. இராஜேந்திரன், திரு. கே. ஆர். பர்கூர்.

46. இராஜேந்திரன், திரு. பி. வி. வேதாரண்யம்.

47. இளம்வழுதி, திரு. .. .. எழும்பூர் (செ.வ.)

### ஈ

48. ஈஸ்வரன், திரு. ஆர். .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

### உ

49. உகம்சந்த், திரு. எஸ். டி. .. மதுராந்தகம்.

50. உதயசூரியன், திரு. தா. .. சின்னசேலம்.

51. உபயதுல்லா, திரு. எஸ். என். எம். தஞ்சாவூர்.

### ஏ

52. ஏகாம்பர ரெட்டி, திரு. ஆ. .. பள்ளிப்பட்டு.

| | |
|---|---|
| பானுமதி ஆனந்தராஜன், திருமதி, பி.எஸ்.ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| முடிகோபதி, திரு. நா., எம்.ஏ. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி, பி.எஸ்.ஸி., பி.ஜி.எல். | சார்புச் செயலாளர். |
| ராஜன், திரு. கே. பி., டி.ஆர்.எஸ். | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| அரங்கநாதன், திரு. ச., பி.ஏ., பி.எல். | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| சுந்தரராஜுலு, திரு. துரை., எம்.ஏ. | தலைமை நிருபர். |
| துரைப்பாண்டியன், திரு. செ. ஏ., பி.ஏ. | தலைமை நிருபர். |
| ஜெயதேவ், திரு. பி. சி. | தலைமை நிருபர். |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி).

### பெயர்களும் தொகுதிகளும்.

### அ.

| | | |
|---|---|---|
| 1. | அங்கமுத்து, திரு. கே. .. | உளுந்தூர்பேட்டை (செ.வ.). |
| 2. | அசேன், திரு. ஜெ. — | இராணிப்பேட்டை. |
| 3. | அண்ணாதுரை, டாக்டர் க. | வரகூர் (செ.வ.) |
| 4. | அண்ணாதுரை, திரு. கா. .. | பட்டுக்கோட்டை. |
| 5. | அண்ணாநம்பி, திரு. ஆர். .. | அவிநாசி (செ.வ.). |
| 6. | அண்ணாமலை, திரு. எம். .. | அரூர் (செ.வ.). |
| 7. | அதியமான், திரு. ஆ. .. | சேடப்பட்டி. |
| 8. | அப்துல் சமத், திரு. பா. .. | வாணியம்பாடி. |
| 9. | அப்துல் லத்தீப், திரு. எம். | சேப்பாக்கம். |
| 10. | அமீது இப்ராகிம், திரு. அ.மு. | கடலாடி. |
| 11. | அர்ச்சுனன், திரு. க. .. | தாரமங்கலம். |
| 12. | அழகர்சாமி, திரு. சோ. | கோவில்பட்டி. |
| 13. | அழகுவேலு, திரு. ச. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 14. | அறிவழகன், திரு. ஆ. .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.). |
| 15. | அன்பழகன், டாக்டர். க. .. | அண்ணாநகர். |
| 16. | அன்பழகன், திரு. வ. .. | செய்யாறு. |
| 17. | அன்பில் பொய்யாமொழி, திரு. | திருச்சிராப்பள்ளி-2. |

## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### க

| | | |
|---|---|---|
| 53. | கணபதி, திரு. நா. .. | மயிலாப்பூர். |
| 54. | கணேசமூர்த்தி, திரு. அ. .. | மொடக்குறிச்சி. |
| 55. | கணேச மூர்த்தி, திரு. நா. .. | குறிஞ்சிப்பாடி. |
| 56. | கணேசன், திரு. எல். .. | ஒரத்தநாடு. |
| 57. | கணேசன், திரு. க. சொ. .. | ஜெயங்கொண்டம். |
| 58. | கணேசன், திரு. சா. .. | தியாகராய நகர். |
| 59. | கணேசன், திரு. வெ. .. | மங்களூர் (செ.வ.) |
| 60. | கண்ணப்பன், திரு. மு. .. | பல்லடம். |
| 61. | கண்ணன், திரு. எஸ். பி. .. | அணைக்கட்டு. |
| 62. | கண்ணையன், திரு. க. .. | தொட்டியம். |
| 63. | கந்தசாமி, திரு. கா. .. | கிணத்துக்கடவு. |
| 64. | கந்தசாமி, திரு. கே. பி. .. | திருச்செந்தூர். |
| 65. | கரீம், திரு. மு. கு. .. | கூடலூர். |
| 66. | கருணாநிதி, டாக்டர் மு. | துறைமுகம். |
| 67. | கருப்பசாமி, திரு. எஸ். எஸ். | சாத்தூர். |
| 68. | கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபனாசம். |
| 69. | கஜபதி, திரு. தி. இரா. .. | ஆற்காடு. |
| 70. | காஞ்சனா கமலநாதன், டாக்டர் (திருமதி) | கிருஷ்ணகிரி. |
| 71 | காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. எஸ். | முதுகுளத்தூர். |
| 72. | காளியப்பன், திரு. ப. .. | ஒட்டன்சத்திரம். |



## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### க—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 73. | கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் துரை. | சிதம்பரம். |
| 74. | கிருஷ்ணன், திரு. சி. .. .. | ஓமலூர். |
| 75. | குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ.வ.) |
| 76. | குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம். |
| 77. | குருநாதன், திரு. சு. .. | பாளையங்கோட்டை. |
| 78. | குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. .. | பவானி. |
| 79. | கோதண்டம், திரு. இ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 80. | கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம். |
| 81. | கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர். |
| 82. | கோவிந்தசாமி, திரு. வீ. செ. | காவேரிப்பட்டினம். |
| 83. | கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம். |
| 84. | கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |

### ச

| | | |
|---|---|---|
| 85. | சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர். |
| 86. | சந்திரசேகரன், டாக்டர் க. | ஆலங்குடி. |
| 87. | சந்திரசேகரன், திரு. துரை. .. | திருவையாறு. |
| 88. | சந்திரசேகர், திரு. வி. பி. | பொள்ளாச்சி. |
| 89. | சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. கா. மு. | கடையநல்லூர். |
| 90. | சம்பத், திரு. ஏ. ஜி. .. | முகையூர். |
| 91. | சற்குணம், திருமதி எஸ். பி. | இராதாகிருஷ்ணன் நகர். |

## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### ச—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 92. | சாதிக் பாட்சா, திரு. எஸ். ஜே. | உடுமலைப்பேட்டை. |
| 93. | சாந்தகுமாரி, டாக்டர் (திருமதி) த. | தாராபுரம் (செ.வ.) |
| 94. | சாமிநாதன், திரு. இரா. .. | திருமங்கலம் |
| 95. | சிங்காரம், திரு. இரா. .. | பேராவூரணி |
| 96. | சிவசுப்பிரமணியன், திரு. சா. .. | ஆண்டிமடம் |
| 97. | சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | பனைமரத்துப்பட்டி |
| 98. | சிவலோகம், திரு. சோ. .. | புவனகிரி |
| 99. | சின்னக்குழந்தை, திரு. மு. .. | பெரணமல்லூர் |
| 100. | சின்னசாமி, திரு. இரா. .. | தர்மபுரி |
| 101. | சின்னசாமி, திரு. கா. .. | சேந்தமங்கலம் (ம.ப.) |
| 102. | சின்னசாமி, திரு. வி. கே. .. | பவானிசாகர் |
| 103. | சீரங்கன், திரு. மா. .. .. | மேட்டூர் |
| 104. | சீனிவாசன், திரு. பெ. .. | சிவகாசி |
| 105. | சுந்தரதாஸ், திரு. மா. .. | விளவங்கோடு |
| 106. | சுந்தரம், திரு. க. .. .. | பொன்னேரி (செ.வ.) |
| 107. | சுந்தரம், திரு. கே. ஆர். .. | குடியாத்தம் |
| 108. | சுந்தரம், திரு. ப. .. .. | திருப்பத்தூர் |
| 109. | சுந்தரராஜ், டாக்டர் ச. .. | பரமக்குடி (செ.வ.) |
| 110. | சுந்தர், திரு. க. ... .. | உத்திரமேரூர் |
| 111. | சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | கன்னியாகுமரி |
| 112. | சுப்பிரமணியம், திரு. தூ. க. .. | சத்தியமங்கலம் |



## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### ச—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 113. | சுப்பிரமணியன், திரு. அ. லெ. .. | திருநெல்வேலி |
| 114. | சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 115. | சுப்பு, திரு. அ. ... .. | ராசிபுரம் |
| 116. | சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 117. | சுப்பையா, திரு. ஆலவாயல் வ. | திருமயம் |
| 118. | செங்குட்டுவன், திரு. அ. .. | மயிலாடுதுறை |
| 119. | செங்கை சிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 120. | செங்கோட்டையன், திரு. கு. அ. | கோபிச்செட்டிப் பாளையம். |
| 121. | சேட்டு, திரு. எம். .. .. | செங்கம் (செ.வ.) |
| 122. | சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர் |
| 123. | சௌந்திரபாண்டியன், திரு. ந. | சமயநல்லூர் (செ.வ.) |

### ட

| | | |
|---|---|---|
| 124. | டேனியல் ராஜ், திரு. எஸ். ... | ஸ்ரீவைகுண்டம் |

### த

| | | |
|---|---|---|
| 125. | தங்கபாண்டியன், திரு. வே. .. | அருப்புக்கோட்டை |
| 126. | தங்கம், திரு. அ. ... .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 127. | தங்கராஜன், திரு. எஸ். ஏ. ... | திண்டுக்கல் |
| 128. | தங்கராசு, திரு. அ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 129. | தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார் கோவில் (செ.வ.) |
| 130. | தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 131. | தங்கவேல், திரு. மொ. .. | முசிறி |
| 132. | தமிழ்க்குடிமகன், முனைவர் மு. | இளையான்குடி |

## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### த—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 133. | தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு |
| 134. | தம்புசாமி, திரு. வே. .. | திருவாரூர் |
| 135. | தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 136. | தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | சேலம்-1 |
| 137. | தனராஜ், டாக்டர் வி. .. | வந்தவாசி (செ.வ.) |
| 138. | திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 139. | திருமூர்த்தி, டாக்டர் து. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 140. | திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 141. | துரைசாமி, திரு. வீ. பெ. .. | நாமக்கல் (செ.வ.) |
| 142. | துரைபாண்டியன், டாக்டர் பெ. | மானாமதுரை (செ.வ.) |
| 143. | துரைமுருகன், திரு. .. | காட்பாடி |
| 144. | துரை இராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 145. | தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர் |
| 146. | தேவராஜ், திரு. வி. எம். .. | வேலூர் |

### ந

| | | |
|---|---|---|
| 147. | நஞ்சப்பன், திரு. ந. .. .. | பெண்ணாகரம் |
| 148. | நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 149. | நடராசன், திரு. பொ. .. | திருத்தணி |
| 150. | நடேசன், திரு. இரா. .. | திருவட்டாறு |
| 151. | நடேசன், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம் |
| 152. | நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கொ. .. | பண்ருட்டி |



## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### ந—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 153. | நாராயணன், திரு. இராம. .. | காரைக்குடி |
| 154. | நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம் |
| 155. | நேரு, திரு. கே. என். .. | லால்குடி |

### ப

| | | |
|---|---|---|
| 156. | பஞ்சாட்சரம், திரு. இரா. .. | மேல்மலையனூர் |
| 157. | பழனிச்சாமி, திரு. க. .. | எடப்பாடி |
| 158. | பழனிச்சாமி, திரு. டி. கே. .. | திருவொற்றியூர் |
| 159. | பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 160. | பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 161. | பன்னீர்செல்வம், டாக்டர் மா. | சீர்காழி (செ.வ.) |
| 162. | பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 163. | பாப்பா உமாநாத், திருமதி .. | திருவெறும்பூர் |
| 164. | பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை |
| 165. | பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 166. | பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர் |
| 167. | பாலையா, திரு. ஆ. | கொளச்சல் |
| 168. | பால்ராஜ், திரு. சோ. .. | மதுரை-மையம் |
| 169. | பிச்சாண்டி, திரு. கு. .. | திருவண்ணாமலை |
| 170. | பிச்சைமுத்து, திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 171. | பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி |

## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### ப—தொடர்ச்சி.

172. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
173. பூவராகன், திரு. கோ. .. விருத்தாசலம்
174. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்
175. பெரியசாமி, திரு. என். .. தூத்துக்குடி
176. பெரியசாமி, திரு. வே. .. அந்தியூர் (செ.வ.)
177. பெரியண்ணன், திரு. அ. .. புதுக்கோட்டை
178. பெருமாள், திரு. செ. .. ஏற்காடு (ம.ப.)
179. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. விழுப்புரம்
180. பொன்முடி, திரு. த. .. தண்டராம்பட்டு
181. பொன்னம்மாள், திருமதி ஏ.எஸ். நிலக்கோட்டை (செ.வ.)
182. பொன்னுசாமி, பேராசிரியர் க. மருங்காபுரி
183. பொன்னு பிள்ளை, திரு. ஜி. தேனி

### ம.

184. மகேந்திரன், திரு. இரா. .. நாட்ராம்பள்ளி
185. மணி, திரு. ஆச்சியூர் எம். .. நாங்குநேரி
186. மணி, திரு. கே. ஏ. .. கபிலர்மலை
187. மணி, திரு. கோ. சி. .. கும்பகோணம்
188. மணிமாறன், திரு. மா. .. நன்னிலம் (செ.வ.)
189. மதிவாணன், திரு. இரா. .. இராயபுரம்
190. மலர்மன்னன், திரு. அ. .. திருச்சிராப்பள்ளி-1
191. மனோகரன், திரு. நாஞ்சில் கி. திருவல்லிக்கேணி
192. மனோகரன், திரு. பா. .. சிவகங்கை
193. மாசிலாமணி, டாக்டர் ஆர். திண்டிவனம்
194. மாசிலாமணி, திரு. தி. ரா. .. பூந்தமல்லி
195. மாரப்பன், திரு. பெ. .. காங்கேயம்
196. மாரிமுத்து, திரு. அ. .. வானூர் (செ.வ.)



## பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

### ம—தொடர்ச்சி.

197. முகமது சித்திக், திரு. மு. .. பூம்புகார்
198. முத்துசாமி, திரு. ப. .. வேடசந்தூர்
199. முத்துராமலிங்கம், திரு. பொன். மதுரை மேற்கு
200. முத்தையன், திரு. எம். .. சங்கராபுரம்
201. முத்தையா, திரு. மு. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)
202. முருகேசன், திரு. பொ. .. காஞ்சிபுரம்
203. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்
204. முனிரத்தினம், திரு. ஆ. மு. சோளிங்கர்
205. முனிரத்தினம், திரு. சீ. ரா. .. திருவள்ளூர்
206. மூக்கன், திரு. இரா. .. உப்பிலியாபுரம் (ம.ப.)
207. மூக்கையா, திரு. எல். .. பெரியகுளம்
208. மோகன், திரு. இரா. .. சிங்காநல்லூர்
209. மோசஸ், டாக்டர் எம். .. நாகர்கோவில்

### ய.

210. யசோதா செல்லப்பா, திருமதி வலங்கைமான் (செ.வ.)

### ர.

211. ரமணி, திரு. கே. .. கோவை கிழக்கு
212. ரமணி நல்லதம்பி, திருமதி .. ராதாபுரம்
213. ரவி அருணன், திரு. கு. .. அம்பாசமுத்திரம்
214. ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. ஓசூர்
215. ராஜு, திரு. எச். எம். .. உதகமண்டலம்

### ல.

216. லட்சுமி, திருமதி பொ. .. வால்பாறை (செ.வ.)

### வ.

217. வரதராசன், திரு. இரா. .. சங்கரி (செ.வ.)
218. வரதராசன், திரு. உ. ரா. .. வில்லிவாக்கம்

பெயர்களும் தொகுதிகளும்—தொடர்ச்சி.

வ—தொடர்ச்சி.

| | | |
|---|---|---|
| 219. | வல்லரசு, திரு. பி. என். .. | உசிலம்பட்டி |
| 220. | விஜயராகவன், திரு. பொன். | கிள்ளியூர் |
| 221. | விஜயேந்திரய்யா, திரு. டி. சி. | தளி |
| 222. | வீராசாமி, திரு. ஆற்காடு, நா. | புரசைவாக்கம் |
| 223. | வீரையன், திரு. கோ. .. | நாகப்பட்டினம் |
| 224. | வெங்கடாசலம், திரு. பெ. .. | வீரபாண்டி |
| 225. | வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். .. | ஸ்ரீரங்கம் |
| 226. | வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. .. | தொண்டாமுத்தூர் |
| 227. | வேணு, திரு. கி. .. .. | கும்மிடிப்பூண்டி |
| 228. | வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | தாம்பரம் |

ஜெ.

| | | |
|---|---|---|
| 229. | ஜெயலலிதா, செல்வி ஜெ. .. | போடிநாயக்கனூர் |

ஸ.

| | | |
|---|---|---|
| 230. | ஸ்டாலின், திரு. மு. க. .. | ஆயிரம்விளக்கு |

ஸ்ரீ.

| | | |
|---|---|---|
| 231. | ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். .. | சைதாப்பேட்டை |
| 232. | வெற்றிடம் .. .. | பாலக்கோடு |
| 233. | வெற்றிடம் .. | இராமநாதபுரம் |
| 234. | வெற்றிடம் .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 235. | அஸ்கார் சி. நிக்லி, திரு. .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

தை 10, பிரமோதூத—திருவள்ளுவர் ஆண்டு 2022.

1991 சனவரி 23, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கொடுப்பது அழுக்கறுப்பான் சுற்றம் உடுப்பதூஉம் உண்பதூஉம் இன்றிக் கெடும்.''

ஒருவருக்கு ஓர் உதவியையோ நன்மையையோ தரும் போது அதன்மீது பொறாமை கொள்வாரது சுற்றம் உடுக்க உடையின்றி, உண்ண உணவின்றிச் சீர்குலைந்து போகும்.

## 1. வினாக்கள்—விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 230 மற்றும் 876 சற்றுப் பின்னர் எடுத்துக் கொள்ளப் பெறும்.

### தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் மேற்கொண்டுள்ள தொழில் திட்டங்கள்.

*8713 திரு. மெ. ஆண்டி அம்பலம் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் மேற்கொண்டுள்ள ஐந்து தொழில் திட்டங்கள் என்னென்ன ?

(ஆ) இவை செயல்படுத்தப்படவிருக்கும் இடங்கள் எவை ?

(இ) இவற்றால் தொழில் மற்றும் பணி வாய்ப்பு பெறுவோர் எண்ணிக்கை எவ்வளவு ?

[1991 சனவரி 23

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, (அ), (ஆ) மற்றும் (இ) : 5 நிறுவனங்கள் என்பதற்குப் பதில் 8 நிறுவனங்கள் இப்போது ஏற்படுத்தப்பட்டு இருக்கின்றன.

(1) எல்காட் எலக்ட்ரோ இண்டர்நேஷனல் ஃபெரைட்ஸ் லிமிடெட்.

(2) மெட்ராஸ் ஐ டெக் சர்க்யூட்ஸ்.

(3) பேஸ் எல்காட் ஆட்டோமேசன் லிமிடெட்.

(4) எல்காட் கம்யூனிக்கேசன் பிரிவு-விரிவுபடுத்தல்.

(5) இன்ட்செம் கம்யூனிக்கேசன்ஸ் லிமிடெட்.

(6) ஏ.ஜி.டி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்.

(7) சிட்டிசன்ஸ் எல்காட் லிமிடெட்.

(8) ஆல்பா எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட்.

இந்த 8 நிறுவனங்கள் மின் அணுவியல் துறையில் புதியதாக தொடங்கப்பட்டுள்ளன.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : பேரவைத் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் 5 இடம் என்று இருந்ததை 8 இடமாக்கியதற்கு நான் பெருமைப்படுகிறேன். ஆனால், எந்தெந்த மாவட்டங்களில் வேலை நடந்துகொண்டிருக்கிறது என்பதை அறிவிக்கவில்லை. பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., எம். எஸ்ஸி. பட்டதாரி இளைஞர்கள் நிறைய பேர்கள் இருப்பதால், அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குக் கூடுதலாக இடம் ஒதுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, எல்காட் எலக்ட்ரோ இண்டர்நேஷனல் ஃபெரைட்ஸ் லிமிடெட், இராணிப்பேட்டையில், மெட்ராஸ் ஐ டெக் சர்க்யூட்ஸ், தாம்பரத்தில், பேஸ் எல்காட் ஆட்டோமேசன் லிமிடெட், நந்தம்பாக்கம், சென்னையில், எல்காட் கம்யூனிகேசன் பிரிவு-விரிவுபடுத்தல் பெருங்குடி, சென்னைப் பகுதியில், இன்ட்செம் கம்யூனிக்கேசன்ஸ் லிமிடெட், பெருங்குடி, சென்னைப் பகுதியில், ஏ.ஜி.டி. எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், கோயம்புத்தூரில், சிட்டிசன்ஸ் எல்காட் லிமிடெட், பெருங்குடி, சென்னையில், ஆல்பா எலக்ட்ரானிக்ஸ் லிமிடெட், ஓசூரில் ; இவற்றில் 1,800 பேர்களுக்கு



1991 சனவரி 23]

வேலைவாய்ப்பு உருவாகும் என்று தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. இவையெல்லாம் தொழில் நுணுக்க சம்பந்தமான தொழில்களாக, அதுவும் மின்னணு தொழில் நுணுக்கத் திறன் தேவைப்படுகிற தொழில்கள் என்கிறபடியால் அதற்குரிய அடிப்படைத் தகுதி உடையவர்கள்தான் அதிலே எடுத்துக் கொள்ளப்படுவார்கள். பொதுவாக எம்.ஏ., பி.ஏ. இந்தப் பட்டங்கள் எல்லாம் இதற்கு நேரடியாக தேவை என்று கருதப்பட மாட்டாது.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : தலைவர் அவர்களே, இதிலே மதுரையோ, திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டமோ எதுவும் சேர்க்கப்படாமல் இருப்பதை கனம் அமைச்சர் அவர்கள் உணர்ந்து அங்கே அந்தத் தொழில் நுட்பக் கல்லூரிகளை அமைத்துத் தருவதற்கு முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் . அவர்களே, இன்று உற்பத்தித் தொழிற்சாலைகள், கல்வி நிறுவனங்கள் அல்ல. இரண்டாவது இவையெல்லாம் சில குறிப்பிடத்தக்க இடத்தில் அமைந்தால் ஒன்றுக்கொன்று தொடர்பாகச் செயற்படுவதற்கான வசதிகள், வாய்ப்புகள் அமையும். தொழில் முறையில் சாதாரணமான நூற்பு ஆலை போல் நாம் விரும்புகிற இடத்தில் ஏற்படுத்தக் கூடியவை அல்ல. சர்க்கரை ஆலை ஏற்படுத்துவதற்கே கூட நாம் போதுமான அளவு கரும்பு உற்பத்தியாகின்ற வட்டாரத்தைத் தேடித்தான் ஏற்படுத்துகிறோம். இது சற்று தொழில் நுணுக்கமும் அது போன்று தொழில்கள் வேறுபல அமைவதைப் பொறுத்தும் அமைக்க வேண்டியிருக்கிறது. எலக்ட்ரானிக்ஸுக்காக ஒரு தொழிற்பேட்டை அமைக்க வேண்டும் என்று கருதப்பட்டு திருவள்ளூர் வட்டாரத்திலே ஒரு தொழிற்பேட்டை அமைக்கிற ஒரு முயற்சியும் இருக்கிறது.

பெண்களுக்கு விளையாட்டுப் பள்ளி.

*11060—திரு. கு. பிச்சாண்டி :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 10-வது வகுப்பு வரையுள்ள பெண்களுக்கு கோவையில் விளையாட்டுப் பள்ளி உள்ளது போல பிளஸ் 2 வரை படித்தவர்களுக்குப் பயிற்சி அளிக்க விடுதியுடன் கூடி விளையாட்டுப்பள்ளி அமைக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

[1991 சனவரி 23

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) 10-வது வகுப்பு வரையுள்ள பெண்களுக்கு ஏற்கனவே கோவையிலும், இப்போது மதுரையிலும் விளையாட்டுப் பள்ளி உள்ளது போல ப்ளஸ் 2 படித்தவர்களுக்குப் பயிற்சி அளிக்க விடுதியுடன் கூடிய விளையாட்டுப் பள்ளி அமைக்க அரசிடம் தற்போது திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு உலக விளையாட்டு அரங்கில் இந்தியாவுக்கு பெருமைச் சேர்த்தவர்கள் பெண்கள்தான். பெண்கள்தான் சிறப்பான முறையில் விளையாட்டுத் துறையில் சேர்ந்து விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட பெண்கள் 10-வது வரை அந்த விடுதியில் இருந்து படித்து விட்டு ப்ளஸ் 2 படிப்பதற்கு, அவர்களுக்கு இடம் இல்லாத காரணத்தால், அவர்கள் விளையாட்டுத் துறையிலும் ஈடுபட முடியாமல், படிக்கவும் முடியாமல் போய் விடுகின்ற காரணத்தால், ஏழை மாணவிகள் விளையாட்டுத் துறையில் சிறப்பான முன்னேற்றத்தைப் பெறுவதற்கு, அவர்கள் ப்ளஸ் 2 வரை படிப்பதற்கு இலவசமாக விடுதியை அமைக்க அரசு முன்வருமா என அறியவிரும்புகிறேன்.

9-05 மணி

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே உள்ள திட்டத்தின்படி இந்தக் குறிப்பிட்ட வயது வரையில் உள்ளவர்களுக்காக அந்த உடல் பயிற்சியோடு சேர்ந்து விளையாட்டுப் போட்டிகளில் திறம் பெறுவதற்காக இப்படிப்பட்ட பள்ளிகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அங்கே தங்கியிருந்து அவர்கள் படிக்கிறார்கள். அதிகமான எண்ணிக்கையில் அப்படிப்பட்ட மாணவிகள் வரவில்லை. 23 மாணவிகள் தான் 1990-91 ஆம் ஆண்டில் இந்தக் குறிப்பிடத்தக்க அளவுக்குத் தகுதி உடையவர்களாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக விளையாட்டுத் தகுதிதான் மிக முக்கியமாக கருதப்பட்டு அவர்கள் தேர்வு செய்யப்பட்டு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். மேலும் அதிகம் எண்ணிக்கையில் மாணவிகள் சேருவார்களானால் அவர்களுக்கு மேலும் ப்ளஸ் 1, ப்ளஸ் 2 வகுப்புகள் நடத்தக் கூடிய வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்த அரசு பரிசீலனை செய்து பார்க்கலாம், எண்ணிக்கை அதிகமானால்.



1991 சனவரி 23]

திரு. கு. பிச்சாண்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்களுக்காக திருநெல்வேலி, கடலூர், கோவை, மதுரை போன்ற நான்கு இடங்களில் விடுதிகளோடு கூடிய பள்ளிகள் இருக்கின்றன. என்னுடைய தொகுதியைச் சேர்ந்த வாலிபாலில் சிறந்த விளையாட்டு வீராங்கனை கோவையில் படித்து 10-வது வகுப்புக்கு மேல் தங்கி படிக்க வசதி இல்லாத காரணத்தால் இன்றைக்கு படிப்பையும், மேற்கொண்டு விளையாட்டையும் தொடர முடியாமல் இருக்கின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட பெண்கள் விளையாட்டுத் துறையில் சிறந்த முறையில் முன்னேறுகின்ற வகையில் விடுதியுடன் கூடிய பள்ளியை அமைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மிகச் சிறிய எண்ணிக்கையில் இருக்கிற காரணத்தால் பெரிய அளவில் திட்டமிடுவது அவ்வளவு எளிதல்ல. இருந்தாலும் அது பற்றி ஆராய்ந்து பார்க்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் நிறைய எண்ணிக்கையில் இந்தப் பள்ளியில் சேருவதற்கு வந்தால் கவனிக்கப்படும் என்று. ஆனால் அரசு அறிவித்தால்தான் அப்படி அவர்கள் வருவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்தித் தர முடியும். ஆகவே மாநிலத்தில் இன்னும் ஒன்று, இரண்டு இடத்தில் இப்படிப்பட்ட பள்ளிகளைத் திறப்பதோடு இன்றைக்கு உலக அரங்கில் மிகவும் பின்தங்கி இருக்கக் கூடிய நிலையில், நம்முடைய நாட்டில் தமிழ்நாடு அதில் சிறந்து விளங்கவும், திறமை பெற்ற பெண்கள் பயிற்சி பெற்று முன்னுக்கு வருவதற்கு இது அவசியம் என்ற நிலையில் அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்ன செய்ய முடியும் என்பது பரிசீலிக்கப்பட வேண்டும் ; பரிசீலிக்கப்படும்.

### மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்.

*9798—திரு. அ. இராசேந்திரன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் இல்லாத ஊர்களில், ஆந்திர மாநிலத்தில் செயல்படுவது போல், குற்றவியல் நீதிமன்றமும், உரிமையியல் நீதிமன்றமும் சேர்ந்து செயல்படுமா

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத்தலைவர் அவர்களே,

ஆந்திர மாநிலத்தில் செயல்படுவது போல் இம்மாநிலத்திலும் உரிமையியல் நீதிமன்றம் இல்லாத ஊர்களில், குற்றவியல் நீதிமன்றமும் உரிமை இயல் நீதிமன்றமும் சேர்ந்து செயல்படச் செய்யும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உரிமையியல் நீதிமன்றமும், குற்றவியல் நீதிமன்றமும் ஒருங்கிணைந்து செயல்படுவதால் அரசுக்கு அதிகமாக செலவு ஆகாது. தமிழகத்தில் வட்டத் தலைநகரங்களில் குற்றவியல் நீதிமன்றம் இருக்கின்ற இடங்களில் எல்லாம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் ஏற்படுத்த அரசு மறுபரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, District Munsif-*cum*-Judicial Magistrate Court அமைப்பதற்கான கருத்துருவை உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. இதற்கு ஆதரவு இல்லை. உயர்நீதிமன்றத்தின் கருத்துதான் புதிய நீதிமன்றங்களை அமைப்பதில் இறுதியானது. எனவே, உயர்நீதிமன்றத்தின் கருத்துக்கு மாறுபாடாக நாம் செயல்பட முடியாது.

திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டிசென்ட்ரலைசேஷன் ஆப் ஜுடிசியரி என்ற கருத்துப்படி குறிப்பாக திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில் செங்கம் வட்டம், வந்தவாசி வட்டம் போன்ற வட்டங்களில் பொதுமக்களும் அங்கே இருக்கின்ற அரசியல்வாதிகளும், அங்கே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் வேண்டுமென்று பல்லாண்டுகளாகக் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கருத்தில் கொண்டு, முன்னுரிமை தந்து இந்த இரண்டு வட்டத் தலைநகரங்களிலும் மாவட்ட உரிமையியல் நீதி மன்றங்களைத் தனியாக ஏற்படுத்துவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

9-10 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உரிமையியல் நீதி மன்றம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு உயர்நீதி மன்றத்தினுடைய கருத்துக்காக அனுப்பப்பட்டு இருக்கிறது. உயர் நீதி மன்றம் அதற்கான கருத்துக்களைத் தெரிவிக்குமானால் அரசின் சார்பில் நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.





திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழனி வட்டத்தில் உள்ள ஒட்டஞ்சத்திரம் ஒரு தனி வட்டமாக அறிவிக்கக் கூடிய நிலையில் இருக்கிறது. அங்கே ஒரு குற்றவியல் நீதி மன்றம் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டம் ஏற்கெனவே கடந்த கால ஆட்சியில் ஏற்றுக் கொள்ளப்பட்டு இன்னும் நிலுவையில் உள்ளது. எனவே, இந்த அரசு ஒட்டஞ்சத்திரத்தில் ஒரு குற்றவியல் நீதி மன்றத்தை ஏற்படுத்திக் கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டஞ்சத்திரம் பற்றி உடனடியாக என்னிடத்தில் விவரம் இல்லை. ஆனாலும் முந்தைய அரசு ஏற்றுக்கொண்டிருக்குமானால், அது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற விஷயங்களில் உயர்நீதி மன்றந்தான் கருத்து தெரிவிக்க வேண்டும். உயர்நீதி மன்றத்தினுடைய கருத்தின்படிதான் அரசு செயல்பட முடியும் என்பதை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். நாங்களும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், மாறி வருகிற சூழ்நிலையிலே மக்களுடைய தேவைகள், ஜனநாயகபூர்வமான கோரிக்கைகள், இவற்றை ஏற்கக் கூடிய சூழ்நிலை உயர்நீதி மன்றத்திலே இல்லாமல் இருப்பது என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாக இருக்கிறது. மதுரையிலே 'பென்ச்' வேண்டுமென்பதற்குக்கூட உயர்நீதி மன்றத்தினுடைய கருத்து கிடைக்காததினால்தான் அது நீட்டிக்கப்படுகிறது என்றுகூட நேற்றையதினம் முதல்வர் அவர்களே தகவல் சொன்னார்கள். ஆகவே, மாறிவரக்கூடிய சூழ்நிலையிலே இதுபோன்ற ஜனநாயகக் கோரிக்கைகளை ஏற்று செயல்படுத்தக்கூடிய ஒரு அணுகு முறையை உயர்நீதிமன்றம் கடைப்பிடிப்பதற்கு அரசு எந்தவகையிலேனும் முயற்சிகள் எடுக்க முயலுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய உணர்வுகளை மதித்து அரசாங்கத்தின் சார்பாக உயர்நீதி மன்றத்திற்கு இது குறித்து எடுத்துச் சொல்லப்படும். அவர்கள் அதைப் பரிசீலித்து நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன்.

திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு
மத்திய சிறைச்சாலை.

*10683—திரு. ப. முத்துசாமி :

மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு மத்திய சிறைச்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

[1991 சனவரி 23

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டம் தனியாக பிரிந்த பிறகு அந்த மாவட்ட அலுவலகம் தனியாகக் கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது. அதையொட்டி 300 ஏக்கர் நிலத்தை அரசாங்கம் ஏற்கெனவே ஆர்ஜிதம் செய்திருக்கிறது. அதற்கு மேலும் நிலம் தேவையானால் அதே வட்டத்தில் மேலும் இடங்களைக் கையகப்படுத்தி மத்திய சிறையை, தென் மாவட்டங்களிலே மதுரையைத் தவிர இல்லாமல் இருக்கிற நிலையில், திண்டுக்கல்லில் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே ஏற்கெனவே ஒரு கிளைச் சிறை இருந்து வருகிறது. எனவே மாவட்டத்திற்குத் தனியாக மத்திய சிறை எதுவும் தேவையில்லை. இம் மாவட்டம் மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களிலேயுள்ள கிளைச் சிறைகளே போதுமானதாகக் கருதப்படுகிறது. எனவே, திண்டுக்கல்–காயிதே மில்லத் மாவட்டத்தில் மத்திய சிறை அமைக்கும் திட்டம் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே இருக்கிற சிறை மிகச் சிறிய அளவிலே இருக்கிற சிறையாகும். அரசியல் போராட்டங்கள் ஏற்படுகின்றபோதும் அல்லது பல சாதாரண காலங்களிலே கூட மதுரை மத்திய சிறையிலேதான் கைதிகள் வைக்கப்பட்டு நீண்ட நெடுந்தொலைவுகளுக்குக் கொண்டு வருகிறார்கள். அதோடு, முக்கியமாக அரசியல் போராட்ட காலங்களில், கடந்த காலங்களில் ஒவ்வொரு முறையும், நாங்கள்கூட கைது செய்யப்படுகின்றபோது, கோவைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கே இடம் இல்லாமல் கடலூருக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கும் இடம் இல்லாமல் சேலத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, அதற்குப் பிறகு இறுதியில் வேலூருக்குக் கொண்டு செல்லப்பட்டு இரண்டு நாள் பஸ்ஸிலேயே அலைந்தோம். அதைப் போல எதிர்காலத்தில் அரசியல் கைதிகளாக இருப்பவர்கள்கூட அவதிப்படாமல் இருக்க பொதுவாக எல்லா கைதிகளும் மதுரையிலிருந்து வராமல் இருக்க,



1991 சனவரி 23]

திண்டுக்கல்லிலே ஒரு மத்திய சிறைச்சாலையை அமைக்கின்ற திட்டத்தை அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லிலே இருக்கிற சிறைச்சாலையே போதும் என்ற கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல கஷ்டங்கள் இருக்குமானால் அதைப்பற்றி பரிசீலிக்கலாம். அவர்கள் செய்த இரண்டு நாள் சுற்றுப்பயணத்தைப் பற்றிச் சொன்னார்கள். அப்போது இருந்த சூழ்நிலை அப்படி இருந்திருக்கும். இப்போது சூழ்நிலை அப்படி இல்லை என்று நினைக்கிறேன். இருப்பினும் உறுப்பினருடைய கருத்துப்படி மறுபரிசீலனை செய்யலாம்.

9-15 மணி

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய சிறைச்சாலை அங்கே ஏன் வேண்டுமென்றால்—பக்கத்தில் தாலுக்காவில் சப்-ஜெயில் இருக்கிறது, அந்த ஜெயிலுக்கு அரசியல் போராட்டத்தில் நான் கூடப் போய் இருக்கிறேன். ஏன் என்றால் தியாகிகள் போராட்டத்தில் போகவில்லை. அம்மாதிரி போய் இருந்த நேரங்களில் வெளியிலே வராண்டாவிலே உட்கார வைத்து ஆடுமாடு போல ஓடு ஓடு என்று முடுக்கி விட்டார்கள். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை. திரு. முத்துசாமி அவர்கள் சொன்னதைப் போன்று, இப்பொழுது சமீபத்தில் எங்களைக் கைது செய்து மதுரைக்குக் கொண்டு சென்று அங்கேயும் இடமில்லாமல், பிறகு கோவைக்குக் கொண்டு சென்று அங்கேயும் இடமில்லாமல், திருச்சிக்குக் கொண்டு வந்து ஒரு வார காலமாக அங்கே அடைத்து வைத்திருந்தார்கள். இதை எதற்காக நான் சொல்கிறேன் என்றால், அந்த இடமெல்லாம் ரொம்ப மோசமாக இருக்கிறது. என்னை வைத்திருந்த இடம் —பெண்களை வைக்கின்ற இடம், ஏனென்றால், ஜெயிலையே பார்க்காமல் இருந்த நாங்களெல்லாம் போய் அவஸ்தைப்பட்டுத் தான் மாண்புமிகு முதல்வரவர்களிடத்திலே (சிரிப்பு) முதல்வருக்குப் போன் செய்த பிறகு எங்களை எல்லாம் விடுதலை செய்தார்கள். அந்தச் சூழ்நிலையிலே ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முதலிலேயே சிறைச்சாலைக்குப் போய் பழக்கம் இருந்தால் இந்தப் பிரச்சினை வந்திருக்காது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : ஆமாம், ஆமாம்தான். போகவில்லை. ஏன் என்றால், 1932, 33-இல் பிறந்து விட்டதால் போக முடியவில்லை அல்லவா ? ஆகையினால் தயவுசெய்து மறுபரிசீலனை என்று நீண்ட காலம் போடாமல், உடனடியாக

[1991 சனவரி 23

(ஆ) ஆம் எனில், எப்போது முதல் செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

9-20 மணி

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டப் பேரவைத தலைவர் அவர்களே, டாக்டர் கலைஞர் அவர்கள் முன்பு முதல்வராக இருந்தபோது 1970 ஆம் ஆண்டு என்னுடைய நியாயமான கோரிக்கையை ஏற்று மோட்டார் வாகனப் பராமரிப்புத்துறை தொழிலாளர்களுக்கு புகைப்படம் ஒட்டிய இலவச பாஸ், அலுவல் பயண அட்டையை அப்போது போக்கு வரத்துத் துறை அமைச்சராக இப்போது சட்ட அமைச்சராக இருக்கும் அவர்கள் வழங்கினார்கள். 1978 ஆம் ஆண்டு ஒரு சாராருக்குச் சலுகை குறைத்தும், மறு சாராருக்கு அறவே இல்லாமலும் செய்துவிட்டார்கள். எனவே கலைஞர் அவர் களாலே அறிவிக்கப்பட்ட அந்தத் திட்டத்தை அமல்படுத்த முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட காலத்தில் தமிழ் நாடு அரசு போக்குவரத்துத் துறையினருடைய ஒரு அங்கமாகத் தான் இந்தத் துறையும் இருந்து வந்தது. அதற்குப் பிறகு, போக்குவரத்துத் துறை, போக்குவரத்துக் கழகங்களாகப் பிரிக்கப்பட்ட பிறகு இது தனித் துறையாகக் கருதப்படுகின்றது. ஆகவேதான் அதிலே பணியாற்றக்கூடிய தொழிலாளர்களை—பாய்ன்ட் டு பாயின்ட்—அவர்கள் வீட்டிலே இருந்து வேலை செய்கின்ற இடங்களுக்குச் சென்று வருகின்ற வகையில், சென்னை நகரத்தில் அத்தகைய பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இது மாநிலம் முழுவதும் இருக்கின்ற தொழிலாளர்களுக்குத் தர வேண்டும் ; அதேபோல சென்னை நகரத்திலேயும் தரவேண்டும் என்ற கோரிக்கையை அங்கு இருக்கக்கூடிய தொழிற்சங்கத் தலைவர் என்ற முறையில் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஏற்கெனவே அளித்து இருக்கிறார்கள். அது அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது : பரிசீலனை முடிந்த பிறகு முடிவுகள் மேற்கொள்ளலாம்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : மாண்புமிகு சட்டபேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் நமக்குச் சரியான விடை அளித்து இருந்தாலும் கூட மேலும்



1991 சனவரி 23]

மேலும் மிக விரைவில், அது கழகத் தலைவராலே அறிவிக்கப் பட்ட திட்டம் என்ற காரணத்தாலே, அவசியம் ஆவன செய்ய இயலுமா என்பதை மீண்டும் ஒருமுறை கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, இது ஏதோ சென்னை நகரத்திலே மட்டும் இருக்கக்கூடிய பிரச் சினை அல்ல. மாநிலம் முழுவதும் இருக்கக்கூடிய ஒரு பிரச்சினை. இதிலே அரசுக்கு எவ்வளவு கூடுதலான செலவாகும் என்பதை யெல்லாம் ஆராய்ந்து பார்த்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

திரு. அ. கணேசமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் துறையால் நடத்தப்படுகிற பொறியியல் கல்லூரி, அதுபோல மருத்துவக் கல்லூரி ஆகியவற்றிலே பணி புரிகிற தொழிலாளர்களுக்கும் இந்த இலவசப் பயணம் செய் வதற்கு அனுமதியை அரசு வழங்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தற்போது ஏராளமான கட்டத்தில் அது நடந்து கொண்டிருக் கிறது. எல்லாமே இலவசம் என்று சொன்னால் எப்படி பேருந்துக் கழகங்களை நடத்த முடியும் என்பது உறுப்பினர்களுக்குத் தெரியாத ஒன்று அல்ல.

### அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்றுதல்.

* 3369—திரு. வி. பி. இராசன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா;

இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக மாற்ற அரசு முயற்சி மேற்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : தலைவர் அவர்களே, காமராசர் மாவட்டத்தில் இராசபாளையத்திற்கு மேற்கே மேற்கு தொடர்ச்சி மலைக்கு அருகில் உள்ள அய்யனார் கோவில் அருவியை சுற்றுலா இடமாக அறிவிக்கும் செயற்குறிப்பு தற் போது அரசிடம் இல்லை.

திரு. வி. பி. இராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசபாளையத்துக்கு மேற்கே, மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள அய்யனார் கோவில் அருவிக்கு தினமும் சுற்றுலாவுக்கு வருகின்றவர்களும், உல்லாசப் பயணிகளும் சேர்ந்து ஆயிரக்கணக்கானோர் அருவியிலே குளித்துவிட்டு

வருகிறார்கள். அந்த அருவிப் பகுதியை சுற்றுலா மையமாக ஆக்கினால் அரசுக்கு வருவாய் கிடைக்கும்; காமராசர் மாவட்டத்தில் சுற்றுலா மையங்கள் இல்லவே இல்லை. ஆகவே அதை மனதில்கொண்டு காமராசர் மாவட்டத்தில் இராசபாளையத்திலே மேற்கு தொடர்ச்சி மலையில் அய்யனார் கோவில் பகுதியைச் சுற்றுலா மையம் ஆக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். ஒருவேளை சுற்றுலா மையம் ஆக்க வசதி இல்லை என்று அறிவித்தாலும் கூட, சுற்றுலா விடுதியாவது அங்கு கட்ட வேண்டும். திரைப்படத் துறையினர் படம் எடுக்க அங்கு வருகிறார்கள்; படம் எடுக்க வருகின்றவர்கள் தங்குவதற்குப் போதுமான வசதி இல்லை என்று குறைபட்டுக்கொண்டு இருக்கிறார்கள். ஆகவே சுற்றுலா வ்டுதியாவது அங்கு கட்டுவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்கள்ள, ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இரண்டு இடங்களைத் தெரிந்து எடுத்து சுற்றுலாத் தலமாக 'டிஸ்ட்ரிக்ட் எக்ஸ்கர்ஷன் சென்ட்டர்' அரசு அறிவித்து இருக்கிறது. ஏற்கனவே காமராசர் மாவட்டத்துக்கு பிளவைக்கல் அணை, பில்லலூர் அணை ஆகிய இரண்டு இடங்களைத் தேர்வு செய்து சுற்றுலாத் தலங்களாக அமைக்கப்பட்டு இருக்கின்றன. அதுபோல மற்ற மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட இடங்களுக்கு வருகின்ற பயணிகளுக்கு அங்கே அடிப்படை வசதிகளைச் செய்து தந்த பிறகு ஒவ்வொரு மாவட்டத்திலேயும் மூன்றாவது இடத்தையும் தெரிந்து எடுக்கலாம் அப்போது மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கோவில் நிலங்களை பொதுக் காரியங்களுக்கு வழங்குதல்.

* 9262—திரு. **அன்பில்** பொய்யாமொழி :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) தமிழகத்திலுள்ள கோவிலுக்குச் சொந்தமான நிலங்களைப் பள்ளிகள் கட்டுதல் போன்ற பொதுக்காரியங்களுக்கு வழங்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ); எந்தவித வருவாயும் தராத கோவில் நிலங்களை, அவசியம் ஏற்படின், விற்பனை செய்யலாம் என்ற முடிவினை அரசு சமீபத்திலே எடுத்துள்ளது.



9–25 மணி

**திரு. அன்பில் பொய்யாமொழி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரையில் எத்தனை ஏக்கர் நிலங்கள் இப்படிப்பட்ட பொதுக் காரியங்களுக்காக வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, ஏற்கனவே தமிழகத்தில் ஆளுநர் ஆட்சி இருந்தபோது கோயில் நிலங்களைப் பொறுத்தவரையில் வரப் போகிற அரசு ஒரு கொள்கை முடிவு எடுக்கும் வரையில் விற்கக்கூடாது என்று ஒரு தடையை அந்த நேரத்தில் ஆளுநர் அவர்கள் பிறப்பித்தார்கள். அதன் பின்னர் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இதுவரையில் எந்தக் கோயில் நிலத்தையும் விற்பனை செய்யவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அன்பில் பொய்யாமொழி :** பேரவைத் தலைவர் அவர்களே, சில தனியார்கள் கோயில் நிலங்களை ஆக்கிரமித்துக்கொண்டு, அவற்றைக் காலி செய்ய முடியாது என்று சொல்லி வழக்கு மன்றத்தில் தடையுத்தரவு வாங்கி வைத்து இருக்கிறார்கள். அவைகளை ரத்து செய்து அந்த இடங்களைக் கோயிலுக்குத் திரும்ப வழங்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** பேரவைத் தலைவர் அவர்களே, தடையாணை பெற்றிருந்தால் அந்தத் தடையை விலக்குவதற்கு இந்து சமய அறநிலையத்துறை ஏற்ற நடவடிக்கையை எடுத்துக்கொண்டிருக்கிறது. அதற்குப் பிறகு அதுபற்றிய கருத்தினைப் பரிசீலனை செய்யலாம்.

**திரு. இரா. மோகன் :** பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பல்வேறு காரியங்களுக்குப் பலரும் ஆக்கிரமித்து, அதன் காரணமாக அந்தக் கோயில்களுக்கு வருமானம் கூட இல்லாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இந்த இரண்டாண்டு காலத்தில் அப்படிப்பட்ட நிலங்கள் ஏதாவது மீட்கப்பட்டனவா ? அப்படி எந்த இடங்களில் மீட்கப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி:** தலைவர் அவர்களே, மிக விரிவானதொரு கேள்வி இது. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால் சமீபத்தில் மாமல்லபுரத்திற்கருகே ஏறத்தாழ 230 ஏக்கர் நிலங்களை ஆக்கிரமிப்புச் செய்ய முயற்சி நடந்தது. ...தில் உடனடியாக நம்முடைய துறை தலையிட்டு அந்த ஆக்கிரமிப்பை அகற்றி இருக்கிறது.

[1991 சனவரி 23

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களை விற்கக்கூடாது என்று கவர்னர் ஆட்சியில் தடை விதிக்கப்பட்டதாக அமைச்சர் அவர்கள் கூறி னார்கள். அதனைக் கல்வி நிலையங்கள் கட்டுவதற்காகவாவது, அந்த எண்ணத்தைக் கருத்தில் கொண்டாவது அனுமதிப்பார் களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியே அது தான். எனவே அதையே திருப்பிக் கேட்க வேண்டியதில்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த, கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை நில வாரமாகக் கொண்டு சில விவசாயிகள் விவசாயம் செய்கிறார்கள். அந்த நிலங்களில் தங்கள் சொந்தச் செலவில் கிணறுகள் எல்லாம் தோண்டி பயிர் செய்யும்போது, மின்னிணைப்புக்கு முயற்சி செய்யும்போது பட்டா இல்லை என்ற காரணம் சொல்லி மறுக்கப் படுகிறது. அந்த உரிமையை அந்தக் கோயில்களிலிருந்து பெற்று அவர்களுக்கு மின்னிணைப்பு வழங்கி அந்த விவசாயிகளின் துய ரத்தைத் துடைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி: தலைவர் அவர்களே, மின்சார இணைப்பைப் பொறுத்தமட்டில் பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்கள் என்று நான் கருது கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்குச் சொந்தமான பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்களில் தனியார்களுடைய ஆக்கிரமிப்பு இருக்கிறது. அவைகளை எல்லாம் அகற்றி விரைவில் அரசு எடுத்துக்கொள்கிற வகையில் அவசரச் சட்டம் பிறப்பித்தாவது அவற்றைக் கையகப் படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பிலே பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இருக்கின்றன என்று சொல்வதை விட கோயில் நிர் வாகத்திடமிருந்து குத்தகையாகப் பெற்று அந்த வகையில் அவர்கள் கைவசம் வைத்து இருக்கின்ற நிலங்கள் இருக்கின்றன. ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட நிலங்களைப் பொறுத்த வரையில் வழக்கு மன்றத்தில் இருந்தால், நிச்சயமாக வழக்கு மன்றத்தில் அதற்கான நடவடிக்கை எடுத்து அந்த நிலங்கள் மீட்கப்படும். அது தவிர நீண்டகாலக் குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட நிலங் களைப் பொறுத்தவரையில் அதற்கேற்ற சட்டம் இயற்றி அந்த நிலங்களைக் கோயில்களே மீண்டும் எடுத்துக் கொள்வதற் கான செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறது.



1991 சனவரி 23]

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களில் ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்கள் மொத்தம் தமிழகத்தில் எவ்வளவு இருக்கின்றன ? ஏற்கெனவே இருந்த கோயில் நிலங்கள் எவ்வளவு தவறான முறையில் ஆக்கிர மிப்பு செய்யப்பட்டிருக்கின்றன என்ற கணக்கு எடுக்கப்பட் டிருக்கிறதா ? அதே நேரத்தில் மைனர் இனாம் அபாலிஷன் ஆக்ட் என்று வந்து அந்தச் சட்டத்தின் அடிப்படையிலே அரசு எவ்வளவு கோயில் நிலங்களை ஆர்ஜிதம் செய்திருக்கிறது ? அறக் கட்டளைகள் குறிப்பிட்ட நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்படு கின்றன. அந்த குறிப்பிட்ட நோக்கங்களுக்கு மாறாக சர்க்கார் எடுப்பதோ, தனியார் ஆக்கிரமிப்பு செய்வதோ எந்த அளவுக்கு ஏற்புடையது ? எனவே இதையெல்லாம் கருத்தில் கொண்டு சர்க்கார் எடுத்திருக்கின்ற நிலங்களையும், தனியார் ஆக்கிர மிப்பு செய்த நிலங்களையும் மீட்டு எந்த எந்தக் காரியங்களுக்காக அறக்கட்டளைகள் ஏற்படுத்தப்பட்டனவோ, கோயில்களுக்கு நிலங்கள எடுக்கப்பட்டனவோ அவைகள் எல்லாம் மீட்டுத் தந்து தக்க நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ? மொத்தம் ஆக்கிரமிப்பில் உள்ள நிலங்களுடைய நிலமை என்ன என்பது தெரியுமா ?

9-30 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது கேள்விகளின் தொகுப்புரை.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில்களுக்குச் சொந்தமான மொத்த நிலம் நஞ்சையும் புஞ்சையும் சேர்த்து 4,34,095 ஏக்கர். மடத் திற்குச் சொந்தமான நிலங்கள் நஞ்சையும் புஞ்சையும் சேர்த்து 58 ஆயிரம் ஏக்கர் . நகர்ப்புறத்திலே இருக்கக்கூடிய மனைகள், சென்னையைச் சேர்ந்து, கோயில்களுக்குச் சொந்தமானது 22,232 கிரவுண்ட். மடங்களுக்குச் சொந்தமானது 360 கிர வுண்ட். இதிலே எந்த அளவுக்கு ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக் கிறது என்ற தகவல் இப்போது என்னிடத்திலே இல்லை. தனி யாகக் கேள்வி எழுப்பினால் அதற்கான விவரங்களைச் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் அளிக்கும் போது குறிப்பிட்டார்கள். வருமானமே வராத கோயில்களுக்கு இருக்கக்கூடிய நிலங்களை விற்றுக் கொள்ளலாம் என்று அரசு கொள்கை முடிவு எடுத்து இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். வருமானம் வராத கோயில்களுடைய நிலங்களை விற்றுக்கொள்ள லாம் என்று சொல்கிறபோது வருமானம் வரக்கூடிய கோயில்

[1991 சனவரி 23

இந்த நடப்பாண்டிலேயே—நீங்கள் இருப்பீர்கள்—ஆகையினாலே (சிரிப்பு) அந்தச் சிறைச்சாலையை அமைப்பதற்கான ஒரு நடவடிக்கையை எடுக்க முடியுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் இந்த ஆண்டு சிறைக்குச் போக மாட்டார்கள் என்று நினைக்கிறேன். அவருடைய வசதியைக் கருத்திலே கொண்டு—அப்படிப் போவதாக அறிவிப்பார்களேயானால், அதை மனதிலே கொண்டு நடவடிக்கை எடுக்கலாம். அப்படி ஒன்றும் அவர்கள் போக மாட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** வராது.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** வராது; வரக்டாது என்று கூட நான் நினைக்கிறேன். ஆனால் உறுப்னருடைய கருத்தின் அடிப்படையில், திண்டுக்கல்லில் ஒரு மாவட்டச் சிறைச்சாலை அமைப்பதற்கான குறிப்பைப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. எஸ். ஏ. தங்கராஜன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்ததைப் போன்று திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்தில் மத்திய சிறைச்சாலையை ஏற்படுத்துவதற்கு இப்பொழுது அரசின் நடவடிக்கையில் இல்லாமல் போனாலும், ஏற்கனவே இருந்து வரும்படியான கிளைச் சிறைச்சாலை மோசமான நிலையில் இருப்பதாலும், சிறிய பகுதியாக இருப்பதாலும், அதை விரிவுபடுத்திக் கட்டுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :** தலைவரவர்களே, மத்திய சிறைச்சாலை அமைப்பதற்கான குறிப்பு ஆராயப்படும்பொழுது மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருததையும் கருத்திலே கொண்டு, கிளைச் சிறையை விரிவுபடுத்தி மத்திய சிறையை அமைக்கலாமா என்பதையும் பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இராயபுரம் தொகுதியில் இரும்புத் துகள்களினால் பாதிப்பு.**

***9528—திரு. இரா. மதிவாணன் :**

*மாண்புமிகு போக்குவரத்து துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

சென்னை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து கன்வேயர் பெல்ட் மூலமாக இரும்புத்துகள் மற்றும் கற்கள் இறக்குமதி செய்யப்படும் காரணத்தால், அங்கிருந்து கிளம்பும் இரும்புத்



1991 சனவரி 23]

துகள்கள் இராயபுரம் தொகுதியில் பல்வேறு பகுதிகளில் காற்றில் பரவி, பொதுமக்களின் உடல் நலத்தையும், உடைமைகளையும் (வீடு உட்பட) பெருமளவு பாதிப்புக்கு உள்ளாக்குவதனை அரசு அறியுமா ?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, வருடத்தில் சனவரி, பிப்ரவரி, மார்ச்சு ஆகிய மாதங்களில் கரையை நோக்கி வீசும் காற்றினால் சென்னைத் துறைமுகத்தில் இரும்புத்தாது கையாளப்படும்போது தூசு பரவுகின்றது. இதை தடுப்பதற்குப் போதிய நடவடிக்கைகளை சென்னைத் துறைமுகப் பொறுப்புக் கழகம் எடுத்து வருகின்றது.

**திரு. இரா. மதிவாணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இரும்புத் தூள்கள், தொகுதியிலே பல பகுதிகளிலே பரவுவதால், பொது மக்கள் இருதய நோயால் அதிகம் பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. ஆகையினால் அந்த இரும்புத் தூள்களை இறக்குமதி செய்யப்படும் இடத்தை மாற்றுவதற்குச் சம்பந்தப்பட்ட நிறுவனத்திடம் அரசு கலந்து பேச ஆவன செய்யுமா என அறிய வரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** தலைவரவர்களே, தற்போது ஏற்படக் கூடிய கெடுதலைத் தடுக்கின்ற வகையில் பல முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியத்தோடு கலந்தாலோசிக்கப்பட்டு, தூசு பரவாமல் தடுப்பதற்குத் தகுந்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இருந்தாலும் உறுப்பினரவர்கள் சொன்ன கருத்தைப் போல, வட சென்னையில் அனல் மின்சார நிலையத்தின் நிலக்கரித் தேவையைப் பூர்த்தி செய்ய, சென்னை துறைமுகத்தை எண்ணூர் வரையில் விரிவாக்கும் திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நிறைவேற்றப்படலாம். அப்படி நிறைவேற்றப்படுகின்றபொழுது, இந்தப் பணி அந்தப் பகுதிக்கு மாற்றப்படும்பொழுது நிச்சயமாக இந்த இரும்புத் தாது மற்றும் கற்களைக் கையாளப்படுவதில் தூசு பரவாமல் இருக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யலாம்.

பேருந்துகளில் இலவசப் பயணம்.

***10311—திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

*மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழ்நாடு அரசு மோட்டார் வாகன பராமரிப்புத் துறை தொழிலாளர்கள் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய அனுமதி வழங்கப்படுமா ?*

களுக்கு ஏராளமான நிலங்கள் இருக்கின்றன. பொது காரியங்களுக்கு தேவைப்படும்போது, அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலிலிருந்து, அப்படிப்பட்ட இடங்களை எடுக்கமுடியாது என்ற நிலை ஏற்படுகிறது. பள்ளிக்கூடங்களுக்கு, சில இடங்களிலே கழிப்பறைகள் கட்டுவதற்குக் கூட கோயில் இடங்களிலேதான் கட்டவேண்டிய நிலை இருக்கிறது. சாதாரண ஏழைகள் குடிசைகள் போட்டிருக்கக்கூடிய இடங்களில்கூட கோயில்களுக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட கோயில் நிலங்களை இப்படிப்பட்ட பொதுக் காரியங்களுக்கும், சாதாரண ஏழையெளிய மக்கள் குடியிருப்பதற்கான இடங்களுக்காவது ஒரு விலை வைத்து கொடுப்பதற்கு அரசு கொள்கை முடிவு எடுத்து அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலங்களைப் பொறுத்தமட்டிலே இன்று இருக்கின்ற இந்து அறநிலையத் துறைச் சட்டத்தின்படி கோயில்களுக்கு நன்மைகள் விளைவிக்கக்கூடிய காரியங்களிலே இப்படி நிலங்களை விற்கலாம் என்று ஆணையருக்கு அதிகாரம் இருக்கிறது. ஆனால் பொதுக் காரியங்களுக்கு இப்படிப்பட்ட நிலங்களைக் கொடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் சமீபத்திலே அந்தக் கொள்கை முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக்கூடங்கள், பஸ் டெப்போக்கள், இப்படிப்பட்ட பொதுக் காரியங்களுக்கு நிச்சயமாக வருவாய் சற்று இருந்தாலும்கூட அந்த நிலத்தை விற்பதன் மூலம் அதைவிட அதிகமான வருவாய் அந்தக் கோயிலுக்கு வரக்கூடும் என்ற அந்தக் கட்டத்தில் அந்த நிலங்களை விற்பனை செய்ய அனுமதி தரப்படும். ஆங்காங்கே இருக்கக்கூடிய சாதாரண ஏழையெளிய மக்கள் குடியிருப்புகளைப் பொறுத்த மட்டில் அதற்கு என்று தனி முடிவு எடுக்க இருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பராமரிப்புச் செலவு.**

*4776—**திரு. இரா. சிங்காரம் :**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பராமரிப்பை ஊராட்சி மன்றம் செய்துகொள்ள ரூ. 100 வரை செலவு செய்ய ஊராட்சி மன்றங்களுக்கு அனுமதி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





**திரு. இரா. சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே கட்டப்படுகின்ற மேல்நிலை தேக்கத் தொட்டி பழுதடைந்து போனாலோ, பல லட்சக்கணக் கான ரூபாய்களை செலவு செய்து கட்டுகிறோம். அந்த ஓவர் ஹெட் டேங்க் பராமரிப்பதற்கு அந்த ஊராட்சியில் 100 ரூபாய் கூட செலவு செய்ய முடியாத ஒரு நிலை இருக்குமானால், அந்த ஊராட்சி எப்படிச் செயல்படும் ? அந்த ஓவர் ஹெட்–டேங்க்-ஐ எப்படி பராமரிக்க முடியும் ? அந்த ஓவர் ஹெட்–டேங்க் நின்று போய் விட்டால் திடீரென்று பழுது பார்ப்பதற்கு ஒரு ஆப்பரேட் டர் தேவை. அந்தச் செலவுகூட செய்யமுடியாத நிலை இருக்கு மானால், அதனால் கஷ்டமான சூழ்நிலை பொதுமக்களுக்கு வந்து சேரும். ஆகவே மீண்டும் அமைச்சர் அவர்கள் மறு பரிசீலனை செய்ய ஆவன செய்வாரா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கோ. சி. மணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கேள்வி 'மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின் பராமரிப்பை ஊராட்சி மன்றம் செய்துக் கொள்ள ரூபாய் 100 வரை செலவு செய்ய ஊராட்சி மன்றங்களுக்கு அனுமதி அளிக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா' என்பது. ஆனால் இதுவரையில் இந்தத் தண்ணீர் தொட்டி ரிப்பேர்க்கு ஒன்றும் செய்யவேண் டாம் என்று அரசாங்கம் எந்த ஒரு உத்தரவும் போடவில்லை. ஆனால் இதிலே 100 ரூபாய் செலவு செய்வதற்கு இந்த அரசு விரும்பவில்லை. அதற்கு எப்போது தேவைப்படுகிறதோ அப் போது பொது நிதியிலிருந்து, ஒன்றியங்கள் செலவு செய்து கொள்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி பெற்று நிச்சயமாகச் செய்யலாம். இதுவரை எங்காவது அப்படி நடந் திருக்குமானால், அந்தத் தகவலை அவைக்குத் தந்தால், நாளைக்கே இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக் கிறது.

9-35 மணி

**திரு. இரா. சிங்காரம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரின் விளக்கத்திற்கு நன்றி. ஆனால் நான் கேட்பது ஒரு ஸ்டாண்டிங் ஆர்டர், ஒரு பெர்ம னென்ட் ஆர்டர். தற்காலிகமாக, சாதாரணமாக கன்டின்ஜென்சி செலவு செய்ய வேண்டுமென்றால், திடீரென்று ஜெனரல் பாடி கூட்டி, கவுன்சிலில் தீர்மானம் போட்டுச் செய்ய முடியாது. திடீரென்று பம்ப் ஆபரேட்டர் போடவேண்டும் அல்லது திடீ ரென்று காரியங்கள் செய்ய வேண்டும். அல்லது டைமுக்கு பம்ப் இயங்க வேண்டும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் அவை இயங்காமல் இருப்பதால் மக்களுக்குத் தண்ணீர் போய்ச் சேருவ தில்லை. அதுமாதிரியான நிலைமைகளில் காரியங்களை வேக மாகச் செய்வதற்கு அந்தந்தப் பஞ்சாயத்துகளுக்கு இதுவரை அந்த அதிகாரம் இல்லை. பஞ்சாயத்துக்களுக்கு அதிக அதிகாரம்

[1991 சனவரி 23

கொடுக்க வேண்டுமென்று சொல்லுகின்ற இந்த அரசு, அதை
மீண்டும் மறுபரிசிலனை செய்து நிரந்தரமான ஸ்டான்டிங் ஆர்டர்
போட வேண்டும். என்னுடைய கேள்வி ஆரம்பத்தில் நான்
எம். எல். ஏ. ஆக வந்த உடனே கொடுத்தது. இன்றைக்கு விலை
வாசி அதிகமாக ஆகியிருக்கிறது. இப்போது இந்தக் கேள்வி
வந்திருக்கிறது. ஆகவே, அட்லீஸ்ட் 250 ரூபாய்க்கு வழிவகை
செய்து ஊராட்சி ஒன்றியங்களில் இருந்து செலவு செய்வதற்கான
ஒரு ஸ்டான்டிங் ஆர்டரை இந்த அரசு உடனடியாக போடுமா
என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தண்ணீர் தொட்டியைப் பழுது பார்ப்ப
தற்காக எந்த பொதுக் குழுவையும் ஊராட்சி ஒன்றியம் கூட்டத்
தேவையில்லை. நிச்சயமாக பழுது பார்ப்பதற்குரிய முயற்சி
எடுத்து பழுது பார்த்து, பிறகு ரேட்டிபிகேசன் பெறலாம். அதற்
காக— நூறு ரூபாய்க்காக வேண்டி—ஒரு ஸ்டான்டிங் ஆர்டர்
போட்டால், அது 100, 100 ஆக செலவு வந்துகொண்டே
இருக்கும் என்ற யோசனையும் அரசுக்கு இருக்கிறது. அது
ஆயிரம் ரூபாயாக இருந்தாலும், எப்போது மின் விசையில்
பழுது ஏற்பட்டாலும் பழுது பார்த்துக் கொள்ளலாம் என்று ஓர்
உத்தரவு போட்டிருக்கிறோம். காரணம் அது அடிக்கடி ஏற்படும்.
ஆனால் தண்ணீர்த் தொட்டியில் எப்போதாவது ஒருமுறைதான்
கீறல் அல்லது பழுது ஏற்படும். அதாவது 10 அல்லது 20 வருடத்
திற்கு ஒருமுறைதான் கீறல் ஏற்படும். அப்படி ஏற்படும்போது
100 ரூபாய் என்று இல்லாமல் சிறப்பாக எவ்வளவு வேண்டு
மானாலும் கட்டுப்பாடு இல்லாமல் செலவு செய்துக்கொண்டு
ரேட்டிபிகேசனுக்கு அதைப் பிறகு கவுன்சிலில் வைக்கலாம்.

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேல்நிலை நீர்த் தொட்டியை பராமரிப்பதற்காக
மட்டுமல்லாமல் மேல்நிலை நீர்த் தொட்டியை பராமரிக்கின்ற,
இயக்குகின்ற பம்ப் ஆபரேட்டர்களுக்கு ஊராட்சிகளிலே இன்
றைக்கு 30 ரூபாய், 50 ரூபாய் என்று சம்பளம் கொடுக்கிறார்கள்.
அது குறைவாக இருக்கிறது. அதை நிறைவாகக் கொடுக்க
வேண்டுமென்ற கோரிக்கை அரசுக்கு வந்திருக்கிறது. அதுகுறித்து
உரிய நடவடிக்கை எடுத்து, நிறைவான சம்பளம் வழங்க அரசு
ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சில பஞ்சாயத்துக்களில், குறிப்பாக நான்
ஒரு பஞ்சாயத்தைப் பரிசீலனை செய்தபோது, 12 ஆயிரம்
ரூபாய் அந்தப் பஞ்சாயத்துக்கு வருமானம் வருகிறது. அதுவே
செலவுக்கு போதாமல் அந்தப் பஞ்சாயத்து தத்தளிக்கிறது.
அதற்குப் பிறகு தண்ணீர் தொட்டியை அவர்களிடத்தில் ஒப்ப
டைக்கின்றபோது ஆண்டுச் செலவு 18 ஆயிரம் ரூபாய் ஆகிறது



1991 சனவரி 23]

என்று அந்தத் துறையினர் என்னிடத்தில் தெரிவித்து ஒப்புதல்
அளிக்கிறார்கள். எனவே, இப்படி அதிகச் செலவு வளர்ந்து
கொண்டே இருக்கிற காரணத்தினால், சிறப்பாக ஏதாவது
செலவழிக்க முடியுமே தவிர அதற்கு மாதந்தோறும் செலவழிக்கிற
சூழ்நிலை நிச்சயமாக ஏற்பட முடியாது. எப்போதாவது
பழுது ஏற்பட்டால்தான் அவர்களுக்கு வேலை வருகிறது. தின
மும் காலையில் அந்தத் தண்ணீர் தொட்டியை நிரப்ப பம்பை
இயக்குகிறார்கள். அப்புறம் மறுபடியும் தண்ணீர் தேவைப்படும்
போது மட்டும்தான் இயக்குகிறார்கள். எனவே அது ஓர் உப
வேலைதான். இதற்காக நிரந்தரமாக அதிகம் செலவழிக்கச்
செய்து பஞ்சாயத்துக்களுடைய பளுவை உயர்த்த முடியாது.

திரு. எஸ். காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :
மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளுடைய
நிர்வாகத்தில் இருக்கிற மேல்நிலை நீர்த் தொட்டிகளுக்கு நீரேற்ற
மாதந்தோறும் ஏற்படுகிற மின்சாரச் செலவுகளைக் கூட கட்ட
இயலாத நிலையில் இந்த ஊராட்சிகள் மிகவும் பொருளாதாரத்
தில் சீர்கெட்டு இருக்கின்றன. அப்படிப்பட்ட ஒரு நிலைமை
தமிழகத்தில் பெருமபாலான ஊராட்சிகளில் இருக்கிற காரணத்
தினாலே ஊராட்சி ஒன்றியத்தினுடைய பொது நிதியிலிருந்து
அந்த மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்குரிய வகையில்
செயற்குறிப்பு அரசிடம் ஏதாவது இருக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. **மணி** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பொதுவாகக் கூட அரசு உத்தரவு போட
வில்லை. எங்கெங்கு அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்படுகிறதோ
நிச்சயமாக தண்ணீர் வழங்குகிற நிலை தவிர்க்கப்படாமல் இருப்ப
தற்கு அந்த ஒன்றியம் அந்தச் செலவினை ஏற்றுக்கொண்டு செய்
வதற்கு வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அப்படி மீறி எந்த
ஒன்றியத்திலும் பணம் இல்லையென்றால் மாவட்ட முகமை
அதற்கான உதவியைச் செய்வதற்கு ஆணைகள் வழங்கப்பட்டி
ருக்கிறது.

**விழுப்புரம் நகரப் பேருந்து நிலையத்தை மாற்றி அமைத்தல்.**

*9655—திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) விழுப்புரம் நகரப் பேருந்து நிலையம் மாற்றி
அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்றப்படும் ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) விழுப்புரம் நகரின் தெற்கில் திருச்சிராப்பள்ளி தேசிய நெடுஞ்சாலையில் பூந்தோட்டம் கிராமம் புல எண் 219-ல் 6.25.0 ஹெக்டேர் அரசு ஏரி புறம்போக்கு நிலத்தை நீண்டகால குத்தகை அடிப்படையில் விழுப்புரம் நகராட்சி பெற்றிருக்கிறது. அதிலே பேருந்து நிலையத்திற்குத திட்டம் இடப்பட்டிருக்கிறது. விரைவில் வேலை முடிக்கப்படும்.

மேட்டூர் கால்வாய்களைப் புதுப்பித்தல்.

*5909—திரு. க. பழனிசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடதுகரை, வலதுகரை கால்வாய்களைப் புதுப்பிக்க, தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, பராமரிக்க மற்றும் பழுதுபார்க்க வருடந்தோறும் அரசினால் ஒதுக்கப்படும் நிதிநிலைக்குத் தக்கவாறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு செய்து முடிக்கப்பட்டு வருகின்றன.

சபரி அணையைப் புதுப்பிக்கும் திட்டம்.

*9288—திரு. கே. சுப்பிரமணியப்பிள்ளை :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் அருகே பழையாற்றின் குறுக்கே உள்ள சபரி அணை தற்சமயம் பழுது ஏற்பட்டு கசிவு ஏற்பட்டுள்ளதால் இந்த அணையை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும் ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே,

(அ) சபரி அணையில் கசிவுகள் அடைக்கும் பணிகள் பராமரிப்புப் பணியின் கீழ் தற்போது செய்யப்பட்டுள்ளன. இவ்வணையை மேம்படுத்தும் பணிகள் தேசிய நீர் மேலாண்மை



மேம்பாட்டுத் திட்டமான கோதையாறு திட்டத்தின் கீழ் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) சபரி அணையை மேம்படுத்தும் பணிகள் வருகிற கால அடைப்பு காலத்தில் மேற்கொள்ளப்படவுள்ளன.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த அணையினுடைய கசிவைச் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போது ஏற்பட்டிருக்கிற அந்தக் கசிவின் காரணமாக ஏராளமான நீர் விரயமாகி, வறட்சிக் காலத்தில் மக்களுக்குத் தேவையான நீர் இல்லாத நிலைமையைக் கருத்திற்கொண்டு, உடனடியாக இந்த ஆண்டிலேயே அந்தப் பணியைப் பூர்த்தி செய்து, கசிவை நிறுத்துவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

9-40 மணி

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, அதிலே கசிவு ஏற்பட்டிருக்கிறது என்பதற்காகத்தான், தற்போது உடனடியாக அதனுடைய பராமரிப்புப் பணியின் கீழ் அது பழுது பார்க்கப்பட்டிருக்கிறது. நிரந்தரமாக அதனுடைய கசிவைத் தடுக்கும் பொருட்டு, grouting and raising the flood banks என்ற முறையில் அந்த இரண்டையும் செய்வதற்குத் தேசிய நீர் மேலாண்மைத் திட்டத்தின்கீழ் மதிப்பீடு தயாரித்திருக்கிறோம். ரூ. 3.7 இலட்சம் செலவில் அந்த மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கிறது. இப்போது நீர் அந்த அணையில் இருக்கிற காரணத்தால் இப்போது பணி செய்ய முடியாது. நீர் வற்றியவுடன் அந்த பணி மேற்கொள்ளப்படும்.

வணிகர் நல வாரியம் அமைத்தல்.

*230—திரு. பெ. சு. திருவேங்கடம் :

திரு. எஸ். டி. உகம்சந்த், மற்றும்
டாக்டர் ச. சுந்தரராஜ் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வணிகர் நல வாரியம் ஒன்று அமைக்க வேண்டுமென கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,

(அ) மற்றும் (ஆ) : விவர அறிக்கை அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

[1991 சனவரி 23

விவர அறிக்கை.

தற்போதைய அரசு, தனது தேர்தல் அறிக்கையில் ''நலிவுற்ற வணிகர்கள் புனர் வாழ்வு பெற்றிட, கழக ஆட்சியில் அறிவிக்கப்பட்ட வணிகர் நல அமைப்பு உருவாக்கப்படும்'' என அறிவித்த தன் அடிப்படையில் சட்டமன்றப் பேரவையில் 24—3—1989 அன்று சமர்ப்பிக்கப்பட்ட 1989-90 ஆம் ஆண்டுக்குரிய நிதி நிலை அறிக்கையில் இத்தகைய ஓர் அமைப்பு, வரும் ஆண்டில் ஏற்படுத்தப்படுமென்றும், இதற்காக விற்பனை வரி வருவாயில் ரூபாய் இரண்டு கோடியை அரசு ஒதுக்குமென்றும், இந்த அமைப்பின் நிர்வாகத்தில், வணிகர்கள் பிரதிநிதிகளை ஈடுபடுத்தி அவர்களுடைய தேவைகளுக்கேற்ப வணிக சமுதாயத்திற்கு பயன் தரக்கூடிய திட்டங்கள் நிறைவேற்றப்படுமென்றும் மாண்புமிகு முதலமைச்சர் அறிவித்தார். இதற்கேற்ப கடந்த 11—5—1989 அன்று, ரூபாய் இரண்டு கோடி அரசின் பங்காக வணிகர் நல வாரியத்திற்கு நிதி வழங்க ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் 25—9—1989 அன்று வணிகவரித்துறை அமைச்சர் என்ற நிலையில் முதலமைச்சரைத் தலைவராகக் கொண்ட வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டு, இதற்காக கீழ்க்கண்ட அலுவல் சார்ந்த மற்றும் அலுவல்சாரா உறுப்பினர்கள், செயலாளர் ஆகியோர் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

1. தலைவர்—வணிகவரித்துறை அமைச்சர்.

2. அலுவல் சார் உறுப்பினர்கள் —

(அ) வணிகவரி மற்றும் அறநிலையத்துறையின் அரசுச் செயலாளர்.

(ஆ) நிதித்துறையின் அரசுச் செயலாளர்.

(இ) தொழில் துறையின் அரசுச் செயலாளர்.

(ஈ) விவசாயத் துறையின் அரசுச் செயலாளர்.

(உ) உறுப்பினர்-செயலாளர் மற்றும் தலைமை செயல் அலுவலர்.

(வணிகவரித் துறையின் இணை ஆணையர் நிலையில் ஒரு அலுவலர்.)

3. அலுவல் சாரா உறுப்பினர்கள் :

(அ) திரு. கே. ஜி. பாலகிருஷ்ணன், தலைவர், இன்டியன் சேம்பர் ஆப் காமர்ஸ், கோயம்புத்தூர்—துணைத்' தலைவர்.

(ஆ) திரு. சி. நவமணி, பொது செயலாளர், தமிழக அனைத்து வணிகர்கள் சங்கம், சென்னை-21—உறுப்பினர்.



1991 சனவரி 23]

(இ) திரு. குணவிலாஸ் கே. கணேசன், மதுரை—உறுப்பினர்.

(ஈ) திரு. வி. கிருஷ்ணமூர்த்தி, முன்னாள் எம்.எல்.ஏ., திருச்சி—உறுப்பினர்.

(உ) திரு. ஏ. ஜெயசீலன், செயலாளர், பஜார் வியாபாரிகள் சங்கம், சேலம்—உறுப்பினர்.

(ஊ) திரு. ஜே. ப்பி. எம். எம். மொய்தீன் கான், நெல்லை—உறுப்பினர்.

மேற்கண்ட அலுவல் சாரா உறுப்பினர்களின் பதவிக் காலம் நியமன நாள் முதல் மூன்றாண்டுகள் வரை ஆகும்.

2. இவ்வாரியம் கீழ்க்கண்ட நலப்பணிகளை நிறைவேற்றும்.

(அ) நலிவுற்ற வணிகர் குடும்பங்களுக்கு கல்வித் தொடர்பாக உதவுதல் ;

(ஆ) உறுப்பினர் வணிகர் இறக்க நேரிடின் அக்குடும்பத்திற்கு குடும்ப நல நிதி வழங்குதல் ;

(இ) புயல், வெள்ளம், நெருப்பு போன்ற இயற்கை சீற்றங்களினாலும், கலவரம் மற்றும் கொள்ளை போன்ற தீய சக்திகளினாலும், பாதிக்கப்பட்ட வணிகர்களுக்கு நிதி உதவி வழங்குதல்;

(ஈ) சிறப்பு நேர்வுகளில், வணிகரது குடும்பங்களுக்கு மருத்துவ உதவி அளித்தல் ;

(உ) தொகுதி காப்பீட்டுத் திட்டம் (G oup Insurance Scheme) போன்ற ஒரு திட்டத்தை ஏற்படுத்தி, வணிகர்களுக்கு ஓய்வூதியம் இறக்க நேரிட்ட வணிகர்களது குடும்பங்களுக்கு குடும்ப ஓய்வூதியமும் வழங்குதல் ;

(ஊ) வணிகர் கூட்டங்கள் மற்றும் திருமணங்கள் போன்றவை நடத்துவதற்கு ஏதுவாக மாவட்ட தலைமை நகரங்களில் சமுதாய கூடங்கள் கட்ட உதவுதல் மற்றும்

(எ) வணிகர் நல வாரியத்திடம் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் நலத் திட்டங்களையும் செயல்படுத்துவது.

திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவரவர்களே, வணிகர்களுடைய நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் இந்த வாரியத்தை

[1991 சனவரி 23

ஏற்படுத்தி இருக்கிறார்கள். இந்தக் குறுகிய காலத்தில் இந்த வாரியத்தின் மூலமாக நன்மை பெற்ற வியாபாரிகளின் பட்டியலை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த வாரியம் இரண்டு முறை கூடியிருக்கிறது. முதலில் 12—6—1990-லும் பிறகு 11—9—1990-லும் இரண்டு முறை இதனுடைய கூட்டங்கள் நடைபெற்று இருக்கின்றன. இந்த வாரியம் வணிகர்களுடைய நலனுக்காகப் பின்வரும் முடிவுகளை எடுத்துள்ளது. ஆண்டு வருமானம் ரூபாய் 24 ஆயிரத்திற்கு மேற்படாது இருக்கும் உறுப்பினர்களுக்குக் கடினமான சூழ்நிலையில் மாற்று சிறுநீரகம், திறந்த இருதய அறுவை சிகிச்சை, மற்றும் பை-பாஸ் அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்கு ரூபாய் பத்தாயிரத்திற்கு மேற்படாமல் உதவித் தொகை வழங்குதல் ; ஆண்டு வருமானம் 15 ஆயிரத்திற்கு மேற்படாமல் இருக்கும் உறுப்பினர்கள் இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்திற்குக் குடும்ப நல நிதியாக 5 ஆயிரம் ரூபாய் வழங்குதல்; அவ்வாறு இறந்த வணிகர்கள் குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்கு இளங்கலைக் கல்வி பயில ஆண்டுக்கு ரூபாய் ஆயிரமும், முதுகலைக் கல்வி தொடருவதற்கு ஆண்டுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபாயும் உதவித் தொகையாக வழங்குதல் என்று முடிவு செய்யப்பட்டு இருக்கிறது. அரசு வழங்கியுள்ள இரண்டு கோடி ரூபாயில் இது வரையிலே 5 இலட்சம் ரூபாய் வாரியத்தின் உடனடிச் செலவுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரிசர்வ் வங்கியில் வட்டியுடன் கூடிய கணக்கில் செலுத்தப்பட்டுள்ளது. நான் முதலில் குறிப்பிட்ட இந்த உதவித் தொகைகளைப் பெறுவதற்கு எத்தனை பேர்கள் முன் வந்துள்ளார்கள் என்கின்ற விவரங்கள் இன்னும் வாரியத்தால் அரசுக்கு அளிக்கப்படவில்லை.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய மொத்த வருமானத்தில் 40 சதவிகிதத்திற்கும் அதிகமாக வணிக வரியின் மூலமாக நமக்குக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில், நலிந்து, வாணிபம் செய்ய முடியாத நிலையில் இருக்கின்ற வணிகர்களுக்கு உதவி செய்வதற்காக இந்த வாரியத்தை அமைத்திருக்கிறோம். ஆனால் இது வரையில் இது பற்றி சரியான முறையிலே அந்த வணிகர்களுக்குத் தெரிவிக்கப்படாத காரணத்தால் இதன் மூலமாக நன்மைகளைப் பெறுவதற்கு அவர்கள் முன் வரவில்லை என்பது தான் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் சொன்ன குறிப்பிலிருந்து தெரிகிறது. அப்படிப்பட்ட சூழ்நிலையில் நடந்துவிட்ட அந்த வணிகர்களுக்கு மேலும் நல்ல முறையிலே பணிகளைச் செய்வதற்கு வாரியத்திடம் ஏதாவது திட்டங்கள் இருக்கின்றனவா ? மேலும் எந்த அடிப்படையில் வணிக நல வாரியத்தின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுகிறார்கள் என்பதை மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?



1991 சனவரி 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நலிவுற்ற வணிகர்களுடைய குடும்பங்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்கு ஏற்ற விஷயங்களைச் செய்யவும் தான் இந்த வணிகர் நல வாரியம் அமைக்கப்பட்டது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னதைப் போல இது குறித்து விளம்பரங்கள் எதுவும் செய்யப்படாமல் இல்லை. குழுக்கள் கூடுகிற நேரத்தில் எல்லாம் அதனுடைய அறிவிப்புகள் பத்திரிகைகளிலே வெளியிடப்பட்டுள்ளன. எல்லா வணிகர்களுக்கும் தெரிகின்ற வகையில் அந்தச் செய்திகள் எட்டியுள்ளன. இருந்தாலும் அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது பாதிக்கப்பட்ட வணிகர்களுடைய கடமை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எந்த அடிப்படையிலே அந்த உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டார்கள் என்று கேட்டு இருக்கிறார்கள். கட்சி சார்பற்ற முறையிலே, வணிகர் நலனில் அக்கறை உள்ளவர்கள் எல்லாம் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். இதிலே, சேலத்திலே உள்ள திரு. ஜெயசீலன், செயலாளர், லீ பஜார் வியாபாரிகள் சங்கம், அ.தி.மு.க.வைச் சேர்ந்தவர் ; அவர் கூட இதிலே நியமிக்கப்பட்டு இருக்கிறார்.

9-45 மணி.

திரு. இளம்வழுதி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வணிகர் நல வாரியம் அமைப்பதற்கு எவ்வளவு செலவாயிற்று ? இதில் உறுப்பினராகச் சேருவதற்கு என்னென்ன விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அமைப்பதற்கு நேரம்தான் செலவாயிற்று ; பணம் எதுவும் செலவாகவில்லை. ஆனால் அந்த வணிகர் நல வாரியம் இயங்குவதற்காக அரசு அந்த வாரியத்தின் பெயரிலே இரண்டு கோடி ரூபாய் வங்கியிலே போட்டு இருக்கிறது.

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வணிகர் நல வாரியத்தின் மூலமாக வணிகர்களுக்குப் பயன் முழுமையாக, எளிதாகச் சென்றடைய மாவட்டங்கள் தோறும் இந்த வணிகர் நல வாரியத்தினுடைய கிளைகள் அமைக்கப்படுமா ? மேலும் இதனுடைய நோக்கம் வணிகர்களுக்கு முழுமையாகப் பயன்படத்தக்க வகையிலே விற்பனை வரியைச் சீரமைப்புச் செய்யக் கூடிய யோசனைகள் பரிந்துரைகளாக இந்த வணிகர் நல வாரியத்தின் மூலமாகப் பெறப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதைப் போல மாவட்ட வாரியாக இந்த வணிகர் நல வாரியக் குழுக்களை மாநில வாரி

யத்தின் கிளைகளாக அமைப்பது பற்றி வணிகர் நல வாரியத்தின்
தலைமைக் குழு தான் முடிவு எடுக்க வேண்டும். விற்பனை
வரியைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே எடுத்துச்
சொன்னார்கள். ஏற்கெனவே விற்பனை வரியில் எந்த அள
விற்கு சாதகமாக, அதை ஒருமுனை வரியாக ஆக்க வேண்டு
மென்ற கோரிக்கையை இந்த அரசு செயல்படுத்தி இருக்கிறது
என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இது
போன்ற பரிந்துரைகளை வணிகர் நல வாரியம் அரசுக்குச் செய்
தால் அவைகளை அரசு அலட்சியப்படுத்தாமல் பரிசீலிக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்
களே, எதிர்பாராமல் ஏற்படுகின்ற தீ விபத்தின் காரணமாகவும்,
வன்முறையாளர்கள் கடைகளைச் சூறையாடுவதன் காரண
மாகவும் ஏற்படுகின்ற பாதிப்புக்கு வணிகர் நல வாரியத்தின்
மூலமாக உதவி கிடைக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்
களே, இப்போது வழங்குவதாக அறிவித்துள்ள உதவிகளையே
பெறுவதற்கு இன்னும் பல பேர் முன் வரவில்லை என்பது தான்
இன்றைக்குள்ள சூழ்நிலை.

தனியாரிடம் உள்ள சர்க்கரை ஆலைகளை
அரசே ஏற்று நடத்துதல்.

*876—திரு. வி. கே. சின்னசாமி :
மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு
விடையளிப்பாரா :

(அ) தனியாரிடம் உள்ள சர்க்கரை ஆலைகளை அரசே
ஏற்று நடத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இந்த வினாவிற்கு இடமில்லை.

திரு. மா. மணிமாறன்: பேரவைத் தலைவர் அவர்களே,
பல தனியார் சர்க்கரை ஆலைகளில் கூட்டுறவு சர்க்கரை ஆலை
களை விட விலைகள் மிகக் குறைவாக கரும்புக்குக் கொடுக்கப்
படுகின்றன. கூட்டுறவு சர்க்கரை ஆலைகளில் டிவிடெண்டு
விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகின்றது; ஆனால் தனியார்
சர்க்கரை ஆலைகளில் அது கொடுக்கப்படவில்லை. அரசாங்
கத்துக்குத் தர வேண்டிய டெவலெப்மென்ட் பண்டு கூட அவர்



கள் தர மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை காரண
மாக, சாலைகள் மேம்பாட்டுத் திட்டங்கள் கூட பாதிக்கப்படு
கின்றன. எனவே இப்படித் தவறாக அழிச்சாட்டியம் செய்
யக்கூடிய தனியார் சர்க்கரை ஆலைகளை அரசு எடுத்து நடத்த
முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இந்த அரசைப்
பொறுத்தவரையில் தனியார் சர்க்கரை ஆலைகளை ஊக்கப்
படுத்துகின்ற கொள்கையை என்றைக்கும் எடுத்தது இல்லை.
கடந்த காலத்திலேகூட, 1967-இல் இந்த அரசு பொறுப்புக்கு
வந்து 1976 வரையில் நடைபெற்ற அந்தக் காலக் கட்டத்திலே
கூட, அப்போது ஏற்பட்ட சர்க்கரை ஆலைகள் எல்லாம் கூட்டு
றவுத் துறையிலேதான் ஏற்படுத்தப்பட்டன. இப்போது
மீண்டும் இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு தனியார் சர்க்கரை
ஆலைகளை ஊக்கப்படுத்தாமல் கூட்டுறவு அல்லது பொதுத்
துறை சர்க்கரை ஆலைகளை ஊக்கப்படுத்தித் தான் — இப்
போது கூட 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்காக நாம் மத்
திய அரசிடத்திலே பரிந்துரை செய்து, அதிலே 2 ஆலைகளைப்
பெற்று இருக்கின்றோம். ஏற்கனவே இருந்த ஆட்சியிலே
7-க்கு மேற்பட்ட தனியார் சர்க்கரை ஆலைகள் வந்துள்ளன.
தனியார் சர்க்கரை ஆலைகள் மிகப் பிடிவாதம் பிடிக்கிறார்
கள்; அவர்கள் கரும்புக்கு விலையைத் தருவதற்கு மறுக்கிறார்
கள் என்று எல்லாம் சொன்னார்கள்.

9-50 மணி

எல்லோரையும் அழைத்து வைத்து வேளாண்மைத் துறை
அமைச்சரும் மற்ற அதிகாரிகளும் பேசி கரும்பு விலை நியாய
மான அளவிற்கு இந்த ஆண்டு வழங்கப்பட்டிருக்கிறது. அதைப்
போலவே மற்ற பகுதிகளிலும் அந்தச் சர்க்கரை ஆலைகள்
இருக்கின்ற இடத்திற்கு அருகாமையில் உள்ள வட்டாரம் மேம்
பாடு அடைய வேண்டும் என்பதற்கான பணிகளை கூட்டுறவுத்
துறை, பொதுத்துறை மற்றும் சர்க்கரை ஆலைகளின் மூலமாக
செய்வதற்கான முயற்சிகளை நாம் மேற்கொண்டிருக்கிறோம்.
அதற்குத் தனியார் ஆலை அதிபர்களும் ஒத்துழைப்புத் தரவேண்
டும் என்று அவர்களுக்கும் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, மாநிலத்தில் உள்ள சர்க்கரை ஆலைகளில் எல்
லாம் தனியார் துறையைவிட பொதுத் துறைக்கு, கூட்டுறவுத்
துறைக்கு ஊக்கம் அளிப்பதாக முதல்வர் அவர்கள் அறிவித்தார்
கள். உண்மையிலேயே அது வரவேற்கக் கூடியது. ஆனால்
தனியார் ஆலைகளில் கிடைக்கிற இலாபத் தொகையில் ஒரு
பகுதியை கிராமங்களிலே உள்ள சாலைகளைச் செப்பனிடுவதற்
காக செலவழிப்பதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அப்

[1991 சனவரி 23

படி ஏதாவது சாலைகளை செப்பனிடுவதற்காக அரசாங்கத்தி னுடைய வழிகாட்டுதல் இருக்கிறதா? எத்தனை ரூபாய் வரை யில் அவர்கள் அப்படிச் செலவு செய்யலாம் என்பதற்கு விதி முறைகள் இருக்கின்றனவா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அவர்கள், 'செஸ்'ஸாகத் தருகின்ற அந்தத் தொகை நீண்ட கால மாக நிரம்ப பாக்கி இருந்தது. அவர்களையெல்லாம் அழைத்துப் பேசி அந்தத் தொகை ரூ. 16 கோடியை அரசு அவர்களிட மிருந்து பெற்றிருக்கிறது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளின் செயல்திறன் குறித்து ஆய்வு ஏதாவது நடத்தப் பட்டதா? அதன் மீது எடுக்கப்பட்ட முடிவுகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அடிக்கடி இது போன்ற ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. அண் மையிலேகூட நான் ஏற்கனவே குறிப்பிட்டதைப் போல, அந்த வட்டார மேம்பாட்டுத் திட்டங்களுக்கான ஆய்வை இந்த அரசு நடத்தியிருக்கிறது. அந்த ஆய்வின்படி 26—11—1990 ஆம் நாள் அன்று நானே முன் நின்று அந்தச் சர்க்கரை ஆலைகளிலே இருக்கும் நிர்வாகிகளையெல்லாம் அழைத்துப் பேசியிருக்கிறேன். அந்த ஆய்வின் போது சர்க்கரை ஆலைகளில் ஈட்டுகிற நிகர இலாபத் தொகையில் 20 விழுக்காட்டை அந்தப் பகுதியில் உள்ள கிராமங்களின் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என் றும், சாலை அமைத்தல், கல்விக் கூடங்களைக் கட்டுதல் மற்றும் சமுதாய நலப் பணிகள் போன்ற வருமான வரி விலக்கு அளிக்கக் கூடிய திட்டங்களுக்குப் பயன்படுத்தலாம் என்றும் முடிவு எடுக் கப்பட்டிருக்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, கூட்டுறவுத் துறை, பொதுத் துறை சர்க்கரை ஆலைகளைச் சுற்றியுள்ள விவசாயிகள் கரும்பு பயிரிடுவதால் அதிக இலாபம் கிடைக்கிறது. எனவே தமிழகத்திலே கரும்பு பயி ரிடும் இடங்களை அதிகரிக்க அரசு என்ன முயற்சி மேற்கொண்டி ருக்கிறது, என்ன சலுகைகளைத் தருகிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகள் பகுதிகளில் கரும்பு அபிவிருத்திப் பணியை அந்தந்த ஆலைகள் அறவைத் திறனுக்கேற்ற அளவில் ஒவ்வொரு



1991 சனவரி 23]

ஆண்டும் கரும்பு நடவுத் திட்டத்தைத் தயார் செய்து அதற்குத் தேவையான கரும்பு அபிவிருத்தி மானியம் மற்றும் ஊக்கத் தொகை ஆலை நிதியிலிருந்து வழங்கப்படுகிறது. விவசாயிகளு டைய கோரிக்கையை ஏற்று 8.5 விழுக்காடு சர்க்கரை கட்டுமான ரிகவரி இருந்தால் டன் ஒன்றுக்கு ரூ. 250 மாநில அரசின் பரிந் துரையாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதோடு விவசாயிகள் 30 கிலோ மிட்டர் தூரம் வரை மட்டுமே கரும்பு போக்குவரத்து வாகன வாடகைச் செலவு ஏற்றுக்கொண்டால் போதும் என்றும் மீதியை சம்பந்தப்பட்ட ஆலைகள் ஏற்றுக் கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. இது தவிர மாநில அரசு 1990-91 ஆம் ஆண்டில் ஆலைகளுக்கு வழங்கப்படும் கரும்புகளுக்கு விவ சாயிகளுக்கு டன் ஒன்றுக்கு ரூ. 10 மானியமாக அளிக்கவும் ஒப்புக்கொண்டுள்ளது. மேற்கண்ட நடவடிக்கைகளால் கரும்பு பயிரிடுவதற்கு த்தகுந்த ஊக்கம் காட்டப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

'சிட்கோ' திட்டம்.

*10344—திரு. வே. நா. சுப்பிரமணியன் :
மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்டவினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம் வட முகம் காங்கேயம்பாளையத்தில் அமைக்க உள்ள 'சிட்கோ' திட் டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) எப்போது தொடங்கப்படும்?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் ; தலைவர் அவர் களே,

(அ) மற்றும் (ஆ): பெரியார் மாவட்டம், பெருந்துறை வட்டம், காங்கேயம்பாளையம் கிராமத்தில் 20 ஹெக்டேர் நிலப் பரப்பில் சிட்கோ நிறுவனத்தால் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆணை பிறப்பித்தது. இதற்கான நில எடுப்புச் சட்டம் பிரிவு 4(1)-ன் கீழ் முன்மொழிவும் 6-ன் கீழ் விளம்பல் அறிவிக்கை யும் 7-ன் கீழான கட்டளை அறிவிக்கையும் அரசால் பெறப்பட்டு, நில எடுப்பு இறுதிக் கட்டத்திலே உள்ளது. நில ஆர்ஜித நட வடிக்கைகள் முடிந்ததற்குப் பிறகு 'சிட்கோ'விடம் நிலம் ஒப்ப டைக்கப்பட்டவுடன் தொழில் கூடம் கட்டும் பணி தொடங்கப் படும்.

[1991 சனவரி 23

உயிர்காக்கப் பயன்படும் சிறுநீர் சுத்தம் செய்யும் நவீனக் கருவிகள்.

*5207 ஏ—திரு. சி. கோவிந்தராஜன் ; மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) உயிர் காக்கப் பயன்படும் சிறுநீர் சுத்தம் செய்யும் நவீன (Dialysis Machines) கருவிகள் சென்னை மருத்துவமனை களில் மட்டும் எத்தனை உள்ளன?

(ஆ) மற்ற நகரங்களிலுள்ள மருத்துவமனைகளில்எத்தனை உள்ளன?

9.55 மணி

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் கீழ்க்கண்டபடி அரசு மருத்துவமனைகளில் சிறுநீர் சுத்தம் செய்யும் கருவிகள் உள்ளன.—

(அ) அரசு மருத்துவக் கல்லூரி பொது மருத்துவமனை, சென்னையில் 9ம், அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவ மனை, சென்னையில் 4ம், கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சென்னையில் 5ம், அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் 4ம், குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலையம், சென்னையில் 2ம், ஆக மொத்தம் 24 கருவிகள் சென்னையில் இருக்கின்றன.

(ஆ) மற்ற நகரங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் சிறுநீர் சுத்தம் செய்யும் கருவிகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அரசு இராஜாஜி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, மதுரையில் 2ம் அரசு தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனை தஞ்சாவூரில் 2ம், கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 1ம், சேலம் மாவட்ட மருத்துவமனையில் 5ம் ஆக மொத்தம் 10 கருவிகள் பிற நகரங்களிலும் இருக்கின்றன.

**திரு. சி. கோவிந்தராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் காலத்தில் சிறு நீரகக் கோளாறுகளினால் பாதிக்கப்படக் கூடிய வியாதியஸ்தர்கள் ஏராளமாக இருக்கின்ற காரணத்தாலும், அவர்கள் அநேகமாக தென் மாவட்டங்களிலிருந்து பல் வேறு மாவட்டங்களில் பரவியிருக்கின்ற சூழ்நிலையாலும், அநேகமாக அமைச்சர் அவர்கள் சொன்னது போல சென்னையில் இருக்கக்கூடிய மருத்துவமனைகளில் மட்டும் 24 மருத்துவக் கருவி



991 சனவரி 23]

ள் இருப்பதாகவும், குறிப்பாக மதுரை, தஞ்சை, கோவையில் மட்டும் இருப்பதாகவும் அவர்கள் சொல்கிறார்கள். அநேகமாக மாவட்டத்தில் இருக்கக்கூடிய வியாதியஸ்தர்கள் பூராவும், சென்னைக்கு வருவது என்பதும், சில குறிப்பிட்ட இடங்களுக்குப் போவது என்பதும் கஷ்டமாக இருப்பதால் எல்லா மாவட்ட மருத்துவமனைகளிலும் இப்படிப்பட்ட டயாலிசிஸ் கருவிகளை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கருவிகள் வாங்கப்படுவது மட்டுமின்றி, அதற்கான வசதிகளையும் செய்து கொடுப்பது என்று சொன்னால் அதற்காக அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆகவேதான் இது கல்வியைப் பயிற்றுவிக்கின்ற மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்ற மருத்துவமனைகளில் மட்டும் (Medical Education) துறைகளில் மட்டும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. அரசினுடைய நிதிநிலை அதிகமாக இருக் கின்றபோது, உறுப்பினருடைய கருத்துக்களை எண்ணத்தில் கொண்டு இதற்கான முயற்சிகளைப் பரிசீலிக்கலாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. சி. கோவிந்தராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த் வியாதி இப்போது அதிகமாக இருக்கிறது. இளைஞர் களைக்கூட பற்றக்கூடிய வியாதியாக இது இருக்கிறது. அநேக மாக அவர்கள் தனியார் மருத்துவமனைகளை நாடிப் போகிற நிலையில் ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கக்கூடிய சக்தி யற்ற நிலையில் இருப்பதால் உயிர் காக்கிற பல்வேறு நவீனக் கருவிகளை இந்த அரசு சென்னையில் இருக்கக்கூடிய சிகிச்சைப் போன்ற பல்வேறு சிகிச்சைகளுக்காக இங்கே கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்வதால், அந்த நிதியைப் பகிர்ந்து மாவட்ட மருத்துவமனைகளுக்கு நெப்ராலஜி யூனிட் தயார் செய்து அனுப்ப ஏற்பாடு செய்யப்படுமா என்பதை மட்டும் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பே என்னுடைய பதிலில் குறிப்பிட்டிருக்கிறேன். இது கல்வி பயிற்றுவிக்கின்ற மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் மட்டும் முக்கியத்துவம் கொடுத்து வைக்கப்பட்டிருக்கின்றது. அரசினுடைய நிதி நிலைக்கேற்ப மற்ற பகுதிகளிலும் விரிவாக்குவதற்கு படிப்படியாக இத்திட்டத்தைப் பரிசீலிக்கலாம் என்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. ரமணி :** தலைவர் அவர்களே, கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஒரேயொரு இயந்திரம்தான் இருக் கிறது என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த

மன்றத்தில் நீண்ட நாட்களாக இதைப்பற்றி நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன். அங்கே இரண்டு மூன்று மாவட்டங்களில் இருக்கக்கூடிய வியாதியஸ்தர்கள் விரைவில் வந்து சேரக் கூடிய ஒரு பெரிய மருத்துவமனையாக உள்ளது. பக்கத்தில் உள்ள தொழிலாளர்களுக்காக இருக்கக்கூடிய, தமிழ்நாட்டில் இருக்கிற மைய ஆஸ்பத்திரியும் 400 படுக்கைகளுடன் இருக்கிறது. அங்கே ஒரேயொரு மெஷினை வைத்து ஈடு செய்ய முடியாமல், அனேக பேர்களை சென்னைக்கும் வேறுபல இடங்களுக்கும் தனியார் மருத்துவ மனைகளுக்கும் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அரசாங்கம் கோவை மருத்துவ மனையில் மேலும் உடனடியாக இரண்டு மெஷின்களை ஏற்படுத்துவதற்கு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்துக்கள், அரசினுடைய நிதி நிலைமைக்கேற்ப அவ்வப்போது பரிசீலிக்கப்படும் என்பதை மட்டுமே இப்போது என்னால் அறிவிக்க முடியும்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அளவிற்குக்கூட, நெல்லை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பாடமும் நடத்தப்படுகின்ற காரணத்தால், அந்த மருத்துவமனையில் டயாலிசிஸ் இயந்திரம் இல்லையே? அங்கே உடனடியாக வைக்கப்படுமா? இந்த விலை உயர்ந்த இயந்திரங்கள் வாங்கி ஏதாவது வசதிக்குறைவால் பொறுத்தப்படாமல் இருக்கிறதா?,

*10-00 மணி*

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியுடன் வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே, இந்த கருவிகள் எல்லாம் இந்த அரசு பொறுப்பேற்பதற்கு முன்பே வாங்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கிற கருவிகள். இந்த அரசு மேற்கொண்டு இந்த கருவிகளை வாங்குகிறபோது இல்லாத இடங்களுக்கு கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையில் தான் திட்டங்களை வகுத்து வருகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருத்தை ஏற்று மேற்கொண்டு உடனடியாக வழங்கப்படுகிறபோது நிச்சயமாக திருநெல்வேலியை முதலிடமாகக் கருதி அதற்கான கருவிகள் அங்கே வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. ஆ. அதியமான் :** பேரவைத் தலைவர் அவர்களே, நான் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்து கொண்டேன். அதற்காக எனக்கு நல்ல ஒத்துழைப்பைக் கொடுத்த மாண்புமிகு





முதலமைச்சர் அவர்களுக்கும், மற்ற அமைச்சர்களுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மருத்துவ சிகிச்சை பெற்றதில் அறுவை சிகிச்சைக்குப் பின்னாலே தான் மிகுந்த செலவாகிறது. குறிப்பாக 'சைக்ளோஸ்பெரின்' என்ற மருந்து தமிழ்நாட்டில் சாண்டோஸ் இந்தியா என்ற கம்பெனியின் மூலமாகத் தான் விற்பனை செய்யப்படுகிறது. அந்த மருந்து மாதம் ஒன்றுக்கு இரண்டு பாட்டில்கள் வாங்க வேண்டியிருக்கிறது. 50 மில்லி அளவு மருந்து சுமார் 3,600 ரூபாய் ஆகிறது. நான் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற காரணத்தால் வாங்குகிற மருந்திற்கான பணத்தைத் திரும்பவும் பெற்றுக் கொள்கிற நிலை இருக்கிறது. ஆனால் இந்த அறுவை சிகிச்சை செய்துகொள்கிற அனைத்து நோயாளிகளும் இவ்வளவு அதிகமாக பணம் செலவழிக்க முடியாத நிலை ஏற்படுகிறது. 3,200 ரூபாய் மருந்துக்கு 300 ரூபாய்க்கு மேலாக வரி போடுகிற காரணத்தால் 3,600 ரூபாய் என்று இதற்கு விலை வைக்கப்படுகிறது. இந்த மாதம் இந்த மருந்து 'ஷார்ட் சப்ளையாக' இருக்கிற காரணத்தால் 4,200 ரூபாய் விலை வரும் என்று சொல்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள் விற்பனை வரியைத் தள்ளுபடி செய்தால் நன்றாக இருக்குமென்று அந்த மருந்து கம்பெனிகாரர்கள் என்னிடத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் ஒரு மனுவைக் கொடுக்கலாம் என்று இருந்தேன். தற்செயலாக இந்த கேள்வி இன்றைக்கு வந்திருக்கிற காரணத்தால் எங்களைப் போன்றவர்களுடைய நலனை மனதில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விற்பனை வரியை ரத்து செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, அன்பர் அதியமான் அவர்கள் எழுப்பியுள்ள இந்த வினாவை உருக்கத்தோடு உணர்ந்து பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அவரைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இந்த சிகிச்சைகளுக்கு அரசே உதவிட முன் வருகிறது என்பதையும் எண்ணிப்பார்த்து, வசதி படைத்தவர்கள் பலர் இத்தகைய சிகிச்சைக்கு ஏராளமான பணத்தை செலவிட முடிகிறது என்பதையும் எண்ணிப்பார்த்து, அதே நேரத்தில் ஏழை எளியவர்களால் இந்த சிகிச்சையைப் பெற முடியாமல் இருக்கிற அந்த சங்கடங்களையும் எண்ணிப்பார்த்து, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு இருதய அறுவை சிகிச்சை, சிறுநீரக அறுவை சிகிச்சை போன்றவைகள் ஏழை எளியவர்களுக்கு செய்யப்பட வேண்டுமென்கிறபோது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களே கூட கட்சி சார்பற்ற முறையில் பலபேர் எனக்கு எழுதியுள்ள பரிந்துரைக் கடிதங்களை வைத்து அவர்களுக்கெல்லாம் இயன்ற உதவிகள் 5,000 ரூபாய் முதல் 10,000 ரூபாய் வரையில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. அதனால்தான் முதலமைச்சர் நிவாரண நிதிக்கு

எல்லோரும் அன்பளிப்புத் தரவேண்டுமென்று கூட கேட்டுக் கொள்ளப்படுகிறது. உறுப்பினர்கள் கூட இந்த அன்பளிப்பை முதலமைச்சர் நிவாரண நிதிக்கு வழங்கலாம். அவைகள் எல்லாம் நல்ல காரியத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. கடந்த இரண்டாண்டு காலத்தில் நூற்றுக் கணக்கான பேர்களுக்கு இருதய அறுவை சிகிச்சைக்காகவும், சிறுநீரக அறுவை சிகிச்சைக்காகவும் முதல்வர் நிவாரண நிதியிலிருந்து ஏராளமான தொகை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். வரியைப் பற்றி சொன்னார்கள். அந்த வரியைக் குறைப்பது பற்றியும் நான் அதிகாரிகளோடு கலந்து ஆலோசித்து ஆவன செய்ய முயற்சியெடுப்பேன்.

## மருத்துவ கல்லூரி மாணவர்கள்

* *10109* திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :*

*(அ) மருத்துவக் கல்லூரியில் படிக்கும் மாணவர்கள் போதை ஊட்டக்கூடிய பெத்தடின் ஊசி தானாக போட்டுக் கொள்வதும், பிரவுன்சுகர் சாப்பிடுவதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஊசி போடுவதினாலே, பாதிக்கப் படக் கூடிய பெற்றோர்கள்,—மாணவர்கள் இந்த ஊசியைப் போட்டுக் கொள்வதாக பரவலாகப் பேசப்படுகிறது, எனக்குத் தெரியாது ஐயா, பரவலாகப் பேசப்படுகிறது.—அவர்களே வந்து என்னிடத்திலே, நீங்கள் முதல்வர் அவர்கள் இருக்கிற போது, இப்படிப்பட்ட ஒரு பெரிய விஷயத்தைச் சொல்லக் கூடாதா என்கிறார்கள். நான் சொல்வதை எல்லாம் ஏற்றுக்



கொள்கிற மாதிரி ஒரு ஸ்டேட்மென்ட் கொடுத்தார்கள், ஆரம்ப காலத்திலே, இப்போது செய்வதில்லை. ஆரம்ப காலத்திலே சொன்ன ஸ்டேட்மென்ட் என்னை ரொம்ப பாதித்து விட்டது. ஆகையினாலே அந்தப் பெற்றோர்களுடைய மகன்கள் மருத்துவ கல்லூரியில் படிக்கிறார்கள். பெத்தடின் ஊசி போட்டு இப்படி கெட்ட பழகத்திற்கு.போய்விட்டானே இதைப்பற்றி ஏன் நீங்கள் சொல்லக்கூடாது என்று கேட்டுக்கொண்டு கண்ணீர் வடிக் கிறார்கள். ஆனால் அமைச்சர் அவர்கள், இது தெரிய வில்லை என்று சொல்வது மிகவும் வேதனைக்குறிய ஒன்றாகும். இந்த பெத்தடின் ஊசி மருந்து கடைகளிலே விற்கப்படுவதாகச் சொல்கிறார்கள். எனவே தயவு செய்து மீண்டும் இதை பரிசீலனை செய்து, எங்கெங்கே இப்படிப்பட்ட ஊசிகளை விற் கிறார்களோ, அதைப் பார்த்து, யார் பாதிக்கப்படுகிறார்களோ, யார் வாங்கி உபயோகப்படுத்துகிறார்களோ, அவர்களுக்குக் கடுமையான தண்டனைகளைக் கொடுப்பதற்கு, 'non-bailable offences, grave, case, bail must be taken from the sessions court' கடுமையான தண்டனை கொடுத்தாகிலும், அந்த அளவிற்கு கடுமையான நடவடிக்கை எடுத்தால்தான் இதை நாம் ஓரளவிற்கு தீர்க்க முடியும். எனவே இதை மறுபரிசீலனை செய்வதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்களோடு கலந்து ஆலோசித்து மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்— மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் ஐயா நீங்கள், — இதைத் தடுப்பதற்கான கடுமையான நடவடிக்கைகளை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

*10.05 மணி*

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** தலைவர் அவர்களே, சட்ட சம்பந்தமாகவும், போலீஸ் நடவடிக்கை சம்பந்தமாகவும் இந்தக் கேள்வி உள்ளடக்கியதாக இருக்கிற காரணத்தால், நான் பதில் சொல்ல விரும்புகிறேன். இதுபோன்ற தீய பழக்கத்திற்கு அடிமையான இளைஞர்கள் நீண்டகாலமாகவே, தங்களையும் கெடுத்துக் கொண்டு, தங்களது குடும்பங்களையும் கெடுத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்பதை இந்த அரசு அறியாமல் இல்லை. பொறுப்பேற்கின்ற எல்லா அரசுகளையும் நான் சொல்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக்காலத்திலேயிருந்து கூட சொல்கிறேன். எல்லா அரசுகளும் இதைத் தடுக்க வேண்டும் என்பதற்காகக் கடுமையான நடவடிக்கைகளை எடுத்து வரு கின்றன. இருந்தாலும் கூட நானே சிலபேர்களைப் பார்த்து இருக்கிறேன். இந்த பெத்தடின் ஊசி கிடைக்காமல் அவர்கள் பைத்தியம் பிடித்து அலைவதையும், எப்படியாவது எதைக் கொடுத்தாவது இந்த பெத்தடின் ஊசியைப் பெற வேண்டும் என்ற அளவிற்கு மன நோயாளிகளாகத் திரிவதையும் நானே கண்டு இருக்கிறேன். அப்படிப்பட்டவர்களுக்கு டாக்டர்களும் சில நேரங்களிலே உதவி செய்து விடுகிறார்கள். எனவே சமுதாயமே மொத்தமாகத் திருந்தவேண்டும். என்னதான் கடுமையான நடவடிக்கை எடுத்தாலும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு வழக்கு மன்றத்திலே நிறுத்தப்

படுபவர்கள், சட்டத்தின் சந்து பொந்துகளிலே ஒளிந்து கொண்டும் அல்லது வக்கீலின் திறமையான வாதங்களால் காப்பாற்றப்பட்டும், வெளியே வந்துவிடுகிறார்கள். ஒரு சமுதாய அளவிலே இந்த சிந்தனை தேவை என்பதையும் நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பாதிக்கப்பட்ட மக்களின் சார்பிலே மிக்க நன்றி. இப்போது இந்த பிரவுன் சுகர் என்பது இந்தியாவிலே அது இல்லை. வெளிநாட்டிலிருந்துதான் வருகிறதாம். அதை இவ்வளவு கொண்டு வந்தால், அதாவது 1 கிலோ கொண்டு வந்தால்—ஃபாரினர்ஸ் அங்கேயிருந்து வருகிறார்கள் என்று வையுங்கள்—அவர்கள் 1 கிலோ கொண்டு வந்தால், 1 கோடி ரூபாய்க்கு அது விற்கிறதாம். அதற்கு ரொம்ப விலையாம். அதை எல்லாம் சொல்கிறார்கள். ஆகையினாலே இந்த பிரவுன் சுகர் எப்படிக் கிடைக்கிறது, அதை எப்படி மாணவர்கள் உபயோகப்படுத்துகிறார்கள் என்பதையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிந்து (குறுக்கீடு)— வெளிநாட்டிலேயிருந்து வருகிறதாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் திறமையானவர்கள், இதை பலமுறைச் சொல்லியிருக்கிறேன் ஐயா—அந்தத் திறமையை எல்லாம் அவர்கள் பயன்படுத்தி, இதையெல்லாம் கடுமையாகக் கட்டுப்படுத்துவதற்கு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறார்கள் என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, அரசு கடுமையாக நடவடிக்கை எடுக்கத் தயங்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய ஒத்துழைப்பும் இதற்குத் தேவை.

அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி.

* 971—திரு. ஏ. ஜி. சம்பத் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தென்னாற்காடு மாவட்டம்; திருக்கோவிலூர் அல்லது விழுப்புரம் தாலுகாவில் அரசு தொழிற்பயிற்சிக் கல்லூரி (I.T.I.) துவங்க அரசு முன்வருமா?





மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தென்னாற்காடு மாவட்டம், திருக்கோவிலூர் அல்லது விழுப்புரம் தாலுக்காவில் தொழிற் பயிற்சி நிலையம் துவங்கும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. ஏ. ஜி. சம்பத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் வட்டம், திருக்கோவிலூர் வட்டம் ஆகியவைகள் மிகவும் பின்தங்கிய பகுதிகளாகும். அங்குள்ள மாணவர்கள் ஐ.டி.ஐ. படிப்பதற்கு கடலூர், உளுந்தூர்பேட்டைக்குச் சென்றுதான் படிக்க வேண்டும் என்கிற சிரமமான நிலை இருக்கிறது. மேலும் இடம் கிடைப்பது மிகவும் கடினமாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனையில் உள்ளதாக அறிவித்து இருக்கிறார்கள். இந்த நிதியாண்டிலேயே அதைத் துவங்குவதற்கு அரசு முன்வருமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் இந்தியா முழுவதும் 30 லட்சம் பேர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பை உருவாக்க வேண்டும் என்றும், ஆங்காங்கேயிருக்கிற மாநில அரசுகள் மிகவும் பிற்பட்ட பகுதிகளிலே தொழில் பயிற்சி நிலையங்களை அமைக்க வேண்டும் என்றும், வேண்டுகோள் விடுத்து, தமிழகத்தின் சார்பாக 10 இடங்களிலே இதுபோன்ற நிலையங்களை அமைக்கிறோம் என்று நாங்களும் மத்திய அரசுக்கு பதில் சொல்லி, அதன் பிறகு, அதற்கான நிதி உதவியை பின்னாலே வந்தவர்கள் தர முடியாது என்று சொன்ன காரணத்தால், இன்று அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. இன்னும் இப்போது புதிதாக ஆரம்பிக்கப்படுகிற தொழிற் பயிற்சி நிலையங்கள் எல்லாம் பெண்களுக்காக ஆரம்பிக்க வேண்டும் என்ற ஒரு முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைத் தீவிரப்படுத்துவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருப்பூர் தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனை

*12217—திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்பூரில் உள்ள தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனைகளில் போதிய மருத்துவர்கள் நியமிக்கவும், போதுமான மருந்துகள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமா ?

[1991 சனவரி 23

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். திருப்பூரில் உள்ள தொழிலாளர் அரசு ஈட்டுறுதி மருந்தகங்களில் மருத்துவ அலுவலருக்கான பணியிடங்களில் திருப்பூர்—1 மருந்தகத்தில் உள்ள ஒரு பணியிடம் தவிர மற்ற பணியிடங்கள் யாவும் நியமிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. திருப்பூர்—1 மருந்தகத்தில் உள்ள ஒரு பணியிடத்திற்கு மருத்துவ அலுவலரை நியமிக்க உரிய நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது. இம் மருந்தகங்களில் போதுமான மருந்துகள் வழங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

10–10 மணி

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் தொழிலாளர் இன்சூரன்ஸ் மருத்துவமனையில் ஒரு இடம் காலியாக இருப்பதை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கையை எடுப்பதாக அமைச்சரவர்கள் இங்கே அறிவித்திருக்கிறார்கள். திருப்பூர் பகுதி பல்வேறு தொழில்கள் நிறைந்திருக்கக்கூடிய ஒரு நகரம் என்ற முறையில், அங்கு மருத்துவ வசதி பெறக் கூடிய தொழிலாளர்களுடைய எண்ணிக்கையும் கூடுதலாக இருக்கின்ற காரணத்தால், ஏற்கெனவே இருக்கின்ற அந்த மருத்துவர்களுடைய எண்ணிக்கையும் போதுமானதாக இல்லாத காரணத்தால், காலையில் 7 மணிக்குச் செல்கின்ற தொழிலாளர்கள் 10 மணி வரையிலும் வரிசையில் நின்று அவர்கள் வைத்தியம் பார்க்கக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுடைய மொத்த எண்ணிக்கையை கூடுதலாக்கக் கூடிய முறையில் அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் இங்கு ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு அங்கே மூன்று இடங்கள் காலியாக இருந்ததில் இரண்டு இடங்களை நிரப்பி இருக்கிறோம். கூடிய விரைவிலே மீதமுள்ள இடத்தை நிரப்புவதற்கு அரசு அனைத்து முயற்சிகளையும் எடுக்கும். அதை விரிவுபடுத்துவது பற்றியும் அரசு ஆலோசனை செய்யும்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிலாளர் இன்சூரன்ஸ் திட்டத்தின் மூலம் மருத்துவ வசதி பெறக்கூடிய தொழிலாளர்கள் அதிகமாக இருக்கக் கூடிய திருப்பூர் பகுதியில் படுக்கை வசதியோடு கூடிய மருத்துவ வசதி இல்லாத நிலை இப்போது இருக்கிறது.



1991 சனவரி 23]

கோவைக்கு, சிங்காநல்லூருக்குச் செல்லக் கூடிய நிலை இருக்கிற காரணத்தால் இந்தப் பகுதியில் படுக்கை வசதியோடு கூடிய ஒரு மருத்துவமனையை துவங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்களுடைய கருத்தை ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளலாம்.

### கால்நடை கிளை நிலையங்களை தரம் உயர்த்தல்.

*9421—திரு. சி. சண்முகம் :

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலந்தூர், நந்தம்பாக்கம் கால்நடை கிளை நிலையங்களை மருந்தகமாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா ?

(ஆ) அந்நிலையங்களில் போதுமான கருவூட்டல் மருந்துகள் இல்லை என்ற காரணத்தால் அவற்றை வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) ஆலந்தூர் மற்றும் நந்தம்பாக்கம் கால்நடை கிளை நிலையங்களில் செயற்கை முறை கருவூட்டல் மருந்துகள் எப்போதும் உள்ளன. இல்லை என்ற நிலை எப்போதும் ஏற்பட்டது இல்லை.

திரு. சி. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் நந்தம்பாக்கம், இராமாவரம், மணப்பாக்கம் பகுதிகளைச் சுற்றியுள்ள அத்தனை இடங்களுக்கும் நந்தம்பாக்கத்தில் இருக்கும் ஒரு சிறிய மருத்துவமனையே பயன்படுவதால், அதை சைதாப்பேட்டையிலுள்ள ஒரு பெரிய மருத்துவமனை போல் ஆக்குவது அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. சண்முகம் : அப்படி இல்லையென்றாலும் இனி வரும் ஆண்டிலாவது அரசின் நிதிநிலைக்கேற்ப அதைச் செய்து

தருமாறு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வதோடு, அப்படிச் செய்து தருவதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய பிரேரணை அரசுக்கு அனுப்பப்படுமேயானால் அது பற்றி ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உடுக்குறியிட்ட வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

### (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

### மயானப் பாதை அமைத்தல்.

1—

**வினா எண். 62.—திரு. எஸ். டி. உகம்சந்த்:** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், முருக்கம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிட மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

**விடை—**

(அ) மற்றும் (ஆ): செங்கை அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், முருக்கம்பாக்கம் கிராமத்தில் ஆதிதிராவிட மயானப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

2—

### பட்டா செய்து கொடுத்தல்.

வினா எண். 888—திரு. ஆ. நடராசன்: மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாநகரம், தெலுங்குப்பாளையம் கிராமம், லிங்கனூர் ஆதிதிராவிட மக்கள் குடியிருக்கும் இடத்தைப்



விடை—

(அ) மற்றும் (ஆ): கோவை வடக்கு வட்டம், தெலுங்குப் பாளையம் கிராமம், க.ச. 336/2, லிங்கனூர் நத்தத்தில் வீடுகள் கட்டி வசித்து வரும் 76 நபர்களில் 13 நபர்களுக்கு 31-10-1968-ல் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. 30-6-1984-க்கு முன்புள்ள ஆட்சேபணையற்ற ஆக்கிரமணங்களை வரன்முறைப் படுத்தி வீட்டுமனை வழங்க வேண்டுமென்று அரசு முடிவெடுத்துள்ளதின் அடிப்படையில் மீதமுள்ள 63 நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3—

### வீட்டுமனைப் பட்டா கோரி மனு.

வினா எண். 1195—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், தேவராஜபுரம் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி மனு செய்துள்ளனரா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், தேவராஜபுரம் கிராமம் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி மனு ஏதும் செய்யவில்லை.

4—

### ஏரியின் கரைகள் மற்றும் மதகுகள் பழுதுபார்த்தல்.

வினா எண். 1236—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பேக்கரணை ஏரியின் கரைகள் மற்றும் மதகுகள் பழுதடைந்

(ஆ) ஆம் எனில், அவைகளைச் சீர்செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1985-ம் ஆண்டு ஏற்பட்ட பெருமழையின் காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தின்போது ஏற்பட்ட சேதங்களை ரூ. 29,000 திட்ட மதிப்பீட்டில் 1986-87-ம் ஆண்டில் செய்யூர் உபகோட்டத்தைச் சார்ந்த பொதுப்பணித் துறையினரால் பழுதுபார்க்கப்பட்டுள்ளது. மேலும், ஏரியின் இரண்டு மதகுகள், கலங்கள், கரைகள் பழுது பார்க்க ரூ. 1.00 லட்சம் தேவைப்படுகிறது. இந்த ஏரி லத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் பராமரிப்பில் இருந்து வருகிறது. ஊராட்சி ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் அடுத்த நிதியாண்டில் நிதி வசதி பெறும்போது இப்பணிகள் மேற்கொள்ளப்படும்.

5—

## வீட்டுமனைப் பட்டா கோரி மனு.

வினா எண். 1480—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பரமேஸ்வரமங்களம், உடல்காரகுப்பம் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா கோரி மனு செய்துள்ளனர் என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், பரமேஸ்வரமங்களம், உடல்காரகுப்பம் கிராம ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா வேண்டி மனு செய்யவில்லை.

(ஆ) வினா எழவில்லை.





6—

## வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம்.

வினா எண். 1917—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், ஊத்துக் கோட்டை கிராமத்தில் நாவிதர்கள், சலவையாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா?

(ஆ) அவர்களுக்கு எப்பொழுது பட்டா வழங்கப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ) : செங்கை அண்ணா மாவட்டம் ஊத்துக் கோட்டை கிராமத்தில் நாவிதர் மற்றும் சலவைத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனை வசதிக்காக நிலம் கையகப்படுத்த நிலம் கையகப்படுத்துதல் சட்டப்படி மாவட்ட ஆட்சியர் அனுப்பிய பிரிவு 4 (1) அறிவிக்கைக்கு அரசு ஆணை எண். 1087, சமூக நலத்துறை, நாள் 20-4-1988-ல் ஒப்புதல் வழங்கப்பட்டது. பின்னர் நிலம் கையகப்படுத்துதல் சட்டப்பிரிவு 6-ன் கீழான விளம்பல் அறிவிக்கைக்காக மாவட்ட ஆட்சியர் அனுப்பிய முன்மொழிவிற்கு அரசு ஆணை எண். 650, சமூக நலத்துறை, நாள் 24-7-1989-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. பின்னர் பிரிவு 7-ன் கீழான நெறியியம்பல் அறிவிக்கைக்கு கடித எண். 45622/பி.ந. 2/89-1, பிற்படுத்தப்பட்டோர் நலம், சத்துணவுத் திட்டம் மற்றும் சமூகநலத்துறை, நாள் 3—10—1989-ல் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந் நிலையில் நிலத்தின் உடைமையாளர் திரு. ஈ. ராஜமாணிக்கம் மற்றும் குப்புசாமி நாயுடு ஆகியோர்கள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து, தடையாணை பெற்றுள்ளனர். வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ளதால், வழக்கின் தீர்ப்பினைப் பொறுத்து நிலம் கையகப்படுத்த மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

7—

## புதியதாக சத்துணவுக் கூடம் துவக்குதல்.

வினா எண். 2859—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் ஊராட்சி ஒன்றியம் பழையனூர் பழைய காலனி ஆதிதிராவிடக் குழந்தைகள் சத்துணவு பெற மூன்று கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டும் என்பது உண்மையா?

[1991 சனவரி 23

(ஆ) ஆம் எனில், இங்கு புதியதாக சத்துணவுக்கூடம் துவக்கப்படுமா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மேற்கண்ட ஊரில் 1982 முதல், துணை மையம் இயங்கி வருகின்றது. அதில் உதவியாளர் ஒருவர் மூலம் உணவு எடுத்துச் செல்லப்பட்டு 55 குழந்தைகளுக்குத் தினமும் உணவு வழங்கப்பட்டு வருகிறது.

8—

கற்பித்தல் மானியம், நூலக மற்றும் கட்டிட மானியம்.

வினா எண். 2898—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தனியார் பள்ளி, தனியார் கல்லூரி ஆகியவைகளுக்கு, மொத்தச் செலவில் எத்தனை சதவீதத்தை (Teaching Grant Library Grant, Building Grant என்ற வகையில் அரசு) வழங்குகின்றது ?

விடை—

தனியார் கல்லூரிகளுக்கு ஆசிரியர் சம்பள மானியமாக 100 விழுக்காடு வழங்கப்படுகிறது. இதற்காகக் கல்லூரிக் கல்வித் துறையைப் பொறுத்தவரை அதன மொத்தச் செலவில் 63 விழுக்காடு ஆண்டுதோறும் கற்பித்தல் மானியத்திற்காக (Teaching Grant) இவ்வரசால் செலவு செய்யப்படுகிறது. நூலக மற்றும் கட்டிட மானியம் (Library and building grant) வழங்கப்படுவதில்லை. ஆனால் அனுமதிக்கப்பட்ட செலவினத்தில் 80 விழுக்காடு சம்பளமற்ற மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. இதேபோன்று அரசு உதவிபெறும் அனைத்துப் பள்ளிகளுக்கும் சம்பள மானியம் முழுச் செலவும் வழங்கப்படுகிறது. கட்டிட மானியமாக 50 விழுக்காடு அல்லது ரூ. 50,000 இவ்விரண்டில் எது குறைவோ அது மானியமாக வழங்கப்படுகிறது. பள்ளிக் கல்வித் துறையைப் பொறுத்த வரை மொத்தச் செலவில் சுமார் 35 விழுக்காடு கற்பித்தல் மானியமாகவும், சுமார் 03 விழுக்காடு கட்டிட மானியமாகவும் செலவாகிறது. நூலக மான்யம் எதுவும் வழங்கப்படுவதில்லை.



1991 சனவரி 23]

9—

சாலை சீர் செய்தல்.

வினா எண். 4041—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், போளூர்-வீரளூர் செல்லும் சாலை மிகவும் சீர்கெட்டு இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) வினாவில் குறிப்பிட்டுள்ள போளூர்—வீரளூர் சாலையை அகலப்படுத்தி தார்ச் சாலையாகப் புதுப்பித்து மேம்பாடு செய்ய ரூ. 40.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்படி பணி மத்திய அரசின் மத்திய சாலை நிதித்திட்டத்தில் எடுத்துச் செய்ய 6—6—1990-ல் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசு ஒப்புதல் கிடைக்கப் பெற்றபின் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

10—

பாதை பராமரித்தல்.

வினா எண். 4719—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி; அடைக்கதேவனில் சேது ரோடு கடற்கரை வழி கடையப்பன்கோவில் செல்லும் உப்பளம் பாதையைப் பராமரிக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

பேராவூரணி தொகுதி அடைக்கதேவனில் சேது ரோடு கடற்கரை வழி கடையப்பன் கோவில் செல்லும் உப்பளம் பாதையைப் பராமரிக்க செயற்குறிப்பு தற்போது ஏதுமில்லை.

[1991 சனவரி 23

11—

### ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள்.

வினா எண். 5818—திரு. எஸ். என். எம். உபயதுல்லா : மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்நாடு கால்நடைத் துறையில் பதிவு செய்யப் பட்டுள்ள ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?

(ஆ) அதற்கு வழங்கப்பட்டுள்ள கடன் எவ்வளவு?

(இ) திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஈ) அச்சங்கங்களைப் பராமரிப்பதற்கென தனியே செய லாளர்கள் நியமித்திட அரசு கருத்துரு ஏதும் பரிசீலித்து வருகிறதா?

விடை—

(அ) தமிழ்நாடு கால்நடைப் பராமரிப்புத்துறையில் 1,618 ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட் டுள்ளன.

(ஆ) ரூபாய் பத்து கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது.

(இ) திரும்ப வசூலிக்கப்பட்ட தொகை ரூபாய் ஏழு கோடியே எழுபத்து ஆறு இலட்சம்.

(ஈ) 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் அவசரச் சட்டம் 4 பிரிவு (1)-ன்கீழ் 3—7—1989 முதல் அனைத்து ஆடு வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களிலும் கால்நடைப் பரா மரிப்புத்துறையைச் சேர்ந்த கால்நடை உதவி மருத்துவர்கள், கூட்டுறவுச் சார்பதிவாளர்கள், கால்நடை ஆய்வாளர்கள் மற்றும் கூட்டுறவு முதுநிலை ஆய்வாளர்கள் தனி அலுவலர் களாக நியமிக்கப்பட்டு கூடுதல் பொறுப்பேற்று வருகிறார்கள். மேற்படி சங்கங்களில் தனியாக செயலாளர்களாக நியமித்திடும் கருத்துரு யாதும் பரிசீலனையில் இல்லை.

12—

### வீட்டுமனைப் பட்டா வழங்கக் கோரி மனு.

வினா எண் 6784—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம், வீரராகவபுரம் ஆதிதிராவிட மக்கள் வீட்டுமனைப் பட்டா வழங்கக்கோரி மனு செய்துள்ளனரா?



1991 சனவரி 23]

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): செங்கை-அண்ணா மாவட்டம், செய் யூர் வட்டம், வீரராகவபுரம் என்ற கிராமம் இல்லை. தேவ ராஜபுரம் என்ற பெயரில் மட்டுமே குடியிருப்புப் பகுதி உள்ளது. இப்பகுதிக்கு வீட்டுமனைப் பட்டா கோரி ஆதிதிராவிடர்கள் மனுச் செய்யவில்லை.

13—

### கால்நடை மருத்துவமனைக் கிளை நிலையம்.

வினா எண் 6954—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் வட்டம், வீராணகுன்னம் கிராமத்தில் இயங்கி வந்த கால்நடை மருத் துவமனைக் கிளை அலுவலகம் சில காலமாக இயங்காமல் இருப்பது உண்மையா?

(ஆ) அம்மருத்துவமனைக்கு கட்டிட வசதியில்லை என் பது உண்மையா?

விடை—

(அ) செங்கை-அண்ணா மாவட்டம், மதுராந்தகம் தாலுக் கா, வீராணகுன்னம் கிராமத்தில் இயங்கி வந்த கால்நடைக் கிளை நிலையம் போதுமான கால்நடை ஆய்வாளர்கள் நிலை-2 இல்லாததால் 14—6—1988 முதல் காலியாக இருந்து பின்னர் காலாவதியாகிவிட்டது. மேலும், இக்கிளை நிலைய கால்நடை ஆய்வாளர் நிலை-2 பதவி ஐரோப்பிய பொருளாதாரச் சங்கத் திட்டத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது. எனவே, அவ்விடத்தில் இயங்கி வந்த கிளை நிலையம் தற்போது இயங்க வில்லை.

(ஆ) எழவில்லை.

[1991 சனவரி 23

14—

தொன்மையான ஆலயங்களைப் பழுதுபார்த்தல்.

வினா எண் 7100—திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டங்களில் மிகவும் தொன்மையான ஆலயங்கள் தொல்பொருள் துறையினரால் எடுத்து பழுது பார்க்கப்பட்டு வருகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) 1. வடாற்காடு அம்பேத்கார் மாவட்டம், தக்கோலம், அரக்கோணம் அருள்மிகு வாலீஸ்வரர் கோயில் மற்றும் (2) ஆரணி வட்டம், பூண்டி (இரும்பேடு) அருள்மிகு அருகர் ஜெயின்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களும் தமிழ்நாடு தொல்பொருள் துறையினரால் பழுதுபார்க்கப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2. திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், சீயமங்கலம் அருள்மிகு ஸ்தம்பேஸ்வரர் திருக்கோயில், (2) வாலாஜா வட்டம், மேல்பாடி அருள்மிகு சோமநாதீஸ்வரர் திருக்கோயில் மற்றும் (3) வாலாஜா வட்டம், வள்ளிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களும் மத்திய அரசு தொல்பொருள் ஆய்வுத் துறையினரால் பழுதுபார்க்கப்பட்டு நன்முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

15—

ரோடுகளைப் புதுப்பித்தல்.

வினா எண் 7151—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் ஆப்பக்குடல் முதல் தவிட்டுப்பாளையம், அந்தியூர் முதல் சுட்டி சமுத்திரம், அந்தியூர் எண்ணமங்கலம் பிரிவு முதல் கோயிலூர் வரை உள்ள ரோடுகளைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?



1991 சனவரி 23]

(ஆ) ஆம் எனில், எப்போது புதுப்பிக்கப்படும்?

விடை—

(அ) வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைப்பகுதிகள் கரும்புச்சாலை அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்யப்பட்டவையாகும். சக்தி சர்க்கரை ஆலை, கரும்பு மேல் வரி கட்ட சென்னை உயர்நீதிமன்றத்தில் இடைக்காலத் தடை பெற்றுள்ளது. மேற்சொன்ன தனியார் சர்க்கரை ஆலை, கரும்பு வரி கட்டாத நிலையில், வினாவில் குறிப்பிட்டுள்ள சாலைகளைப் பராமரிக்க வேண்டாம் என அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆ) சக்தி சர்க்கரை ஆலை கரும்பு மேல் வரி கட்டினால் இச்சாலை மேம்பாட்டினை அரசு உடனடியாகப் பரிசீலிக்கும்.

16—

நியாய விலைக் கடை திறத்தல்.

வினா எண் 7534—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி தொகுதி சோமநாத நகர் குடியிருப்புக்கு நியாய விலைக் கடை திறக்கப்படுமா?

விடை—

நியாய விலைக் கடை திறக்க சாத்தியக் கூறுகள் இல்லை.

17—

சாலை சீர் செய்தல்.

வினா எண் 7674—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம் கங்களாஞ்சேரி—வடகண்டம் சாலையை கிராமப்புறச்சாலைத் துறையால் சீர்செய்ய அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், அரசின் நடவடிக்கை என்ன?

விடை—

(அ) அரசிற்கு வேண்டுகோள் எதுவும் வரவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

18—

ஊர்களை இணைத்தல்.

வினா எண் 7677—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், நாகைக்கோட்டம், கணபதி புரம், ஏர்வாடி, குறும்பூர், மருதாலூர், உபயவேதாந்தபுரம் ஆகிய ஊர்களை இணைக்க அரசிற்கு வேண்டுகோள் வரப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

19—

கூட்டுறவு அங்காடிகளை இரண்டு பகுதியாகப் பிரித்து பொருள் வழங்குதல்.

வினா எண் 7679—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், நன்னிலம் ஒன்றியம், கொர டாச்சேரி, திருமருகல் ஒன்றிய கிராமக்கூட்டுறவு அங்காடிகளை இரண்டு பகுதியாகப் பிரித்து பொருள் வழங்க அரசிற்கு வேண்டுகோள் வரப்பட்டனவா?

(ஆ) ஆம் எனில், அரசின் நிலை என்ன?

விடை—

(அ) இல்லை.





(ஆ) 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் இணைக்கப் பட்டுள்ள நியாய விலைக் கடைகளை மட்டும் பிரிக்கும் செயற் குறிப்பு தற்போது அரசின் வசம் உள்ளது. கொரடாச்சேரி யில் 702 குடும்ப அட்டைகளும் மற்றும் திருமருகலில் 405 குடும்ப அட்டைகளும் மட்டும் உள்ளதால் தற்போது இவற் றைப் பிரிக்க இயலாது.

20—

கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தண்ணீர் வசதி.

வினா எண் 7847—திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில், அந்தி யூர் ஒன்றியத்திலுள்ள வேம்பத்தி, சின்னத்தம்பிபாளையம், பிரமதேசம், நகலூர், மைக்கேல்பாளையம், கெட்டிசமுத்திரம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த கிராமங்களுக்கு, பவானி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் தண்ணீர் வசதி செய்ய நடவடிக்கை விரைந்து எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், ஆரம்பப் பணி எப்போது தொடங்கப் படும்?

விடை—

(அ) திட்டம் ஏதும் இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

21—

முடிகொண்டான் ஆற்றில் பாலம் அமைத்தல்.

வினா எண். 7909—திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருமருகல் ஒன்றியம் அனந்த நல்லூர் கொந்தகை இணைக்க முடிகொண்டான் ஆற்றில் பாலம் அமைக்க அரசின் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

22—

பழனி நகராட்சியின் அபிவிருத்திக்காக உலக வங்கி உதவி.

வினா எண். 8021.—திரு. என். பழனிவேல்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

(அ) பழனி நகராட்சியின் அபிவிருத்திக்காக உலக வங்கி உதவி மூலமாக ரூ. 204 லட்சம் கடன் பெறுவதற்கு இந்த அரசிடம் உதவி கோரி விண்ணப்பம் வந்துள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் (தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்) பல்வேறு திட்டப் பணிகளை எடுத்துக்கொள்ள ரூ. 204 லட்சம் கடன் உதவி கோரி பழனி நகராட்சி ஆணையர் அனுப்பிய பிரேரணை நகராட்சி நிர்வாக இயக்குநரால் பெறப்பட்டு திட்ட மேலாண் மைக் குழுவிற்கு அனுப்பப்பட்டு திட்ட அறிக்கைகள் (Project Report) தயாரிக்க கலந்தாய்வாளரை நியமிக்க கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. திட்ட மேலாண்மைக் குழுவினால் கலந் தாய்வாளர் நியமிக்கப்பட்டு திட்ட அறிக்கைகள் தயாரிக் கப்பட்டவுடன் அரசு ஆய்வு செய்யும்.

23—

தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம்.

வினா எண். 8119—திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரனார் மாவட்டம், ஆழ்வார் தோப்பு கிரா மத்திற்கும் ஆழ்வார் திருநகரி கிராமத்திற்கும் இடையே தாமிரபரணி ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு விடையளிக்க வாய்ப்பில்லை.

24—

மின்சார வசதி.

வினா எண். 8740—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம். சேதுபாவாசத்திரம் ஒன்றியம் கட்டயங்காடு ஊராட்சி, அம்பாள்புரத்திற்கு மின்சார வசதி செய்துகொடுக்க அரசு முயற்சிக்குமா?

விடை—

சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கட்டயங்காடு ஊராட்சியில் உள்ள அம்பாள்புரத்திற்கு மின் வசதி செய்து கொடுப்பதற்குத் தேவையான முன்மொழிவுகள் குருவிக்கரம்பை மின்வாரிய அலுவலகத்திற்கு அனுப்பப் பட்டுள்ளது.

25—

தார்ச்சாலையாக மாற்றுதல்.

வினா எண் 8784—திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அந்தியூர் தொகுதியில் அத்தாணியில் இருந்து பெருமா பாளையம் வழியாக அத்தாணி செம்புளிச்சாம்பாளையம் வரை மெட்டல் ரோடு அமைக்கப்படுமா?

விடை—

அத்தாணியிலிருந்து பெருமாபாளையம் வழியாக அத் தாணி செம்புளிச்சாம்பாளையம் வரை செல்லும் கப்பி பரப்பிய சாலையினை தார்ச்சாலையாக மாற்ற செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசிடம் இல்லை.

26—

## தடுப்புச் சுவர் கட்டுதல்.

வினா எண் 8816—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம், தவசிமடை அருகில் ஓடும் சிறு ஆற்றின் மழை நீரால் ஏற்படும் சாலை அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

நத்தம் தொகுதி, சாணார்பட்டி ஒன்றியம் தவசிமடை அருகில் ஓடும் சிறு ஆற்றின் மழை நீரால் ஏற்படும் சாலை அரிப்பைத் தடுக்க தடுப்புச் சுவர் கட்டும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை. எனினும் மேற்கண்ட பணியை தற்போது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யும் அதிகாரம், சம்பந்தப்பட்ட ஊராட்சிக்கே உள்ளது. எனவே, நிதி வசதியைப் பொறுத்து மேற்கண்ட பணியை எடுத்துச் செய்யும் சாத்தியக்கூறுகளை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளார்.

27—

## பண்ருட்டி நகரில் புறநகர்ச்சாலை அமைத்தல்.

வினா எண் 8851—டாக்டர் கொ. நந்தகோபாலகிருட்டிணன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பண்ருட்டி நகரப் போக்குவரத்து நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க, புறநகர்ச் சாலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப் படுமா?

விடை—

(அ) ஆம். பண்ருட்டி நகரப் போக்குவரத்து நெருக்கடி நிலைமையைச் சமாளிக்க, புறநகர்ச் சாலை அமைக்கும் திட்டம் உள்ளது.



(ஆ) வரும் ஆண்டுகளில் அரசின் நிதி நிலைமையைப் பொறுத்து இப்பணி செயல்படுத்தப்படும்.

28—

## துவக்கப்பள்ளி மற்றும் பால்வாடி அமைத்தல்.

வினா எண். 8917—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நத்தம் தொகுதி, செங்குறிச்சி பஞ்சாயத்திற்குட்பட்ட வல்லம்பட்டியில் துவக்கப்பள்ளி மற்றும் பால்வாடியும் அமைக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

விடை—

வல்லம்பட்டியில் துவக்கப்பள்ளி மற்றும் பால்வாடி மையம் அமைக்கும் திட்டம், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர் களிடமிருந்து கருத்துரைகள் பெறப்பட்டவுடன் மேல் நடவடிக்கை தொடரப்படும்.

29—

## வேலை வாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை.

வினா எண். 8997—திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தொழிலாளர் நலப்பள்ளியில் படித்து வெளியேறும் மாண வர்களுக்கு வேலைவாய்ப்புத் திட்டத்தில் முன்னுரிமை வழங்க அரசு உத்திரவிட்டுள்ளதா?

விடை—

மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ள வினாவில் தொழி லாளர் நலப்பள்ளி எனக் குறிப்பிட்டிருப்பது தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தைத்தான் என ஊகிக்கப் படுகிறது. தமிழ்நாடு தொழிலாளர் கல்வி நிலையத்தின் தொழிலாளர் நிர்வாக முதுகலைப் பட்டய படிப்பு (Post Graduate Diploma in Labour Administration) தொழிலாளர் அலுவலர், தொழிலாளர் நல அலுவலர் மற்றும் தொழிலாளர்

துறை உதவி ஆய்வாளர் பதவிகளில் நேரடி நியமனத்திற்கான தகுதிகளில் ஒன்றாக, பணி விதிகளில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ளது.

30—

### கிராமச்சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றல்.

வினா எண். 9073—திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டியில் இருந்து குப்பநத்தம் ஆதிதிராவிடர் தெரு செல்லும் கிராமச்சாலையிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

விடை—

தர்மபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், நடுப்பட்டியிலிருந்து குப்பநத்தம் ஆதிதிராவிடர் தெருவிற்குச் செல்லும் கிராமச்சாலையில் ஆக்கிரமிப்பு ஏதுமில்லை.

31—

### மாவட்டத் தலைநகரங்களில் விளையாட்டுத் திடல்.

வினா எண். 9403—டாக்டர் ச. சுந்தரராஜ் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரங்களில் மாணவ/மாணவியர் விளையாட்டுப் பயிற்சிக்காக விளையாட்டுத் திடல் அமைக்க அரசு ஏற்பாடு செய்யத் திட்டமிடுமா?

விடை—

மாணவ, மாணவியரின் விளையாட்டுப் பயிற்சிக்காக மாவட்டத் தலைநகரங்களாகிய காஞ்சிபுரம், சேலம், தர்மபுரி கோயம்புத்தூர், நாகர்கோவில், மதுரை, தஞ்சாவூர், திருச்சி, கடலூர் ஆகிய இடங்களில் வெளி விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. உதகமண்டலத்தில் உள் விளையாட்டரங்கம் கட்டப்பட்டுள்ளது. பிற மாவட்டத்தின் தலைநகரங்களிலும் விளையாட்டரங்கங்கள் அமைக்க நிதி நிலைமைக்கேற்ப உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.



32—

### பீடித் தொழிலாளர்களுக்கு வீடுகள்.

வினா எண். 9754—திருமதி ரமணி நல்லதம்பி: மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ராதாபுரம் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதி திட்டம் மூலம் 1989–90-ல் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன?

(ஆ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் 1989–90-ல் இத்திட்டத்தின் கீழ் எத்தனை வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன?

விடை—

(அ) ராதாபுரம் தொகுதியில் பீடித் தொழிலாளர்களுக்கு வீட்டுவசதித் திட்டம் மூலம் 1989–90-ல் வீடுகள் ஏதும் கட்டிக் கொடுக்கப்படவில்லை.

(ஆ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டத்தில் இத் திட்டத்தின் கீழ் 1989–90-ல் 1,000 வீடுகள் கட்ட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

33—

### நவீன எரியூட்டும் நிலையம் அமைத்தல்.

வினா எண் 9777—திரு. எஸ். ஏ. தங்கராஜன்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் நகரம் மாவட்டத் தலைநகரமாக உள்ளதால், இந்து மயானத்தில் நவீன எரியூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன?

விடை—

(அ) திண்டுக்கல் நகராட்சியில் உள்ள மயானத்தில் நவீன எரியூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் எதும் இல்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

34—

### கழிப்பிடங்கள் கட்டுதல்.

வினா எண் 9852—டாக்டர் சு. சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஒன்றியத்தில் எந்தெந்தப் பஞ்சாயத்துக்களில் மையக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன?

விடை—

இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடி ஊராட்சி ஒன்றியத்தில் 1988-89-ஆம் ஆண்டு தெளிச்சத்தநல்லூர் என்ற ஊராட்சியில் சோமநாதநகர் என்னும் கிராமத்தில் 30 சுகாதாரக் கழிப்பிடங்கள் கட்டப்பட்டுள்ளன. இதற்கான செலவு ரூ. 16,500 ஆகும். இஃதன்றி அரசின் சிறப்புத் திட்டத்தின் கீழ் 1983-85-ம் ஆண்டுகளில் ஒவ்வொரு வருவாய்க் கிராமத்திலும் ஒரு பொதுக் கழிப்பிடமும் கட்டப்பட்டது.

35—

### கள்ளக்குறிச்சி தாலுக்காவில் பொறியியல் கல்லூரி துவக்குதல்.

வினா எண். 9896—திரு. எம். முத்தையன்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுக்காவில் ஒரு இஞ்சினியரிங் கல்லூரி அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ): தென்னார்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுக்காவில் பொறியியற் கல்லூரி எதுவும் புதியதாகத் துவக்கும் திட்டம் அரசிடம் இல்லை.



36—

### நூல் நிலையக் கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 9953—திரு. இரா. சிங்காரம்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பட்டுக்கோட்டை ஒன்றியம் அதிராம்பட்டினத்தில் நூல் நிலையக் கட்டிடம் கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

அதிராம்பட்டிணத்தில் நூல் நிலையக் கட்டிடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

37—

### கிளை நூலகம் அமைத்தல்.

வினா எண். 9966—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் 5000-க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கும் கிராமங்களில் கிளை நூலகம் அமைக்க அரசு திட்டம் வகுத்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) தமிழ்நாடு பொது நூலகச் சட்டம் 1948 அதன் விதிகள் 45 (4) (பி)யின்படி, 5000 மக்கள் தொகைக்கு மேல் உள்ள அனைத்துக் கிராமங்களிலும் ஒரு கிளை நூலகம் திறக்கப்பட வேண்டும் என்பது விதிமுறையாகும். அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் அவற்றின் நிதி நிலைமைக்கேற்ப அரசு மானியத்துடனும் அரசு ஆணை பெற்று கிளை நூலகங்களைத் திறக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் இரண்டாம் பகுதித் திட்டத்தில் கிளை நூலகங்கள் திறக்க ஆணையிடப்படுகிறது. 1990-91-ல் இரண்டாம் பகுதித் திட்டத்தின்கீழ் 15 புதிய கிளை நூலகங்கள் திறக்க ஆணையிடப்பட்டுள்ளது.

38—

### நூலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்டுதல்.

வினா எண். 10259—திரு. கு. ரவி அருணன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இரவணசமுத்திரம் நூலகத்திற்குப் புதிய கட்டிடம் கட்ட அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

விடை—

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம் இரவணசமுத்திரத்தில் செயல்பட்டு வரும் கிளை நூலகத்திற்குச் சொந்தக் கட்டிடம் கட்டுவதற்கு ஊராட்சி மன்றத் தலைவரால் 2177 ச.அடி. காலிமனை அன்பளிப்பாக அளிக்கப்பட்டு 9—8—1989-ல் நூலக ஆணைக்குழு பெயரில் பத்திரப் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் நூலகக் கட்டிடம் கட்டும் திட்டம் பரிசீலனையில் உள்ளது. நூலக ஆணைக்குழுவின் நிதி நிலையினைக் கருத்தில் கொண்டு 1990-91-ம் ஆண்டு முடிவுக்குள் நூலகக் கட்டிடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

39—

### நீச்சல் குளம் கட்டுதல்.

வினா எண். 10340—திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோவை மாநகரில், சிதம்பரம் பூங்கா வளாகத்தில் நேரு ஸ்டேடியம் அருகில் நீச்சல் குளம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) இது குறித்துத் தனியார் நிறுவனங்கள் அரசிடம் தொடர்பு கொண்டுள்ளனரா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இல்லை.





(இ) வ.உ.சி. பூங்காவில், விளையாடும் இடம் கடைகள் பகுதிக்கு எதிரில் தற்போது அன்னபூர்ணா உணவகத்தார் வசம் உள்ள இடத்தில் நீச்சல் குளம் கட்ட உத்தேசிக்கப்பட்டது. மேற்படி இடத்தில் நீச்சல் குளம் கட்டுவது குறித்து மாவட்ட முனிசிப் கோர்டில் வழக்கு எண். 2251/89-ல் தடை உத்திரவு பெற்று விசாரணையில் உள்ளது. எனவே, மேற்படி வழக்கு முடிவு பெற்றதும், இடம் மாநகராட்சி வசம் திரும்பப்பெற்றவுடன், நீச்சல் குளம் கட்டுவது குறித்து மேல் நடவடிக்கை தொடரப்படும்.

40—

### பட்டா வழங்குதல்.

வினா எண். 10386—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவாரூர் நகரத்தில் உள்ள ஓடம்போக்கி ஆற்றுக் கரையில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும் ?

விடை—

(அ) நீர்நிலைப் புறம்போக்கு நிலங்களை ஒப்படை மற்றும் வகைமாற்றம் செய்யக்கூடாது என்ற கொள்கையின் அடிப்படையில் ஆற்றின் கரையோரத்தில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

(ஆ) கேள்வி எழாது.

41—

### ஆரம்பச் சுகாதார நிலையத்தை மருத்துவமனையாக மாற்றுதல்.

வினா எண். 10397—திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கொரடாச்சேரி ஒன்றியத்திலுள்ள குளிக்கரை ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்?

விடை—

(அ) கொரடாச்சேரி ஒன்றியத்திலுள்ள குளிக்கரை ஆரம்பச் சுகாதார நிலையத்தை அரசினர் மருத்துவமனையாக மாற்றும் திட்டம் அரசின் செயற்குறிப்பில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

42—

உயர்நிலைப் பள்ளிகளுக்குப் புதிய கட்டிடங்கள்.

வினா எண். 10650—திரு. மு. சின்னக்குழந்தை : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவண்ணாமலை—சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி வட்டம், குண்ணகம்பூண்டி உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடங்கள் கட்டப்படுமா?

விடை—

அவ்வப்போது வாய்க்கும் நிதி வசதியைப் பொறுத்து முயற்சி எடுக்கப்படும்.

43—

தொழிற் பட்டறைகள் ஆரம்பித்தல்.

வினா எண். 10727—திரு. சி. வேணு : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சிகளில் பழுதடைந்த விசைப்பம்புகள் மற்றும் கைப்பம்புகளைப் பழுதுபார்ப்பதற்குக் கோட்ட அளவில் தொழிற் பட்டறைகள் ஆரம்பித்துப் பழுதுபார்த்துத்தரும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

விடை—

ஊராட்சிகளில் பழுதடைந்த விசைப்பம்புகள் மற்றும் கைப்பம்புகளைப் பழுதுபார்ப்பதற்குக் கோட்ட அளவில் தொழிற்பட்டறைகள் ஆரம்பித்துப் பழுதுபார்ப்பதற்கான கருத்துரு ஏதும் அரசிடம் இல்லை.



44—

இராமியத் தொழிற்சாலைகள் அமைத்தல்.

வினா எண். 10742—திரு. கி. வேணு : மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியங்களிலும் சில குறிப்பிட்ட மையங்களை ஏற்படுத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கிராமியத் தொழிற்சாலைகள் அமைக்கும் நடவடிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) மற்றும் (ஆ) : ஊராட்சி ஒன்றியங்களில் சில குறிப்பிட்ட மையங்களை ஏற்படுத்தி மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் கிராமியத் தொழிற்சாலைகள் அமைக்கும் நடவடிக்கை ஏதும் தற்போது பரிசீலனையில் இல்லை.

45—

நியாய விலைக் கடைகள் துவக்குதல்.

வினா எண். 10775—திரு. வ. முல்லைவேந்தன்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மொரப்பூர் தொகுதியில் கலசப்பாடி, பள்ளம்பட்டி, விஜ்ஜம்பட்டி, தமானிக்கோம்பை ஆகிய இடங்களில் நியாய விலைக் கடைகள் துவக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

(அ) சாத்தியக் கூறுகள் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

46—

அறநிலையத்துறை மூலம் தங்கும் விடுதிகள் கட்டுதல்.

வினா எண். 10872—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் பசலி குட்டையில் உள்ள முருகர் கோயில் அருகே அறநிலையத்துறை மூலம் தங்கும் விடுதிகள் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அரசு விரைந்து நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) இல்லை

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

47—

சிவன்கோயிலைச் சீர்படுத்துதல்.

வினா எண். 10878—திரு. பொ. நடராசன் : மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

செங்கை அண்ணா மாவட்டத்தில் திருவள்ளுரை அடுத்த மப்பேடு கிராமத்தில் உள்ள சிவன் கோயிலைச் சீர்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

செங்கை அண்ணா மாவட்டத்தில் திருவள்ளுரை அடுத்த மப்பேடு கிராமத்தில் உள்ள சிவன் கோயிலைச் சீர்படுத்த, தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

48—

மலையாள மொழிப் பள்ளிக்கூடம்.

வினா எண், 10966—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் மலையாள மொழிப்பள்ளிக்கூடம் நடத்தப்படுகிறதா?



(ஆ) ஆம் எனில், எந்தெந்த மாவட்டத்தில் எத்தனை பள்ளிகள் உள்ளன?

விடை—

(அ) ஆம். மலையாள மொழியைக் கற்பிக்கும் மொழியாகக் கொண்ட பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

(ஆ) பள்ளிகளின் விவரப் பட்டியல் :—

| வருவாய் மாவட்டம். | துவக்கப்பள்ளிகள். (1) | நடுநிலைப் பள்ளிகள். (2) | உயர்நிலைப்பள்ளிகள். (3) | மேல்நிலைப்பள்ளிகள். (4) | மொத்தம். (5) |
|---|---|---|---|---|---|
| சென்னை ... | 2 | 1 | 1 | .. | 4 |
| கன்னியாகுமரி ... | 11 | — | 7 | 1 | 19 |
| உதகமண்டலம் ... | 11 | 2 | — | .. | 13 |
| கோயம்புத்தூர் ... | 2 | .. | 1 | 1 | 4 |
| | 26 | 3 | 9 | 2 | 40 |

மொத்தம் 40 பள்ளிகள்.

49—

வேலைவாய்ப்புக்கோரி மனுச்செய்துள்ள உடல் ஊனமுற்றோர்.

வினா எண். 10974—திரு. என். பழனிவேல் : மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) காயிதேமில்லத் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் வேலை வாய்ப்புக்கோரி மனுச்செய்துள்ள உடல் ஊனமுற்றோரின் எண்ணிக்கை எத்தனை?

(ஆ) அதில் எத்தனை பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது?

விடை—

(அ) 30—6—1990 தேதி வரை 651 உடல் ஊனமுற்றவர்கள் வேலை வாய்ப்பிற்காகக் காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர்.

(ஆ) 1987 முதல் 1990 (30—6—1990) வரை 80 பேருக்கு வேலை வழங்கப்பட்டுள்ளது.

50—

மேல் நிலைப் பள்ளிக்குக் கட்டிட வசதி.

வினா எண். 11681—திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணித் தொகுதி, பள்ளத்தூர் மேல்நிலைப் பள்ளியில் கட்டிட வசதி செய்து கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

இரண்டு வகுப்பறை கொண்ட கட்டிடம் ஒன்று ரூ. 2.40 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டு, கட்டிட வேலைகள் நடந்து வருகின்றன.

(உடுக்குறியிடாத வினாக்கள் முடிவுற்றன.)

(குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. தகவல் கோரல்.

**(அ) கோரிக்கைகளை வலியுறுத்தி உதவி மருத்துவர்கள் வேலை நிறுத்தம் செய்து வருவதால் பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.**

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, கடந்த சில நாட்களாகப் பத்திரிகையில் உதவி மருத்துவர்கள் தங்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டுமென்பதற்காக வேலை



நிறுத்தம் செய்யவிருப்பதாக அறிவித்திருந்தார்கள். (குறுக்கீடு).
நாங்கள் எல்லாம் இந்த வேலை நிறுத்தம் தவிர்க்கப்படும்
என்று மிகுந்த ஆவலோடு நம்பி இருந்தோம். ஆனால் இந்த
வேலை நிறுத்தம் நடைபெற்று விட்டது. ஆயிரக்கணக்கான
பேர் இந்த வேலை நிறுத்தத்திலே ஈடுபட்ட காரணத்தாலே
பல நோயாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். என்பதும் பல
இடங்களிலே ஆப்பரேஷன் கூட செய்ய முடியவில்லை என்பதும்
பத்திரிகையிலே வந்த செய்திகளாகவும், பலர் எங்களிடம்
நேரிலே தெரிவித்த செய்திகளாகவும் அமைந்து விட்டது மிகுந்த
வேதனையை ஏற்படுத்தி உள்ளது. அவர்களுடைய கோரிக்கை
கள் சம்பள உயர்வு என்பதும் பதவி உயர்வு பெறும் உரிமையும்
தங்களுக்கு வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல் தாங்கள்
பணியாற்றுகிற இடத்திலே மருத்துவ வசதிகள் போதுமானவை
யாக இல்லாத காரணத்தினாலும் தங்களுடைய வேலைகள்
பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதும் ஒன்றாக இருக்கிறது.

10-15 மணி

அதுமேல நகரங்களும் பாதிப்பது உண்டு. நகரங்கள் எவ்வாறு
பாதித்தன என்பதைப் பார்ப்பதற்கு நமது மாண்புமிகு மக்கள்
நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், நேற்று சென்னை அர
சினர் பொது மருத்துவமனைக்குச் சென்றிருக்கிறார்கள். அங்கே
யாவது சிவில் சர்ஜன் என்று சொல்லுகிற அளவுக்கு மற்ற பெரிய
டாக்டர்களும் உள்ளனர். இந்த உதவி மருத்துவர்கள் இல்லை
என்று சொன்னாலும்கூட, மிகுந்த அபாயமான நிலையிலே
உள்ள நோயாளிகளைப் பாதுகாப்பதற்கு உரிய சூழ்நிலை ஒரு
வேளை மிகுந்த சிரமத்திற்கு இடையேகூட ஏற்படுவதற்கு
வாய்ப்பு உள்ளது. ஆனால் கிராமங்களுக்குப் பக்கத்திலே இருப்
பவர்களுக்கு எல்லாம் அந்த உதவி மருத்துவர்களே பொறுப்பாக
இருக்கிற காரணத்தினாலே, வேலை நிறுத்தம் செய்கிறபோது
நோயாளிகள் என்ன பாடுபட்டிருப்பார்கள் என்பதை நாம்
எண்ணிப் பார்க்க வேண்டும். அதனாலேதான் அமைச்சர் அவர்
களுடைய கவனத்திற்கு நான் இதைக் கொண்டு வர விரும்பு
கிறேன்.

இரண்டாவது 1-ம் தேதியிலிருந்து கால வரம்பற்ற வேலை
நிறுத்தம் என்று அறிவித்திருக்கிறார்கள். அதனாலே நோயாளி
களும் பொதுமக்களும் பாதிப்பதோடு மட்டுமல்லாமல் விபத்து
ஏற்பட்டு அவசர சிகிச்சை தேவைப்படுகிற சூழ்நிலையில் இருப்
பவர்கள்கூட உயிரிழக்கின்ற பேராபத்து இருக்கிற காரணத்
தாலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனைக் கவனத்திலே
கொள்ள வேண்டும் என்பதும், அவர்களுடைய கோரிக்கை
களிலே ''எங்களுடைய சார்பாக பிரதிநிதிகளை அழைத்து

[திரு. குமரி அனந்தன்] [1991 சனவரி 23

அமைச்சர் பேசவில்லை'' என்பதும் ஒன்றாக இருக்கிறது என்
பதை மனதிலே கொண்டு ஆவன செய்ய வேண்டும் என்பதை
நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தமிழகத்தில் உதவி மருத்துவர்கள் தங்களுடைய
கோரிக்கைகளை வலியுறுத்தி பல முறை முறையிட்டு அது கவனிக்
கப்படவில்லை என்றதால் அவர்கள் 21—1—1991 அன்று அடை
யாள வேலை நிறுத்தத்தை நடத்தியிருக்கிறார்கள். இந்த
அடையாள வேலை நிறுத்தத்தினால் பொது மக்களும் குறிப்பாக
நோயாளிகளும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். மீண்டும் அவர்கள்
பிப்ரவரி மாதத்திலே ஒரு கால வரையற்ற வேலை நிறுத்தத்தை
தொடங்க வேண்டிய கட்டாயத்திற்கு நாங்கள் ஆளாகி இருக்
கிறோம். எனவே இதில் அரசு தலையிட வேண்டும் என்று
கோரியிருக்கிறார்கள்.

அவர்களுடைய பிரதானமான கோரிக்கை ஏற்கெனவே
இருக்கிற உதவி மருத்துவர்களுக்கும், பிற பிரிவு மருத்துவர்
களுக்கும் இடையே ஊதிய வித்தியாசம் ஓரேயடியாக ரூ. 700
அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது. அது பெரும் அளவுக்கு எங்களைப்
பாதித்திருக்கிறது. இன்றைக்குத் தொடர்ச்சியாக ஒவ்வொரு
நாளும் ஏறிக் கொண்டிருக்கிற விலைவாசி உயர்வு நாங்கள் வாழ
முடியாத நிலைமைக்கு, நெருக்கடிக்கு எங்களை உள்ளாக்கி
இருக்கிறது என்ற அந்த உணர்வோடுதான் இருந்த சலுகைகளும்
பறிக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லுகிறார்கள்.

ஆகவே ரூ. 700 என்ற வித்தியாசம் சரி செய்யப்பட வேண்டும்
என்ற முறையிலேதான் அவர்கள் கோரிக்கை எழுப்பியிருக்கி
றார்கள். அடிப்படை சம்பள நிர்ணயத்திலே ஏற்பட்டுள்ள
இந்த குறைபாட்டைப் போக்க வேண்டும் என்று அவர்கள் கோரி
யிருக்கிறார்கள். எனவே ஏற்பட்டிருக்கிற இந்த வித்தியாசத்
தைப் போக்கக்கூடிய முறையிலே அவர்களுடைய அமைப்பு
களோடு அமைச்சர் அவர்கள் நேரிடையாக அழைத்துப் பேசி
அவர்கள் பெரிய நெருக்கடிக்குத் தள்ளப்படாமல் இருப்பதற்கும்
அதனால் தமிழகத்திலே மருத்துவமனைகளுக்கு வரக்கூடிய
நோயாளிகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்கும் ஓரே உணர்
வோடு அரசு அதை அணுக வேண்டியது அவசியம். அவர்கள்
போராட்டத்தை அறிவித்து விட்டார்களே அவர்களோடு பேசு
வதா என்று பார்க்காமல் அந்தத் துறையினுடைய ஊழியர்கள்
என்ற முறையிலேயும், துறையினுடைய அமைச்சர் என்ற முறை
யிலேயும் அதை ஒரு கௌரவ பிரச்சினையாக ஆக்காமல்
ஆரம்பத்திலேயே அமைச்சர் அவர்கள் தலையிட்டு,
அவர்களோடு கலந்து பேசி நல்ல தீர்வு கண்டு, நல்ல முடிவிற்குக்
கொண்டு வர வேண்டும் என்று உங்கள் மூலமாக அமைச்சர்
அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.



1991 சனவரி 23]

10-20 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த்: பேரவைத் தலைவர் அவர்களே,
நான், இந்த ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் போராட்
டத்தை அவர்கள் செய்வதற்கு முன்னதாகவே ஒத்திவைப்புத்
தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். இன்றைக்கு மென்ஷன்
என்ற பெயரால் எல்லோரும் எல்லா கருத்துக்களையும் பேசி
விட்டார்கள். நான் பேசுவதற்கு அதிகமாக இல்லை. அவர்கள்
8 அம்ச கோரிக்கையை நவம்பர் 26-ந் தேதியே அரசுக்கு அனுப்பி
யிருக்கிறார்கள். அந்த நவம்பர் 26-ந் தேதியே அரசாங்கம்
சம்பந்தப்பட்டு இருக்கின்ற அந்த நிர்வாகஸ்தர்களை அழைத்துக்
கூடிப் பேசியிருந்தால் ஏதாவது ஒரு சுமுகமான நிலைமை ஏற்
பட்டிருக்கும். இன்றைக்கு 4 கட்ட போராட்டமாக—3 கட்ட
போராட்டத்தை அவர்கள் முடித்திருக்கிறார்கள். —பிப்ரவரி
1-ந் தேதி முதற்கொண்டு காலவரையற்ற வேலை நிறுத்தப்
போராட்டத்தை அவர்கள் செய்ய இருக்கிறார்கள். அதை
தீங்கள் கருத்தில் கொண்டு உடனடியாக இந்தப் பிரச்சினையைத்
தீர்ப்பதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுக்க வேண்டும். ஏற்
கெனவே எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் இதைப்பற்றிப்
பேசியிருப்பதன் காரணமாக அந்தக் கோரிக்கைகளை நிறை
வேற்றுகின்ற அளவுக்கு அரசாங்கம் நல்ல அறிவிப்பினைச் செய்ய
வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற உதவி மருத்துவர்
கள் பல்வேறு கோரிக்கைகளை அரசுக்குத் கொடுத்திருக்கிறார்
கள். அந்தக் கோரிக்கைகளின் அடிப்படையில் இந்தத் துறை
யைச் சார்ந்த செயலாளர் அவர்கள் மருத்துவர்களை அழைத்து
3 முறை பேசியிருக்கிறார்கள். அவர்கள் பேசியது மட்டுமல்ல.
நானே பல்வேறு மருத்துவ மனைகளுக்குச் சென்று, குறிப்பாக
சென்னையிலே இருக்கின்ற பொது மருத்துவமனையிலே கூட,
அங்கேயிருக்கின்ற அனைத்து மருத்துவர்களையும் கூட அழைத்து
அவர்களிடம் இதுபோன்ற கருத்துக்களைப் பற்றிய ஒரு கருத்
தரங்கமாகவும் விவாத அரங்கமாகவும் விவாதித்து இருக்கிறேன்.
சென்ற வாரம் மதுரை சென்றிருந்த பொழுது மதுரை இராஜாஜி
மருத்துவமனையிலே இருக்கின்ற அனைத்து உதவி மருத்துவர்கள்
மற்றும் உள்ள மருத்துவர்களையும் அழைத்து அவர்களுடைய
கோரிக்கைகளையும் அரசின் நிலையையும் விளக்கி இருக்கிறேன்.
செல்கிற இடங்களில் எல்லாம் நேரிலேயே இவைகளைப் பற்றி
அவர்களிடம் சொல்லியிருக்கிறேன்.

மதுரையிலே இருந்த அந்தச் சங்கத்தினுடைய ஒரு பிரதிநிதி
பேச வேண்டும் என்று சொன்னபோது எப்போது வேண்டு
மானாலும் வாருங்கள் என்று நான் அவர்களுக்குச் சொல்லி
யிருக்கிறேன். பத்திரிகைகளிலேகூட சொல்லியிருக்கிறேன்.

[1991 சனவரி 23
[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

உங்களுடைய பொதுக் குழுவிலேகூட நான் பேசுவதற்கு, என்
னுடைய கருத்துக்களை எடுத்து வைப்பதற்குத் தயாராக இருக்
கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இதுவரை அந்தச் சங்
கத்தைச் சார்ந்த எந்தப் பொறுப்பாளரும் என்னை அணுகி
தேதி வேண்டுமென்றோ, பேச வேண்டுமென்றோ நேரில்
கேட்டதே கிடையாது. கேட்காமலேயே பத்திரிகைகளுக்கு
அமைச்சர் பேசத் தயாராக இல்லை என்று சொல்லி மருத்துவர்
களை திசை திருப்பிக் கொண்டிருக்கிறார்கள், என்பதுதான்
உண்மை. நான் என்னை அணுகிய அனைவரிடமும் சொல்லி
யிருக்கிறேன். நேற்றுகூட இந்தத் துறையைச் சார்ந்த செய
லாளரிடம் குறிப்பிட்டிருக்கிறேன். அவர்களுக்கு எப்போது
சௌகரியமாக இருக்கிறதோ, நான் சென்னையில் இருக்கிற எந்த
நாட்களில் வேண்டுமானாலும், எந்த நேரத்தில் வேண்டுமானா
லும் நான் அவர்களைப் பார்த்து பேசுவதற்குத் தயாராக இருக்
கிறேன் என்றுதான் சொல்லியிருக்கிறேனே தவிர, எப்போதும்
பார்ப்பதற்குத் தயாராக இல்லை என்று நான் மறுக்கவில்லை.
வேண்டுமென்றே அவர்கள் ஏதோ ஒரு நோக்கத்தோடு இந்த
திசை திருப்புகின்ற முயற்சியிலே ஈடுபட்டு இருக்கிறார்கள்.
அதை அவர்கள் மாற்றிக் கொள்ள வேண்டுமென்று உங்கள்
மூலமாக நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.
மேலும் அவர்கள் வைத்திருக்கின்ற கோரிக்கைகளில் மிக முக்கிய
மாக அவர்கள் வலியுறுத்துகின்ற கோரிக்கை அடிப்படை ஊதி
யத்தை 2,200 ரூபாயிலிருந்து 2,500 ரூபாயாக உயர்த்த வேண்டு
மென்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். தமிழினத்
தலைவர் முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப்
பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு அனைத்து அரசு ஊழியர்களுக்
கும் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக ஊதியம்
வழங்க வேண்டுமென்று மத்திய அரசு மருத்துவர்களுக்கு வழங்
கப்படுகிற ரூ. 2,200 அடிப்படை ஊதியத்தைத்தான் தமிழகத்
திலே இருக்கின்ற மருத்துவர்களுக்கும் கொடுத்து வருகின்றோம்.

இங்கு அன்பிற்குரிய உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள்
700 ரூபாய் வித்தியாசத்தைப் பற்றி குறிப்பிட்டார்கள். அவர்
சார்ந்திருக்கின்ற பொதுவுடமை கட்சியின் மூலமாகவே அந்தக்
கோரிக்கைக்கு ஆதரவு இருக்காது என்பதை நான் நன்றாக அறி
வேன். கீழே இருக்கின்ற 700 ரூபாய் இருக்கின்ற ஒருவருக்கு—
அனைவருக்கும் சமமான ஊதியம் கொடுக்க வேண்டும் என்பது
தான் தமிழக முதல்வருடைய நோக்கம். அடித்தளத்திலே
இருக்கின்ற உறுப்பினர்களுடைய ஊதியத்தை உயர்த்தி மேலே
இருக்கின்ற உறுப்பினருடைய ஊதியத்தோடு இணைக்க வேண்
டும் என்பதுதான் ஒரு பொதுநல அரசினுடைய நோக்கமாக
இருக்க முடியும். அந்த எண்ணத்தோடுதான் கலைஞர் அவர்கள்
அடிமட்டத்திலே இருக்கின்ற ஊழியர்களுக்கு அதிக உயர்வைக்
கொடுத்து இருக்கிறார்கள். அது கூட மத்திய அரசாங்கத்திற்கு
இணையான ஊதியம்தான் அனைவருக்கும் கொடுக்கப்பட்டு



1991 சனவரி 23]
[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

இருக்கிறது. இவர்களுக்கு 700 ரூபாய் குறைந்தது என்று
சொல்வது தவறு. 700 ரூபாய் முன்பு குறைவாக வாங்கிக்
கொண்டு இருந்தவர்கள், இவர்களுக்கு இணையாக சம்பளம்
வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு ஊதி
யம் குறைவாகவே இருக்க வேண்டுமென்று எந்தச் சங்கம் கூறு
வதும் நியாயமாக இருக்க முடியாது. Each acc n ing need
என்று சொல்கின்ற அளவுக்குத்தான் ஒரு சமுதாயத்தை உரு
வாக்க முடியும். Each according to work என்ற
அடிப்படையிலே, Each according o n e என்ற
அடிப்படையிலே முன்னேற வேண்டும் என்பதுதான், தேவைக்கு
ஏற்ற ஊதியத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்தோடுதான்
தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் அடிமட்டத்திலே இருக்கின்ற
ஊழியர்களுடைய அடிப்படைத் தேவைகளை நிறைவேற்று
கின்ற எண்ணத்தில் ஊதியத்தை உயர்த்தியிருக்கிறார்கள்.
இதிலே எந்தவிதமான வேறுபாடும் இருப்பதாக இந்த அரசு
கருதவில்லை. ஆகவே மருத்துவர்கள் தங்களுடைய பொறுப்பை
உணர்ந்து மத்திய அரசாங்கத்திலே இருக்கின்ற ஊழியர்களுக்கு
இணையாக ஊதியம் வழங்கப்படுகிறது என்பதையும் எடுத்துக்
கொண்டு ஊதிய உயர்வைப் பற்றி அதிகமாக வலியுறுத்தாமல்
இங்கே இந்த பேச்சு வார்த்தைக்கு வருவார்கள் என்று சொன்
னால் எப்போதும் நான் தயாராக இருக்கிறேன். அதைக்கூட
பேசி தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றால் இந்த அரசு தயாராக
இருக்கிறது.

10-25 மணி

மேலும் இதிலே கூட 2,200 ரூபாய் மட்டுமின்றி ஸ்பெசல் பே
என்று 150 ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. அந்த
ஸ்பெசல் பே 150 ரூபாய் முதலில் அவர்களுடைய ஃபிட்மெண்ட்
என்று சொல்லப்படுகிற ஊதியத்தோடு இணைத்து வழங்கப்படு
கிறது. இந்தச் சங்கத்தினுடைய உறுப்பினர்கள் என்னிடம்மீண்டும்
அதை ஸ்பெசல் பே ஆகவே கொடுக்க வேண்டும். எங்களுடைய
அடிப்படை ஊதியத்தோடு இணைக்கக் கூடாது என்று கோரிக்கை
வைத்தார்கள். அப்போது கூட நான் சொன்னேன். அப்படி
பிரித்துக்கொடுத்தால் உங்களுக்குக் கிடைக்கின்ற டி.ஏ. போன்ற
படிகள் குறைக்கப்படும் 70 ரூபாய் குறையும் என்று சொன்னேன்.
அது குறைந்தாலும் பரவாயில்லை எங்களுக்கு பிரெஸ்டிஜ்
தான் முக்கியம். சித்தா மருத்துவர்களிடமிருந்து எங்களை
தனிமைப்படுத்திக் காட்டுவதற்காக எங்களுக்கு 150 ரூபா
யாகக் கொடுக்கவேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள்.
அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டுதான் மீண்டும்
இந்த அரசு அந்த 150 ரூபாயை ஸ்பெசல் பே என்ற அடிப்படை
யில் தனியாகக் கொடுத்து வருகிறது. அவர்கள் விரும்பினால்
மீண்டும் கூட அந்த 150 ரூபாயை ஆப்ஷன் என்ற அடிப்படை
யில் கூட அவர்களுடைய அடிப்படை ஊதியத்தோடு பிட்மெண்ட்

டாக இணைத்துக் கொடுப்பதற்கு கூட இந்த அரசு தயாராக இருக்கிறது என்று குறிப்பிட்டு இருக்கிறேன்.

அதேபோல் கிராமத்தில் இருக்கிற மருத்துவர்களுக்கு 400 ரூபாய் வழங்கவேண்டுமென்று தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இதனுடைய நோக்கமே கிராமத்திலே பணியாற்றுகின்ற மருத்துவர்கள் அங்கே தங்கி இருந்து மருத்துவப் பணியை மேற்கொள்ளவேண்டுமென்ற எண்ணத்தோடு தங்கியிருக்கிற மருத்துவர்களுக்கு 400 ரூபாய் கொடுக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதிலே அவர்களுக்கு இருந்த ஒரு குறை அங்கே தங்கியிருந்தாலும், இல்லாவிட்டாலும் 150 ரூபாய் முதலில் கொடுக்கப்பட்டு இருந்தது. இப்போது அந்த 150 ரூபாய் நிறுத்தப்பட்டு விட்டது. அங்கே தங்கியிருப்பவர்களுக்கு மட்டும் தான் 150 ரூபாய் மேலும் 250 ரூபாய் என்று மொத்தம் 400 ரூபாய் கொடுக்கப்படுகிறது. ஆகவே, தங்கினாலும், தங்காவிட்டாலும் முதலிலே கொடுக்கப்பட்டு வந்த அந்த 150 ரூபாய் கொடுக்கவேண்டுமென்று கோருகிறார்கள். அதையும் கூட இந்த அரசு ஏற்றுக்கொண்டு 150 ரூபாய் அனைத்து மருத்துவர்களுக்கும் வழங்கப்படும் என்று ஆணையிட தயாராக இருக்கிறது. 250 ரூபாய் மட்டும் அங்கே தங்கியிருப்பவர்களுக்கு மட்டுமே கொடுப்பதற்கு இந்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது என்றும் அவர்களுக்கு விளக்கம் அளிக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவும் செயலாளர் அளவில் சொல்லப்பட்ட பிறகு என்னிடத்தில் தனிப்பட்ட முறையில் பேசியும், சொல்லப்பட்ட பிறகும் மீண்டும் அவர்கள் நான் பேசத் தயாராக இல்லை என்று சொல்லுவது ஏதோ ஒரு விதண்டாவாதத்திற்கு அவர்கள் மருத்துவர்களைத் தயார் செய்கிறார்கள் என்று தான் தெரிகிறதே தவிர நடுநிலையில் சிந்திக்கக்கூடிய மருத்துவர்கள் இதற்கு ஆதரவு அளிக்காமல் அரசு எப்போதும் பேசுவதற்குத் தயாராக இருக்கிற காரணத்தால் இங்கே கருத்துக்களைக் கூறிய மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களோடு பேசி ஒரு சமரச முடிவுக்கு, நாடு இருக்கிற நிலையில், வெளிநாட்டில் போர் நடைபெற்றுக்கொண்டிருக்கிற நிலையில், தமிழக அரசினுடைய நிதிநிலையைக் கருத்தில் கொண்டு இதுபோன்ற எந்தவிதமான அசம்பாவிதமும் நடக்காத வகையில் பேசுவதற்குத் தயாராக இருக்கிறோம், அவர்கள் வந்து பேசவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**(ஆ) உறுப்பினர்கள் திருவாளர்கள் எஸ். திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். ராமச்சந்திரன், எஸ். டி. உக்கம்சந்த் ஆயோரின் பணியை அ. இ. அ. தி. மு. க.-2 கட்சியாக அங்கீகரித்துள்ளது பற்றிய பேரவைத் தலைவரின் தீர்ப்பு குறித்து.**

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த நேரத்தில் முதலில் எழுப்ப வேண்டுமென்று முயன்றாலும் மருத்துவர்களுடைய பிரச்சினை எழுப்





பப்பட்ட காரணத்தாலே அடுத்து என்னுடைய பிரச்சினையை எழுப்ப வேண்டிய சூழ்நிலை உருவாகி விட்டது. நான் இந்த நேரத்தில் என்னுடைய உணர்வினை சொல்லவேண்டுமென்ற அடிப்படையில் சட்டமன்றத்தைப் பொறுத்த வரையில் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அங்கீகரிக்கப்பட்ட ஒரு அரசியல் கட்சி என்ற நிலையில் பிரதான எதிர்க்கட்சியாக இருந்து இன் றைக்கு அந்த இடத்திலிருந்து மாற்றப்பட்டு எதிர்க்கட்சி என்ற அந்தஸ்த்தை நாங்கள் பெற்று இருக்கிறோம். எதிர்க்கட்சி அந் தஸ்து கூட, எங்களுடைய எண்ணிக்கை குறையுமானால் சட்ட மன்றத்தில் ஒரு அணியாகக் கூட செயல்பட வேண்டிய நிலை கூட வரலாம். ஆனாலும், எங்களைப் பொறுத்தவரையிலும் கட்சி யில் இருக்கிற நடவடிக்கைகளை வலியுறுத்த வேண்டுமென்ற அடிப்படையில் சில நடவடிக்கைகளை எடுத்து அதை வலியுறுத் திக் கொண்டு இருக்கிறோம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் 62 திருத்தச் சட்டம் 10ஆவது ஷெட்டியூல் படி.....,.........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 52.

திரு. எஸ். ஆர். இராதா : ஆர்ட்டிகள் 102, 191 கட்சி தாவல் சட்டத்தில் எந்த நிலை எடுக்கப்படுமானாலும் இந்தச் சட்டம் அமலுக்கு வந்ததற்குப் பின்னால் சட்டப்படி தேர்ந் தெடுக்கப்படுபவர்களைப் பற்றிய விவரங்கள் சபாநாயகர் அவர் களுக்கு அளிக்கப்பட்டு அந்த விதிமுறையின்படி அதற்குத் தர வேண்டிய படிவத்தில் தான் எங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் என்ற விவரத்தை நீங்கள் கேட்டு நாங்கள் அந்த விவரங்களை அத்தனையையும் கொடுத்து இருக்கிறோம். இந்தக் கட்சித் தாவல் சட்டம் நிறைவேற்றியதற்குப் பின்னால் எந்த நிலையிலும் யாரும் எந்தக் கட்சியிலிருந்து மாறுகிறார்கள் என்ற நிலைகளை நீங்கள் எடுத்துச் சொல்லுவதாக இருந்தாலும் நீங்கள் பார்ம் 1 என்று அறிவிக்கப்பட்டு இருக்கிற அந்தப் படி வத்தின்படி தான் நீங்கள் தெரிந்து கொண்டு அதற்கு ஆவன செய்ய வேண்டும். நாங்கள் அந்த அடிப்படையில் இங்கே எழுப் பப்பட்ட ஒரு நிலையில் எங்கள் கட்சியிலிருந்து 3 பேரை நீக்கி யிருக்கிறோம் என்பதைத் தெரிவித்து அவர்களுடைய பதவிப் பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட்டதையும் சொல்லி அதையும் நீங்கள் அங்கீகரித்து அவர்களுக்குத் தனியிடம் ஒதுக்க வேண்டு மென்று நாங்கள் வலியுறுத்திய நேரத்தில் அந்த இடமும் அவர் களுக்கு ஒதுக்கப்பட்டு அதற்குப் பின்னால் ஒரு தீர்ப்பு எதிர்ப் பார்க்கிற நேரத்தில் நீங்கள் சட்டத்திற்கு உட்பட்ட நிலையில் ஒரு தீர்ப்பை வழங்கினீர்கள். அந்தத் தீர்ப்புப்படி அந்த மூன்று பேரும் எந்தக் கட்சியையும் சாராதவர்கள். அளிக்கப்பட்ட அந் தத் தீர்ப்பு 30 மணி நேரத்திற்குள்ளாக பல்வேறு காரணங்களை சுட்டிக்காட்டி, மாற்றப்பட்டு, எங்கள் கட்சியினுடைய அடிப் படையை, பெயரிலே இருக்கிற உரிமையைப் பறிக்கின்ற அள விற்கு இந்தக் கட்சியிலே இரண்டாம் நம்பர் கட்சி ஒன்றை

உண்டாக்கி, எங்களை, தெரிந்தோ தெரியாமலோ நீங்கள் ஒன்
றாம் நம்பர் கட்சியாக ஆக்க வேண்டும் என்று எடுத்திருக்கிற
முயற்சி என்பது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல.

**10-30 மணி.**

சபாநாயகர் ஒரு தீர்ப்பை அளித்து, 30 மணி நேரத்திற்குள்
ளாக அந்தத் தீர்ப்பு மறுக்கப்படுகிறது அல்லது மாற்றப்படு
கிறது என்று சொன்னால், அரசியல் சட்டப்படி, விதிகளின்படி
நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற உறுதிமொழிக்கு அது விரோதமான
தாகும். அரசியல் சட்டத்தில் விதியிலே இருக்கிற எந்த
நிலையிலேயும் அரசியல் சட்டங்களை மீறி ஒரு காரியம் செய்ய
முடியாது. அரசியல் சட்டத்திலே, இப்போது தனியாக கட்சிந்
தாவல் சட்டத்திலே இருக்கிற விதி, எந்தக் கட்சி பிளவுபட்
டாலோ அல்லது கட்சியிலே ஏற்பட்ட நிலையின காரணமாக
உடைந்தாலோ கட்சியிலே இருக்கிற மூன்றில் ஒரு பகுதியினர்
இருந்தால்தான் அந்தக் கட்சி உடைந்ததாகவோ பிரித்ததாகவோ
ஏற்றுக்கொள்ள முடியும். ஆனால், மூன்றில் ஒரு பகுதி இல்லாத
நேரத்தில் மூன்று பேரை மட்டும் வைத்துக்கொண்டு ஒரு கட்சி
யாகச் செயல்படுவதற்கு அதை இரண்டாம் நம்பர் கட்சி என்று
நீங்கள் ஆக்கி, அது இங்கே அறிவிக்கப்பட்டு அதையும் நாங்கள்
ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொன்னால் பேரவைத் தலை
வர் அவர்களே, நீங்கள் அளித்திருக்கிற அந்தத் தீர்ப்பு ஏற்றுக்
கொள்ளக்கூடியதல்ல. **

உங்களுடைய தீர்ப்பில் நீங்கள் விளக்கங்களைச் சொல்லு
கிற நேரத்தில், கட்சியிலே ஏதோ பிளவுகள் ஏற்பட்டு பெரிய
விவகாரங்கள் வந்துவிட்டன. உயர்நீதிமன்றத்திலே வழக்கு
இருக்கிறது. உச்சநீதி மன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று
சொல்வதெல்லாம்...............

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பிலேயுள்ள
கருத்துக்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர், அ.தி.மு.க. கட்சி
யினுடைய தலைவர், நண்பர் எஸ். ஆர். இராதா அவர்கள்,
அவருடைய கருத்துக்களை எடுத்து வைக்க இந்த அவையிலே
அவருக்கு நிரம்ப உரிமை உண்டு. ஆனால், சபாநாயகர் அளித்த
ஒரு தீர்ப்பின் மீது உள்நோக்கம் கற்பிப்பது முறையல்ல.** அது
இந்த அவைக் குறிப்பிலே இடம் பெறலாமா என்பதை நான்
கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பொதுவாகவே, திரு.
எஸ். ஆர். இராதா அவர்களே, உங்களுடைய கருத்தைச் சொல்வ
தற்காக நான் வாய்ப்பு அளித்து இருக்கிறேன். அதே நேரத்தில்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்
பெற்றது.



எந்தத் தீர்ப்பின் மீதும் எந்த விவாதமும் கூடாது என்பதையும்
நான் நினைவூட்ட விரும்புகிறேன். என்றாலும் நீங்கள் ஒரு
பொறுப்புள்ள எதிர்க் கட்சித் தலைவர் என்ற முறையில்தான்
உங்களுடைய கருத்துக்களுக்கு நான் மதிப்பளித்து இருக்கிறேன்.
அப்படிக் கூறும்போது சபாநாயகருடைய கடமைகள் மீது உள்
நோக்கம் கற்பிக்காமலும் வேறு சொற்களைக் கையாளாமலும்
பேசினால்தான் நீங்கள் தொடர்ந்து பேசலாம். எனவே, உள்
நோக்கம் கற்பிப்பதாக நீங்கள் தந்த தொடர்கள் அவைக் குறிப்
பிலிருந்து நீக்கப்படுகின்றன.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, உள்நோக்கம் கற்பிக்க வேண்டுமென்ற விருப்
பத்தில் நான் பேசவில்லை. நான் என்னுடைய கருத்தை
எடுத்துச் சொல்ல வேண்டுமென்ற அடிப்படையிலேதான் சொன்
னேன். வழக்கு மன்றத்திலே வழக்கு இருக்கிறது என்று தெரி
வித்திருக்கிறீர்கள். வழக்கு மன்றத்தைப் பொறுத்த வரையிலே
எந்த வழக்கும் இல்லை, உச்சநீதி மன்றத்திலே இருக்கிற வழக்கு
எல்லாம்கூட ஒரு கட்டிடத்தைப் பொறுத்து, தலைமைக் கழ
கத்தைப் பொறுத்து இருக்கிற வழக்கு. அந்த வழக்கிலேகூட
இருக்கின்றவர்கள், முதலிலேயே ஆரம்பிக்கப்பட்ட நேரத்தில்..
(குறுக்கீடு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** உட்காருங்கள் அவர்
பேசி முடிக்கட்டும்.

**திரு. எஸ். ஆர். இராதா :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "ஏ" பார்ட்டி, "பி" பார்ட்டி என்று இரண்டு
பார்ட்டிகளாக பிரிந்து வழக்கு போட்ட நேரத்திலேகூட "ஏ"
பார்ட்டியிலே இருந்தவர்கள், "பி" பார்ட்டியிலே இருந்தவர்
கள் அவ்வளவு பேரும் எழுதிக் கொடுத்து, "பி" பார்ட்டியிலே
யிருந்த இரண்டு பேர் இன்றைக்கும் கட்சியைவிட்டு நீக்கப்பட்
டவர்கள் என்ற நிலையிலேதான் அவர்கள் வழக்குக்குப் போய்
இருக்கிறார்களே தவிர அப்படியிருந்தும்கூட, இவர்கள்தான் அதி
காரபூர்வமானவர்கள் என்று எங்களிடத்திலே, எங்களுடைய
பொதுச் செயலாளர் அவர்களிடத்திலே கட்டிடத்தை ஒப்படைக்க
வேண்டுமென்று உச்சநீதி மன்றத்திலேயிருந்து அண்மையில் ஒரு
தீர்ப்பு வந்திருக்கிறது.

அதைப் போல நான் இன்னொன்றையும் இங்கே
சொல்லியாக வேண்டும். இந்த அரசைப் பொறுத்த வரையிலே
கூட..........(கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** எல்லோருமே உட்
காருங்கள். திரு. இராதா அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்
டும். நீங்கள் வேறு ஏதாவது செய்தி சொல்வதாக இருந்தால்
சொல்லுங்கள், என்னுடைய தீர்ப்பிலே விமர்சனம் எல்லாம்
வேண்டாம். விமர்சனம், வழக்குகள் என்ன இருக்கின்றன, நீதி

மன்றத்திலே என்ன இருக்கிறது என்று நீங்கள் சொல்ல ஆரம்பித்தீர்களானால் அதையெல்லாம் நான் அனுமதிக்க மாட்டேன். உங்கள் கருத்தைச் சொல்வதற்கு நான் ஒரு வாய்ப்பு அளித்து இருக்கின்றேன் என்ற பெருந்தன்மையோடு நீங்கள் கருத்தைச் சொல்லி முடித்துக்கொள்ளலாம், இல்லை, ஒவ்வொன்றுக்கும் இடையிலே நீங்கள் பதில் சொல்ல வேண்டுமென்று ஆரம்பித்தீர்களானால் (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள், அவ்வளவுதான். ஒவ்வொன்றுக்கும் நீங்கள் பதில் சொல்ல வேண்டும். ஒவ்வொன்றுக்கும் விளக்கம் சொல்லவேண்டுமென்று ஆரம்பித்தீர்களானால் நான் அனுமதிக்க மாட்டேன்.

திரு எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, எங்களுடைய கோயம்புத்தூரிலே கழகக் கட்டிடம் ஒன்று இருக்கிறது. சென்னையிலே இருக்கிற கட்டிடத்தை விட....

10-35 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அந்தத் தீர்ப்பிலே உங்களுக்கு என்ன பிரச்சினை? (குறுக்கீடு) நீங்கள் யாரும் பேசக் கூடாது. தீர்ப்பிலே என்ன பிரச்சினை? (குறுக்கீடு) இல்லை, இல்லை, அவர் சொல்லட்டும், சொல்லுங்கள்

திரு எஸ். ஆர். இராதா : நீங்கள் அளித்திருக்கிற தீர்ப்பிலே இருக்கிற கோரிக்கைகளை (குறுக்கீடு) நிறைய விஷயங்களை வெளியே சொல்லி விட்டீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்காக ஒவ்வொன்றுக்கும் ஆராய்ச்சி பண்ண முடியாது. அப்படி ஒன்றும் அனுமதிக்க முடியாது. பேரவைத் தலைவரவர்களுடைய தீர்ப்பின் மீது விவாதமா ?

திரு எஸ். ஆர். இராதா : நான் வாதம் செய்யவில்லை. நான் வாதத்திற்காக எடுத்துச் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவருடைய தீர்ப்பின்மீது விவாதம் என்றால் அடுத்து ஒரு வரிகூட அனுமதிக்க மாட்டேன். உங்கள் கருத்தைச் சொல்வதற்கு அனுமதித்தால் அந்தக் கருத்தைச் சொல்லிவிட வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, வாதங்கள் அல்ல. கோவையிலே ஒரு கட்டிடத்திலே ஒரு பிரச்சினை எழுந்தது. அந்தக் கட்டிடம் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற புரட்சித் தலைவி ஜெயலலிதா தலைமையிலே இருக்கிற கட்சிக்குத்தான் சொந்தம் என்று இந்த அரசாங்கத்திலே இருக்கிற அதிகாரிகள் முடிவு எடுத்திருக்கிறார்கள். இந்த அரசாங்கம், இந்த அரசாங்கத்தில் இருக்கிற



அதிகாரிகள் முடிவெடுத்திருக்கிறார்கள் என்று சொன்னால், நிச்சயமாக நாங்கள் — அந்தக் கட்சி எங்களுக்குச் சொந்தம் என்று இருக்கிறதே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொஞ்சம் நன்றாகக் கவனித்துக் கொள்ள வேண்டும். உங்களுடைய உடைமைகளைப் பற்றியோ உங்களுடைய கட்சியினுடைய உள் விவகாரங்களைப் பற்றியோ இங்கே பிரச்சினையே கிடையாது. அதுபற்றி இங்கே பேசுவதற்கான வாய்ப்பும் கிடையாது. நான் சொன்ன தீர்ப்பிலே நீங்கள் ஏதாவது பாதிக்கப்பட்டதாகக் கருதினால் ஒரு வரியிலே சொல்லுங்கள். இல்லை, அதற்குமேலே என்றால் நான் அனுமதிக்க மாட்டேன். இதுவே, ஓரளவு அதிகம் என்று தான் நான் நினைக்கிறேன். இப்படி ஒவ்வொருவரும் தீர்ப்பின் மீது விவாதம் செய்ய ஆரம்பித்தால் அவ்வளவுதான். இந்த வேலைதான் நடந்துகொண்டிருக்கும். அதை ஒத்துக்கொள்ள முடியாது.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே, தீர்ப்பிலே சில மாற்றங்கள் வந்ததாலே 30 மணி நேரத்திலே இந்த விளைவு வந்திருக்கிறதே தவிர......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் சட்டப்படி தான் தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது, அப்புறம், அடுத்ததற்கு வாருங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : அரசியல் சட்டத்தில்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசியல் சட்டத்தை நான் படித்துவிட்டுத்தான் பேசுகிறேன். வேறு என்ன சொல்ல வேண்டும். சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : கட்சித் தாவல் சட்டத்தில் இருக்கிற நிலையிலேயிருந்து....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கட்சித் தாவல் சட்டமெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. சரியாகச் சொல்லியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : அதைத்தான் நீங்கள் சரியான முறையிலே பின்பற்றவில்லை.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரியாகச் சொல்லியிருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலேதான் (குறுக்கீடு) பார்லிமெண்டிலே இல்லை. இருந்தது என்றால் ஒத்துக்கொள்கிறேன். மூன்றில் ஒரு பங்கு இல்லாமல் ஒரு கட்சி ஆரம்பிக்கவில்லை. பார்லிமெண்டிலே இருந்தது என்றால் நான் ஒத்துக்கொள்கிறேன். (கூச்சல்-குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆளுக்கு ஆள் பேசக்
கூடாது. எல்லோரும் உட்காருங்கள். இராதா மட்டும் பேசுங்கள்.
மற்றவர்களெல்லாம் உட்காருங்கள். மற்றவர்களெல்லாம் உட்கார
வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : பாராளுமன்ற நடவடிக்கை
களைப் பொறுத்தவரையில், இப்படி இருக்கிறது என்று சொன்
னால், ஆதாரத்தோடு சொன்னால் அதை நான் ஏற்றுக்கொள்
ளத் தயாராக இருக்கிறேன். ஆனால், பாராளுமன்றத்திலே
வந்திருக்கிற நிலை, கட்சி உடைந்து மூன்றில் ஒரு பகுதியினர்
பிரிந்ததற்குப் பின்னால் நான் அந்த நிலை வந்திருக்கிறதே தவிர,
யாரோ மூன்றுபேர் வெளியேற்றப்பட்டவர்களைக் கட்சி சாராத
வர்கள் என்ற நிலையிலேயிருந்து எங்கேயும் இதுவரையில்,
இந்தக் கட்சித் தாவல் சட்டம் வந்ததற்குப் பின்னால், சாராத
வர்களை ஒரு கட்சியிலே........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்வதைக்
கேளுங்கள். (கூச்சல்-குழப்பம்) எல்லோரும் உட்காருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே,........
........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், திரு.
திருநாவுக்கரசு. உட்காருங்கள். கொடுக்கப்பட்ட கோரிக்
கையை ஏற்று, அதிலே இருக்கின்ற நியாயத்தை உணர்ந்து,
கட்சித் தாவல் தடைச் சட்டத்தின்படி என்ன பிரிவுகள் உண்டோ
அவற்றிலே உட்கூறுகளின் பொருத்தத்தையும் உணர்ந்து அந்த
மூன்று பேரை நீங்கள் வெளியேற்றிதாகத் தந்த அறிவிப்பின்
படி அந்த மூன்று பேருக்கும் இட மாற்றமும் செய்யப்பட்டது.
அவர்கள் கட்சி சாராதவர்கள் என்று அறிவிக்கப்பட்டது. அந்த
அளவோடு உங்களுடைய பகுதி முடிந்தது. என்னுடைய கருந்
தெல்லாம், ஒரு கணவன் தன்னுடைய மனைவி துரோகம் செய்
கிறாள் என்று கருதி வீட்டை விட்டும் துரத்தி, அதுவும் போதா
மல் நீதி மன்றத்திற்குச் சென்று விவாகரத்தும் வாங்கிய பிறகு,
இனிமேல் அந்தக் கணவன் எதற்காக அந்த மனைவியைப்
பற்றிக் கவலைப்பட வேண்டும் என்பதுதான். (கூச்சல்-குழப்பம்)
உட்காருங்கள். எல்லோரும் உட்காருங்கள். மற்றவர்களெல்
லாம் உட்காருங்கள். இராதா, சொல்லுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவரவர்களே,
ஒரு அருமையானக் கருத்தைச் சொன்னீர்கள். ஒரு கணவனுக்
குத் துரோகம் செய்தவர், ஒரு மனைவி துரோகம் செய்துவிட்
டாள், மனைவி விபச்சாரம் செய்துவிட்டாள் என்பதை நீங்கள்
சொல்லிவிட்டீர்கள்,........



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, தாங்கள் நல்ல தமிழ் கற்றவர். எனவே, மிகுந்த எச்சரிக்கையோடு அந்த வார்த்தையைப் பயன்படுத்தியிருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன். '' துரோகம் செய்தாள் என்று கருதி '' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். '' துரோகம் செய்தாள் '' என்று தாங்கள் சொல்லவில்லை. '' துரோகம் செய்தாள் என்று கருதி '' என்று சொல்லியிருக்கிறீர்கள். சந்தேகப்படுகிற கணவன்கள் எங்கும் இருக்கலாம், அதற்கு என்ன செய்வது ?

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இப்படிப்பட்ட தவறான வழியிலே போகிற பெண்களுக்குத் துணை செய்யக்கூடாது.

10–40 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தவறான வழியில் போகிற பெண்களுக்குத் துணை செய்பவர்கள் யார் என்பது நாட்டுக்குத் தெரியும்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்கள் மிக நன்றாகச் சொன்னார்கள். இந்த நாட்டில் பல பெண்களைக் கெடுக்கின்ற அயோக்கிய ஆண்கள் நிறையபேர்கள் இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். ஆர். இராதா அவர்களே, நீங்கள் மிகவும் வரம்புமீறிப் போகிறீர்கள்........ (குறுக்கீடு) மிகவும் வரம்பு மீறிப் பேசினால் நான் அனுமதிக்க மாட்டேன்...... (குறுக்கீடு)........ நீங்கள் உட்காருங்கள்; இனிமேல் பேச அனுமதிக்க மாட்டேன்.:........(குறுக்கீடு) இல்லை, இல்லை ; ஏதாவது நாகரிகமாகப் பேசுவதாக இருந்தால் பேசலாம் ; வரம்புமீறிப் பேசுவதை ஒப்புக்கொள்ளக் முடியாது........ (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் ; இனிமேல் பேச அனுமதிக்க மாட்டேன். திரு. இராதா அவர்களை அமருமாறு வேண்டுகிறேன்........ (குறுக்கீடு) இல்லை., நான் அவ்வளவுதான் சொல்வேன் ; உட்காருங்கள்.............. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். இராதா : நீங்கள் அளித்திருக்கிற தீர்ப்பில், நாங்கள் பாதிக்கப்படுகிற எங்களுடைய நிலையினை நான் எடுத்துச் சொல்கிறேன். விவாதங்கள் பல்வேறு இடங்களில் திரும்பிக் கொண்டிருக்கின்றன. ஆனால், நீங்கள்

[திரு. எஸ். ஆர். இராதா] [1991 சனவரி 23

நெம்பர் 2 என்று ஒரு அண்ணா தி.மு.க.-வை, அரசியல் சட்டத் திலே அங்கீகரிக்கப்பட்ட ஒரு கட்சி—பாராளுமன்றத்தில், தேர்தல் கமிஷனால் ஒத்துக்கொள்ளப்பட்டிருக்கிற ஒரு அரசியல் அமைப்பில் இருக்கிற ஒரு கட்சி — இருக்கிறபோது, அதன் பேரிலே இன்னொரு கட்சியை உருவாக்குவது என்பது யாராலும் நிச்சயமாக ஏற்றுக்கொள்ள முடியாது. **

** (குறுக்கீடுகள்). அதுபோல,......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்த வரி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மறுபடியும் பேரவை தலைவரினுடைய தீர்ப்பின்மீது ஏதாவது பேசினீர்களே யானால், நான் கடுமையான நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) ஏற்கெனவே, இதே அவையிலே அ.இ.அ.தி.மு.க. ஜானகி அணி என்று ஒருவர் உங்கள் பக்கத்திலே உட்கார்ந்து கொண்டிருக்கிறார். (கூச்சல்-குழப்பம்) இப்படி எல்லோருமே பேசினால்......உட்காருங்கள் ; அனைவரும் உட்காருங்கள்.

திரு. ஒய். வெங்கடேச தீட்சிதர் : ஒரு பாயின்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, நீங்கள் அ.இ.அ.தி.மு.க.-2 என்று ' அனவுன்ஸ் ' பண்ணியதைப்பற்றி நான் ஒன்றும் பேசவில்லை. ஏனென்றால், பாராளுமன்றத் திலே பிரிந்து போனதற்குப் பிறகு, ' எஸ் ' என்று அவர்கள் ' அனவுன்ஸ் ' பண்ணியிருக்கிறார்கள். ' எஸ் ' என்று தனி யாக ' அனவுன்ஸ் ' பண்ணியிருக்கிறார்கள். (குறுக்கீடு) முதலில் பிரிந்தபோது, ' ஒன்-தேர்டு ' இல்லை.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அளித்த தீர்ப்பைப்பற்றி விமர் சனம் செய்ய நினைப்பதாகத் தாங்கள் தயவுசெய்து எடுத்துக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன். பாராளு மன்றத்திலே நடந்திருக்கிற நிகழ்ச்சிகளையெல்லாம் நண்பர் நிறைய மேற்கோள் காட்டினார்கள்............. (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராஜன் உட்காருங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த மன்றத்திலே தங்களுக்கு இருக்கிற வானளாவிய அதிகாரத்தை நாங்கள் அறிவோம்........(குறுக்கீடு).

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றவை.



1991 சனவரி 23]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் சொல்லி யாகிவிட்டது. நீங்கள் பேசுங்கள்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : இந்த மன்றத்திலே தங்க ளுக்கு இருக்கிற வானளாவிய அதிகாரத்தினால், இந்த மன்றத் தின் நடவடிக்கைகளை நடத்திச் செல்வதற்கு, நீங்கள் எடுக்கிற முடிவுகள் யாராலும் கேள்வி கேட்க முடியாத முடிவுகள் என்பது தெரியும். ஆனால், ஒரு கட்சிக்கோ, ஒரு குழுவிற்கோ அளிக் கின்ற பெயர் அவர்களைப் பொறுத்தவரை அமைந்து விடுவது என்றால், எங்களுக்கு அபிப்பிராய பேதம் இல்லை. ஆனால் அவர்களுக்குக் கொடுக்கின்ற பெயர், இன்னொரு அரசியல் கட்சியினுடைய உரிமையைப் பாதிப்பதைத்தான் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். நீங்கள் 2 என்று சொல்கிறபோது, 1 என்ற அணியை நீங்களாகவே உருவாக்குகிறீர்கள். நிச்சயமாக அப்படி உருவாக்குகின்றபோது, அது எலக்ஷன் கமிஷன் அங்கீ கரித்த ஒரு முறைக்கே, அரசியல் சாசன சட்டத்திற்கே விரோதமாக இருக்கிறது. அவர்களை இப்போது வேறு பெயரிலே அழைப்பதில் எங்களுக்கு ஒன்றும் அபிப்பிராயம் பேதம் இல்லை. ஆனால், 2 என்று அழைக்கிறபோது, முட்டை என்று ஒன்றிருந்தால், எப்படி கோழி என்று ஒன்று இருக்க வேண்டுமோ, அதைப் போல இரண்டாவது அணி என்று ஒரு அணி உருவாகிறபோது, ஒன்று என்ற பெயர் வந்து ஒட்டிக் கொள்கிறது. ஆகவே, அதை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னுடைய ஒரு சிறிய ' ஒழுங்குப் பிரச்சினை '. முட்டை, கோழி விவாதம் வேண் டாம். முட்டை, கோழி—இதில் எது முன்னாடி வந்தது என்பது இன்னும் முடிவாகாமல் இருக்கிறது.

*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, நீங்கள் ஒரு தீர்ப்பை அளித்திருக்கிறீர்கள். தீர்ப்புக்கு உட்பட்டவர்கள் அல்லது பாதிக்கப்பட்டவர்கள் என்கிற முறையிலே, அ.இ.அ.தி.மு.க. கட்சித் தலைவரை நீங்கள் பேச அழைத்தீர்கள். அதற்குப் பிறகு இன்னொரு கட்சியை — பிரதான அரசியல் கட்சியைச் — சார்ந்தவர்கள் அதன்மீது விமர்சனம் அல்லது விவாதம் என்ற முறையிலே பேச அனுமதிப்பது அவை மரபுக்கு ஒத்ததுதானா என்பதைத்தான் கேட்க விரும்புகிறேன். அப்படி ஒரு விவாதத்தை.......... மன்னிக்க வேண்டும். I am addressing the Chair...... (குறுக்கீடு)........ (குறுக்கீடுகள்).

10-45 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்றவர்கள் குறுக்கிடக் கூடாது. திரு. வரதராசனைத் தவிர வேறு யாரும் பேசக் கூடாது.

திரு. உ. ரா. வரதராசன் : பேரவைத் தலைவர் அவர்களே, I am addressing the Chair. Let the Chair reply. இப்படி ஒரு வாதத்தை நீங்கள் அனுமதிப்பதாக இருந்தால் தயவு செய்து அதற்காக நேரம் ஒதுக்கி அவையில் இருக்கிற அத்தனை கட்சிகளுக்கும் அதற்கான வாய்ப்பைக் கொடுங்கள். இல்லை என்றால் இதன் மீது ஒரு விவாதத்தை மறைமுகமாக நடத்துவதற்குப் பிரதான எதிர்கட்சியும், அடுத்த எதிர்கட்சியும் அவையினுடைய நேரத்தை வீணாக்குவதற்கு திட்டம் போட்டு வந்து இருக்கிறார்களோ என்று நாட்டு மக்களுக்கு ஒரு எண்ணம் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. (கூச்சல் குழப்பம்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முக்கியமாக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பாயின்ட் ஆப் ஆர்டர் கேட்டதற்கு உள்நோக்கம் கற்பிக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Point of order என்று திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டதால் தான் நான் அனுமதித்தேன், எனவே இப்படி Point of order என்று கேட்கும் போதுதான் நான் அனுமதிக்கிறேன். அப்படி அனுமதிக்கும்போது அது Point of order-ஆகத்தான் இருக்க வேண்டும். உடனே தன்னுடைய கருத்தைச் சொல்வ தாக இருக்கக் கூடாது. திரு. எஸ். ஆர். பி. அவர்கள் இதை ஒத்துக்கொள்வார்கள் என்று நான் நினைக்கிறேன். அதாவது தன்னுடைய கருத்தை point of order இல் திணிப்பதாக இருக்கக் கூடாது. எனவே திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கேட்டது "Point of order அல்ல. (குறுக்கீடுகள்) நான் ஏதோ அனுமதித்து விட்டேன் என்று பெருந்தன்மையோடு அதை எடுத்துக் கொள்ள வேண்டும். (குறுக்கீடு) நீங்கள் சொன்னது உங்களுடைய கருத்து. ஆர்டர் ஒன்றும் பிறழ்ந்து போகவில்லை. அப்படி பிறழ்ந்து போனதால் எழுப்பிய பிரச்சினை அல்ல நீங்கள் எழுப்பியது. அதனால் தான் திரு. வரதராசன் அவர்கள் கேட் கிறார்கள். எனவே இனிமேல் எல்லோரையும் சொல்கிறேன். Point of order என்ற சாக்கில், சந்தடியில்........

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, திரு. வரதராசன் அவர்கள் உள்நோக்கம் கற்பிக் கிறார்கள்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுவும் தப்புதான். ஆனால் திரு. பீட்டர் அல்போன்ஸ் "Point of order கேட்க வில்லை. அதிலே ஒன்றைத் திணிக்கிறார்.

திரு. எம். அப்துல் லத்தீப் : பேரவைத் தலைவர் அவர் களே, தாங்கள் அளிக்கிற தீர்ப்பின்மீது விவாதம் நடத்தக்கூடாது என்பது இந்த அவையினுடைய மரபு. ஆனால் மாண்புமிகு திரு. இராதா அவர்கள் எழுப்பி இருக்கிற பிரச்சினை வேறு ஒரு அடிப்படையில் என்று நான் கருதுகிறேன். தங்களுடைய தீர்ப்பை எதிர்த்தல்ல; அவருடைய முக்கியமான வாதம். முதலில் ஒரு தீர்ப்பளித்தீர்கள். அதாவது அவர்களைக் கட்சி சார்பற்றவர்கள் என்று தீர்ப்பளித்தீர்கள். அதன் பின்னர் 30 மணி நேரத்திற்குள்ளாக அதை மாற்றிவிட்டீர்கள் என்பது தான் அவருடைய வாதம் என்று நான் கருதுகிறேன். ஆனால் முதல் தீர்ப்பு என்பது 'ஃபேக்சுவல்' அல்ல. அதாவது அந்த வாதத்தில், அந்த வழக்கில் இருக்கிற உண்மைகளை முழுமை யாக ஆராய்வதற்கு முன்பு, எழுப்பப்படுகிற பிரட்சினைக்கு ஒரு 'இன்டெரிம் ஆர்டர்' தெரிவிக்கப்படுகிறது. அதற்குப் பிறகு உரியவர்களை அழைத்து, தாங்கள் உண்மைகளை அறிந்த பிறகு அப்படி அந்த உண்மைகளைத் தாங்கள் தெரிந்து கொண்ட காரணத்தால் அதன் அடிப்படையில் இறுதியாகத் தாங்கள் தந்த அந்த முடிவு பின்னர் வந்தது. அதுதான் இறுதியானது. அதன் மீது விவாதம் நடத்துவதற்கு உரிமை இல்லை. அது உறுதியானதும், இறுதியானதும், அறுதியானதும் ஆகும் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. பி. எச். பாண்டியன் : சட்டப் பேரவை தலைவர் அவர்களே, நான் இதை என்னுடைய சொந்தக் கருத்தாகச் சொல்லாமல் நடைபெற்ற ஒரே ஒரு சம்பவத்தை இந்த அவை யின் கவனத்திற்குக் கொண்டு வந்து இந்த விவாதத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறேன். புரட்சித் தலைவர் திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் மறைந்தவுடன் இதே நிலை ஏற்பட்டபோது என்னுடைய நண்பர்கள் திரு. திருநாவுக்கரசு, கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் போன்றவர்கள் எல்லாம் நான் அளித்த நோட்டீசை எதிர்த்து அன்றைக்கு உச்சநீதிமன்றத்திற்குச் சென்று நாங்கள் மூன்றில் ஒரு பங்கு இல்லாவிட்டாலும் அரசியல் சட்டப் பிரிவு 19 க்ளாஸ் (சி) யின் படி எங்களுக்கு ஒரு அசோசியேசன் என்று இல்லாவிட்டாலும் யூனியனை உருவாக்கக்கூடிய அடிப்படை உரிமை இருக்கிறது என்று சொல்லி உச்சநீதிமன்றமும், மூன்றில் ஒரு பகுதி இல்லாத நேரத்தில் அன்றைக்கு அதை ஏற்ற காரணத்தால்தான் அவர்கள் தனியாக அனைந்திந்திய அண்ணா திராவிட முன்னைற்றக் கழகம் (1), அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் (2) என்று பாராளுமன்றத்திலே அங்கீகரிக்கப்பட்டது.

இங்கே உங்களுடைய அலுவலகத்தில் கோப்பைக் கூட நீங்கள் பார்க்கலாம். அன்றைக்கு நான் சபாநாயகராக இருந்த போது செல்வி ஜெயலலிதா அவர்கள் ஒரு கடிதம் எழுதினார்கள். நடைபெற்ற விவாதங்களை எல்லாம் எழுதி அனுப்பி இருக்கிறார் கள். உங்களுடைய அலுவலகத்தில் அது இருக்கும். ஆகவே யார் வேண்டுமானாலும் ஒருவர், இருவர் மூன்று பேர் அல்லது நான்கு பேர் சேர்ந்து ஒரு அசோசியேசன் அதாவது ஒரு யூனியன் என்ற அந்த விதியின்படி இன்றைக்குக் கட்சியை உருவாக்கலாம். இருக்கக் கூடிய ஒரு கட்சியின் பெயரைக் கூட வைத்துக் கொண்டு உருவாக்கலாம்.

மற்றொன்று, அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக, சட்ட விதிகளின் படி பொதுச் செயலாளர் தொண்டர் களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். எழுதி வைத்து சென்றிருக் கிறார்கள், சட்ட விதியில் அதை எக்காரணத்தைத் கொண்டும் திருத்த முடியாது என்றும் எழுதி வைத்து விட்டுச் சென்று இருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜானகி) அணிக்கும், அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக (ஜெயலலிதா) அணிக்கும் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு நீதிபதி பாஸ்கரன் அவர்கள் முன்னிலையில் வந்து சில காலங்களில் விசாரணை நடைபெற்று, இன்றைக்குப் பண்டலாக கட்டப்பட்டு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருக்கிறது. காரணம் யாரும் பொதுச் செயலாளர் என்று தங்களைச் சொல்லி விட முடியாது என்று, சொல்லக்கூடாது என்ற முறையில் தான் அந்த வழக்கு கட்டி வைக்கப்பட்டு, சீல் வைக்கப்பட்டு உயர்நீதி மன்றத்தில் இருக்கிறது என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மற்றொன்று இன்றைக்கு இருக்கக் கூடிய நிலையில் ஒரு சட்டமன்ற உறுப்பினராக இருந்தாலும் சரி, ஒரு கட்சியில் இருந்து பிரியும் போது, இது இன்றைக்கு வாரிசு உரிமை போன்று கொண்டாடக் கூடிய காலமாகத்தான் எங்களுக்கு வந்திருக்கிறது. யார் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் வாரிசு? இதுதான் இன் றைக்கு எழுந்திருக்கக் கூடிய கேள்வி. அந்த வாரிசு முறையிலே தான் நாங்கள் எல்லாம் இங்கே தனிமையாக இருந்தாலும் அங்கீ கரிக்கப்பட்டு செயலாற்றுவதற்கு அனுமதித்து இருக்கிறீர்கள்.

10-50 மணி

மற்றொன்று, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக தலைமைக் கழகக் கட்டடத்தில் தன்னுடைய சொந்த சொத்து என்று சொல்லி அன்னை ஜானகி அம்மையார் அவர்கள் உயர்நீதி மன்றத்தில் தொடுத்துள்ள வழக்கும், உச்ச நீதிமன்றத்தில் தொடுத்துள்ள வழக்கும் அவரால் திரும்பப்பெறப்



படவில்லை..... (குறுக்கீடுகள்) என்னுடைய சொந்தக் கருத் தைச் சொல்லவில்லை. நடைபெற்ற விவரங்களைத் தெரிய படுத்த வேண்டுமென்பதற்காகத்தான் சொன்னேன். (குறுக்கீடுகள்) நான் யார் பேசும்போதும் குறுக்கிடவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மற்ற அனைவரும் உட் காருங்கள். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் அவரும் ஒரு அணி.

திரு. பி. எச். பாண்டியன் ; ஆகவே இன்றைக்கு நீங்கள் அளித்த தீர்ப்பு இங்கே எங்களுடைய நிலவரங்களை, அடிப்படை களைப் புரிந்து அளித்த தீர்ப்பு. அந்த அடிப்படையிலேதான் வழங்கப்பட்டு இருக்கிறது என்பதையும் நான் இங்கே அவைக்குத் தெரிவிக்கக் கடமைபட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய கருத்து இந்தக் கட்சித் தாவல் சட்டத் திலே, விதியில் உள்ள பார்ம் 4-ன் படி நாங்கள் யாராவது கொடுத்தவர்களைத் தான் கட்சியிலே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று இருக்கிறது. நீங்கள் கொடுத்திருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையினுடைய விதியிலே கூட 8 பேர்களுக்குக் குறைந்த உறுப்பினர்கள் என்று வந்தால் அவர்கள் அணி என்று கூட வராது என்ற நிலையில் அவர்கள் இங்கே ஒதுக்கி வைக்கப் பட்டிருக்கிறார்கள். அந்த நிலையில் இருக்கும் போது, 3 பேர் களுக்கு தனி ஒரு கட்சியினுடைய பிரதான கட்சியாக இருக்கின்ற எதிர்கட்சியாக அங்கீகாரம் பெற்றிருக்கின்ற ஒரு கட்சியினுடைய பெயரை நீங்கள் தருவது சரியல்ல.

(திரு. எஸ். திருநாவுக்கரசு எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு நீங்கள் பேச வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். அவர் சொல்லிவிடட்டும். அவர் கருத்தை அவர் சொல்ல வேண்டியதுதானே.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே அந்த வகையில் அவர்களுக்குப் பெயர் அளிப் பது என்பது நிச்சயமாக விதி முறைகளுக்கு ஏற்றதல்ல. எனவே நீங்கள் மறுபரிசீலனை செய்து அதை ரத்து செய்ய வேண்டும் என்று உங்களைப் பணிந்து, தலைவர் என்ற முறையில் நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் தலைவர் என்ற அந்த நிலையிலே இருந்து பேரவை உறுப்பினர்கள் என்ற முறை யில் எங்களை எல்லாம் காக்க வேண்டிய கடமை இருக்கின்ற அடிப்படையிலே எங்களைக்

மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் ஒன்றைச் சொன்னார்கள். எனக்கும் பதில் சொல்லத் தெரியும் அவர் சொன்ன சட்ட திட்டங்கள் எல்லாம் எனக்கும் தெரியும். நான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே அந்த சட்டதிட்டங் களைப் பார்த்து, அந்தக் காலத்திலேயே சட்ட திட்டம் மட்டும் இருந்த காலத்திலேயே தேர்தலிலே நிற்கும்போது தேர்தல் சட்டம் என்று ஒன்று இல்லாத கட்சி திராவிட முன்னேற்றக் கழகம் என்று சொல்லி அன்று திராவிட முன்னேற்றக் கழகத்திலே தேர்தல் சட்டம் வேண்டுமென்று சொல்லி, தேர்தல் விதிமுறை களுக்காகத் தனியாக அதற்கு ஒரு சட்ட திட்டம் கொண்டு வர வேண்டுமென்று அந்தக் காலத்திலேயே வாதாடி கொண்டு இருந் தவன். எனவே அதனாலே. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந்தவன் என்றெல்லாம் இப்போது சொல்லிக் கொள்ள வேண்டுமா? அதை விட்டுவிடுங்கள்.

திரு. எஸ். ஆர். இராதா: அரசியல் வரலாற்றிலே நான் 23 ஆண்டுக் காலம் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருந் திருக்கிறேன். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தில் இருக்கிறேன். 19 வருடங்கள் ஆகின்றன. 20 வரு வருடம் கூட ஆகவில்லை. ஆனால் அண்ணாவைத் தெரியாத வர்கள், பெரியாரைத் தெரியாதவர்கள் எது வேண்டுமானாலும் பேசலாம் என்பதனாலே நீங்கள் அனுமதிக்கிறீர்கள். (குறுக் கீடு).

மாண்புமிரு பேரவைத் தலைவர்: வாதங்கள் எல்லாம் திசை மாறிப் போகக் கூடாது. திரு. பி. எச். பாண்டியன் பேசுங்கள்.

10-55 மணி

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயலலிதாவுக்கு யாரைத் தெரியும்? ஜெயலலிதாவுக்கு யாரைத் தெரியும்? பெரியாரைத் தெரியுமா? ** நான் தமிழன், எனக்கு எல்லோரையும் தெரியும். பெரியா ரைத் தெரியும். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : Mike-ஐ எல்லோருக்கும் நிறுத்துங்கள். தயவுசெய்து ரொம்பத் தவறான வாதங்களுக்கு போக வேண்டாம். (குறுக்கீடுகள்) இது ரொம்ப வரம்பு மீறிப் போய்விடும். (குறுக்கீடுகள்) இது வேண்டாம். (குறுக்கீடுகள்) தயவுசெய்து திரு. குமரி அனந்தன் தவிர மற்ற எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.





திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சபாநாயகர் அவர்களுக்கு உரிய மரியாதை யைக் கொடுத்துக்கொண்டிருப்பவர்கள்தான் நாம் எல்லாம். ஆனால் அவர்கள் இறுதியிலே சொன்ன வாசகம் மிகக் கடுமை யான வாசகம் என்பது மட்டுமல்ல (குறுக்கீடுகள்) யாரைத் தெரியும் என்பதோடு நிறுத்தியிருந்தால் பரவா யில்லை. (குறுக்கீடுகள்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன் பேசுங்கள். திரு. பாண்டியன் பேசிவிட்டார். (குறுக்கீடுகள்) திரு. குமரி அனந்தன் பேசிக்கொண்டிருக்கிறாரே! (குறுக்கீடுகள்) திரு. குமரி அனந்தன் பேசுங்கள். (குறுக்கீடுகள்).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து சில கருத்துக்களை எடுத்துச் சொல் வதற்கு யாரைத் தெரியும் என்று அவர்கள் சொல்லியதில் அவர் களுடைய வேகம், அத்தோடு நின்றிருந்தால் கூட பரவாயில்லை. (குறுக்கீடுகள்) ஒரு நிமிஷம் (குறுக்கீடுகள்) யாரைத் தெரியும் என்று சொல்வதற்கு, எனக்கு நீங்கள் இங்கே சொன்னதைப் போல அண்ணாவைத் தெரியும், பெரியாரைத் தெரியும் என்று பதில் சொல்வதற்குக் கூட வாய்ப்பு இருக்கிறது. ஏன் என்றால் அரசியல் தலைவர்கள் மேம்பட்ட நிலையில் நின்று பேசுகிறோம். வினா, அதற்கு விடை இருக் கிறது. அவைத் தாண்டிப் போகிற நேரத்தில் தயவுசெய்து எல்லா நாகரீக எல்லையையும் தாண்டிப் போய்விட்டதாகக் கருதுகிற காரணத்தினாலே, தயவுசெய்து நீங்கள் மன்னிக்க வேண்டும். தயவுசெய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நண்பர் திரு. இராதா அவர்கள், அவர் களுக்கு எல்லாம் பெரியார், அண்ணாவைத் தெரியாது என்ற கருத்துபடி பேசியபோது, திரு. பாண்டியன் அவர்கள் எழுந்து ஜெயலலிதாவுக்கு யாரைத் தெரியும் என்று கேட்டார்கள். அதாவது அவர்களுக்கு அண்ணாவையும், பெரியாரையும் தெரியாது என்ற அர்த்தத்தில் கேட்டார்கள். அதாவது அதற்கு அர்த்தம், அவர்களுக்கு பெரியாரை, அண்ணாவைத் தெரியாது என்ற அர்த்தத்தில், அவர்கள் இயக்கத்தில் இருந்தவர்கள் அல்ல என்ற அர்த்தத்தில் சொன்னார்கள். அதற்குப் பிறகு சொன்ன வார்த்தை, நம்முடைய எதிர்க் கட்சித் துணைத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, அது பதிவாகி இருக்கு மேயானால், அது தவறு. அது பதிவாகி இருக்குமேயானால்

அவை நடவடிக்கைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடுவதுதான் நல்லது. அதற்குப் பிறகு அவர்கள் சொன்ன கடைசி சொற் றொடர்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கடைசி சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. இனிமேல் இதற்குப் பிறகு நான் எந்த வாதத்தையும் அனுமதிக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) இல்லை இல்லை வேண்டாம். இனிமேல் யாரை யும் அனுமதிக்கப் போவதில்லை. (குறுக்கீடுகள்) திரு. இராதா உட்காரவேண்டும். என்னுடைய (regula: bu in s )-க்கு போகிறேன். (குறுக்கீடுகள்).

அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம், மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி. உகம்சந்த். (குறுக்கீடுகள்) இனிமேல் யாரையும் அனுமதிக்கப்போவதில்லை. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்கார வேண்டும். (குறுக்கீடுகள்) திரு. இராதா உட்கார வேண்டும். மற்றும் தொடர்புடைய உறுப்பினர்கள் அமர வேண்டும் (குறுக்கீடுகள்) அமருமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடுகள்) இல்லை இல்லை. நேற்றே தீர்ப்புச் சொல்லிவிட்டேன். (குறுக் கீடுகள்) தீர்ப்பு மறுபரிசீலனை எல்லாம் கிடையாது. (குறுக் கீடுகள்) திரு. இராதா அவர்கள் அமருமாறு கட்டளையிடு கிறேன். (குறுக்கீடுகள்) அமரவில்லையென்றால் நான் வெளி யேற்ற வேண்டியிருக்கும் (குறுக்கீடுகள்) தீர்ப்பு மறுபரிசீலனை எல்லாம் கிடையாது. (குறுக்கீடுகள்) தீர்ப்பு எல்லாம் முடிந்து விட்டது. மறுபரிசீலனை கிடையாது. (குறுக்கீடுகள்) இனிமேல் தீர்ப்புப்பற்றி பேசவே கூடாது. (குறுக்கீடுகள்) அதனால் நம்பிக்கையோடுதான் நான் இவ்வளவு வாய்ப்புக்கொடுத்திருக் கிறேன். (குறுக்கீடுகள்) உங்களுடைய அ.இ.அ.தி.மு.க. என்ற பெயரை நான் எந்தவகையிலும் பாதிக்கவில்லை. (குறுக்கீடு கள்).

மீண்டும் நான் சொல்கிறேன், திரு. இராதா அவர்களும் தொடர்புடைய உறுப்பினர்களும் அமர வேண்டும். தீர்ப்பு மறு பரிசீலனை கிடையாது (குறுக்கீடுகள்) இனிமேல் அப்படிப்பேச அனுமதிக்க மாட்டேன். (குறுக்கீடுகள்) பேச வேண்டியதை எல்லாம், கிட்டத்தட்ட எல்லாச் செய்திகளையும் எல்லோரும் சொல்லியாகிவிட்டது (குறுக்கீடுகள்) திரு. இராதா அவர்கள் உட்கார வேண்டுமென்று ரொம்ப வருத்தத்தோடு கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏன் என்றால் தொடர்ந்து நேரத்தை வீணாக்கக் கூடாது. (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் உட்காரவில்லையென்றால் நான் அப்புறம் (குறுக்கீடுகள்) உட்காருங்கள். இல்லையென்றால் (குறுக்கீடுகள்) இதற்கு மேல் இதில் அவ்வளவுதான் இல்லை. (குறுக்கீடுகள்) உங்கள் பேசவாய்ப்பு எல்லாம் முழுமையாகக் கேட்டுவிட்டுத்தான் நான் சொல்கிறேன் கருத்துக்களை (குறுக்கீடுகள்) உங்கள் கருத்துக்களை முழுமையாகக் கேட்டு



விட்டுத்தான் விடை சொல்கிறேன். உங்கள் சார்பிலே திரு பீட்டர் அல்போன்ஸ் வேறு பேசியிருக்கிறார். அதையும் கேட்டு விட்டுத்தான் விடை சொல்கிறேன். (குறுக்கீடு) அவையினுடைய அமைதியைக் குலைக்கும்படி நீங்கள் நின்று கொண்டிருக்கக் கூடாது. உட்காருங்கள். எல்லாரும் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நான் அடுத்ததற்குப் போக வேண்டும். (குறுக்கீடு) இல்லை, இல்லை (குறுக்கீடு) நீங்கள் அமருமாறு கட்டளையிடுகிறேன்.(குறுக்கீடு) அமருமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்சீடு) அமருமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) அமர வில்லை என்றால் நான் வெளியேற்ற வேண்டியிருக்கும்.(குறுக்கீடு) பார்த்துக் கொள்ளுங்கள், நான் வெளியேற்ற வேண்டியிருக்கும் (குறுக்கீடு) அது என் கவலை.

தனி உரிமை கொடுத்தால்தானே ஒலிவாங்கி இயங்கும். பொது உரிமையிலே இயங்காது. (குறுக்கீடு) திரு. இராதா அவர்கள் அமருமாறு கட்டளையிடுகிறேன். (குறுக்கீடு) திரு. இராதா அவர்களும் மற்றவர்களும் வெளியேறுமாறு கட்டளை யிடுகிறேன். (குறுக்கீடு) வெளியேறுமாறு கட்டளையிடுகிறேன். (கூச்சல்-குழப்பம்) மார்ஷல், எல்லோரையும் வெளியேற்ற லாம். (அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு அருகே வந்து நின்றுகொண்டு. ''சபாநாயகர் சர்வாதிகாரம் ஒழிக'', ''துரோகிகளுக்குத் துணை புரியும் சபாநாயகர் ஒழிக'', ''சபாநாயகரின் துரோகத்தனம் ஒழிக'' என்று கோஷமிட்டனர்) எல்லோரையும் வெளியேற்றுங்கள் (கூச்சல்-குழப்பம்) நான் தாக்கப்பட்டிருக்கிறேன், கை தாக்கப்பட்டிருக்கிறது, என்னுடைய துண்டைப் பிடித்து இழுத்துவிட்டுப் போகிறார்கள். மார்ஷல், அவர்களை வெளியே தூக்கிப் போடுங்கள். இதை யெல்லாம் அனுமதிக்க மாட்டேன்.

(அகில இந்தியா அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் வெளியேற்றப்பட்டனர்)

11-00 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த அவையில் எவ்வளவோ கருத்து மாறுபாடுகளை ஆளுங் கட்சியும் சரி, காங்கிரஸ் கட்சியும் சரி, மற்றுமுள்ள கட்சி களும் சரி, இங்கே பரிமாறிக்கொள்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. ஆனால் இதே மன்றத்தில் வரவு-செலவுத் திட்ட உரை படித்த நேரத்தில் என்னை எப்படித் தாக்க முற்பட்டார்களோ அதைப்போல இன்றைக்கு அவையின் உரிமைகளை நிலைநாட்ட வேண்டிய தங்களையே தாக்க முற்பட்டு இருக்கிறார்கள். இந்த அவையினுடைய காவலர்கள் ஒரு கணம் விட்டிருந்தால்

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 23

தங்கள் நிலை என்னவாகி இருக்கும் என்று கருதக்
கூடிய அவல நிலையில் இந்த அவையிலே உள்ள நாங்கள் எல்லாம்
இருக்கிறோம். ஆளுங் கட்சியிலே உள்ளவர்களானாலும், எதிர்க்
கட்சியிலே உள்ளவர்களானாலும், காங்கிரஸ் கட்சியானாலும்,
கம்யூனிஸ்ட் கட்சியானாலும், மற்றுமுள்ள ஜனதா தளம்,
முஸ்லீம் லீக் போன்ற எந்தக் கட்சியானாலும், எல்லோருக்கும்
நீங்கள் பொதுவானவர்கள். உங்கள்மீது ஒரு துரும்பு விழுந்தால்
அது எங்கள் எல்லோர் மீதும் விழுந்ததாகத்தான் பொருள்.
தாங்கள் அளித்த ஒரு தீர்ப்பின்மீது, தாங்கள் மிகுந்த பெருந்
தன்மையோடு நீண்ட நேரம் உரையாற்றுவதற்கு வாய்ப்பு
அளித்த பிறகும்கூட தங்களுடைய தீர்ப்பு அவர்களுக்கு ஏற்கத்
தக்கது அல்லவென்றால் அதைச் சொல்லிவிட்டு வெளி நடப்புச்
செய்யக்கூடிய வாய்ப்பு ஜனநாயகத்திலே அனுமதிக்கப்பட்ட
ஒன்றாக இருந்தாலும், அதைச் செய்யாமல் தங்கள் மீதே கை
நீட்டுகின்ற அளவுக்கு ஒரு நிலைமை ஏற்பட்டதை எண்ணி
நான் மிகுந்த கவலைப்படுகிறேன். வேதனைப்படுகிறேன். என்
னுடைய கவலையோடு மற்ற கட்சிகளுடைய தலைவர்களும்
என்னுடைய கவலையைப் பகிர்ந்துகொள்வார்கள் என்று
எதிர்பார்க்கிறேன். அவர்களுடைய கருத்துக்களையும் நான்
எதிர்பார்க்கிறேன்.

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே,
தங்களுடைய மேலான உரிமையும் அதிகார வரம்பும் ஏற்றுக்
கொள்ளப்பட்டுத்தான் நாங்கள் அனைவரும் இங்கே அமர்ந்து
இருக்கிறோம். அதில் எந்தவிதமான ஐயமும் இல்லை. உறுப்
பினர்களுக்குள் கருத்து மோதல் ஏற்படுகிறபோது சில கருத்துக்
களைச் சொல்லிவிட்டால் கூட அது சில நேரங்களிலே பொறுத்
துக்கொள்ளத்தக்கதாக அமைந்துவிடும். அதுவும் நீங்கள் அனு
மதிக்கின்ற நேரத்திலேதான் நடைபெறுகிறது. அப்படி இருக்க
சபாநாயகர் ஸ்தானத்திலே நீங்கள் இருக்கின்றபோது எந்தச்
சூழ்நிலையிலும் நாங்கள் பார்த்தபோது உணர்ச்சிவசப்பட்ட
நிலையிலும், இங்கே இருக்கின்ற காவலர்கள் அவர்களை வெளி
யேற்றுகின்ற நிலையிலும் ஏற்பட்ட நிகழ்ச்சியின்போது தங்க
ளுடைய துண்டு இழுக்கப்பட்டது என்பதனை, அது எந்தச்
சூழ்நிலையில் அமைந்தது என்பதை, இங்கு இருக்கின்றவர்கள்
நாங்கள் பார்க்க முடியாவிட்டாலும் கூட, இழுக்கப்பட்டது
என்பதனை நாங்கள் காண முடிந்தது. எனவே இந்த அவை
யினுடைய மிகப் பெரிய பாரம்பரியத்துக்கு அதுமிக்க மாசுபடுத்து
வதாக இருந்தது. சூழ்நிலை எப்படி எந்த நிலையில் என்பதை
எல்லாம் நான் இங்கே விவாதிக்கவும் இல்லை; நாங்கள் காண
வும் இல்லை. அந்த நிலையில் ஏற்பட்ட அந்த நிகழ்ச்சி மிக
வருந்தத்தக்கதுதான். இப்படிப்பட்ட நிகழ்ச்சி நடைபெறக்
கூடாது என்று காங்கிரசுக் கட்சியின் சார்பிலும் நாங்கள்
எண்ணத்தைத் தெரிவித்துக் கொள்வதற்குக் கடமைப்பட்டு
இருக்கின்றோம்.



1991 சனவரி 23] [திரு. குமரி அனந்தன்]

11-05 மணி

இங்கே ஒரு சப்மிஷன், ஒரு சின்ன சமர்ப்பணம். பிரதான
எதிர்க் கட்சி என்ற வகையில் எங்கள் அருமை மாண்புமிகு உறுப்
பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள், அவர்களுடைய சார்பிலே
பேசிவிட்டதாக தாங்கள் சொன்னீர்கள்; அல்லது அவர்களுக்கு
ஆதரவாக ஒரு கூட்டணிக்கட்சி என்ற வகையிலே பேசி இருக்கி
றார். அவர் ஒரு ஒழுங்குப் பிரச்சினை எழுப்பத்தான்
சொன்னாரே தவிர, அதனுடைய சார்பிலே கருத்துச் சொன்ன
தாக இருக்கின்றபோது எங்கள் கட்சியினுடைய சார்பில்
எங்கள் உறுப்பினர்கள் எல்லாம் மனமுவந்து என்னையே
அதற்குக் கருத்துச் சொல்வதற்கு அனுமதித்து இருக்கிறார்கள்.
இதிலேகூட இந்தச் சம்பவம் நடந்ததற்குப் பிறகு நான்
என்னென்ன சொல்ல வேண்டும் என்பதை எல்லாம்கூட விட்டு
விட்டு, ஒன்றே ஒன்றை உங்களுடைய பார்வைக்கு வைக்கிறேன்.
உங்களுடைய தீர்ப்பிலே உயரிய நோக்கங்கள் இருந்தன.
ஒவ்வொருவரும் தனித் தனியாக இருந்து செயல்படுவதைவிட
ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று சொல்கின்ற
உங்களுடைய இலட்சியத்தைக்கூட நீங்கள் நேற்று எடுத்து
வைத்தீர்கள், பன்னெடுங்காலமாக சமுதாயப் பணியில் இருக்
கின்றவர்கள் என்ற வகையிலே . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சபாநாயகர் துண்டு
இழுக்கப்பட்டது எல்லாம் தாண்டிப் போய்விட்டது என்று
நினைக்கிறேன். அது இப்போது உங்களுக்கு முக்கியமாகத்
தெரியவில்லை.

**திரு. குமரி அனந்தன் :** அதைச் சொல்லிவிட்டேன். அதற்குப்
பிறகு சொல்கிறேன். மன்னிக்க வேண்டும்; நிச்சயமாக, சபா
நாயகர் அவர்களே, கனம் சபாநாயகர் அவர்களே, நீங்கள்
'முக்கியமாகத் தெரியவில்லையா?' என்று கேட்பதே எனக்கு
மிகுந்த வேதனையாக இருக்கிறது. நான் இப்போது இதை
விட்டுவிடுகிறேன். மற்றவர்கள் சொன்னதற்கு வேண்டுமென்றால்
நான் பதில் சொல்கிறேன். உங்களைச் சொல்கிறபோதுகூட
உங்கள் உயர்ந்த நோக்கம்தான் சொல்லப்பட்டது . . . . . . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இப்பொது என்ன
பிரச்சினை? அதைப் பேசுங்கள். பழைய பிரச்சினையையே
திரும்பப் பேசிக்கொண்டு இருந்தால் எப்படி ? அடுத்து
திரு. ரமணி.

**திரு. கே ரமணி :** மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே,
இன்றைக்கு இந்த அவையிலே இப்போது நடைபெற்று இருக்
கும்படியான இந்த நிகழ்ச்சி, இதற்கு முன்பு ஒரு முறை இந்த

[திரு. கே. ரமணி] [1991 சனவரி 23

அவை அல்லோலகல்லோலப்பட்டு பெரும் பலாத்காரமான
தாக்குதலே இந்த சபையிலே நடத்தப்பட்டதினுடைய ஒரு
மறு பதிப்பு மாதிரி இன்றைக்கு நடந்த நடவடிக்கை வளரும்
படியான இடத்துக்குச் சென்றுகொண்டிருந்தது. நல்ல கால
மாக அது தடுக்கப்பட்டுள்ளது. முதலாவது, நான் சொல்கிறேன்
நமது மாண்புமிகு முதலமைச்சர் சொல்லி இருக்கும்படியான
அந்தக் கருத்தோடு பரிபூரணமாக நாங்கள் ஒத்து நிற்கிறோம்.
இந்த அவையில் என்ன கருத்து வேற்றுமை இருந்தாலும்
பேசித்தான், எத்தனை தடவை வேண்டுமானாலும் பேசிப்
பேசித்தான் தீர்க்க வேண்டுமே தவிர 'பலாத்காரம்'
என்பது இந்த அவைக்குள்ளே எந்த ஒரு கட்சிக்கும் இருக்கக்
கூடாது. அதனுடைய ஒரு நிழல் சாயல்கூட இங்கே ஏற்படுவது
முறையற்றது. அப்புறம் பார்லிமென்டரி ஜனநாயகம் என்று
பேசிக்கொண்டே இந்த அவையிலே உட்காருவதற்கு அர்த்தம்
இல்லை. இன்றைக்கு ஏற்பட்ட நிலை மிகவும் வருந்தத்
தக்கது. கடுமையான கண்டனத்துக்குரியது. சபாநாயகர்
அவர்கள் இருக்கும்படியான அந்த இடமே—அதைத்தான்
நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பாதுகாப்பற்ற
இடமாக இருக்கிறது என்று எனக்குத் தெரிகிறது. முன்பு
நடந்து இருக்கக்கூடிய நிலை—நமது முதலமைச்சருக்குப் பாது
காப்பற்ற நிலையில் அது இருந்தது; நான் பக்கத்தில் இருந்து
பார்த்தவன். அவருடைய கையில் இருந்த காகிதங்களைப்
பிடுங்கிக் கொண்டு அவர் மீது கை சுழற்றிக் குத்தினார்கள்.
அது அவர்களுடைய முகத்தில் பட்டது. இன்றைக்கு சபா
நாயகரை அடிப்பது, குத்துவது என்ற காரியம் நடைபெற்று,
அது தடுக்கப்பட்டது. அவர் உடம்பிலே படாமல் தடுக்கப்
பட்டது. அவருக்குப் பக்கத்தில், இந்தப் பக்கத்தில் ஒருவர்
அவருக்குப் பாதுகாப்பாளராக இருக்க வேண்டும். அதே
மாதிரி அந்தப் பக்கத்திலே அவருக்குப் பாதுகாப்பாளராக
ஒருவர் இருக்க வேண்டும். செயலாளர்களும் இங்கே நடைபெற
வேண்டிய காரியங்களை நடத்திக் கொண்டிருக்கிற மற்ற
ஊழியர்களும் அதற்கு அடுத்தபடியாக இன்னும் ஒரு பக்கத்திலே
வரிசைக் கிரமமாக நிற்க வேண்டும். இன்றைக்கு அவருக்குப் பாது
காப்பு இல்லை. அதுதான் நிலைமை. தயவு செய்து நமது
முதலமைச்சர் அவர்கள் அதற்குத் தகுந்த உத்தரவு உடனே
பிறப்பித்து இந்தக் காரியத்தை நடத்த வேண்டும்.

11-10 மணி

விவாதம் நடந்தது பற்றிய விஷயத்தில் நான் தலையிட
விரும்பவில்லை. நாங்கள் அப்படிப்பட்ட முறையைக் கடைப்
பிடிக்கிறவர்கள் அல்ல. சபாநயகர் மிகத் தெளிவாக
ஒரு தீர்ப்பை இங்கே கொடுத்தார். அதிலே அவர் சொல்ல
வேண்டிய நிகழ்ச்சிகளை எப்படி மாறி ஏற்பாடு உருவாக்கப்



991 சனவரி 23] [திரு. கே. ரமணி]

சொல்லித்தான்
ட்டது என்பதைத் தெளிவாக எடுத்துச் அந்தத் தீர்ப்பைப்
அந்தத் தீர்ப்பைக் கொடுத்திருக்கிறார். நாட்டு மக்களிடத்திலே
பற்றி, ஒத்துக்கொள்ளாதவர்கள் இந்த தீர்ப்பைப் பற்றி
சொல்லலாம். இந்தச் சபாநாயகருடைய சொல்லலாம். இந்தச்
அவர்கள் சொல்ல வேண்டிய முறையிலே பேச சபாநாயகர்
சபையிலேகூட இன்றைக்கும் அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறீர்கள்,
வாய்ப்பு கொடுத்தார். "நீங்கள் மட்டும் சொல்லுங்கள்"
அந்தப் பாதிப்பு என்ன என்பது பாதிக்கப்பட்டவர்கள் தாங்கள்
என்று சொன்னார். அப்படிப் கிடைக்கவில்லை என்ற
சொன்னதற்குத் தகுந்த நியாயம் இந்த ஜனநாயகத்தில்
உணர்வோடு வெளிநடப்புச் செய்வதற்கு வெளிநடப்புச் செய்யும்போது
உரிமை இருக்கிறது. ஆனால் செல்வது என்பது எந்த ஜன
சபாநாயகரைத் தாக்கிவிட்டுச் விதிமுறையில் இருக்கிறது?
நாயகத்தில் இருக்கிறது? எந்தக் கட்சி கண்டனத்திற்குரியது.
இல்லை. ஆகவே இது கடுமையான கடுமையாகக் கண்டிக்
மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இதைக் எதிர்காலத்திலே நடக்
கிறது. இப்படிப்பட்டதொரு நிகழ்ச்சி பாதுகாப்பை நம்முடைய
கக்கூடாது. சபாநாயகருக்கு உரிய உத்தரவிட்டு நிறைவேற்ற
முதலமைச்சர் அவர்கள் உடனடியாக நிகழ்ச்சி குறித்து
வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்த இந்தக் காரியத்திலே
கண்டனம் தெரிவிக்கிறேன். மேலும் சாதாரண விஷய
ஈடுபட்டிருக்கும்படியான—ஏனென்றால் இது இந்தக்
மல்ல. எல்லாவற்றையும் தாண்டிவிட்டதாகும். நடவடிக்கைக்கு—
காரியத்தில் இப்படிப்பட்ட பலாத்காரமான பேரில் நீங்கள்
கை நீட்டியது யாராக இருந்தாலும் அவர்கள் என்று நான்
கடுமையான நடவடிக்கையை எடுக்க வேண்டும்
கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவைத் தலைவர்
திரு. பி. எச். பாண்டியன் : தாங்கள் தாக்கப்பட்டது எல்லா
அவர்களே, இன்றைக்குத் வேண்டிய ஒரு காரியமாகும்.
கட்சியினராலும் கண்டிக்கப்பட உண்மையிலேயே ஜனநாய
சபாநாயகரைத் தாக்கத் துணிவது செய்ய வேண்டிய காரிய
கத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் சொல்லி வெளிநடப்புச்
மாகும். ஒரு ஆட்சியின் மீது குறை கண்டித்து வெளி
செய்யலாம். சபாநாயகருடைய தீர்ப்பைக் முரணானதாகும்.
நடப்புச் செய்வது பாராளுமன்ற முறைக்கே சொல்லியிருக்கி
அதை நான் ஏற்கனவே உங்களிடத்திலே இந்தத் தீர்ப்பில்
கிறேன். ஆனால், ஒன்று. நீங்கள் அளித்த கருதிக்கொள்ளக்
பாதிக்கப்பட்டவர்கள், பாதிக்கப்பட்டவர்களாக ஈடுபட்டிருக்கிறார்கள்.
கூடியவர்கள், இந்த நடவடிக்கையில் எத்தனையோ தீர்ப்பு
நான் எண்ணிப்பார்க்கிறேன். நானும் வழங்கும்போது
களை வழங்கியிருக்கிறேன். நான் தீர்ப்பை 28ஆம் தேதியைத்
இது போன்ற நிலை இல்லை; சனவரி காரணத்தை
தவிர. அன்றைக்கே நான் பேசியிருக்கிறேன். கடைசி நாளில்
நான் அன்றைக்கே சொல்லியிருக்கிறேன்.

பேசும்போது, ''நான் எத்தனையோ தீர்ப்புகளை வழங்கினேன். யாரும் என்னுடைய மடியில் வந்து அமரவில்லை'' என்று நான் பேசியிருக்கிறேன். அது அவைக் குறிப்பிலே இருக்கிறது.

இந்தியாவிலே நம்முடைய சட்டப்பேரவையிலேதான் சபாநாயகரும் உறுப்பினர்களும் நேரிடை தொடர்புகொள்ளக் கூடிய அளவிற்கு ஒரே சமமாக பாவிக்கக் கூடிய அளவிற்கு உங்களுடைய ஆசனம் இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அரியானா மாநில சட்டசபையில் சபாநாயகர் இருக்கைக்கே செல்ல முடியாது. அவர் வெளியே இருந்து வரக்கூடிய வழியே வேறு. தன்னுடைய அறையிலிருந்து வரும்போது அவர் வரக்கூடிய வழி வேறு. எப்படி உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு மேலே கட்டைகளால் டையஸ் கட்டப்பட்டிருக்கிறதோ அதைப் போல அங்கேயெல்லாம் கட்டப்பட்டிருக்கிறது. அரியானா, பஞ்சாப், ஏன் பாராளுமன்றத்திலே கூட இன்னும் பல்வேறு சட்டசபைகளிலேயும்கூட அப்படி இருக்கிறது. ஆனால் நம்முடைய சட்டப்பேரவையிலேதான் நுழையும் போது சபாநாயகரைத் தொட்டுக்கூட பார்த்து விடலாம். கைகொடுத்துவிட்டு வரலாம். இது நட்பின் காரணமாக. ஆகவே சபாநாயகருக்கு பாதுகாப்பு கொடுக்கக் கூடியது சட்டமன்றமே.

இன்றைக்கு குறிப்பாக எதிர்க்கட்சி வரிசையைச் சேர்ந்த ஒரு கட்சியினர், வன்முறையில் ஈடுபட்டிருக்கிறார்கள். நான் இன்று காலையிலேயே கணித்துக்கொண்டுதான் உள்ளே வந்தேன். இன்று ஏதாவது நடக்கும் என்று எனக்குத் தெரியும். காரணம். எப்படியாவது சட்டப்பேரவையில் அமளியை உருவாக்கவேண்டும். எப்படியாவது கலவரத்தை சட்டப்பேரவையில் உருவாக்கவேண்டும். அந்தக் கலவரத்தை வைத்து இந்த ஆட்சியைக் குறை சொல்லி விடலாம் என்று. இதுபோன்ற திட்டங்கள் பல்வேறு நேரங்களில் நடத்தப்பட்டிருக்கின்றன என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. ஆகவே இது போன்ற நடவடிக்கைகள் இனிமேல் நடைபெறாமல் இருப்பதற்கு எந்தெந்த அளவுக்கு சபாநாயகருக்குப் பாதுகாப்பு கொடுக்க முடியுமோ அந்த அளவுக்கு அவருக்குப் பக்கத்தில் இரண்டு காவலர்களை, சக்திவாய்ந்தவர்களை, ஆறடி உயரம், 40 அங்குலம் மார்பளவு உள்ளவர்களை வைத்திருந்தால் பாதுகாக்கப்படும். (நான் வைத்திருந்தேன்). தங்களுடைய துண்டை இழுத்தவர்கள் இந்த அவையிலே அங்கம் பெறாத அளவிற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

11–15 மணி.

நான் ஒன்றைச் சொல்கிறேன். யாரும் அதைச் சாபமாகச் சொல்கிறேன் என்று எண்ணிவிடவேண்டாம். சபாநாயகரைப் பழித்தவர்கள், சபாநாயகருடைய கையையோ,





உடலையோ, இருக்கையையோ, துண்டையோ இழுத்தவர்கள் இந்த அவைக்குள்ளே இதுவரை உறுப்பினராக வந்தது கிடையாது. நான் இதைச் சொல்வதற்குக் காரணம், அந்த ஆசனம் அப்பேர்ப்பட்ட ஆசனம் அந்த ஆசனம் இங்கே நீதி செலுத்தக்கூடிய ஆசனம். அந்த ஆசனம் எல்லோரையும் அரவணைக்கின்ற ஆசனம். அந்த ஆசனத்திற்கும் பழி வரக் கூடாது, அந்த ஆசனத்தில் அமருபவர்களும் பழிக்கு ஆளாகாமல் நடந்துகாட்ட வேண்டும். மற்றொன்று, இது போன்ற நிலைகளை நான் சொல்லும்போது, சபாநாயகர் அவர்கள் இனிமேல் அந்த விவகாரம் நடைபெறாமல் பார்த்துக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டுமென்று கேட்டு அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே கண்ணியத்திற்குரிய தலைவர் அவர்களே, இன்
றைய தினம் நடந்த சம்பவத்தை நினைத்தால் தமிழ்நாட்டி
லேயும் இதுமாதிரி நடக்குமா என்ற ஒரு கவலை ஏற்பட்
டிருக்கிறது. ஏழு வருடங்கள் எத்தனையோ பெரிய பெரிய
அறிஞர்கள், கலைஞர்கள் எல்லாம் இருந்து நம் நாட்டினுடைய
அரசியல் சட்டத்தை உருவாக்கினார்கள். அம்பேத்காரைப்
போல, அல்லாடி கிருஷ்ணசாமி ஐயர் போல, தேஜ் பகதூர்
சாப்ரு போல, பெரியவர்கள் எல்லாம் உருவாக்கினார்கள்.
திரு. இராதா அவர்கள் இங்கே பேசும்போது அரசியல்
சட்டத்தைக் காட்டித்தான் பேசினார். அரசியல் சட்டத்தைப்
பற்றி சும்மா சொல்லிக்கொண்டே இருந்தார்கள். அந்த
அரசியல் சட்டம் என்ன சொல்கிறது? அந்த அரசியல் சட்டத்
தில் சபாநாயகருக்கு உள்ள அதிகாரம் பற்றி நன்றாகச்
சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்பீக்கருக்கு என்ன அதிகாரம்
இருக்கிறது? நீங்கள் நீதிதேவன் மாதிரி இங்கே உட்கார்ந்
திருக்கிறீர்கள். நீதிதேவன் என்றால் எப்படி? சித்திர
புத்திரன் கதை தெரியுமா? கேள்விப்பட்டிருக்கிறீர்களா?
அதைச் சொன்னால் நாழியாகும் என்று அமைச்சர் சொல்
கிறார். அதுமாதிரி உட்கார்ந்திருக்கிற ஒரு ஆசனம் அது.

எப்படி அரசியல் சட்டத்தை அவர்கள் குறித்துச் சொல்
கிறார்களோ அதே அரசியல் சட்டத்தில் சபாநாயகருக்கு
என்ன உரிமையிருக்கிறது என்றும் கொஞ்சம் நினைத்துப்
பார்க்காமல் அவர்கள் நடந்துகொண்டு இருக்கிறார்கள். அப்படி
நடந்துகொண்டதை நீங்கள் நினைத்துப் பார்த்து, இனிமேல்
அதுமாதிரி சபையில் நடக்காமல் செய்ய, நாட்டில் நடக்காமல்
இருக்க ஏற்பாடு செய்யவேண்டும். ஒரு சபாநாயகரைத்
தீண்டக்கூடிய அளவுக்குப் போகிறது என்றால், அவர்கள்
அரசியல் சட்டப்படி வாக்குறுதி எடுத்துக்காண்டார்கள்
பாருங்கள்,—(Oath of allegiance அதுவே போய்விட்டது. ஆகவே

[திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர்] [1991 சனவரி 23

நடவடிக்கை எடுக்கவேண்டும். நடவடிக்கை என்றால் சாமானியமான நடவடிக்கை எடுத்து பிரயோசனம் இல்லை, கடுமையான நடவடிக்கை எடுத்து இதற்கொரு முடிவெடுக்கவேண்டும் என்று ஜனதா தளக்கட்சியின் சார்பில்—நாங்கள் அகில இந்தியக் கட்சி, தமிழ்நாட்டுக் கட்சி அல்ல. அப்படிக்—கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற வரலாற்றில் இன்றைக்கு எழுதப்பட்டிருக்கிற ஒரு அத்தியாயம், மிகவும் சோகமான ஒரு அத்தியாயமாகும். நாங்கள் இந்த அவையில் பல்லாண்டுகளாக பணியாற்றிக் கொண்டிருக்கிறோம். பல நேரங்களில் அமளிதுமளிகள் ஏற்பட்டிருக்கின்றன. இருதரப்பினருக்கிடையே விவாதங்களுக்கிடையே சில நேரங்களில் கொந்தளிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் எந்த நேரத்திலும் சபாநாயகரைத் தாக்கிய நிகழ்ச்சி, தாக்குவதற்கான முயற்சி நடந்த நிகழ்ச்சி இதுவரையில் நடைபெற்றதில்லை.

நானும் தொடர்ந்து பார்த்துக்கொண்டிருக்கிறேன். மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற உறுப்பினர்களுக்குக் கேள்வி நேரம் முக்கியமான நேரம். மக்களுடைய பிரச்சினைகளைப் பற்றி அரசிடம் கோரிக்கைகளை வைத்து, கேள்வி கேட்டு, மக்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருகிற கேள்வி நேரத்தை மக்கள் வாக்குகளைப் பெற்று வந்த பிரதிநிதிகள் தொடர்ந்து பகிஷ்கரித்து வருகிறார்கள்.

11–20 மணி

கேள்வி நேரம் முடிந்தவுடன் கூட்டமாக உள்ளே நுழைகிறார்கள். மக்களுடைய பிரச்சினைகளைப் பேசி, மக்களுக்குத் தொண்டு செய்யவேண்டும் என்பதற்காக அல்லாமல் சபையிலே அமளிதுமளிகளை ஏற்படுத்த வேண்டுமென்ற ஒரு நோக்கத்திற்கு வந்து கொண்டிருப்பது வேதனையான நிகழ்ச்சியாகும். இந்த அவையை நடத்துவதற்கு மக்களுடைய பணத்தைச் செலவழிக்கிறோம். இங்கே பல உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிகளைப் பற்றியும், மக்களுடைய கோரிக்கைகளைப் பற்றியும் பேசுவதற்குக் காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அந்த நேரமெல்லாம் சட்டமன்ற நடவடிக்கைக்காகப் பயன்படாமல் இருப்பதை இங்கே நாம் பார்த்துக்கொண்டிருக்கிறோம். அரசியல் காழ்ப்புணர்ச்சிகளைத் தீர்த்துக் கொள்வதற்கு இந்த அவையைப் பயன்படுத்திக்கொள்வது எங்களுக்கெல்லாம் வேதனையாக இருக்கிறது.



1991 சனவரி 23] [திரு. எம். அப்துல் லத்தீப்]

இருந்திருக்கிறார்கள். இப்படி
இந்த அவையில் பலர்
எப்போதும் நடக்கவில்லை. மாண்புமிகு மதியழகன் அவர்கள்
அவையை நடத்தியபோது ஒரு முக்கியமான நிகழ்ச்சி இந்த
அவையிலே நடந்தது. அப்போதுகூட சபாநாயகர் தாக்கப்
படவில்லை. மாண்புமிகு மதியழகன் அவர்கள் தாக்கப்பட
வில்லை.

பிடித்து இழுத்ததன் வாயிலாக
இன்றைக்குத் தங்களை
It is an attempt for murder. You are sought to be assaulted.
இதை சாதாரண விஷயமாக தாங்கள் கருதலாம். ஆனால்
எங்களைப் போன்ற வழக்குரைஞர்கள் அப்படிக் கருத
முடியாது. It is a clear case of attempt for murder. It is a 307 case.
ஆகவே நான் தங்களைக் கேட்டுக் கொள்வது சபையினுடைய
இறையாண்மை நிலை நாட்டப்பட வேண்டும். இது சட்ட
மன்றம். இந்த சட்டமன்றத்திற்குள்ளே இது நடந்த காரணத்தால் you should take due cognizance. You are the final
authority to take due cognizance under Section 307. ஆகவே,
இதிலே இன்வெஸ்டிகேஷன் தேவையில்லை. The entire House is
witness. நாங்கள் எல்லாம் விட்னசாக இருக்கிறோம்.

You are yourself witness. The Judge himself is a witness.
So, you must take action and institute necessary legal proceedings
yourself You need not refer this matter to any Advocate or to any
Judge for judicial adjudication because you are the final arbiter. It
is within your sovereign authorities within the House. This sort of
heinous crime has taken place in front of us. So, there should not be
any let or hinderance and there should be no sympathp. That
is our request. (Thumping of desks)

என்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட
ஆகவே இது 307 கேஸ்
வேண்டும். காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களும் இருக்கிறார்
கள். அவர்கள் பிரதான எதிர்க் கட்சி உறுப்பினர்களாக
இருக்கிறார்கள். அவர்களும் பேசுகிறார்கள். இது சொற்
போர் செய்கிற இடம். மற்போருக்கான இடமாக இது மாற்றப்
படக் கூடாது. நமக்குள் இருக்கக் கூடிய அரசியல் காழ்ப்
புணர்ச்சிகளைத் தீர்ப்பதற்கு அவையினுடைய நேரத்தை
எடுத்துக் கொள்வது முறையல்ல. இரண்டு, மூன்று தினங்
களாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆளுநர் உரையில்
சில பேர்கள்தான் பேசியிருக்கிறார்கள். பல பேர்கள் பேச
வேண்டும். ஒவ்வொரு நாளும் அரசியல் பிரச்சினைகளை
எழுப்பி சில கட்சிகள் தங்களுடைய காழ்ப்புணர்ச்சிகளைத்
தீர்த்துக் கொள்வதற்கு அவையினுடைய நேரத்தைப் பயன்
படுத்திக் கொண்டிருப்பது மக்களுக்குச் செய்கிற மாபெரும்
துரோகம் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்ல
ஆசைப்படுகிறேன்.

[திரு. எம். அப்துல் லத்தீப்] [1991 சனவரி 23

ஒவ்வொரு மணித்துளிக்கும் மக்களுடைய பணம் செல
வழிக்கப்படுகிறது. எந்த அளவிற்கு இங்கே மக்களுடைய
பிரச்சினைகள் தீர்க்கப்படுகின்றன, பேசப்படுகின்றன என்
பதைப் பற்றி நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமக்குள்ளே
நாமே ஒரு கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ளாவிட்டால்
—இங்கேயிருக்கிற ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஒரு போலீஸ்
காரரைப் போட்டு அவையை நடத்த முடியாது. அவையை
நடத்துவதில் தங்கள் மீது இருக்கிற நம்பிக்கை, தாங்கள்
உட்கார்ந்து இருக்கிறீர்களே அந்த நாற்காலிக்கு தங்களுக்காக
கொடுக்கப்படுகின்ற மரியாதை, உங்களுக்குக் கொடுக்கப்படுகிற
கண்ணியம், உங்கள் மீது எங்களுக்கு இருக்கக் கூடிய அச்சம்,
அடக்கம், மரியாதை, கண்ணியம் என்ற இந்த அடிப்படையிலே
தான் அவையை நடத்த முடியுமே தவிர வேறல்ல. பேச்சிலே
வெம்மை இருக்கலாம். சொற்போர் நடக்கலாம், ஆனால் மற்
போருக்காக ஒருவரையொருவர் தாக்கக் கூடாது.

11.25 மணி

அன்றைக்கே முதலமைச்சர் அவர்களே தாக்கப்படக் கூடிய
சூழ்நிலை எல்லாம் ஏற்பட்டது. அதைக் கூட இந்த அவை
பொறுத்துக் கொண்டது. தயவு செய்து ஒரு முடிவுக்கு வர
வேண்டும். இந்த அவையை முறையாக நடத்துவதற்கு அனை
வரும் துணைக்கு வர வேண்டும். அவையை நடத்துவதிலே
ஏதோ சில தொய்வுகள் ஏற்படுகின்றன என்றால், தங்களுக்கே
இன்றைக்கு இந்தக் கதி என்று சொன்னால், எங்களைப்
போன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம் என்ன நிலைமை ?
நாங்கள் எல்லாம் சொற்போரிலே தான் வல்லவர்கள், மற்
போர் செய்ய எங்களால் முடியாது. நாங்கள் எல்லாம் அந்த
வயதைக் கடந்து விட்டவர்கள். எங்களை எல்லாம் கண்ணியக்
குறைவாக நடத்தினால் நாங்கள் இந்த அவையிலேயிருந்து
பணியாற்ற முடியாது. பணியாற்றவும் எங்களுக்கு விருப்பமும்
இல்லை. ஏன் என்றால், நாங்கள் சொற்போர் செய்ய வந்
திருக்கிறோம். மக்களுக்காகப் பேசுகிறோம் என்று சொல்லி
விட்டு வந்திருக்கிறோம். அதற்கு மாறாக இங்கே சண்டை
போடுவதற்குத்தான் வருகிறோம் என்று சொன்னால், இந்த
அவையே தேவையில்லை என்று நினைப்பது மட்டுமல்ல, யார்
யார் எப்படி நடந்து கொள்கிறார்கள், இந்த அவை மக்களுடைய
பணத்தால் நடைபெறுகிறது. இந்த அவையில் அவர்களுக்காகப்
பேசக் கூடியவர்கள் யார், யார், மக்களுடைய பிரச்சினைகளை
எடுத்து வைப்பது யார், சண்டை போடுபவர்கள் யார், சண்டை
போடுவதற்கே வருகிறவர்கள் யார் என்பதை, இப்போதாவது
தமிழ்நாட்டு மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான்
கேட்டுக் கொள்கிறேன். நான் சொன்னதைப் போல, வெளியே
இதை அனுப்ப வேண்டியதில்லை.



[திரு. எம். அப்துல் லத்தீப்]
1991 சனவரி 23]

The Chief Minister, who is the Police Minister, is here. He is
an eye witness. We are all here and we are all eye witnesses. You
are the person who has been affected and assaulted. There was an
attempt to murder and you should take due cognizance. Nobody
should be let loose. The law should take its own course and you
must punish. You are the final authority. It need not be referred
to any Judicial authority. You are the final authority. Therefore we
expect from you an adjudication, a punishment, a deterrent punish-
ment. Otherwise what will happen ? There should not be any recur-
rence of such incidents in this House. This House is the symbol of
the dignity of the people of Tamil Nadu. It is the Symbol of the
dignity and sanctity of democratic ideals' Therefore you are the
costodian of our dignity, the dignity of the people of Tamil Nadu.
You have been assaulted and therefore TamilNadu has been assaulted.
You should take such action as is essential under the circumstances.
என்று கேட்டு நான் அமர்கிறேன். மிகுந்த வருத்தத்தோடு
அமர்கிறேன். இனிமேல் வருத்தப்படக் கூடிய அவசியம் எல்லாம்
ஏற்படக் கூடாது என்று நான் சொல்லி அமர்கிறேன். மற்ற
யார் மீதும் எனக்குக் காழ்ப்புணர்ச்சி இல்லை. சட்டம் தன்
னுடைய இறையாண்மையை நிலை நாட்ட வேண்டும் என்ற
நோக்கத்தோடு சொல்கிறேனே தவிர, தனிப்பட்ட முறையில்
எனக்குக் காழ்ப்புணர்ச்சி இல்லை என்று சொல்லி, அமர்கிறேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்டமன்றத்தினுடைய வரலாற்றில், கடந்த
காலங்களிலே இது போன்ற ஒரு மிகக் கொடுமையான சம்பவம்
நிகழ்ந்தது இல்லை என்று சொல்லக் கூடிய அளவிற்குப் பேரவை
யினுடைய தலைவராக இருக்கிற தாங்களே தாக்கப்படுகிற
சூழ்நிலை ஏற்பட்டது மிகுந்த வருத்தத்திற்கும் மிகுந்த கண்
டனத்திற்கும் உரியதாகும். எனக்கு முன்னாலே பேசிய மாண்பு
மிகு சட்டமன்ற உறுப்பினர்கள், எல்லாக் கட்சிகளினுடைய தலை
வர்கள் சுட்டிக் காட்டியதைப் போல, சட்டமன்றத்திலே, இன்
னும் சொல்லப் போனால், சட்டமன்றத்திற்கு வெளியே கூட
இங்கேயிருக்கிற மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் பாதுகாப்புத்
தர வேண்டியவர் நீங்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
பிரச்சினைகள் ஏற்படுகிறபோது, பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை
ஏற்படுகிற போது, பேரவைத் தலைவரிடத்திலே புகார்
சொல்வது வழக்கம். ஆனால் அந்த ஸ்தானத்திலே இருக்கிற
பேரவைத் தலைவரே தாக்கப்பட்டு பாதுகாப்பு இல்லாத சூழ்
நிலை இங்கே சட்டமன்றத்திலே ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது.
உங்களுடைய துண்டு பிடித்து இழுக்கப்பட்டு, நீங்கள் தாக்கப்
பட்டதை, பிரதான எதிர்க் கட்சியாக இருக்கிற காங்கிரஸ்
கட்சியினுடைய துணைத் தலைவர் இலக்கியச் செல்வர்
அண்ணன் குமரி அனந்தன் அவர்களே பார்த்து, அவரே இங்கே
வருத்தப்பட்டு கண்டித்திருக்கிறார்கள். எல்லாக் கட்சித் தலை
வர்களும் கண்டித்தார்கள்.

144897
D
V2,11,31'N91

இது ஏதோ திடீரென்று உணர்ச்சி வசப்பட்டு ஏற்பட்டதாக நாங்கள் கருதவில்லை. இதற்குப் பின்னணி உண்டு. இதற்கு முன்னாலே சென்ற தடவை இங்கேயிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்ஜெட்டைப் படித்தபோது சட்டமன்றத்திலே ஒரு அசம்பாவிதம் நிகழ்ந்தது அனைவருக்கும் தெரியும். அப்போது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திலே நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருந்தோம். நான் இங்கே சொல்லுகிற இந்த வாசகங்கள், உண்மையிலேயே நான் என்னுடைய தாய் தந்தையரை எப்படித் தெய்வமாக வணங்குகிறேனோ அது போல புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களையும் தெய்வமாக வணங்குபவன். என்னுடைய தாய் மீது ஆணையாக, நான் தெய்வமாக வணங்குகிற எம்.ஜி.ஆர். அவர்கள் மீது சத்தியமாக நான் இதைச் சொல்லுகிறேன். ஏதோ இப்போது பிரிந்திருக்கிறோம், குற்றச்சாட்டு சொல்லுகிறோம் என்கிற உணர்வோடு அதைச் சொல்லவில்லை என்ற காரணத்திற்காகச் சொல்லுகிறேன்.

11-30 மணி.

முதல் பட்ஜெட் கூட்டத் தொடர் நடந்த போது சட்டமன்ற உறுப்பினர்களை அன்றைக்குப் பிரதான எதிர்க் கட்சியினுடைய தலைவராக இருந்த செல்வி ஜெயலலிதா அவர்கள் தன்னுடைய வீட்டுக்கு அழைத்திருந்தார். நாங்கள் அனைவரும் போயிருந்தோம். சுருக்கமாக முடித்து விடுகிறேன். நான் போவதற்கு முன்னாலேயே திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். போயிருந்தார். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களைப் பார்த்து ''முதலமைச்சர் எழுந்து பட்ஜெட் படிக்க ஆரம்பித்த உடனேயே பின்னாலே உட்கார்ந்திருக்கிற நீங்கள் எழுந்து அவர் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியை பறித்துத் தாக்கி விட வேண்டும்'' என்று அவர்களிடத்திலே ஜெயலலிதா அவர்கள் தனியாகச் சொல்லியிருக்கிறார்கள். காரணம் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்களிடத்திலே சொன்னால் அவர் உடனே முரட்டுத்தனமாக ஒத்துக்கொண்டு செய்து விடுவார் என்கிற நம்பிக்கை. ஆனால் அவர் பார்ப்பதற்கு மீசையோடு தோன்றலாமே தவிர அவர் ஒன்றும் முரடரும் அல்ல, சொல்வதையெல்லாம் கேட்கிற முட்டாளும் அல்ல. எனவே அவர் நிதானமாக மறுத்து விட்டு, ''கட்சியினுடைய துணைத் தலைவர் திருநாவுக்கரசு வரட்டும். இரண்டு பேரும் கலந்து சொல்லுகிறோம்'' என்று ஜெயலலிதா அவர்களிடத்திலே சொல்லி விட்டார்.

என்னிடத்திலே தனியாகச் சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டேன் என்று நினைத்து செல்வி ஜெயலலிதா அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் உட்கார வைத்துக் கொண்டு ''நான் பிரதான எதிர்க்கட்சித் தலைவர். நான் பிடித்து இழுத்



தால் நன்றாக இருக்காது. எனவே என் பக்கத்திலே இருக்கிற நீங்கள் முதலமைச்சரின் கையிலே இருக்கிற பட்ஜெட் காப்பியை பிடித்து இழுத்து—நீங்கள் தான் இழுத்து—அடிக்க வேண்டும்'' என்று என்னிடத்திலே சொன்னார்கள். நான் உடனே மிகுந்த வேதனையோடு சொன்னேன், ''தெரிந்தோ தெரியாமலோ புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் எங்களை பத்தாண்டுக் காலம் கௌரவமிக்க பதவிகளில் வைத்து விட்டுப் போயிருக்கிறார்கள். தயவு செய்து அடி ஆட்களாக எங்களை மாற்றாதீர்கள், அதற்கு என்னுடைய மனசாட்சி இடம் தரவில்லை. இரண்டாவது இது போன்ற சம்பவம் வேண்டாம்'' என்று நான் வாதாடினேன். அது எல்லோருக்கும் தெரியும். இங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மட்டுமல்ல, அங்கே இருந்த மூத்த தலைவர்கள் அத்தனை பேருக்கும் தெரியும்.

நாங்கள் எல்லாம் ரிசப்ஷன் ஹாலிலே உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும் போது மூத்த தலைவர்கள் எல்லாம் டைனிங் ஹாலிலே அடைக்கப்பட்டுக் கிடந்தார்கள். அப்போதிருந்த மூத்த தலைவர்களை எல்லாம் கூப்பிட்டு, அவர்கள் எல்லாம் ஜெயலலிதாவினுடைய டைனிங் ஹாலிலே உட்கார்ந்து இருந்தார்கள். நான் உடனே ''இது வேண்டாம். அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு கட்சிகளிடையே விரோதம் இருக்கலாம். முதல் அமைச்சர் நமக்குப் பிடிக்காதவராகக் கூட இருக்கலாம், அது வேறு விஷயம். ஆனால் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற அவருக்குப் பின்னாலே நிறைய சட்டமன்ற உறுப்பினர்கள் உட்கார்ந்து இருக்கிறார்கள். தோழமைக் கட்சியினர் எல்லாம் இருக்கிறார்கள். அவர்கள் மீது கை வைக்கிற போது பின்னாலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் உணர்ச்சி வசப்படுவார்கள். அங்கு நிச்சயமாக அடிதடி நடக்கும், ரகளை நடக்கும், வன்முறை நடக்கும். புரட்சித் தலைவர் இருக்கும் போது எவ்வளவோ பிரச்சினை நடந்திருக்கின்றன. அவருக்குப் பக்கத்திலே யாராவது போனால் கூட நாங்கள் பார்த்துக் கொண்டிருக்க மாட்டோம். தாக்கியிருப்போம். அது போல முதலமைச்சருக்குப் பின்னாலே அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் கண்டிப்பாகத் தாக்குவார்கள். அசம்பாவிதம் நடக்கும், அசிங்கமாகப் போய்விடும். பத்திரிகைகளிலே எல்லாம் கேவலமாக எழுதுவார்கள்'' என்று நான் வாதாடினேன். ''மூத்த தலைவர்களை எல்லாம் கேட்டீர்களா'' என்று கேட்டேன். அதற்கு அவர் ''அவர்களைக் கேட்டால் அவர்கள் ஒத்துக் கொள்ள மாட்டார்கள் என்ற காரணத்தினாலே அவர்களை எல்லாம் டைனிங் ஹாலிலே உட்கார வைத்திருக்கிறேன்'' என்று சொன்னார். சொல்லி விட்டு, நான் மறுத்த உடனேயே அவர் ''உங்களிலே யாருக்கு தோது படுகிறதோ அவர்கள் செய்து கொள்ளுங்கள்''

என்று சொல்லி விட்டு, ''நான் முடியாது'' என்று சொன்ன
உடனே சட்டமன்ற உறுப்பினர்களைப் பார்த்து, ''சரி அவர்
மாட்டேன் என்று சொல்லுகிறார், உங்களில் யாருக்கு வசதிப்
படுகிறதோ அவர்கள் போய் படிப்பதைப் பிடுங்கி கிழியுங்கள்''
என்று சொல்லிவிட்டு மேலே போய் விட்டார். சட்டமன்றத்
திற்குக் கிளம்புவதற்காகப் புறப்படுகிற நேரம். டைனிங்
ஹாலுக்கு உள்ளே டாக்டர் ஹண்டேயிலிருந்து அத்தனை
தலைவர்களும் உட்கார்ந்திருந்தார்கள். திரு. இராகவானந்தம்
இருந்தார், டாக்டர் ஹண்டே இருந்தார், திரு. மாதவன் இருந்
தார், திரு. எஸ். டி. எஸ். இருந்தார். அப்போதிருந்த
அத்தனை மூத்த தலைவர்களும் அங்கே உட்கார்ந்திருந்தார்கள்.
அங்கே உள்ளே போய் ''இந்த ஆலோசனையை யார் சொன்னது
என்று அவர்களிடத்திலே சத்தம் போட்டேன். கோபமாகக்
கூடப் பேசினேன். ''இந்தப் புத்திமதியை யார் சொன்னது
இந்த ஆலோசனைகளை யார் சொன்னது, ஏன் இப்படி முடிவு
செய்தீர்கள்'' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் ''எங்
களுக்கு ஒன்றும் தெரியாது, ஓ அப்படியா சொன்னார்கள்..
நாங்கள் வந்து தடுக்கிறோம்'' என்று வெளியே வந்தார்கள்''
''வந்து சொல்லுங்கள், இது வேண்டாம் என்று சொல்லுங்கள்''
என்று நான் சத்தம் போட்டேன், செல்வி ஜெயலலிதா
வீட்டிலே. உடனே அவர்கள் எல்லோரும் வெளியே வந்தார்
கள். செல்வி ஜெயலலிதா மாடியிலிருந்து இறங்கி வந்தார்.
வந்த உடனே அங்கே இருந்தவர்களைப் பார்த்து'' என்ன
மிஸ்டர் மாதவன்'' என்று கேட்டார். உடனே அவர் ''8-55
ஆகிறது புறப்படலாம்'' என்று சொன்னார், ''என்ன டாக்டர்
ஹண்டே'' என்றார், ''புறப்படலாம், நேரம் ஆச்சு'' என்று
அவர் சொன்னார். ஆகவே வெளியே வந்த யாருக்கும், அவர்
வந்த வேகத்திலே தடுத்துச் சொல்ல துணிச்சல் இல்லை. எதுவும்
சொல்லவும் இல்லை. கவர்னர் அட்ரஸ் முடிந்து அன்றைக்குத்
தான் வந்து உட்காருகிறார். அவரை உட்கார வைத்துவிட்டு
நான் ''தோழமை கட்சி காங்கிரஸ் கட்சி, அவர்களிடத்திலே
இது பற்றிக் கேட்டீர்களா'' என்று கேட்டேன். அவர் ''எல்
லோரையும் கலந்து தான் சொல்லுகிறேன். இன்றைக்குச் சட்ட
மன்றத்திலே வன்முறை நடந்தால் இன்றைக்கு மாலையே
ஆட்சி கலைக்கப்படுகிறது என்று எனக்குத் தகவல் வந்திருக்
கிறது'' என்று சொன்னார்.

நான் உடனே அன்றைக்குப் பிரதான சட்டமன்ற கட்சியினு
டைய எதிர்க் கட்சித் தலைவராக இருக்கின்ற மூப்பனார் அவர்
கள் சட்டமன்றத்திலே ஒரு கட்சியினுடைய தலைவர், எனவே
தோழமை கட்சியினுடைய தலைவர் என்கிற முறையில், அவரை
துணைத் தலைவர் என்கிற முறையிலே அவருடைய
அறைக்குச் சென்று ''இன்றைக்கு நாங்கள் எல்லாம் வெளி
நடப்புச் செய்வதாக இருக்கிறோம். நீங்களும் எங்களோடு



ஒத்துழைப்புத் தர வேண்டும்'' என்கிற முறையிலே அவரிடத்
திலே நான் கேட்டேன். அப்படிச் சொல்லிவிட்டு மேலும்
கேட்டேன்''. இன்றைக்கு ஏதாவது அசம்பாவிதம் நடந்தால்
நீங்களும் உள்ளேயிருந்து ஏதாவது உதவி செய்வீர்களா''
என்பதைப் போல மறைமுகமாகக் கேட்டேன், நேரிடையாகச்
சொல்லாமல், அவர் சொன்னார், ''நான் புறப்படுவதற்கு முன்
னாலேயே பாரதப் பிரதமரிடத்தில்—அப்போது ராஜீவ் காந்தி
பிரதமர்—8½ மணிக்கு பேசிவிட்டுத் தான் வந்தேன். அதற்கு
முன்னாலே அந்தச் சம்பவங்களையொட்டி காவல் துறைக்கு
ஒரு கண்டன அறிக்கையைப் படித்து விட்டு எங்களுடைய
காங்கிரஸ் கட்சி வெளிநடப்புச் செய்யப் போகிறது. இது
தான் எங்களுக்கு டெல்லியிலிருந்து கொடுக்கப்பட்டிருக்கிற
உத்திரவு'' என்று.

11-35 மணி.

செல்வி ஜெயலலிதா உட்கார்ந்து இருந்தார். நான் வேக
மாக வந்து ''காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. மூப்பனார்
அவர்களிடத்திலே கேட்டேன். அவர்கள் எந்தவிதமான அசம்
பாவிதமும் இங்கே நிகழ்த்துவதற்குத் தயாராக இல்லை. காங்
கிரஸ் வெளிநடப்புச் செய்யப் போகிறார்கள்'' என்று சொன்
னேன். உடனே செல்வி ஜெயலலிதா என்னிடத்திலே சொன்
னார். ''மூப்பனார் எப்போதும் இப்படித்தான். எனக்கு
விரோதமாகத் தான் அவர் சொல்வார். எனக்கு வேறே
மாதிரித் தகவல் வந்திருக்கிறது. ஆனால் அவர் வேறு மாதிரி
சொல்கிறார்'' என்று. ''நீங்கள் போய் ஏன் அவரிடத்தில்
கன்சல்ட் செய்தீர்கள், கேட்டீர்கள்'' என்று சொன்னார். இன்
னொரு குற்றச்சாட்டு .................... (கூச்சல்-குழப்பம்)
(குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : மாண்புமிக்க சபாநாயகர் அவர்
களே, இன்று தங்களுடைய துண்டை பற்றி இழுத்ததைப் பற்றி
நாங்கள் எல்லாம் மிகுந்த வருத்தத்தோடு சொல்கிறபொழுது
கூட, நான் உங்களுடைய உயரிய நோக்கம் சிலவற்றை சொல்
வதைக் கூட நீங்கள் இப்போது என்னுடைய பிரச்சினையை விட்டு
நீங்கள் போக வேண்டுமா என்று சொன்னபொழுது உண்மை
யிலேயே நான் வருந்தி அமர்ந்து விட்டேன். இப்போது
எங்கள் தலைவர் மூப்பனார் பற்றி, மற்றவைபற்றியெல்லாம்
விரிவாகப் பேச வேண்டாமே (குறுக்கீடு) அதனாலே சொன்னேன்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, காங்
கிரஸ் கட்சி, கண்ணியம் உள்ள கட்சி. அதனுடைய தலைவர்
மரியாதைக்குரிய திரு. மூப்பனார் அவர்கள் மிகுந்த மரியாதைக்
கும், கண்ணியத்திற்கும் உரிய உயர்ந்த பண்பாளர். அன்
றைக்கு நடந்த சதித் திட்டத்திலே காங்கிரஸ் பங்கேற்கவில்லை.

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 சனவரி 23

திரு. மூப்பனார் அவர்கள் பங்கேற்கவில்லை என்பதைத் தான் நான் சுட்டிக்காட்டினேனே தவிர காங்கிரஸ் கட்சியைப் பற்றியோ திரு. மூப்பனார் அவர்கள் பற்றியோ எதையும் நான் சொல்லவில்லை. உயர்ந்த மனிதர், பண்புள்ள திரு. மூப்பனார் அவர்கள் இதை மறுத்தார். அதைத் தான் சொன்னேன். (மணியடிக்கப்பெற்றது). முடித்து விடுகிறேன். அன்றைக்கு இங்கு வந்ததற்குப் பின்னாலே இந்தச் சட்டமன்றத்தில் நடந்த அனைத்து நிகழ்ச்சிகள் எல்லாம் உங்களுக்குத் தெரியும். அங்கே அடிக்கப்பட்டது. இங்கேயும் திருப்பி அடிக்கப்பட்டது, நாங்களும் அடிபட்டோம். வன்முறையைத் தொடர்ந்து சட்டமன்றத்திற்குள்ளே அடிதடி ரகளை எல்லாம் நடந்தது. இன்னொன்று போகிறபொழுது செல்வி ஜெயலலிதா அவர்களை அழைத்துக் கொண்டு வண்டியிலே நானும் திரு. கே. கே. எஸ். எஸ். ஆரும் முன்னாலேயும், பின்னாலேயும் அழைத்துக் கொண்டு போகிறோம். போகிறபொழுது சொல்லிக் கொண்டே வருகிறார், இங்கிருந்து வீடு போகிற வரை, '' என் மீது கையை வைத்து விட்டார்கள் அல்லவா, இன்றைக்கு மாலையே ஆட்சியை கலைக்கப் போகிறார்கள், ஆட்சியைக் கலைக்கப் போகிறார்கள்'' என்று சொல்லிக் கொண்டே வந்தார்...............

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நேரடியாகச் செய்திக்கு வாருங்கள். இந்த நிகழ்ச்சியோடு முடித்து விடுங்கள்.

**திரு. பி. எச். பாண்டியன் :** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் முழுமையாக இந்த அவைக்கு அந்த விவகாரங்களைத் தெரிவிக்க வேண்டும். காரணம் தமிழ்நாடு முழுவதும் இது ஒரு பிரச்சனையாகக் கருதப்பட்டு அன்றைக்கு விளம்பரப்படுத்தப்பட்டது. தமிழ்நாடு முழுவதும் உண்மைக்கு மாறான செய்திகள் மக்களுக்கு தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உண்மை நிலை இந்த அவைக்கும் தெரியட்டும், இந்த நாட்டுக்கும் தெரியட்டும். அவர் முழுவதுமாகச் சொல்வதற்கு அனுமதிக்க வேண்டுகிறேன். (கூச்சல்—குழப்பம்). (குறுக்கீடு).

**திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர். சபாநாயகருடைய பதவியினையும், தகுதியினையும் எந்த வகையிலும் களங்கப்படுத்துகின்ற முயற்சிக்கு நாங்கள் துணை இருக்க மாட்டோம் என்பதன் அடிப்படையாகத் தான் நாங்கள் இவ்வளவு நேரம் உட்கார்ந்து, இந்த வருத்தத்திலே சர்வ கட்சித் தலைவர் வருத்தத்திலே நாங்கள் கலந்து கொள்கிறோம். கடந்த மாதம் பாராளுமன்றத்திலே திரு. சுப்பிரமணியம் சுவாமி அவர்கள் சபாநாயகரைப் பார்த்து ஒரு வார்த்தை சொன்னதற்காக காங்கிரஸ் கட்சி எடுத்த நிலையினை நான் இங்கே விளக்கக் கடமைப்பட்டு



1991 சனவரி 23] [திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்]

இருக்கிறேன். சபாநாயகருடைய பதவி என்பது எந்த வகையிலும் களங்கப்படுத்த முடியாத பதவி. ஆகவே இந்தச் சூழ்நிலையிலே சுப்பிரமணியசுவாமி அவர்கள் மன்னிப்பு கேட்கவில்லை என்று சொன்னால், "We will vote against the Government.'' என்றுஎங்களது கட்சி ஒரு ஸ்டேண்ட் எடுத்தது. அந்த நிலையிலேதான் இன்று நாங்கள் உங்கள் பதவியையும் அந்தஸ்தையும் களங்கப்படுத்தக்கூடாது என்று எண்ணுகிறோம்.

ஆனால் அதையே நீங்கள் வைத்துக் கொண்டு வேறு அரசியல் நடத்துவதை நாங்கள் அனுமதிக்க முடியாது. இந்தக் குறிப்பிட்ட சம்பவத்தில் நாங்கள் இந்த அவமரியாதையைக் கண்டிக்கிறோம், அதை நாங்கள் ஆதரிக்கவில்லை. சபாநாயகர் பதவியில் யார் அமர்ந்து இருக்கிறார்கள் என்று நாங்கள் பார்க்கவில்லை. அந்த ஆபீசையும், அதனுடைய சர்வ அலங்காரத்தையும், டிக்னிட்டியையும், கண்ணியத்தையும், இறையாண்மையையும் காப்பாற்ற வேண்டும் என்பதில் எங்களுக்குக் கருத்து வேறுபாடு இல்லை. ஆகவே அளவோடு நிறுத்திக்கொள்ள வேண்டுமே ஒழிய இதை வேறு விதமாக மாற்றி, திரித்து, வளைத்து; குழைத்து, ஒரு அரசியல் பிரச்சினையாக்கி நீங்கள் இதனுடைய கணதனத்தைக் குறைத்து விடாதீர்கள் என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

11-40 மணி.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அ.இ.அ.தி.மு.க.வினரால், திரு. இராதா அவர்களுடைய தலைமையிலே இங்கே இயங்கிக்கொண்டிருக்கின்ற அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக சட்டமன்ற உறுப்பினர்களால் நடத்தப்படுகிற ஒவ்வொரு நிகழ்ச்சியும் திட்டமிட்டே நடத்தப்படுகின்றன என்ற அந்த பின்னணியைத்தான் நண்பர் திரு. திருநாவுக்கரசு இங்கே விளக்கிக் கொண்டிருக்கிறார். இதே சட்டசபையில் காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் கூட திடீரென்று உணர்ச்சி வயப்படுவது உண்டு. நேற்றைய தினம் கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் திடீரென்று உணர்ச்சி வயப்பட்டார்கள்; சபாநாயகர் விரைவில் ஓர் உறுப்பினருடைய பேச்சை முடித்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னதன் காரணமாக இரு தரப்பிலும் ஒரு மோதல் ஏற்படக் கூடியச் சூழ்நிலை ஏற்பட்டது; நான் எழுந்து பேசினேன், பிறகு நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள் எழுந்து பேசினார்கள். பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அதற்கு ஒரு முடிவு கண்டார்கள். பிறகு சுமுகமாக காங்கிரஸ் கட்சியின் சார்பில் பேசப்பட்ட கருத்துக்கள் இந்த அவையிலே கேட்கப்பட்டன. ஒரு பின்னணியோடு முன் கூட்டியே திட்டமிட்டு இன்றைக்குப் போய் இப்படிச் செய்ய

[டாக்டர் மு. கருணாநிதி] [1991 சனவரி 23

வேண்டும் என்று ஒரு அவைக்கு வருவது சரிதானா என்பதைத்
தான் நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். ஒவ்வொரு முறை
யும் இந்த அவைக்கு வரும்போது அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் முதலிலேயே அவர்
களுடைய வீட்டிலோ; எங்கோ கூடி எதைத் திட்டமிடலாம்?
என்னென்ன பேச வேண்டும் இந்த சப்ஜெக்ட்டிலே என்று
திட்டமிடலாம்? அப்படித் தான் அண்ணா காலத்
திலே நாங்கள் 15 பேராக இருந்த போதும் சரி; பிறகு
நாவலர் நெடுஞ்செழியன் அவர்களை எதிர்க்கட்சித் தலைவராகக்
கொண்டு, நான் துணைத் தலைவரவாக இருந்து இந்த அவையில்
பணியாற்றிய அந்தக் காலக் கட்டத்திலும் சரி, எங்களுடைய
அலுவலகங்களிலோ, வீடுகளிலோ நாங்கள் கூடிப் பேசுகிறோம்
என்றால் என்னென்ன பொருளில், என்னென்ன பேச வேண்டும்
என்றுதான் திட்டமிட்டோமே தவிர, எந்தெந்தப் பொருளைக்
கொண்டு யார், யாரைத் தாக்க வேண்டுமென்று இப்படி எல்
லாம் திட்டமிட்டது கிடையாது. ஆனால் அனைத்திந்திய
அண்ணா திரவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப்
பொறுத்த வரையிலே இன்றைக்கு எப்படி கலாட்டா செய்ய
லாம்; யாரைத் தாக்கலாம் என்றே திட்டமிட்டுக் கொண்டு
வருகிறார்கள். இதுதான், பட்ஜெட் படித்தேனே, மார்ச்
25 ஆம் தேதி அன்று முதல் நடைபெற்று வருகிற சம்பவம்
ஆகும்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ்
அவர்களுக்குத் தெரியாதது அல்ல இப்போது திரு. திருநாவுக்கரசு
அவர்கள் பேசும்பொழுது காங்கிரஸ் கட்சியையோ அல்லது
திரு. மூப்பனார் அவர்களையோ குறை கூறிப் பேச
வில்லை. அவர்கள் கண்ணியமானவர்கள் என்ற காரணத்
தால் தான் அந்தக் கருத்துக்களை அன்றைக்கு அவர்கள் ஏற்க
வில்லை என்பதற்காகப் பேசினார். இருந்தாலும் கூட அந்தப்
பழைய கதையை நீளமாகப் பேசுவதை விட்டு விட்டு இப்போது
உள்ள விஷயத்திற்கு நண்பர் திரு. திருநாவுக்கரசு அவர்கள் வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. ரா. சொக்கர் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப்
ஆர்டர். சொல்லப்பட்ட வாசகங்களிலே தலைவர் திரு.
மூப்பனார் அவர்கள் மறுத்து இருக்கிறார்கள் என்று சொல்லுவது
கூட முறையாக இருக்காது. ஏன் என்றால் அவரிடம் கலந்து
ஆலோசிக்கப்பட்டதாகவும் அது மறுக்கப்பட்டதாகவும் பொருள்
கொண்டு விடும். ஆகவே அன்புள்ள மாண்புமிகு உறுப்பினர்
திரு. திருநாவுக்கரசு அவர்கள் சொல்லுவதை சொல்லட்டும்.
ஆனால் காங்கிரஸ் கட்சியை கலந்து ஆலோசிக்கப்பட்டதாக
(குறுக்கீடு) சொன்னதாக உள்ள வாசகங்கள் இருக்க வேண்டுமா
என்று பார்த்துக் கொள்ளுங்கள். விசாரியுங்கள், உண்மையாக



1991 சனவரி 23] [திரு. ரா. சொக்கர்]

இருந்தால் எந்தப் பொறுப்பையும் நாங்கள் ஏற்றுக் கொள்கி
றோம். ஆனால் யாரோ சொன்னார்கள் என்ற வாசகங்கள்
எல்லாம் தயவு செய்து காங்கிரஸ் தொடர்பான வாசகங்கள்
(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை ; அப்படி இருந்
தாலும் நம்முடைய மரியாதைக்குரிய திரு. மூப்பனார் அவர்
களைக் கேட்டுத்தான் அதைச் சொல்ல முடியுமே தவிர, திரு.
சொக்கர் அதற்குப் பொறுப்பு ஏற்க முடியாது. (குறுக்கீடு)
வேண்டாம். அதோடு விட்டு விடலாம். நீங்கள் முடியுங்கள்.
திரு. திருநாவுக்கரசு, ஏன் என்றால் கடைசியில் எதற்காக நாம்
பேசுகிறோமோ அதையெல்லாம் விட்டு எங்கோ போய்விடும்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, அன்பிற்
குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. சொக்கர் அவர்கள் ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதெல்லாம் வேண்டாம்.
அதை விட்டு விட்டு நேராகச் செய்திக்கு வாருங்கள்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, இதோ
முடித்து விடுகிறேன். திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள்
பேசுகிறபோது எந்த உணர்வோடு சொன்னார்களோ அந்த
உணர்வு அவர்களைப் போலவே எங்களுக்கும் உண்டு. அதற்குக்
காரணம் நாங்கள் எல்லாம் அவர்களுக்கு வேண்டியவர்கள் என்ற
முத்திரையோடு நீக்கப்பட்டவர்கள். அது கூட திரு. மூப்ப
னாருக்கு வேண்டியவர்கள் என்று சொல்லிதான்—எங்களை
கட்சியை விட்டு செல்வி ஜெயலலிதா நீக்கியதற்கு அதுவும் ஒரு
காரணம். அதை எல்லாம் நான் காரணமாக சொல்லவில்லை.
ஏன்என்றால் திரு. மூப்பனாருடைய கௌரவம் எப்படி காக்கப்
படவேண்டும் என்று நினைக்கிறார்களோ அதேபோல் அவர் மீது
ஒரு அரசியல் கட்சித் தலைவர் என்ற முறையிலே மிகுந்த
மரியாதைக்குரியவர் என்ற முறையிலே அவரை காட்டிக் கொடுக்
கின்ற விதத்திலே, சிக்கவைக்கின்ற விதத்திலே நான் நிச்சயமாக
பேசமாட்டேன். நான் பேசும்போது என்ன சொன்னேன்
என்றால் ......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வேண்டாம்.

திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை, இல்லை, அவர்கள்
சொன்னதற்காகச் சொல்கிறேன் ; முதலமைச்சர் தாக்கப்படப்
போகிறார் என்கிற செய்தியை நான் திரு. மூப்பனார் அவர்
களிடம் சொன்னதாகச் சொல்லவில்லை. அதில், மறைமுக
மாக " உங்களுடைய நிலை என்ன என்று நீங்கள் சொல்லுங்கள்

[திரு. எஸ். திருநாவுக்கரசு] [1991 சனவரி 22
என்றுதான் கேட்டேன் '' என்று சொன்னேனே தவிர, '' நாங்கள்
அடிக்கப்போகிறோம், நீங்கள் என்ன சொல்கிறீர்கள் '' என்ப
தெல்லாம் அவருக்குத் தெரியாது, அதைப்பற்றியெல்லாம் அவர்
சொல்லவும் இல்லை. '' உங்களுடைய காங்கிரஸ் கட்சியினு
டைய நிலை என்ன '' என்றுதான் கேட்டேன். அதற்கு அவர்
'' வாக் அவுட் '' என்று சொன்னார். தோழமைக் கட்சி என்ற
முறையிலே இரண்டு கட்சிகளும் சேர்ந்து பேசுவதிலே தவறு
இல்லை. அதைத்தான் நான் சொன்னேன். சட்டமன்றத்திலே
அந்தமாதிரி சம்பவங்கள் நடைபெற்றன.

11-45 மணி.

அதற்கடுத்து இன்றைக்கு இந்தச் சம்பவம் நடந்திருக்கிறது.
அதற்குக் காரணம், முதலிலேயே சொன்னமாதிரி இது ஏதோ
உணர்ச்சிவசப்பட்டு உடனடியாக நிகழ்ந்த காரியமல்ல என்பதற்
காகத்தான் நான் சொன்னேன். இதற்குத் திட்டமிட்ட பின்னணி
இருக்கிறது. அந்தக் கட்சிக்குத் தலைவராக இருக்கிற, மாண்பு
மிகு சட்டமன்ற உறுப்பினராக இருக்கிற செல்வி ஜெயலலிதா
அவர்கள்—அவருக்குத் தகுந்த பாதுகாப்பு இருக்கிறது. சட்ட
மன்றத்திற்கு வருவதில்லை, அவர் ஹைதராபாத்திலே தங்கி
யிருக்கிறார். தமிழ் நாட்டுக்கும் வருவதில்லை. எனவே,—
இங்கேயிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை, கட்சிக்காரர்
களைத் தொடர்ந்து வன்முறையிலே ஈடுபடுத்துகிறார். சமீப
காலத்திலே சட்டமன்றத்திற்கு உள்ளேயும் சரி வெளியிலேயும்
சரி, நாங்கள் போகிறபோதும் சரி, அல்லது யார் போனாலும்
சரி திட்டமிட்டு, சட்டமன்றத்திலே மட்டுமல்ல, வெளியிலேயும்
வன்முறை பரப்பப்படுகிறது. அதற்கு அவர் காரணமாக இருந்து
தூண்டி விடுகிறார். இன்றைக்கு இந்த நிகழ்ச்சியிலே சபா
நாயகரைத் தாக்கவேண்டுமென்று திட்டமிட்டு அவர் சொல்லி
விட்டதன் பின்னணிதான் இங்கே நீங்கள் அடிக்கப்பட்டு இருக்கி
றீர்கள், நாங்கள் அவரோடுகூட இருந்த காரணத்தினாலே
இங்கேயிருக்கின்ற எல்லோரையும்விட, தோழமைக் கட்சியாக
இருந்தாலும் சரி, காங்கிரஸ் அல்லது செல்வி ஜெயலலிதா
கட்சியிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களைவிட செல்வி
ஜெயலலிதாவை நானும் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். போன்றவர்
களும் மிக நன்றாக அறிவோம். அது எங்களது கடந்தகால
அனுபவம். எங்களுடைய மனச்சாட்சிக்கு விரோதமாக, கட்சியி
னுடைய தலைமைக்குக் கட்டுப்பட்டு அன்றைக்கு நடந்த நிகழ்ச்சி
களிலே நாங்கள் பேசப்பட்டதற்குக் காரணம், நாங்கள் கட்சி
யிலே இருக்கிறோம், அந்தத் தலைமையின்கீழே இருக்கிறோம்
என்பதால் மிகுந்த மனவேதனையோடு, அன்றைக்குக் கட்சிக் கட்
டுப்பாடு என்ற பெயராலே மனச்சாட்சிக்கு விரோதமான, இதை
யெல்லாம் வெளியிலே சொல்ல முடியாமல் இருந்தோம். அந்த
உணர்வுகளோடு இன்றைக்கு நான் உங்களிடத்திலே அதைப்



1991 சனவரி 23] [திரு. எஸ்.-திருநாவுக்கரசு]
பகிர்ந்து கொள்கிறேன். எனவே, இன்றைக்கு நீங்கள் தாக்கப்
பட்டதற்கு அதுதான் பின்னணி. இதுமிகக் கடுமையாக முடிவு
செய்யப்பட வேண்டிய ஒரு காரியமாகும்.

சபாநாயகர் அவர்களைத் தாக்குவது, அடிப்பது, துண்டைப்
பிடித்து இழுப்பது, கேவலப்படுத்துவது என்பது, இந்த மாமன்
றத்தை தமிழ்நாட்டு மக்களைக் கேவலப்படுத்துவதற்குச் சம
மாகும், எனவே, சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய கடுமையான
நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அனைத்திந்திய அண்ணா
திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே, கண்ணியம், மிக்க
புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே கண்ணியமாக இருந்தவர்
கள் என்ற அடிப்படையிலே, அவரும் அதை நிச்சயமாக விரும்ப
மாட்டார் என்ற அடிப்படையிலே இதை நான் அவருடைய
சார்பிலே, என்னுடைய இயக்கத்தின் சார்பிலே வற்புறுத்தி
அமர்கிறேன்.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, சட்டப் பேரவையில் இன்றைக்கு மட்டும் இது
நடந்ததாக நான் கருதவில்லை. இந்தச் சட்டப் பேரவைக்
கூட்டத் தொடரிலேயிருந்து தொடர்ந்து இந்தச் சட்டப்பேரவை
யினுடைய கண்ணியத்தைக் குறைக்கின்ற வகையில் ஒவ்வொரு
நாளும் நடக்கின்ற நிகழ்ச்சிகளைச் சட்டப்பேரவை உறுப்பினர்
கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். சபாநாயகர் அவர்
கள் எவ்வளவு கண்டிப்போடு இருந்தாலும்கூட சமீப நாட்களில்
நடக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கிறபோது, பொறுமையோடு,
அதுமட்டுமல்லாமல் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள்
தன்னுடைய ஆளுங்கட்சியிலே இருக்கக்கூடிய உறுப்பினர்களைக்
கட்டுப்படுத்தி, கண்ணியத்தோடு இந்தச் சபையை நடத்து
வதற்கு ஒவ்வொரு தடவையும் அவர் எடுத்துக்கொள்கின்ற
முயற்சிகளைப் பார்க்கின்றபோது இன்றைக்கு நாட்டிலே ஏற்
பட்டிருக்கக்கூடிய பதட்டமான சூழ்நிலையைத் தவிர்ப்பதற்கு
எவ்வளவு பொறுப்புணர்வோடு இந்தச் சபையை நடத்திக்
கொணடிருக்கிறார் என்பதனை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்
சார்பாக நாங்கள் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

இன்றைய தினம் நடந்திருக்கக்கூடிய சம்பவம் என்பது.
சபாநாயகர் அவர்கள் இந்தச் சபையிலே சட்டமன்ற உறுப்பினர்
கள் தங்களுடைய ஆட்சேபணையைத் தெரிவித்து சபையைவிட்டு
வெளிநடப்பு செய்வதற்கு ஜனநாயக பூர்வமான உரிமை இருந்த
போதுகூட, இந்தச் சபையின் கண்ணியத்தை, இறையாண்
மையை கெடுக்கின்ற வகையில், தகாத வகையில் கோஷங்களை
எழுப்பிக் கொண்டு அவர்கள் வரிசையாகச் சென்றபோது நானும்
எழுந்து நின்று பார்த்தேன். அவர்கள் வருகிறபோது. அவர்கள்
பண்ணுகின்ற. அந்த கலாட்டாவை கருத்தில் கொண்டு ஒரு
பக்கமாக ஒதுங்கி பேரவைத் தலைவர் அவர்கள். அமர்கின்ற

போதுகூட, இடையிலே கையைவிட்டு அவருடைய துண்டை இழுக்கின்ற காட்சியை நான் பார்க்கின்றபோது மிகவும் மோசமான வன்மையாகக் கண்டிக்கக்கூடிய நிலையை நான் பார்த்தேன். இடையிலே இருந்த காவலாளி, பேரவைத் தலைவர் அவர்களுடைய துண்டை இழுக்கின்றபோது, எடுக்கவில்லையென்றால், அதைக் கையிலே எடுத்துச் சென்று இருப்பார்கள். இது ஒரு மோசமான நிலைமை. இந்த நிலை இந்த அவையிலே இனிமேல் வராமல் இருப்பதற்கு இந்த அவையினுடைய இறையாண்மையைக் காப்பதற்கு பேரவைத் தலைவர் அவர்கள் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்தச் சபையினுடைய கூட்டம் நிறைவேறுவதற்குள்ளே அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து அறிவிக்க வேண்டுமென்று கேட்டு, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக கண்டித்து அமர்கிறேன்.

11-50 மணி

2. அ.இ.அ.தி.மு.க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையில் பேரவைத் தலைவரைத் தாக்கியது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய பெருமக்களே, (குறுக்கீடு) இல்லை, இல்லை, உட்காருங்கள்.

மதிப்பிற்குரிய பெருமக்களே, இன்று நடைபெற்ற நிகழ்ச்சிகளைப் பற்றி நான் வேறு வகையிலே விவரிக்க வேண்டியதில்லை. பொதுவாகவே, சட்டப் பேரவைத் தலைவர் என்ற பொறுப்பை ஏற்றுக்கொண்ட பிறகு, ஒவ்வொரு கட்சிக்கும் இருக்கிற கோட்பாடுகள், அமைப்புகள், அவைகளுடைய இயல்புகள், போக்குகள், பாரம்பரிய மரபுகள் இவற்றையெல்லாம் கணக்கில் வைத்துக்கொண்டுதான் அவர்களை அணுகுகிறோம் என்பது மறுக்க முடியாத உண்மை. எனவே, சட்டப் பேரவை உறுப்பினராக வந்திருக்கின்ற ஒவ்வொருவரும் வெவ்வேறு பின்னணியில் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டாலும், அவைக்கு உள்ளே வந்த பிறகு—நான் நேற்றுகூட காங்கிரஸ் கட்சி நண்பர்களிடத்திலே சொல்லியிருக்கிறேன்—என்னைப் போலவே ஒவ்வொருவரும் சமமான உரிமையும், வாய்ப்பும் உடையவர்கள் என்பதை அடிப்படையில் ஒப்புக் கொள்கிறவன் நான். எனவேதான், நீங்கள் ஒரு கருத்தைச் சொல்ல முற்படுகின்ற போதெல்லாம் அது ஒழுங்குப் பிரச்சினை என்ற பெயராலும் சரி, அல்லது நேரம் அல்லாத நேரத்தில் நான் கொடுக்கின்ற எடுத்துச் சொல்வதற்கான வாய்ப்புக்களாக இருந்தாலும் சரி, வேறு வகையில் வினா வாய்ப்பாக இருந்தாலும், ஒரு தொடர்புடைய பிரச்சினை எழுகிறபொழுது—அந்தத் தொடர்புடைய தொகுதி உறுப்பினர்தான் கவனப்படுத்தப்பட்டால்கூட, நானே வலிந்து கூப்பிட்டு





அவர்களுக்கெல்லாம் வாய்ப்பை வழங்கியிருக்கிறேன். நேற்றுகூட திரு. ரவி அருணன்—அவர்களுக்கு முன்னால் தெரியாது—நானாகத்தான் வலிந்து அவர்களுக்கு வாய்ப்பு வழங்கினேன். அது அம்பாசமுத்திரம் பிரச்சினை என்பதால் இவ்வளவு கண்ணியத்தோடும், பெருந்தன்மையோடும், எந்த வகையான உணர்ச்சி வசத்திற்கும் ஆளாகாமல், இன்னும் சொல்லப்போனால், சில நேரங்களில் கொந்தளிப்பு ஏற்படும்பொழுதுகூட நான் சிரித்துக் கொண்டு உட்கார்ந்து கொண்டு என்னுடைய தீர்ப்பை வழங்குகிறேன், செய்திகளைச் சொல்கிறேன்.

இவ்வளவு பொறுமையோடு, பெருந்தன்மையோடு, இதைக் கட்டிக் காக்க வேண்டும், இந்த அவையினுடைய கண்ணியம், இறையாண்மை ஆகியவைக் கட்டிக் காக்கப்படவேண்டும் என்பதற்காக எடுத்துக் கொள்கிற கடுமையான முயற்சிகளுக்குப் பின்னாலும் இன்று நடந்த நிகழ்ச்சி என்பது திட்டமிட்டுச் செய்யப்பட்ட முயற்சி, முழு முயற்சி என்பதை யாரும் மறந்து விட முடியாது.

நான், நேரடியாக எடுத்துக் காட்டியே சொல்லிவிடுகிறேன். வழக்கமாக, வெளிநடப்புச் செய்வது என்று சொன்னால், சில பேர் மட்டும்தான் இந்த வாயில் வழியாகப் போவார்கள் ; பெரும்பாலோர் அந்த வாயில் வழியாகப் போவார்கள் ; அல்லது பின் இருக்கையிலே இருப்பவர்களாவது குறைந்தது அந்த வாயில் வழியே போவார்கள். ஆனால் இன்றைக்கு அனைவரும் நேரடியாக அங்கிருந்து புறப்பட்டு இங்கே வந்தது, பேரவைத் தலைவருடைய எல்லைக்குள் வர வேண்டுமென்று திட்டமிட்டே எடுத்துக் கொள்ளப்பட்ட முயற்சி என்பதை நீங்கள் யாரும் மறந்து விடக் கூடாது. எனவே, பேரவைத் தலைவர் தாக்கப்பட வேண்டுமென்பதில் அவர்கள் ஏற்கெனவே திட்டமிட்டு, இங்கே வந்து விட்டதனாலேயே இந்த நிகழ்ச்சி நடந்திருக்கிறது.

இதில் ஒன்றும் உள்நோக்கம் இல்லை என்றோ, அவர்கள் திட்டமிடவில்லை என்றோ யாரும் சொல்ல முடியாது என்பதற்காகத்தான் நான் இந்த எடுத்துக்காட்டைச் சொன்னேன். இது ஒன்று.

அதற்குப் பிறகும் இவர்களுடைய நோக்கம் ஓரளவுக்குத் தெரிந்து இருக்கிறது. சூழ்நிலையைத் தெரிந்து கொண்டேன் என்பதனால், நான் இயல்பாகவே நேர் இருக்கையில் இருக்காமல் சற்று சாய்ந்துதான் உட்கார்ந்தேன், அவர்கள் போகட்டும், வெளியேற்றப்படட்டும் என்ற அளவில்.

ஆனாலும், எதிர்க்கட்சி—அந்தக் கட்சியினுடைய—அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய எதிர்க்கட்சித் தலைவராக

இருக்கிற திரு. இராதா முன் முயற்சி எடுக்க, திரு. பெரிய சாமி அதைத் தொடர, நான் தாக்கப்பட்டேன் என்பதை நான் உங்களுக்கு உரித்தாக்குகின்றேன்.

காரணம், கையில் பட்ட அடிதான் துண்டு இழுக்கப்பட்டது நீங்கள் வந்து நேரடியாகப் பார்க்கிறபொழுது என்னுடைய கை எப்படி மாட்டிக் கொண்டது என்பதைப் பார்த்திருக்கிற வாய்ப்பு கிடையாது. எனவே, கையும், துண்டும் சேர்ந்து மாட்டிக் கொண்ட பொழுது, நான் கையை உதறியபிறகு துண்டு இழுக்கப் பட்டது. எனவே, கையையும் சேர்த்து இழுத்த பிறகு, துண்டை யும் சேர்த்து இழுத்து விடுவது என்று சொன்னால், இப்படி ஒரு சூழ்நிலை பேரவைத் தலைவருக்கு வரும் என்ற சூழ்நிலை வரு மானால் இது எப்படி இந்த அவையில் ஒப்புக் கொள்ளப்பட முடியும் என்பதை நான் உங்களுக்கு உணர்த்த வேண்டும். நீங்கள் அந்த உணர்வைப் பங்கிட்டுக் கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன்.

எனவே, இந்த வகையில் திட்டமிட்டே செய்யப்பட்ட முயற்சி, வழக்கமாக வெளிநடப்புச் செய்வது என்றால் சிலர் இந்தப் பக்கமும், சிலர் அந்தப் பக்கமும் போயிருந்தால் அது திட்டமிட்டது அல்ல, எதிர்பாராமல் என்ற உணர்ச்சிக் கூறாக எடுக்கப்பட்ட ஒரு முயற்சி என்று கொள்ளலாம். உணர்ச்சி வயப்பட்டு ஏற்படுகிற நிகழ்ச்சி என்பது வேறு; ஆனால் திட்ட மிட்டுச் செய்யப்படுகிற முயற்சி என்பது வேறு என்பதை நீங்கள் வேறு பிரித்துப் பார்த்து இருப்பீர்கள்.

ஒன்று, நான் தாக்கப்பட்டிருக்கிறேன், கை தாக்கப்பட்டு இருக்கிறது. அதனோடு சேர்ந்துதான் துண்டும் இழுக்கப்பட் டிருக்கிறது. எனவே, நான் வலிந்து அந்தத் துண்டை இழுத்துக் கொண்டதனாலும், கையை இழுத்துக் கொண்டதனாலும் அதற்குமேல் வேறு வகையான தாக்குதலுக்கு ஆளாகாமலும் நான் தப்பித்துக் கொண்டிருக்கிறேன் என்றுதான் இதைச் சொல்ல வேண்டும்.

இந்த நிலையில், நான் இதற்கு மேலும் விரிவாக உரையாற்ற விரும்பவில்லை. ஏனென்று கேட்டால் நானே உணர்ச்சிவசப் படுபவன். நான் இந்தச் சூழ்நிலையில் அதிகமாக உணர்ச்சி வயப்படக்கூடாது என்பதற்காகச் சொல்ல விரும்புகிறேன்.

ஒரு அவையினுடைய கண்ணியத்தைக் காப்பதற்கு, வாய்ப்பு கொடுப்பதற்கு, உறுப்பினருடைய எல்லா வகையான நலன்களையும் இந்த அவைக்கு உள்ளும், அவைக்கு வெளியிலும் பாதுகாப்புக் கொடுத்துக் காப்பாற்ற வேண்டியவர் சட்டப்



பேரவைத் தலைவர்தான். சட்டப் பேரவைத் தலைவரே தாக்கப்
படுகிற ஒரு நிலைமை வருமானால், ஏற்கனவே அந்த நிகழ்ச்சி
கள் எப்படியிருந்தாலும் இன்றைக்கு — இந்த இரண்டாண்டுக்
காலத்தில் பேரவைத் தலைவரவர்கள் தாக்கப்படுவது என்பது
இன்றைக்குத்தான் முதல் நாள். எனவே, இந்த நிகழ்ச்சிகள்
மேலும் தொடராமல் இருக்கவும், இதுபோன்ற நிலையில் உறுப்
பினர் பெருமக்கள் எல்லாம் தங்களுடைய ஆழ்ந்த வருத்தங்களை
எடுத்துச் சொன்னதற்காக நான் என் சார்பில் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். உங்களுடைய உணர்வில் நானும் பங்கு கொள்
கிறேன். உங்களுடைய வருத்தத்தைப் புரிந்து கொள்கிறேன்.
நீங்கள் அனைவரும் இதில் கருத்து வேறுபாடு உடையவர்களே
அல்ல. முற்றிலும் இதற்காகப் பேசுபவர்கள் என்பதை உணர்ந்து
கொண்டு, நான் இதற்கு மேல் விரிவுபடுத்த வேண்டுமென்று
அல்லாமல், வருங்காலத்திலாவது உறுப்பினர்கள் ஒருவருக்கு
ஒருவர் உணர்ச்சி வசப்பட்டுச் சொற்களைப் பரிமாறுகிறபொழுது
கூட எல்லை மீறாமல் இருக்க வேண்டுமென்று தடுக்கின்ற
எனக்கே இப்படியொரு நிலைமை வருமானால், வருங்காலத்தில்
இப்படிப்பட்ட ஒரு நிலைமை வருமானால், இந்த நாட்டில்
வன்முறைகள் சட்டவிழ்த்து விடப்படுவதற்கு திட்டமிட்டே
செயல்படுகின்றன என்பதை உறுதிப்படுத்துவதற்கு இந்த
நிகழ்ச்சி ஒரு சான்றாக அமையும் என்பதை நான் சொல்லி,
இந்த அவையில் இந்தச் செயலில் ஈடுபட்ட திரு. இராதா,
திரு. வெ. பெரியசாமி என்பவர்களை முன்னதாகக் கொண்டு,
மற்றவர்கள் பின்னாலிருந்தார்கள் என்ற அளவோடு, இவர்கள்
அனைவரையும் நான் கடுமையாக நடத்தி விடுவேன், நம்முடைய
திரு. அப்துல் லத்தீப் அவர்கள் இது 'கொலை முயற்சி' என்று
சொன்னார்—நான் அந்தத் தொடரை நேரடியாக எடுத்துச்
சொல்லாவிட்டாலும், பாதிக்கப்பட்டவனும் நானே, தீர்ப்பு
அளிப்பவனும் நானே என்ற முறையில், அதை நான் வேதனை
யோடு பகிர்ந்து கொண்டு—என்றாலும், இந்தக் கூட்டத்
தொடர் முடியும்வரை, வரவு-செலவுக் கூட்டத் தொடர்
உட்பட, திரு. இராதா, அனைத்திந்திய அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும், இந்தக் கூட்டத்
தொடரிலிருந்து நீக்கி வைக்கப்படுகிறார்கள் என்று தெரிவித்து,
இந்தப் பிரச்சினையை இந்த அளவோடு முடித்து விடுகிறேன்.

[1991 சனவரி 23

11-55 மணி

4. விதி 111-ன்கீழ் அமைச்சரின் அறிக்கை.

வேளாண்மைத் துறை அமைச்சர் 21–4–1990 ஆம் நாளன்று ஆற்றிய உரையில் திருத்தம்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 111-ன்கீழ் கீழக்கண்ட அறிக்கையைப் படிக்கிறேன் :

''21–4–1990 ஆம் நாள் அன்று நடைபெற்ற வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் மீது, நான் உரையாற்றிய அறிக்கையில், தமிழ்நாடு அரசு பொறுப்புறுதி அளித்து, இந்தியன் வங்கியிடம் ரூ. 5 கோடி கடன் பெற்று, இவ்வாண்டு 100 டிராக் டர்களும், 10 புல்டோசர்களும், தமிழ்நாடு வேளாண் தொழில் கள் கழகத்தின் மூலமாக, வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமென்று அறிவித்ததற்கு மாறாக, சம்பந்தப்பட்ட எல்லா விவரங்களையும் கருத்தில் கொண்டு, 1990-91 ஆம் ஆண்டிற்குத் தமிழ்நாடு அரசு பொறுப்புறுதி அளித்து, இந்தியன் வங்கியிடம் ரூ. 5 கோடி கடன் பெற்று, 30 புல்டோசர்கள் தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகத்தின் மூலமாக வேளாண்மைப் பொறியியல் துறைக்கு வழங்கலாம் என்று அரசு முடிவு எடுத்துள்ளது என்று அந்தத் திருத்தத்தை நான் இங்கே அறிவிக்கிறேன்.''

5. கவன ஈர்ப்பு.

(அ) திருப்பூர் பகுதியிலுள்ள பனியன் தொழிற்சாலைகளிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''திருப்பூர் பகுதியில் பனியன் தொழிற்சாலையி லிருந்து வெளியேறும் கழிவு நீரால் ஏற்படும் பாதிப்பு குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

திருப்பூர் நகர வளர்ச்சித் திட்டப் பகுதியில் 162 சலவைப் பட்டறைகளும் (Bleaching Industries) 150 சாயப் பட்டறைகளும் (Dying Industries) நிறுவப்பட்டுள்ளன.



1991 சனவரி 23] [டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

சாயம் காய்ச்சுவதற்கு சலவை
நூல் இழைகள் வெளுத்து, சோடா ஆஷ் மற்றும்
ரசாயனப் பொருட்கள் காஸ்டிக் சோடா, சாயத் தொழிற்
அமிலங்கள் அதிகமாகத் தேவைப்படுகிறது. பட்டறை மாறு
சாலைகள் வெளியிடும் கழிவுகள் பட்டறைக்குப் தரத்தையும்
பட்டு, நூல் இழையின் அளவையும் அதன் வெளியேறும்
பொறுத்தே அமையும். சாயப் பட்டறைகளிலிருந்து இருக்கும்.
கழிவு நீர் பொதுவாக ஆல்கலைன் தன்மையுடையதாக

மற்றும் சாயப் பட்டறைகளில்
மொத்தமுள்ள 312 சலவை கழிவு நீர் சுத்திகரிப்பு
4 சாயப் பட்டறைகளில் முழுமையான தொழிற்சாலைகளில் ஆரம்ப
நிலையம் அமைந்துள்ளன. 17 24 சாயப் பட்டறை
சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன. மற்றும் கட்டுப்பாடு)
கள் மீது நீர் மற்றும் காற்று (மாசு தடுப்பு தொடரப்பட்டுள்ளன. மேற்படி
சட்டப்படி குற்ற வழக்குகள் காற்று மாசுபடுதல்
பகுதிகளில் நிலவி வரும் நிலம், தண்ணீர், மாசு கட்டுப்பாடு
பிரச்சினையின் காரணத்தால் தமிழ்நாடு பட்டறை சங்கங்
வாரிய அலுவலர்கள், சலவை மற்றும் சாயப் வளர்ச்சித் துறை
களின் உறுப்பினர்கள், நகர மற்றும் புறநகர் மற்றும் வருவாய்த்
யின் பிரதிநிதிகள், உள்ளாட்சி நிறுவனங்கள் மாசு கட்டுப்பாடு
துறை அடங்கிய பணிக்குழு ஒன்று தமிழ்நாடு பணிக்குழு திருப்பூர்
வாரியத்தால் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பட்டறைகளின் தற்
பகுதிகளில் உள்ள சலவை மற்றும் சாயப் அவைகளில் எவையெவை
போதைய நிலை பற்றி கண்டறிந்து நிலையத்தின் கீழ் கொண்டு
பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு எவையெவை தனித் தனி சுத்தி
வரப்பட வேண்டும் என்றும், வேண்டும் என்பது
கரிப்பு நிலையத்தின் கீழ் கொண்டுவரப்பட மற்றும் சாயப்
பற்றியும், பரிந்துரை செய்துள்ளன. சலவை நீர் சுத்திகரிப்பு
பட்டறை சங்கங்களுக்கு பொதுவான கழிவு அந்நிறுவனங்கள்
நிலையம் அமைப்பது பற்றி விளக்கப்பட்டு, சுத்திகரிப்பு நிலையம்
வெளியேற்றும் கழிவு நீரை சுத்திகரிக்க ஆலோசகர், வைத்துக்
அமைக்க முன் மொழிவு தயார் செய்ய சுத்திகரிப்பு நிலையம் நிறுவ
கொள்வது குறித்தும், பொதுவான வங்கிகளின் மூலம் கடன்
மத்திய, மாநில அரசுகளின் மானியம், கடைப்பிடிப்பது பற்றி
கள், நிறுவனங்களின் பங்குத் தொகை, கட்டுப்பாடு வாரியம்
யும் விளக்கப்பட்டது. தமிழ்நாடு மாசுக் நிலையம் அமைப்பதற்கு
பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு முன்மொழிவுக்கும்,
நிலம் ஆர்ஜிதம் செய்யவும், தொழில்நுட்ப உதவிடும்.
சம்பந்தப்பட்ட துறைகளின் மூலம் பெற்றிட

சலவை மற்றும் சாயப் பட்டறை
திருப்பூர் பகுதிகளில் உள்ள சுத்திகரிப்பு மூலம் சுத்தம்
களில் வெளியேற்றப்படும் கழிவு நீரை நிலையம் அமைத்திட
செய்ய பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு அரசுகளின் மானியத்
வாரியத்திடமிருந்து மத்திய மாநில பெறப்பட்டு, அது அரசின்
தொகையைக் கோரி, முன் மொழிவு

பரிசீலனையில் உள்ளது. இம்மாதிரி பொதுவான கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் செயல்பட தொடங்கியவுடன் திருப்பூர் பகுதிகளில் நிலங்கள் மற்றும் நிலத்தடி நீர் மாசுபடுத்தலைத் தடுத்திடலாம். இது குறித்து நிறுவனங்களின் நடவடிக்கைகளையும், நிலம் மற்றும் நீர் மாசுபடுத்தலைக் கட்டுப்படுத்தவும் வாரியம் கண்காணித்து வருகிறது.

*திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியில் பல ஆண்டுகளாக பல்வேறு பனியன் தொழிற்சாலைகள் இயங்கிக் கொண்டு வருகின்றன. ஆனால், இங்கு வைக்கப்பட்டிருக்கிற குறிப்பினை பார்க்கிற நேரத்தில் இதுவரையில் 4 சுத்திகரிப்பு நிலையங்கள்தான் முழுமையாக — அதாவது 4 ஆலைகளில் மட்டும்தான் சுத்திகரிப்பு நிலையத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். மேலும், 17 ஆலைகளில் ஆரம்ப நிலையிலும், மற்ற ஆலைகளில் ஏற்படுத்தவில்லை. அதற்காக ஒரு திட்டத்தை தயார் செய்து மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மூலமாக அரசின் பார்வைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது என்று அதில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனாலும், நான் அறிய விரும்புவது எல்லாம், ஏன் இதுவரையில் காலதாமதம் ஆகியிருக்கிறது ? அவ்வாறு தவறுகள் செய்கின்ற ஆலையின் மீது இதுவரையில் என்னென்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. 'ரன்னிங் லைசன்ஸ்' கூட இல்லாமல் பல ஆலைகள் நடைபெறுவதாக எங்களுக்குத் தகவல்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை உண்மையா ? அப்படி என்றால், அவை மீது நடவடிக்கை எடுப்பதற்கு அரசு என்ன செய்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

அதே நேரத்தில் அவர்கள் இந்த சுத்திகரிப்பு நிலையங்களைக் கட்டுவதற்காக மாநில அரசிடமும், மத்திய அரசிடமும் கடன் மானிய கோரிக்கைகளை இப்போது வைத்துள்ளனர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. எவ்வளவு தொகையைக் கேட்டிருக்கிறார்கள் ? எவ்வளவு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது ? அதோடு மட்டுமல்லாமல் இந்த சுத்திகரிப்பு ஆலைகளைப் பொறுத்த வரையில் எப்போது முதல் இயங்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதையும் நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

12-00 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதுபோல் 312 சாயப் பட்டறைகளில் 4 சாயப் பட்டறைகளில் முழுமையான கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைந்துள்ளன. இந்தச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கான செலவு அதிகமாக ஆகிறபடியால் மாசுக் கட்டுப்பாடு வாரியம், தமிழக அரசு, மத்திய அரசு ஆகியவை



எல்லாம் இணைந்து ஆங்காங்கே இருக்கின்ற முதலாளிகளும்
இணைந்து பொது சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குகிற
திட்டத்தை நடை முறைப்படுத்தி வருகிறோம். அந்த நோக்கத்
தோடு திருப்பூரில் 4 புதிய பொது சுத்திகரிப்பு நிலையங்களை
உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில், அப்படி உருவாக்கு
வதற்கு முதலாளிகள் முன்வருவார்களேயானால் அதற்கு மத்திய
அரசு 25 சதவீதம் மானியமும், மாநில அரசு 25 சதவீதம் மானி
யமும், தொழிற்சாலை நடத்துபவர்கள் 10 சதவீதம் முன்பணமும்
அவர்களுக்குக் கடன் வசதியாக 40 சதவீதம் கொடுக்க ஏற்பாடு
செய்தும் ஆக இந்த மொத்தத் தொகையில் பொது சுத்திகரிப்பு
நிலையங்களை ஏற்படுத்துவதற்கு வழிவகைகள் உள்ளன. அங்கே
நான்கு பொது சுத்திகரிப்பு நிலையங்களை உருவாக்குவதற்கு
ஒவ்வொன்றுக்கும் ரூபாய் 1½ கோடி முதல் 2 கோடி ரூபாய்
வரையில் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டு நான்குக்கும் சுமார்
8 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டு மத்திய அரசின் அனுமதிக்
காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் கொடுக்கவேண்டிய
அந்த மானியத் தொகையும், அதற்கான அனுமதியும் வந்ததற்குப்
பிறகு இந்தப் பணிகள் தொடங்கப்படும். ஆகவே இந்த அரசு
உரிய நடவடிக்கை எடுத்திருக்கிறது. மத்திய அரசிடமிருந்து
வரவேண்டிய மானியத் தொகைக்கு அனுமதி கோரி கடிதம்
எழுதப்பட்டிருக்கிறது. அனுமதி பெறப்பட்டவுடன் இந்தப் பணி
கள் உடனடியாகத் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு
உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. உகம்சந்த்
அவர்கள் அனுமதியுடன் திருப்பூர் கோவிந்தசாமி அவர்களை
இக்கவன ஈர்ப்பில் விளக்கம் கேட்க அனுமதிக்கிறேன்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, திருப்பூர் பகுதியிலேயும், அதன் சுற்றுப்
பகுதியிலேயும் இந்தச் சாயப் பட்டறைகளிலிருந்து வெளியேறுகிற
கழிவு நீரால் ஏற்படுகிற பாதிப்புகளை உணர்ந்து சுமார் 8 கோடி
ரூபாய் செலவில் பொதுவான சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க
அரசு எடுத்திருக்கிற முயற்சிகளை பாராட்டுவதோடு இப்போது
திருப்பூர் பகுதியில் ஏற்பட்டிருக்கிற ஒரு நிலைமையை நான்
அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வந்து அதற்கான பதிலை
எதிர்ப்பார்க்கிறேன். திருப்பூர் மற்றும் அதைச் சுற்றி இருக்கின்ற
பகுதிகளில் ஏற்கனவே நிலத்தடி நீர் முழுமையாக பாதிக்கப்
பட்டிருக்கிற நிலையில் நீங்கள் எடுத்திருக்கிற நடவடிக்கை
மிகுந்த பேருதவியாகும். ஆனால் தற்போது திருப்பூர் நகரத்தை
விட 20 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள பெருமாநல்லூர் என்று
சொல்கிற பகுதியில் முழுக்க முழுக்க விவசாயத்தை மட்டும் நம்பி
இருக்கக் கூடிய அந்தப் பகுதியில் தேசிய நெடுஞ்சாலக்கு அருகே
ஒரு தொழிற்சாலை அமைக்கப்பட்டு ......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சுருக்கமாகக் கேளுங்கள்.

திரு. சி. கோவிந்தசாமி : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தொழிற்சாலையில் இருந்து வெளியேறுகிற கழிவுநீரால் நிலத்தடி நீரை மட்டுமே நம்பி இருக்கும் விவசாயிகளும் குடிநீர் பாதிக்கப்படுவதால் பொதுமக்களும் கடுமையான பாதிப்புக்கு ஆளாவதால் இன்றைக்கு அந்தப் பகுதியில் இருக்கிற அனைத்துக் கட்சியைச் சேர்ந்த விவசாயிகளும் சுமார் 4 ஆயிரம், 5 ஆயிரம் பேர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறார்கள். அந்தக் குறிப்பிட்ட ஒரு ஆலையை அந்தப் பகுதியிலே இருந்து திருப்பூர் பகுதிக்கு மாறுதல் செய்ய வேண்டும். ரன்னிங் லைசன்ஸ் அவர்கள் வாங்கவில்லை. கட்டட லைசன்ஸ் வாங்கவில்லை. 11 பஞ்சாயத்துக்கள் அதற்கு எதிராகத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றன. ஆகவே அந்த ஆலையை இடமாற்றம் செய்து அந்தப் பகுதி விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் பாதுகாப்பு அளிக்க அரசு முன்வருமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் மூலம் நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தனித் தொழிற்சாலை பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிடுகிற கருத்துக்கள் படி மாசுக்கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதி பெறாமல் நடைபெறுமேயானால் அதற்கான அனுமதி பெற்றுத்தான் நடத்தவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தப்படுவார்கள். மீறினால் அதற்கான நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக் கிறது. ஆனால் உறுப்பினர்கள் இதுபற்றிய விவரங்களை இன்னும் சரியாகக் கொடுத்தால் உரிய நடவடிக்கையை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள மலைவாழ் மக்களுக்குக் காலனி வீடுகள் கட்டாதது குறித்து.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, '' தஞ்சை மாவட்டம் வைத்தீஸ்வரன் கோவிலில் உள்ள 100 மலைவாழ் மக்களுக்குக் காலனி வீடுகள் கிடைக்காதது குறித்த '' அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக் கிறேன் :



அறிக்கை

தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி தாலுக்காவில் உள்ள வைத்தீஸ் வரன் கோயில் நகரம் எடகுடி வடபாதி பாகம் 1 (65/1) மற்றும் எடகுடி வடபாதி பாகம் 2 (65/2) என இரு வருவாய் கிராமங் களாக பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு 33 மலைக்குறவர் மற்றும் காட்டுநாயக்கன் வகுப்பைச் சேர்ந்த பழங்குடியினர் குடும் பங்கள் வசித்து வருகின்றனர்.

2. எடகுடி வடபாதி பாகம் 1 கிராமத்தில் நான்கு குடும் பங்கள் நத்தம் புறம்போக்கு புல எண். 138/2பி-ல் வசித்து வரு கின்றனர். இந்த நான்கு குடும்பங்களுக்கும் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டு கிராம கணக்குகளில் தனியாக உட்பிரிவு செய்யப் பட்டது. திரு. நாராயணன் என்பவரின் மகன் மாரிமுத்து என்பவர் வசிக்கும் பட்டா புல எண். 138/2பி1 அருள்மிகு வைத்தி யநாத சுவாமியின் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டுள்ளது இவருக்கு மட்டும் வீட்டுமனைப் பட்டா இன்னும் வழங்கப்பட வில்லை.

3. எடகுடி வடபாதி பாகம் 2 கிராமத்தில் நத்தம் புறம் போக்கிலும், கோயில் நிலத்திலும் 28 குடும்பங்கள் வசித்து வரு கின்றனர். புல எண். 127/1ஏ-ல் உள்ள 2.50.0 ஹெக்டேர் பரப்பளவுள்ள கோயில் நிலத்தில் மலைக்குறவன் வகுப்பைச் சேர்ந்த 3 குடும்பங்களும், காட்டுநாயக்கன் வகுப்பைச் சேர்ந்த 4 குடும்பங்களும் ஆக மொத்தம் 7 குடும்பங்கள் இங்கு வசித்து வருகின்றனர்.

4. மீதமுள்ள 21 குடும்பத்தில் புல எண். 128-ல், 3.76.5 ஹெக்டேர் பரப்பளவுள்ள நத்தம் புறம்போக்கில் மலைக்குறவன் வகுப்பைச் சேர்ந்த 19 குடும்பங்களும், காட்டுநாயக்கன் வகுப்பைச் சேர்ந்த 2 குடும்பங்களும் வசித்து வருகின்றனர். மேற்கண்ட 21 குடும்பங்களில் 7 குடும்பங்களுக்கு 1979-ம் ஆண்டு சீர்காழி வட்டாட்சியரால் வீட்டுமனைப் பட்டா வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 14 குடும்பங்களுக்கு வீட்டுமனை பட்டா வழங்கப்பட வேண்டும். மேலும் இந்த குடும்பங்கள் இந்தப் பகுதியில் சுமார் 35 வருடங்களாக வசித்து வருகின்றனர் என்று விசாரணையில் தெரிய வருகிறது.

5. மேற்படி கோயில் நிலத்தில் வசித்து வரும் பத்தி 2-ல் கூறப்பட்டுள்ள ஒரு குடும்பத்திற்கும் மற்றும் பத்தி 3-ல் கூறப் பட்டுள்ள 7 குடும்பங்களுக்கும் குடியிருப்பு சட்டத்தின்கீழ் பட்டா வழங்க தேவையான நடவடிக்கை வட்டாட்சியரால் எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் பத்தி 4-ல் கூறப்பட்டுள்ள நத்தம் புறம்போக்கில் வசிக்கும் 14 குடும்பங்களுக்கும் பட்டா வழங்க சீர்காழி வட்டாட்சியரால் மாவட்ட ஆட்சியரால் அறிவுரை

வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு தொகுப்பு வீடுகள் கொடுப்பதைப் பற்றி வீட்டுமனைப் பட்டா கொடுத்தபின், ஆராய்ந்து முடிவு எடுக்கப்படும்.

திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைப் பார்த்தேன், அதிலே 35 ஆண்டுகாலமாக சீர்காழி தாலூக்காவிலுள்ள வைத்தீஸ்வரன் கோயில் நகரத்தில் இடப்படி வடபாதி கிராமத்தில் காட்டு நாயக்கன் வகுப்பைச் சேர்ந்தவர்கள் மலைக்குறவர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களில் பலருக்கும் குடியிருப்பதற்கு பட்டா கிடைத்திருக்கின்றன. சிலருக்கு இன்னும் பட்டா கிடைக்கவில்லை. ஆனால் பட்டா கிடைத்தவருக்கு அங்கே காலனிகள் கட்டுவதற்கு அரசு முயற்சி எடுக்க வேண்டும். அதே நேரத்தில் பட்டா கிடைக்காதவர்கள் சிலர் நத்தம் புறம்போக்கில் குடியிருக்கிறார்கள். சிலர் கோயில் நிலங்களில் குடியிருக்கிறார்கள். கோயில் நிலங்களில் குடி இருக்கிற அந்த மலைவாழ் மக்களை விரைவிலே ..........

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிங்காரம் அவர்கள் கேள்வியாக கேட்கவேண்டும்.

12-05 மணி.

திரு. இரா. சிங்காரம் : அதுதான் கேட்கிறேன். விரைவிலே பட்டா வழங்க வேண்டும். அதே நேரத்தில் பட்டா வழங்கப் பட்ட அனைவருக்கும் விரைவில் காலனிகள் கட்டிக்கொடுப்பதற்கும் விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். பட்டா கிடைக்காதவர்களுக்கு விரைந்து நடவடிக்கை எடுத்து பட்டா கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்குமா ? அதற்கு கால எல்லை எதுவும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நூறு குடும்பங்கள் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையாக 33 குடும்பங்கள் மட்டுமே உள்ளன. அந்த 33 குடும்பங்களில் 11 குடும்பங்களுக்கு பட்டா கொடுக்கப்பட்டிருக்கிறது. மீதம் 22 பேர்களுக்குப் பட்டா கொடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள். ஆக மீதமுள்ள 22 பேர்களுக்குப் பட்டா கொடுத்தபின் வீடு கட்டிக்கொடுக்க பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.





திரு. இரா. சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சுமார் நூறு குடும்பங்கள் என்று தான் சொல்லியிருந்தேன். நான் அங்கே சென்றபோது 100 குடும்பங்கள் இருக்கும். ஆனால் வந்தது சுமார் 33 குடும்பங்கள் என்று இங்கே விவரம் தரப்பட்டிருக்கிறது. அதையும் நன்கு பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் அங்கே கோயில் நிலங்களில் குடியிருக்கின்றவர்களை பட்டியலில் சேர்க்கவில்லை என்று கருதுகிறேன். அரசாங்கம் அதைப் பரிசீலித்து விரைந்து நடவடிக்கை எடுத்து பட்டா வழங்குவதிலேயும், காலனி கட்டிக்கொடுப்பதிலும் அவசர நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த மலைவாழ் மக்களுக்காக எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயில் நிலத்தில் உள்ளவர்களுக்கு குடியிருப்பு சட்டத்தின்கீழ் பட்டா வழங்க மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

## 2 தகவல் கோரல்—தொடர்ச்சி

3. அ. இ. அ.தி. மு. க. கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் அவையில் பேரவைத் தலைவரைத் தாக்கியது குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

திரு. கே. ரமணி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த அவையிலே கோரமான, வேதனைமிக்க நிகழ்ச்சிகளை நடத்திவிட்டு வெளியேறியவர்கள் வெளியிலே சென்று தாங்கள்தான் அடிக்கப்பட்டோம் என்றும், சட்டையெல்லாம் கிழிக்கப்பட்டன என்றும், சட்டையை எல்லாம் திறந்து காட்டி, தங்கள்மீது தாக்குதல் நடந்ததனாலேதான் அந்தச் சந்தர்ப்பத்திலேதான் தலைவர் அவர்களுடைய மேல் துண்டு கீழே இழுக்கப்பட்டது என்றும் பிரச்சாரத்தை நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.. அப்போது என்ன வரும்? இங்கே நடந்திருக்கக்கூடிய அத்தனை உண்மைகளையும் அவையிலே நாம் பார்த்தோம். நேரிடையாக கண்ணாலே பார்த்த அத்தனை பேர்களும் இங்கே இருக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அனுபவித்து வந்தார்கள். அதற்குள் வரவில்லை. மிகவும் உண்மைக்கு மாறான, பரிபூரணமான உண்மைக்கு மாறான ஒரு தகவலை சொல்லி தாங்களே தாக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லிக் கொண்டிருக்கக் கூடிய இந்த நிலைமை இருக்கிறது. நிச்சயமாக இந்தப் பிரச்சாரத்தை தடுக்கவில்லை என்று சொன்னால், இந்த

அவையினுடைய கண்ணியத்தை என்றுமே நாம் காப்பாற்ற முடியாது. அப்படிப்பட்ட நேர் மாறான ஒரு விஷயத்தைப் பிரச்சாரத்தில் விட்டுக்கொண்டு இருக்கிறார்கள். இதற்குத் தகுந்த நடவடிக்கை இந்த அவையின் மூலம் எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மதிப்பிற்குரிய திரு. ரமணி அவர்கள் கூறிய கருத்தின்படி நான் ஏற்கனவே இங்கே தீர்ப்பு அளிக்கிறபோதே, தீர்ப்பில் கூட நான் பெருந்தன்மை காட்டி இந்தக் கூட்டத் தொடர் வரைக்கும் வரக் கூடாது என்று அறிவித்திருக்கிறேன். முறைப்படி பார்த்தால் இன்னும் கடுமையான தீர்ப்புகளைக் கூடக் கொடுத்து இருக்கலாம். இந்த அவையில் நடந்த நிகழ்ச்சிகளை இங்கே இருக்கிற அத்தனை உறுப்பினர்களும் நேரடியாகப் பார்த்திருக்கிறார்கள். இங்கு பக்கத்திலே இருக்கின்ற செய்தித்தாள் நிருபர்கள் அத்தனை பேருமே பார்த்திருக்கிறார்கள். இதற்குப் பின்னாலும் எதிர்ப் பிரச்சாரம் என்ற முறையில் தவறான பேட்டிகள் தரப்படுமானால், அந்தப் பேட்டிகள் செய்தித் தாள்களில், வருமானால் அவை உரிமை மீறல் பிரச்சினையில் வந்து கடுமையான நடவடிக்கைக்கு ஆளாக வேண்டியிருக்கும் என்பதை மட்டும் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிக்கைகள் அளித்தல்

### அ பொதுக் கணக்குக் குழு

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பொதுக் கணக்குக் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையை அளிக்கிறேன் :

" 1990-91ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது மற்றும் ஐம்பதாவது அறிக்கைகள் ".

12.10 மணி.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

### ஆ. பொது நிறுவனங்கள் குழு

திரு. பெ. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கைகளை அளிக்கிறேன் :

" 1990-91ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரெண்டாவது, ஐம்பத்தி மூன்றாவது மற்றும் ஐம்பத்தி நான்காவது அறிக்கைகள் ".





## 7. அறிவிப்புகள்

### (அ( பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவு, 1991 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

## 8. சட்ட முன்வடிவுகள்

### (அ) பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1991

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

" 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### (ஆ) கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு 1991

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 7. அறிவிப்புகள்—தொடர்ச்சி

**(ஆ) இயக்கூர்திகள் வரிவிதிப்பு திருத்த சட்டமுன்வடிவு 1991 (ஆ.இ)**

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரிவிதிப்பு (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

### 8. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

**(இ) இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவு 1991**

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1991 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் வரி விதிப்பு (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.



**(ஈ) இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவு சட்ட முன்வடிவு, 1991**

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

'' 1991ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் (தனி வகைமுறைகள்) நீத்தறவுச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும் ''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

### 9. ஆளுநர் பேருரைக்கு நன்றிகூறும் தீர்மானம்— விவாதம்—தொடர்ச்சி

திரு. அ. கணேசமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் பேருரைக்கு நன்றி கூறும் தீர்மானத்தின்மீது கருத்துக்களைத் தெரிவிக்கிற வாய்ப்பை நல்கிய தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு இந்த அவையிலே நடைபெற்றிருக்கிற, நடைபெறக் கூடாத சம்பவங்களுக்குப் பின்னாலே இந்த வாய்ப்பை முதலில் நான் பெற்றிருக்கிற காரணத்தினாலே என்னுடைய கருத்துக்கள் கூட தடைபடும் என்கிற அந்த உணர்வோடு என்னுடைய உரையை நான் துவக்குகிறேன்.

இந்த அரசு அமைந்து முதல் முறையாக கவர்னர் அவர்களுடைய உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை வழிமொழிகிறபோது அதிலே உரையாற்றுகிற வாய்ப்பினை நான் பெற்றேன். அப்போதே நான் என்னுடைய உரையிலே இன்றைக்கு அமைந்திருக்கிற இந்த அரசு பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவினை நனவாக்குகிற அரசாக அமைந்திடுமென்ற நம்பிக்கையினை நான் எடுத்து வைத்தேன். அன்றைக்கு 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்ற அந்த உணர்வைப் பெற்ற நம்முடைய முதல்வரவர்கள் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து, நாட்டு மக்களுடைய

உணர்வுகளைப் புரிந்து முதல்வராக அமைந்திருக்கிற காரணத் தாலே ஆட்சிப் பொறுப்பை ஏற்ற 2 ஆண்டுக் காலத்தில் பல்வேறு நல்ல பல திட்டங்களை எல்லாம் நிறைவேற்றி, இன்றைக்கு அரசாங்கத்தினுடைய கொள்கையினை நம்முடைய ஆளுநர் உரையாக இங்கே தந்திருக்கிறார்கள்.

12.15 மணி

ஆளுநர் உரையிலே குறிப்பிட்டிருக்கிற பல்வேறு கருத்துக் கள் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களுடைய கனவினை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கனவினை, நிறைவேற்றும் வகையில் நம்முடைய தமிழகத்திலே மட்டு மல்லாமல் இந்தியத் திருநாடு முழுவதும் ஒத்துக்கொள்ளக் கூடிய வகையில் காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே நினைவூட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். இன்றைக்குக் கூட மத்திய அரசாங்கத்திலே யிருந்த திரு. வி. பி. சிங் அவர்களுடைய அரசாங்கம் கவிழ்க்கப் பட காரணமாகக் கூறப்படுகிற மண்டல் கமிஷன் அறிக்கை குறித்து பல்வேறு காலக் கட்டங்களில் போராட்டமாகவும் பொதுக் குழுவிலே தீர்மானமாகவும், ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே இந்த அவையிலே தீர்மானமாகவும் நிறைவேற்றி, இப்போது இந்தியத் திருநாட்டில் மத்திய அரசாங்கத்தினுடைய வேலை வாய்ப்புகளில் பிற்படுத்தப் பட்டவர்கள் இடம் பெறுகிற வகையில் ஒரு மாபெரும் புரட்சியினை நம்முடைய முதல்வர் அவர்கள் செய்து காட்டி யிருக்கிறார்கள். மண்டல் கமிஷன் பரிந்துரையை மத்திய அரசாங்கம் ஏற்று இருக்கிறதென்று சொன்னால் அது ஏதோ சாதாரண காரியமாக நாம் எண்ணத் தேவையில்லை. திராவிட தளபதிகள் எல்லாம் இந்திய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னாலேயே சென்னை ராஜ்யம் என்று இருந்த அந்த நேரத்திலேயே, சென்னை ராஜ்யத்தில் இருக்கிற பிற்பட்டவர் களுக்கு இட ஒதுக்கீட்டு முறையினை அன்றைக்குக் கொண்டு வந்தார்கள்.

அதைப்போல இந்திய நாடு விடுதலை பெற்றதற்குப் பின்னாலே இந்திய நாட்டினுடைய அரசியல் சட்டத்திலே முதல் திருத்தத்தை உருவாக்குகிற வகையிலே அன்றைக்குப் பல்வேறு போராட்டங்களைச் சந்தித்து, தமிழகத்திலே உள்ள பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்களுக்கு அரசு வேலை வாய்ப்புகளிலே இட ஒதுக்கீட்டைப் பெற்றுத் தந்த பெருமை திராவிட இயக்கத்திற்கு உண்டு. அதைப்போலத்தான் தேசிய முன்னணி அமைந்த நேரத்தில் அதிலே அங்கம் வகிக்கிற முறையில் திராவிட முன்னேற்றக் கழகம் இடம் பெற்ற காரணத்தாலே தான் தேசிய முன்னணியினுடைய தேர்தல் அறிக்கையிலே, நாங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு



வந்தால் மண்டல் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று நிறைவேற்றுவோம் என்ற உறுதியினைத் தர முடிந்தது. இன்றைக்கு முதல்வராக இருக்கிற, கழகத்தினுடைய தலைவராக இருக்கிற கலைஞர் அவர்கள்தான் இந்தக் காரியத்தைச் செய்து தந்திருக்கிறார்கள்.

மத்திய அரசாங்கத்தினுடைய பொறுப்பை ஏற்ற 11 மாத காலத்திற்குள்ளாக தேர்தல் நேரத்தில் சொன்ன அந்த வாக்குறுதியை நிறைவேற்றுகிற வகையில் முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் மண்டல் பரிந்துரையை ஏற்று, அதைச் சட்டமாகக் கொண்டு வந்தார்கள். அதற்குப் பின்னாலே அதை எதிர்த்தவர்கள் வட நாட்டிலே பல்வேறு கோரச் சம்பவங்களை எல்லாம் உருவாக்கி விட்டு, அந்த ஆட்சியைக் கவிழ்க்கிற முறையிலே இதை ஒரு காரணம் காட்டி, இந்தியத் திருநாட்டிலே ஆட்சி மாற்றத்திற்கு வழி வகுத்தார்கள். ஏதோ இது இன்றைக்குத் தோன்றியதா என்றால் நிச்சயமாக இல்லை. இங்கே கூட இன்றைக்குப் பல்வேறு நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன என்று சொன்னால், அதற்கெல்லாம் காரணம் இன்றைக்கு வந்துவிட்ட உணர்வு களாலே இவையெல்லாம் உருவாக்கப்படுகிறதா என்றால் நிச்சயமாக இல்லை. ஒரு காலத்திலே தமிழகத்திலே திராவிட இயக்கங்கள் எந்த உணர்வை நமக்கெல்லாம் உருவாக்கினவோ அதனுடைய எதிர்ப்பாளர்களுக்கும் அந்த உணர்வுகளை உள்ளத்திலே ஏந்தி இருக்கிறவர்களுக்கும் நடைபெறுகிற போராட்டமாகத்தான் நான் இதைக் கருதுகிறேன். தமிழகத் திலேயிருந்து அந்தப் போராட்டம் இன்றைக்கு இந்திய நாடு முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த உணர்வுகளை, தந்தை பெரியார் அவர்களுடைய கருத்துக் களை, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய கருத்துக்களை, தென்னாட்டு காந்தி—அண்ணா அவர்களுடைய கருத்துக் களை வட நாட்டுக்குக் கொண்டு சென்ற காரணத்தாலே தான் வட நாட்டிலே அந்தக் கருத்துக்கள் பரவிய காரணத் தாலேதான், இன்றைக்கு அந்த உணர்வுகள் அங்கே பரவி, போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆட்சிக் கலைப்புக்கு இது ஒரு காரணமாகக் கூட அமைந்து இருக்கலாம்.

இதையெல்லாம் நான் குறிப்பிடுவதற்குக் காரணம், இந்த உணர்வு தமிழகத்திலே ஏற்றுவிட்ட காரணத்தினாலேயே தான், தமிழக மக்களுடைய உள்ளங்களிலே அந்த உணர்வு கள் நிறைந்து இருக்கிற காரணத்தாலேதான் வட மாநிலங் களிலே ஏற்பட்ட கலவரங்கள் தென் மாநிலங்களிலே நிகழாமல் இருந்தன. ஆக, தந்தை பெரியார் அவர்களுடைய

[திரு. அ. கணேசமூர்த்தி] [1991 சனவரி 23

கனவினை பேரறிஞர் அண்ணா அவர்களுடைய இலட்சியத்தினை
இந்தியத் திருநாடு முழுவதும் ஏற்றுக்கொள்கிற வகையில்
இப்போது நம்முடைய முதல்வர் அவர்கள் பிற்படுத்தப்பட்ட
மக்களுக்காக இந்தக் காரியங்களை, இந்த நல்ல பணிகளைச்
செய்து இருக்கிறார்கள் என்பதனை நான் இந்த நேரத்திலே
குறிப்பிட விரும்புகிறேன்.

12.20 மணி

அதுபோலத்தான் மத்திய அரசாங்கம், மாநில அரசாங்கங்
களுக்குத் தர வேண்டிய உரிய மரியாதையினை, உரிய
உரிமைகளைத் தந்திட வேண்டும் என்பது திராவிட
முன்னேற்றக் கழகத்தின் முழக்கங்களிலே ஒன்று. மத்தியிலே
கூட்டாட்சி, மாநிலங்களிலே சுயாட்சி என்பது திராவிட
முன்னேற்றக் கழகத்தின் இலட்சியங்களிலே ஒன்று. அதைத்
தான் முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் ஆட்சிப்
பொறுப்புக்கு வந்ததற்குப் பின்னாலே, தூங்கிக் கிடந்த
இந்திய அரசியல் சட்டத்தின் 263-வது பிரிவினை, அதன்
மூலயாக இண்டர்-ஸ்டேட்ஸ் கவுன்சிலை உருவாக்கிக் காட்டி
னார்கள். பல்வேறு மாநிலங்களுக்கு இடையேயான ஒரு
குழுவினை அமைத்து, மாநிலங்களுக்கு இடையிலே இருக்கின்ற
பிரச்சினைகளாக இருந்தாலும் சரி, மத்திய அரசாங்கத்துக்கு
மாநிலங்களுக்கும் இடையே இருக்கின்ற பிரச்சினையாக
இருந்தாலும் சரி, அந்தக் குழுவின் மூலமாகத் தீர்ப்புகள்
பெற்றிட வேண்டும் என்ற முறையில், உரிய முறையில்
அந்தக் குழுவினை அமைத்து, அதனுடைய முதல் கூட்டத்
தொடரையும் நடத்தி முடித்து இருக்கிறார்கள். இந்தப்
பணிகளை எல்லாம் இன்றைக்கு நாம் செய்து இருக்கிறோம்
என்று சொன்னால், கழகத்தினுடைய தலைவர் கலைஞர்
அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பின்னாலே
இந்தச் சாதனைகள் எல்லாம் நடந்து இருக்கின்றன. அதைத்
தான் இன்றைக்குப் பிரதமராக இருக்கிற மாண்புமிகு
சந்திரசேகர் அவர்கள் தென்னாட்டிலே இருந்து கொண்டு
சென்னையிலே இருந்து கொண்டு வட நாட்டை ஆளுவது
என்பது இனிமேல் நடக்காத காரியம் என்று குறிப்பிட்டு இருக்
கிறார்கள். இதை நான் சொல்வதற்குக் காரணம், மத்திய
அரசாங்கத்திலே இருக்கிற பல்வேறு உரிமைகளைப் பெறு
வதற்காக, மாநில அரசாங்கத்தின் சார்பாகக் குரல்
கொடுத்து, தந்தைப் பெரியார் அவர்களுடைய உணர்வுகளைப்
பெற்ற கழகத்தினுடைய தலைவர் கலைஞர், பேரறிஞர்
அண்ணா அவர்களுடைய மாநில சுயாட்சி உரிமைகளை
இதயத்திலே ஏந்தி, இப்போது இந்தியத் திருநாடு முழுவதும்
இதை நடைமுறைப்படுத்த இருக்கிறார்கள். நான் இதை
வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.



1991 சனவரி 23] [திரு. அ. கணேசமூர்த்தி]

அதேபோலத்தான் அமைதிப் பூங்காவாக இருக்கின்ற
தமிழகத்தை, பல்வேறு காரணங்களைக் காட்டி, இங்கே
இருக்கிற அரசாங்கத்திற்கு இடையூறு விளைவிக்க வேண்டு
மென்கிற முறையில், தவறான ஒரு பிரச்சாரத்தை இப்போது
நாடு முழுவதும் பரப்பிக் கொண்டு இருக்கிறார்கள். விடுதலைப்
புலிகளைக் காரணம் காட்டிடுவதும், அதுபோல் வேறு சில
நிகழ்ச்சிகளை எடுத்துச் சொல்வதும், ஏதோ இந்த
அரசாங்கத்தின் மீது மாசு கற்பிக்க வேண்டுமென்ற முயற்சியிலே
தான் ஈடுபட்டு இருக்கிறார்களே தவிர, தமிழகத்திலே
இருக்கிற எந்த ஒரு தனி மனிதனும், தமிழகத்தினுடைய
சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது என்று சொல்கின்ற குரலை
நாம் எங்கேயும் கேட்க முடியவில்லை. அரசியல் கட்சியைச்
சார்ந்தவர்கள், அதுவும் பொய்யான பழியினை இந்த
அரசாங்கத்தின் மீது சுமத்த வேண்டும் என்று எண்ணுகிற
கட்சியைச் சேர்ந்தவர்கள்தான் அந்தக் குரலை இன்றைக்குப்
பல்வேறு நிலையிலே ஒலித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அவர்கள் இந்த நாட்டிலே எந்த முயற்சியில் இப்போது,
ஈடுபட்டு இருக்கிறார்கள்? இந்த நாட்டில் மட்டுமல்ல,
பல்வேறு இடங்களில் அந்த முயற்சியில் ஈடுபட்டு இருந்தாலும்
தமிழகம் அவர்களை நிச்சயமாக மன்னிக்காது. அவர்கள்
இழுத்து இருப்பது விடுதலைப் புலிகளை. இன்றைக்குச் சொல்
கிறார்கள். தமிழ்நாட்டிலே அஸ்ஸாம் மாநிலத்திலே இருக்கிற
விடுதலை விரும்பிகள், 'உல்ஃபா' என்று சொல்லுகிற
உல்ஃபா படைக்களங்கள், பயிற்சிக் களங்கள் இருக்கின்றன
என்ற குற்றச்சாட்டைச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கு
நம்முடைய முதல்வர் அவர்கள் 25 ஆம் தேதியன்று அக்கினிப்
பரீட்சையில் தன்னை ஈடுபடுத்திக் கொள்ள இருக்கிறேன்
என்றெல்லாம் அறிவித்து இருக்கிறார்கள். நான் அவர்களை
எல்லாம் கேட்க விரும்புவது, விடுதலைப் புலிகள் பயிற்சி
முகாம்கள் வைத்து இருக்கிறார்கள் என்று எந்த இடத்திலும்
உறுதியாக அவர்களால் சொல்ல முடியவில்லை. மாறாக,
அவர்களை இன்றைக்குக் கடத்தல்காரர்கள் என்று சொல்லு
கிறார்கள். நிச்சயமாக தமிழ் உணர்வு படைத்தவர்கள், இந்தத்
தமிழினம் உங்களை மன்னிக்காது என்ற உணர்வோடுதான்
இன்றைக்கு நீங்கள் இருக்கிறீர்கள். அடுத்த மாநிலங்களிலே
இருந்து வந்து இங்கே பயிற்சி முகாம்கள் அமைத்து, இந்தியத்
திருநாட்டிலே அமைதியைக் குலைப்பதற்காக பயிற்சியினை
தமிழகத்திலே பெறுகிறார்கள் என்ற குற்றச்சாட்டைச் சொல்லு
கிறார்கள். ஆனால் அந்த வார்த்தையையே இன்றைக்குத்
தான் தமிழகம் பத்திரிகை மூலமாகத் தெரிந்து கொண்டு
இருக்கிறது. ஏதோ ஒருவர், அடிபட்ட ஒருவர் வேலூர் மருத்துவ
மனையில் இருந்தார் என்ற காரணத்துக்காக அதையும் அரசாங்கம்
அப்போது எடுத்துச் சொல்லி, உடனடியாக அதற்கான

நடவடிக்கையை நம்முடைய அரசு எடுத்ததற்குப் பின்னாலேயும்
அந்தக் குற்றச்சாட்டுகளை எல்லாம் இன்றைக்குச் சொல்லு
கிறார்கள். **எனக்கு இருக்கிற சந்தேகமெல்லாம், மற்ற மாநிலங்க**
ளிருந்து நம்முடைய மாநிலத்திற்கு வருகிறவர்களை எப்படித்
தடை செய்ய முடியும் என்பதுதான். இங்கே பயிற்சி முகாம்
வைத்திருந்தால் அல்லது அரசாங்கம் திட்டமிட்டு அனுமதி
வழங்கியிருந்தால் குற்றம் சொல்வதில் ஒரு நியாயம் இருக்கும்.
தனி மனிதனாக மருத்துவ சிகிச்சைக்காக வந்தது குற்றம்
என்றால் இனிமேல் தமிழகத்திலே அடுத்த மாநிலத்தில்
இருந்து வருகிறவர்கள் பாஸ்போர்ட்டுடன்தான் வரவேண்டு
மென்ற நிலையை உருவாக்க வேண்டும். அப்படியிருந்தால்
வேண்டுமானால் தமிழக அரசு வருகிறவர்களைத் தடுக்க
முடியும் என்று சொல்லுகிறேன். இப்படி மற்ற மாநிலத்தி
லிருந்து இங்கே வந்து பயிற்சி பெறுகிறார்கள் என்ற தவறான
கருத்துக்களை அரசியல் கட்சியினர் பரப்புவது என்பது
தமிழகத்திற்கு நல்லது தராது என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

12–25 மணி

இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பாகப் பேசிய திரு.
பீட்டர் பல்வேறு கருத்துக்களைச் சொன்னார்கள். முதல்வர்
அவர்கள்கூட பீட்டருடைய உரையைக் கேட்க அமைதி
காக்க வேண்டும் என்று அவையை அமைதிபடுத்தினார்கள்.
அவர் தன்னுடைய பேச்சாற்றலால் பல்வேறு குற்றச்சாட்டுக்
களை சாட்டுவார் என்று நான்கூட எதிர்பார்த்தேன். ஆனால்
அவர் இந்த அரசின் மீது குற்றம் கூறுவதற்கு நேரிடையாக
அவருடைய கருத்துக்களை வைக்காமல் பிரதமர் அவர்களை
யும், முன்னால், அமைச்சர் சிதம்பரம் அவர்களையும் இழுத்
திருக்கிறார்கள். சிதம்பரம் பற்றி பத்திரிகைகளில் படித்
திருப்பீர்கள். அவர் பாராளுமன்றத்திலே ஒரு முறை சொன்
னார். ‘‘ தலைகீழாக நின்று பார்த்தால் எல்லாம் தலை
கீழாகத்தான் தெரியும் ’’ என்ற தத்துவத்தை மக்கள் அவையில்
எடுத்துத் தெரிவித்தார். கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் கூட
தலைகீழாகப் பார்த்தால் தலைகீழாகத் தெரியாது, ஆனால்
சிதம்பரத்திற்கு மட்டும் தலைகீழாகத் தெரிகிறது என்றால்
இன்றைக்கு அவர் இந்த நாட்டை தலைகீழாகப் பார்த்துக்
கொண்டிருக்கிறார் என்றார். அந்த
சிதம்பரம் கூறிய வகையிலேதான்
இந்த நாட்டிலே குற்றச்சாட்டுகள் இருக்கின்றன.
அமைத்திருக்கிறார்கள் என்று அவர் அஸாமிலிருந்து பயிற்சி முகாம்
இந்த நாடு நிச்சயமாக ஏற்றுக் கொள்ளாது கூறிய குற்றச்சாட்டுகளை.
படுத்த விரும்புகிறேன். என்பதை நினைவு



அது போலவே கூட்டுறவுத் தேர்தலிலே பல்வேறு தவறுகள்
நடந்திருப்பதாக எடுத்துச் சொன்னார்கள். கூட்டுறவுத்
தேர்தல் விதிமுறைகளின்படி கூட்டுறவுத் தேர்தலை நடத்துகிற
நேரத்தில் உறுப்பினர்களாலே பெண்களுக்கு என்று ஒதுக்கப்
பட்டுள்ள இட ஒதுக்கீட்டை அவர்களே தேர்ந்தெடுத்துக்
கொள்ள முடியும். மூன்று பெண்கள், இரண்டு அரிசனத்
தோழர்கள் தேர்தல் மூலமாக வெற்றி பெற்று வரவில்லை
யென்றால்தான் நியமன முறையில் உறுப்பினர்களை நியமிக்
கிறோம்.

**மாண்புமிகு** பேரவைத் துணைத் தலைவர் : தயவு செய்து
மன்ற உறுப்பினர்கள் அமைதி காக்க வேண்டும். உறுப்
பினர் திரு. பெ. சு. திருவேங்கடம் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

திரு. அ. கணேசமூர்த்தி : கூட்டுறவுச் சங்க தேர்தலில்
தவறு நடந்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். கூட்டுறவுச்
சங்க தேர்தல் விதிமுறைகளை அவர்கள் ஒரு முறை படித்துப்
பார்க்க வேண்டும். உறுப்பினர்களே அவர்களாகவே விரும்பி
உரிய பிரதிநிதித்துவத்தை, பெண்களுக்கு என்று தரப்பட்டுள்ள
மூன்று பேரை தேர்ந்தெடுத்துவிட்டால் அரசாங்கத்தால்
அவர்களை நியமிக்க முடியாது. அரிசனத் தோழர்கள் இரண்டு
பேரைத் தேர்தல் முறையில் தேர்ந்தெடுத்துவிட்டால் நியமனம்
அந்தச் சங்கத்திற்கு வர முடியாது. அப்படித் தேர்ந்தெடுக்கப்
படாத பட்சத்தில் கூட்டுறவுச் சங்கத்தில் பெண்களும் இடம்
பெற வேண்டும், அரிசனத் தோழர்களும் இடம் பெற வேண்டும்
என்றுதான் அந்த நியமன முறையை வைத்திருக்கிறார்கள்.
தேர்ந்தெடுக்கப்பட்ட இடங்களில் இன்றைக்கு யாரும் நிய
மிக்கப்படவில்லை. தேர்ந்தெடுக்கப்படாத இடங்களில்தான்—
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் இடம்
பெற வேண்டுமென்று நோக்கத்தோடு இல்லாமல்—பெண்
களும் இடம் பெறவேண்டும் என்ற நோக்கத்தோடுதான்
அவர்களை நியமித்திருக்கிறார்கள். அரிசன தோழர்கள்
இடம் பெற வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் நியமித்திருக்
கிறார்களே தவிர, தேர்ந்தெடுக்கப்படாதவர்களுக்கு இடம்
கொடுப்பதற்காகத்தான் என்று இதிலே குற்றம் சொல்வதற்கு
ஒன்றும் இல்லை என்பது என்னுடைய கருத்தாகும்.

இன்றைக்கு அமைந்துள்ள இந்த அரசாங்கம் இந்த இரண்
டாண்டுக் காலத்திலே பல்வேறு திட்டங்களை, இருபதாண்டுக்
காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்தாலும் அவர்கள் செய்
யாத காரியங்களையெல்லாம், இந்த இரண்டாண்டுக் காலத்
திலே செய்து முடித்திருக்கிறார்கள். இங்கே கொடுக்கப்
பட்டுள்ள ஆளுநர் உரையில், ‘‘ 20 சதவிகிதம் குறைவாக
மழை பெய்திருந்தாலும் இந்த அரசின் நடவடிக்கையால்
விளைச்சல் குறையாமல் இருக்கிறது ’’ என்று குறிப்பிட்டிருக்

கிறார்கள். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் எங்கள் பகுதியில் கீழ்பவானி பாசனப் பகுதியில் இந்த ஆண்டு மழை குறைவாக இருக்கிறது. அணையில் தண்ணீர் குறைவாக இருந்த நேரத்தில் 70 அடி தண்ணீரை வைத்துக் கொண்டு, தற்போது நிர்வாகத் திறன் கொண்ட அரசாக அமைந்திருக் கிற காரணத்தால் நீர் நிர்வாகத்தை முறைப்படுத்தி ஒரு போகம் பயிரை எடுக்கின்ற அளவுக்கு நிர்வாகத் திறனை மையமாக வைத்து அதன் மீது நம்பிக்கை வைத்து, தண்ணீர் விடமுடியாது என்ற நிலையில்கூட, வாய்க்காலில் தண்ணீர் விட்டு, இப்போது நல்ல விளைச்சலைப் பெற்று வந்திருக் கிறோம். அந்த அளவுக்கு, பல்வேறு நிர்வாகக் கோளாறு களை எல்லாம் அகற்றி, நிர்வாகத்தைத் திறமையாக முடுக்கி விட்டு, நாட்டு நலனை இந்த அரசாங்கம் கவனித்தது.

12–30 மணி

அதே போலத்தான் வேளாண்மைத் துறையில், பாசன மேம்பாட்டுத் திட்டம் என்ற ஒன்றைக் கொண்டு வந்திருக்கி றார்கள். பாசன மேம்பாட்டுக்காக அமைக்கப்பட்டிருக்கின்ற கால்வாய்களைப் பராமரிப்பு செய்வதற்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு, பாசன விவசாயி களின் பாதுகாப்புக்காக அரசாங்கமே ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 உதவித் தொகை என்று நிர்ணயித்து அதை மானியமாக வழங்கியிருக்கிறது.

இப்படி நலிந்த பிரிவினருக்கு என்று இந்த அரசாங்கம் செய்திருக்கிற செயல்கள் இந்தியாவிலேயே எந்த மாநிலத் திலும் இல்லையென்று பாராட்டக்கூடிய அளவுக்குப் பல்வேறு சாதனைகளைச் செய்து காட்டியிருக்கிறார்கள்.

அதேபோலத்தான் ஆதிதிராவிடத் தோழர்களுக்கு இலவச வீடுகள் கட்டிக் கொடுப்பதில், ஒரு லட்சம் வீடுகள் இந்த ஆண்டிலே கட்டிக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்படி நலிந்த பிரிவினராக இருந்தாலும் சரி, ஆதிதிராவிடத் தோழர்களாக இருந்தாலும் சரி. நெசவாளர்களாக இருந்தாலும் சரி, அவர் களுக்கு இன்றைக்கு ஆண்டு ஒன்றுக்கு 100 நாட்கள் தள்ளுபடி விற்பனை என்று அறிவிக்கப்பட்டு இன்றைக்கு அவர்கள் பாராட்டுகின்ற அளவில் பணிகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆட்சிப் பொறுப்பேற்ற இரண்டாண்டுக் காலத்தில் விவசாயிகளுக்கு இலவச மின்சாரம், கடன் தள்ளுபடி, பாசன மேம்பாட்டுத் திட்டம் இப்படிப் பல்வேறு திட்டங்களை அறிவித்து, அவர்களுடைய வாழ்க்கையில் வளம் பெறுகிற அளவுக்கு இந்த அரசாங்கம் காரியங்களைச் செய்திருக் கிறது.





நெசவாளர்களைப் பொறுத்தவரையில், ஆட்சிப்பொறுப்பை ஏற்ற இரண்டாண்டுக் காலத்தில் அவர்களால் உற்பத்தி செய்யப்படுகின்ற துணிகள் தேக்கம் இல்லாமல், அவர்களுக்குத் தேவையான நூல் தட்டுப்பாடு இல்லாமல் கிடைக்கிற அந்த அளவிலும், இன்றைக்குப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும், நஷ்டத்தில் ஓடிக்கொண் டிருந்த மில்களை எல்லாம் லாபத்திற்குக் கொண்டுவந்து, அதிலே உற்பத்தி செய்கிற நூல்களை எல்லாம் அந்த நெச வாளர்களுக்குத் தரவேண்டுமென்று கட்டளையெல்லாம் பிறப் பித்து, நூல் தட்டுப்பாடு இல்லாமல் உற்பத்தி செய்கிற துணியையும் விற்பனை செய்வதற்கான வாய்ப்பையும் உரு வாக்கித் தந்து இன்றைக்கு அவர்களுடைய வாழ்க்கையில் வசந்தத்தை உருவாக்கித் தந்திருக்கிற அரசாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசாங்கம் அமைந்திருக்கிறது.

அதுபோலவே, அரசு அலுவலர்களாக இருந்தாலும், அனைத்துப் பிரிவினரும் பயன்பெறத்தக்க அளவுக்குப் பணி யாற்றுகிற இந்த அரசாங்கம், இப்போது இந்த கவர்னர் உரையில் தங்கள் திட்டங்களை இங்கே வைத்திருக்கிறார். இதிலே கூட மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள், சீர் மரபினர் இவர்களுக்கும் இலவச வீட்டுமனைகள் வழங்குகிற திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். அதை வரவேற்று, இந்த கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற வகையில் எனக்கு பேச வாய்ப்பு அளித்தமைக்காக நான் நன்றி தெரிவித்து, விடை பெறுகிறேன்.

**திரு. வ. அன்பழகன் :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது, பேச வாய்ப்பளித்தமைக் காக முதலில் தங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நீதிக் காவலர் டாக்டர் அம்பேத்கார், புரட்சி கவிஞர் பாரதிதாசன் ஆகியோருடைய நினைவைப் போற்றி, ஆளுந ருடைய உரை தொடங்கப்பட்டிருப்பது போற்றத்தக்க ஒன் றாகும்.

பல ஆண்டுக் காலமாக நலிந்து கிடந்த தமிழகத்தை நிமிர வைத்து, இந்த ஈராண்டுக் காலத்திலே பீடுநடை போட வைத்த எங்களுடைய தானைத் தலைவர், நம்முடைய தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களுடைய சமுதாய நலம் பெறும் திட்டங்களை இந்த நேரத்திலே, இந்த மாமன் றத்திலே நினைத்துப் பார்ப்பது நம்முடைய கடமையாகும். சாதி, மத. சமயச் சண்டைகள், கலவரங்கள், ஆர்ப்பாட்டங் கள், அமளி துமளிகள் ஏதுவுமின்றி, ஊரடங்குச் சட்டம் என்றாலே என்ன என்று தெரியாத அளவுக்கு நம்முடைய தமிழகத்தை அமைதிப் பூங்காவாக—இன்னும் சொல்லப் போனால் இந்தியாவிலே இருக்கக்கூடிய அனைத்து மாநிலங்

[திரு. வ. அன்பழகன்] [1991 சனவரி 23

களுக்கும் வழிகாட்டுதலாக இருக்கக்கூடிய அளவுக்கு நம்முடைய மாநிலத்தை நம்முடைய முதல்வர் அவர்கள் வழி நடத்திச் செல்வதை மனச்சாட்சியுள்ள எவரும் மறுத்திடவோ மறைத்திடவோ முடியாது. அதையும் நம்முடைய ஆளுநர் அவர்கள் தன்னுடைய உரையிலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்தியாவிலேயே அமைதிப் பூங்காவாகத் திகழும் மாநிலம் தமிழ்நாடுதான் என்று முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. நீலம் சஞ்சீவரெட்டி அவர்கள் குறிப்பிட்டதை இங்கே நினைவு கூர்வது என்னுடைய கடமையாகும்.

அதேபோல தேசிய ஒருமைப்பாட்டை காப்பாற்றுவதில் நம்முடைய முதல்வர் அவர்கள் எவ்வளவு அக்கறையும் ஆர்வமும் உள்ளவர் என்பதை யாரும் மறந்திருக்க முடியாது

' புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம் '

என்று பாடிய பாவேந்தர் பாரதிதாசனின் வரிகளுக்கேற்ப உலக அமைதியை விரும்புவதில் திராவிட முன்னேற்றக் கழகம் என்றைக்கும் நிலை தவறியதில்லை.

12-35 மணி

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட நாட்டுக்கு நெருக்கடி வந்த நேரத்தில், யுத்த நேரத்தில் சொன்னார்கள். ' வீடு இருந்தால் தான் ஓடு மாற்ற முடியும். நாடு இருந்தால் தான் நாம் வாழ முடியும் '. எனவே நாடுதான் முக்கியம் என்று தெரிவித்து தன்னுடைய முக்கியமான கோரிக்கையான திராவிட நாடு கோரிக்கையைக் கூட கைவிட்டார்கள். அவருடைய வழியிலே நடக்கக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள், இன்னும் சொல்லப்போனால் அவருடைய இதயத்தையே இரவலாகப் பெற்று ஆட்சி நடத்தக்கூடிய நம்முடைய முதல்வர் அவர்கள் பங்களா தேஷ் யுத்தத்தின்போது மறைந்த பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் நிதி திரட்டிய நேரத்தில் அவரே பெருந்தன்மையோடு ஒப்புக்கொண்டதைப் போல இந்தியாவில் எந்த மாநிலமும் தராத அளவுக்கு இன்னும் சொல்லப்போனால் அம்மையார் சார்ந்திருக்கிற உத்தர பிரதேச மாநிலமும் கொடுக்க முடியாத அளவுக்கு மிக அதிகமான தொகையாக ஆறு கோடி ரூபாயை அப்போது நிதியாகத் தந்தார்கள் என்பதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் அரசியலில் தேர்தல் நேரங்களில் ஒட்டுண்ணிகளாக, சாருண்ணிகளாக எப்படியாவது அடுத்தவர் முதுகில் குதிரை ஏறி பழக்கப்பட்ட கட்சியினர் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காக தான் இதைக் குறிப்பிடுகிறேன். எனவே,



1991 சனவரி 23] [திரு. வ. அன்பழகன்]

தேச நலன் காப்பதில் திராவிட முன்னேற்றக் கழகம் எந்த அளவுக்கு உறுதியாக உள்ளது என்பதை நீங்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும்.

இந்த உண்மைகள் காலத்தால் அழிக்க முடியாத கல்வெட்டுகளாகும், வளைக்குடாப் போர் தொடங்கியுள்ள இந்த இக்கட்டான காலகட்டத்தில் நம்முடைய பிரதமர் அவர்கள் நாட்டைக் காக்க எடுக்கும் நடவடிக்கைகளில் நம்முடைய முதல்வர் அவர்களின் பங்கு எந்த அளவுக்கு இருக்கும் என்பதை இந்த வரலாற்று உண்மைகள் நாட்டுக்கு எடுத்துக் கூறும்.

அதைப்போல ' ஓராயிரம் ஆண்டுகள் ஓய்ந்து கிடந்த பின் வாராது வந்த மாமணி ' போல வந்த மண்டல் கமிஷன் அறிக்கை. அதை எந்தப் பிரதமரும் நிறைவேற்ற முன்வராத நிலையில் முன்னாள் பிரதமர் திரு. வி. பி. சிங் அவர்கள் நம்முடைய சட்டமன்றத்தில் நாம் 1989-ஆம் ஆண்டு மே மாதம் நிறைவேற்றிய தீர்மானத்தை ஒட்டி மண்டல் கமிஷன் தீர்மானத்தை எடுத்துக் கொண்டார்கள். அதற்கு பிறகு இப்போது நம்முடைய பிரதமர் சந்திரசேகர் அவர்கள் தலைமையில் அமைந்திருக்கிற அரசு அதற்கான ஒத்துழைப்பை முழு அளவில் கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்தி கேட்டுக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒழுகாத கூரை, கிழியாத ஆடை, சூடான உணவு இவை மூன்றும் மனிதனுக்கு அடிப்படை தேவை என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். அண்ணாவின் கனவுகளை நனவாக்கி ஏழையின் சிரிப்பிலே இறைவனைக் காண்கிற நம்முடைய கலைஞர் அரசு மக்களுக்கு தேவையான இந்த மூன்று தேவைகளும் சீராகவும், செம்மையாகவும் கிடைத்திட எந்த அளவிற்குப் பாடுபடுகிறது என்பதையும் இந்த மாமன்றமும் மக்களும் அறிவார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவச கான்கிரீட் வீடுகளைக் கட்டி கொடுக்கிற திட்டத்தை முதன்முதலாக கலைஞர் அவர்கள் 1974-ம் ஆண்டிலே கொண்டு வந்தார்கள். இடையிலே அவை ஓட்டு வீடுகளாக மாற்றப்பட்டாலும், ஆட்சி மாறியதைப் போல வீடுகளின் காட்சிகளும் மாறியுள்ளன. இன்றைக்கு கான்கிரீட் வீடுகளை மீண்டும் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் திட்டம் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட ம்க்களுக்கும், சீர்மரபினர்களுக்கும் விரிவு படுத்தப்படும் என்று கவர்னர் உரையில் குறிப்பிட்டிருப்பதை நான் மனதார வரவேற்கிறேன்.

[திரு. வ. அன்பழகன்] [1991 சனவரி 23

அடுத்து சத்துணவுத் திட்டம், சத்துணவுத் திட்டம் என்ற பெயரில் வெற்று உணவைப் போடாமல் உண்மையான சத் துணவை குழந்தைகளுக்கு வழங்கும் நம்முடைய அரசு சத்துணவுத் திட்டத்தை தொடர்ந்து நடத்துவதுடன் உலக வங்கி உதவியுடன் ரூபாய் 350 கோடி செலவிலான புதிய ஊட்டச் சத்துத் திட்டம் தொடங்கவுள்ளதை ஆளுநர் அவர்கள் குறிப்பிட்டுள்ளது ஒரு சத்துள்ள செய்தியாகும்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடும்போழுது மிகக் குறைந்த விலையில் ஏழை எளிய மக்களுக்கு அரிசி சீரான விநியோகம் செய்து வருவது நமது மாநிலம் பெருமிதம் கொள்ளத்தக்க தாகும். நியாய விலைக் கடைகளில் பணியாற்றும் ஊழியர் களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்று 350 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக அவர்கள் சம்பளத்தை உயர்த்தியுள்ளதை மன மார பாராட்டுகிறேன்.

“ முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறை யென்று வைக்கப் படும் ”

என்றார் வள்ளுவர், அதைப்போல பொதுமக்கள் வாழ்வில் மட்டுமல்லாது பொதுமக்கள் வாழ்வுக்காக பணியாற்றும் ஊழியர் களின் வாழ்வும் வளம் பெற வேண்டும் என்பதை மீண்டும் நிரூபித்துள்ளார்கள் நம்முடைய தானைத் தலைவர் கலைஞர் அவர்கள்.

**12–40 மணி**

மனிதனுக்கு மூன்றாவது தேவையைப் பூர்த்தி செய்யும் நெசவாளர் பெருங்குடி மக்களின் வாழ்க்கை மேம்பட பண்டிகைக் காலங்களில் மட்டும் கிடைத்து வந்த தள்ளுபடியை ஓராண்டில் 100 நாட்கள் என அதிகரித்து ஒவ்வொரு மாதமும் 6 ஆம் தேதியிலிருந்து 10 ஆம் தேதி வரை கிடைக்கும் வண்ணம் சீரமைக்கப்பட்டுள்ள புதிய திட்டம், ஆடையை உற்பத்தி செய்யும் நெசவாளர்கள் வாழ்விலும், அதைப் பயன் படுத்தும் பொதுமக்கள் வாழ்விலும் நலன் பயப்பதாகும்.

வேளாண் பெருங்குடி மக்களுக்கு மத்தியில் முன்னர் இருந்த நடுவண் அரசின் கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் ரூ. 10,000 வரை கடன் தள்ளுபடி செய்த வகையில் ரூ. 508.15 கோடி செலவிடப் பட்டுள்ளது என ஆளுநர் உரையிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஒன்றை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மறைந்த திரு. நாராயண சாமி நாயுடு அவர்கள் தலைமையில் இருந்த விவசாயிகள் சங்கம், பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு சில நூறு உயிர் களைப் பலி கொடுத்தும் கூட, ஒருசில பைசாக்களைக் கூட மின் கட்டணத்தில் சலுகையாக அறிவிக்க அன்றைய அரசு தயாராக இல்லை. ஆனால் இன்றைக்கு நம்முடைய கலைஞர்



1991 சனவரி 23] [திரு. வ. அன்பழகன்]

அரசு அந்த விவசாயிகள் யாரும் கோரிக்கை வைக்காமல், போராடாமல், வாதாடாமல், தானாகவே முன்வந்து விவ சாயிகளுடைய உணர்வுகளை அறிந்திருக்கிற காரணத் தாலே, இலவசமாக, பம்ப் செட்டுகளுக்கு மின்சாரக் கட் டணத்தைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்பதை நன்றி உள்ள யாரும் பாராட்டாமல் இருக்க முடியாது. அதேபோல கிராமப்புற மக்களுக்கு ரூ. 44.5 கோடி செலவில்......

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. இலவச மின் சாரத்தை யாரும் கேட்காமலேயே என்று சொல்வதில் நான் பாதிக்கப்படுகிறேன். இலவச மின்சாரத்தை கேட்டது நான். அதற்காக இங்கே இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை பேசியிருக்கிறேன். இலவச மின்சாரம் கொடுத்ததைப் பாராட்டு வோம். ஆனால் நாங்கள் எல்லாம் கேட்டோம். நான் கேட்டேன். குறிப்பாக இந்தச் சட்டமன்றத்திலேயே கேட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** நாளைக்குப் பாராட்டுங்கள்.

**திரு. வ. அன்பழகன் :** துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் அவர்கள், கேட்கவில்லை என்று நான் சொல்லவில்லை. கேட்கக்கூடிய வைகளை எல்லாம் கொடுக்கக்கூடிய அரசுதான் கலைஞரு டைய அரசு என்பதைத் தாங்கள் புரிந்து கொள்ளவேண்டும் என்பதைத்தான் இந்தத் தருணத்திலே நான் சொல்ல விரும்பு கிறேன். ஆனால் நான் சொல்ல வந்தது எல்லாம், அந்தக் காலத்திலே திரு. நாராயணசாமி நாயுடு அவர்கள் விவசாயச் சங்கத்தை வைத்து போராடிப் போராடி பார்த்து விட்டு, அந்த ஆட்சியிலே அவர்கள் எதையும் பெற முடிய வில்லை. ஆனால் இன்றைக்கு விவசாயிகள், விவசாயச் சங்கங்கள் யாரும் போராடவில்லை என்பதற்காகத்தான் இதை நான் குறிப்பிட்டேன்.

அதேபோல், கிராமப்புற பகுதிகளுக்கு ரூ. 44.5 கோடி செலவில் நிலையான சாலைகளை அமைக்க நடப்பு ஆண்டில் நல்ல திட்டங்கள் எல்லாம் நம்முடைய ஆளுநர் அவர்கள் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது மகிழ்ச்சி தரக்கூடிய செய்தி யாகும். கலைஞர் அவர்களுடைய தலைமையில் இயங்கும் நம்முடைய அரசும் நெடுஞ்சாலை பொதுப்பணித்துறைக்குப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களும், பெருமளவில் அக்கறை எடுத்துக் கொண்டு, அத்துறையில் பல காலம், கவனிக்கப்படாமல் கிடந்த பிரச்சினைகளைத் தீர்க்க முனைந்துள்ளதை நாடு நன்கு அறியும். செப்பனிடப்படாமல், அழிந்துபோன சாலை களை அடையாளங்கண்டு நம்முடைய மாண்புமிகு பொதுப்

[திரு. வ. அன்பழகன்] [1991 சனவரி 23

பணித்துறை அமைச்சர் அவர்களின் சீரிய முயற்சியால் மீண்டும் பயன் உள்ள சாலைகளாக பராமரிக்கப்பட்டு வருகின்றது என் பதை யாரும் மறந்து இருக்க முடியாது. அந்த அளவிற்கு பொதுப்பணித்துறை சிறப்பான முறையில் செயல்படுகிறது என்பதற்கு ஓரே ஒரு உதாரணத்தை மட்டும்நான் சொன் னால், பயன் உள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியில் தூசிமாமண்டூர் ஏரி, அந்த மாவட்டத்திலேயே மிகப் பெரிய ஏரியாக இருக்கிறது. அது பல்லவ மன்னரால் உருவாக்கப்பட்ட ஏரியாகும். அது பாழ்பட்டுவிடக்கூடாது என்பதற்காக, அதைத் தூர் வாரவும், நவீனப்படுத்தவும் சென்ற ஆண்டிலே, ரூ. 1.38 கோடித் தொகையை நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். பல்லவர் காலத்திற்குப் பிறகு, அந்த ஏரி கலைஞர் ஆட்சிக் காலத்தில்தான் மீண்டும் பரா மரிக்கப்படுகிறது என்பதை நாம் எல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்பதற்காகத் தான் இதை நான் கூறுகிறேன்.

அதேபோல் குடிநீர்ப் பிரச்சினையைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு இந்த 2 ஆண்டுக் காலத்தில் அதை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்டு செயல்பட்டு வருகிறது. எவ்வளவு தான் கோடிக் கணக்கில் பணத்தைச் செலவழித்து குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முயன்றாலும் இயற்கை ஒத்துழைக்க வில்லை என்று சொன்னால், நாம் முழுவதுமாக வெற்றி பெற முடியாது. இந்த ஆண்டு வட ஆற்காடு அம்பேத்கார், தென் ஆற்காடு தர்மபுரி ஆகிய மாவட்டங்களுக்கு, கிராமப்புற குடிநீர்த் திட்டங்களை ஆளுநர் அவர்கள் அறிவித்திருக்கிறார் கள். எங்களுடைய திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத் தில் இந்த ஆண்டு மழையில்லை. எனவே இதை கவனத்தில் கொண்டு, திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டத்திற்கும் அதிகமாக நிதியைக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, ஒதுக்கித்தர வேண்டும் என்று நம்முடைய குடிநீர்த்துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் நம்முடைய மாநிலத்திலே தொழில் வளம் பெருகுவதற்கு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அல்லும் பகலும் அயராது பாடுபடுகின்ற காரணத்தால், இன்றைக்கு முன்னேற்றப் பாதையை நோக்கி நாம் சென்று கொண்டு இருக்கிறோம். திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த நேரத்தில், நம்முடைய மாநிலத்திற்கு 'தேசிய ஆரோமெட் டிக்' தொழிற்சாலையை அறிவித்தார்கள். தற்போது உள்ள மைய அரசும் அந்த அறிவிப்பை உறுதிப்படுத்தி, அந்தத் தொழிற்சாலையை நிறுவ, ஒத்துழைக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்.



1991 சனவரி 23] [திரு. வ. அன்பழகன்]

இப்படிப்பட்ட மக்கள் நல திட்டங்கள் எல்லாம் நிறைவேற வேண்டும் என்று சொன்னால், நமக்கு நிதி அதிகமாகத் தேவைப் படுகிறது. இந்த ஆண்டு மத்திய அரசாங்கம், மத்திய திட்டக் கமிஷன் 1460 கோடியை நம்முடைய அரசுக்கு ஒதுக்கியிருக் கிறது. சென்ற ஆண்டைக் காட்டிலும் 100 கோடி ரூபாய் அதிகம் என்று சொன்னாலும் கூட, இப்போது விலைவாசிப் புள்ளி 12 சதவீதம் கூடியிருக்கிற காரணத்தாலே, இந்த ஆண்டு ஒதுக்கியுள்ள தொகையை அதிகப்படுத்தி, தேவைப் படுகிற தொகையை அதிகமாக ஒதுக்கித் தரவேண்டும் என்று மத்திய அரசாங்கத்தை நான் கேட்டுக் கொள்கிறேன்.

வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்பதுபோல், சீரிய செயல்திறன் மிக்க டாக்டர் கலைஞர் அவர்கள் தலைமையில் இயங்கும் இந்த அரசு இத்தகைய சிறிய குறை பாடுகளையும், இடர்ப்பாடுகளையும் வென்று சாதனைகள் புரியும், சரித்திரம் படைக்கும் என்று நான் கூறி, அந்த நம்பிக்கையோடு, இங்கே பேசுவதற்கு வாய்ப்பு அளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, ஆளுநர் உரையை மனதார வரவேற்று அமர்கிறேன். நன்றி.

*திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே முன் வைக்கப்பட்டிருக்கின்ற ஆளுநர் உரை மீது நான் சார்ந்திருக்கக்கூடிய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

12-45 மணி

ஆளுநர் உரையில் சொல்லப்பட்டிருக்கக்கூடிய சில சிறப் பான அம்சங்களை வரவேற்கக் கூடிய அதே நேரத்தில், இப் போது ஆளுநர் உரையையொட்டி நடைபெறக் கூடிய இந்த விவாதத்தில் தமிழகத்தில் கிராமப்புறத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக் கூடிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர் கள் தினசரி சேற்றோடு போராடி நமக்குச் சோற்றை அளிக்கக் கூடிய அவர்களுடைய அன்றாட அடிப்படைப் பிரச்சினைகளையும், சில உடனடி பிரச்சினைகளையும் இந்த அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது. அதேபோல் நகரபுறத்திலே வாழக் கூடிய உழைப்பாளி மக்கள், மத்திய தரப் பகுதி மக்கள், ஆகியவர்களுடைய பாதிக்கப்பட்ட ஏராளமான பிரச்சினைகளையும் இந்த அரசு கவனிக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு ஏறிக்கொண்டிருக்கக் கூடிய விலைவாசி உயர் வினாலும், சர்வதேச ரீதியிலே வளைகுடாவில் ஏற்பட் டிருக்கக் கூடிய யுத்தத்தின் விளைவாக இன்றைக்கு நம் முடைய நாட்டில் ஏற்பட்டிருக்கக் கூடிய நெருக்கடிகளும் அதனால் ஏற்பட்டிருக்கக் கூடிய விலைவாசிகள், இங்கே 40 ஆண்டுக்கால ஆட்சியினுடைய கொள்கையின் விளைவாக,

வறுமையும், வேலையில்லாத் திண்டாட்டமும் உயர்ந்து கொண்டிருக்கக் கூடிய இந்த நேரத்தில், அதேபோல் மூடிக் கிடக்கக்கூடிய ஆலைகள், அதனால் பாதிக்கப்பட்டிருக்கக் கூடிய நூற்றுக்கணக்கான, ஆயிரக்கணக்கான தொழிலாளர் குடும்பங்கள், அவர்கள் எல்லாம் இந்த மாநில அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டு, என்னென்ன காரியங்களைச் செய்ய முடியும், செய்ய வேண்டும் என்று இந்த ஆளுநர் உரையின் மீது என்னுடைய கருத்துக்களாகக் கூற முற்பட வேண்டியிருக்கிறது.

இந்தக் கடமைகளை எல்லாம் இந்த அரசு செய்ய வேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய நேரத்தில், இதை எப்படி நிறைவேற்றுவது என்று தங்களுடைய ஆலோசனைகளை, கருத்துக்களைச் சொல்லி, இந்த ஆட்சியின் மூலமாக தமிழகத்து மக்களுக்கு நன்மைகளைப் பெற்றுத் தர வேண்டிய முறையில் நடைபெற வேண்டிய இந்த விவாதத்தில் குறிப்பாக இங்கே தமிழகத்தை முன்னாலே ஆண்ட கட்சிகள், இன்றைக்கு எதிர்க் கட்சிகளாக இருக்கக் கூடிய காங்கிரஸ் கட்சியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியும் சேர்ந்து இன்றைக்குத் தமிழகத்தை எப்படி ஒரு கலவரப் பகுதியாக மாற்றுவது என்ற முறையில் கலக அரசியலிலே இறங்கியிருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் கூறாமல் இருக்க முடியாது.

நேற்றைய தினம், இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த திரு பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் கூடக் குறிப்பிட்டார்கள். இன்றைக்கு சதாம் ஹுசேனுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். அதனால் மத்திய அரசாங்கத்தினுடைய கவனம் இங்கே திரும்பாமல் இருக்கிறது. அப்படித் திரும்பாமல் இருக்கும்போது ஏன் அதை நீங்கள் திருப்பி திருப்பி பேசிக் கொண்டிருக்கிறீர்கள் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்களுக்கே தெரிகிறது. இன்றுள்ள சர்வதேச நிலைமையில் நம்முடைய பிரதமரால் தமிழகத்தின்பால் கவனம் செலுத்தமுடியாது. சர்வதேசப் பிரச்சினைகளைக் கவனிக்க வேண்டியிருக்கிறது. எனவே அவர்களுடைய கோரிக்கையின்படி இந்த ஆட்சி கலைக்கப்பட மாட்டாது என்பது அவர்களுக்கே தெரிகிறது. அப்படித் தெரிந்ததினுடைய விளைவாகத்தான் இன்றைக்குத் தமிழகத்தை ஒரு கலவரப் பகுதியாக மாற்றுவதற்கான முயற்சியில் அவர்கள் ஈடுபடுகிறார்கள். அதனுடைய பகுதியாகத்தான் 'யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்பதைப்போல, இன்றைக்குக் காலையிலே இங்கே நடைபெற்ற நிகழ்ச்சி, அதற்கு முன் ஓசையாக அமைந்திருக்கிறது.



29 ஆம் தேதி சாலைகளை நாங்கள் மறிக்கப்போகிறோம்
என்று அவர்கள் அறிவித்து, அதற்குப் பிறகு அதை 28 ஆம்
தேதி என்று மாற்றி, 28 ஆம் தேதி தமிழகத்திலே ஒரு கல
வரத்தை நடத்தி, தமிழகத்து மக்களின் உடைமைகளுக்கும்,
உயிர்களுக்கும் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் முயற்சியிலே
அவர்கள் ஈடுபட்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கின்ற
இந்த நிகழ்ச்சியை கவனத்தில் எடுத்துக் கொண்டு தமிழகத்து
மக்களுடைய உடைமைகளுக்கும் உயிர்களுக்கும் பாதுகாப்பு
கொடுக்க வேண்டிய மிகப் பெரிய பொறுப்புகளை இந்த அரசு
மேற்கொள்ளவேண்டும். ஏனென்றால் இன்றைக்கு, தொடர்ச்சி
யாக பல்வேறு மாநிலங்களிலே கலகம் பண்ணி, கலகம் பண்ணி,
அந்த மாநிலத்து மக்களுடைய ஜனநாயக உரிமைகளை எல்
லாம் அழித்து நாசப்படுத்தி இருப்பதைப் போல, தமிழகத்தைப்
பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியவில்லை அவர்களால்.
புலி கோரப் பசியால் அலைந்து கொண்டிருக்கிறது. 1967-
லிருந்து அவர்கள் அதிகாரப் பசியுடன் தமிழகத்தில் அலை
கிறார்கள். அப்படி அலைந்தாலும் இந்த அதிகாரப் பசி தீர
வில்லை. அதிகாரம் அவர்களுக்குக் கிடைக்கவில்லை என்ற
முறையிலே தான், இந்த நாட்டிலே 40 ஆண்டுகளில் 76 முறை
இந்த மாநில அரசுகளைக் கலைத்தார்கள். தமிழகத்திலே கூட
மூன்றுமுறை கலைத்தார்கள். இப்போதும்கூட கலை, கலை என்று
அலைந்துக் கொண்டிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்சியினுடைய
நண்பர்களுக்கு நான் கூறிக் கொள்வேன். நீங்கள் வீணாக
ஒரு முயற்சியிலே சாத்தியம் இல்லாத ஒரு காரியத்திலே
திரும்ப, திரும்ப ஈடுபட்டு உங்களுடைய சக்தியை ஏன்
நீங்கள் விரயம் ஆக்கிக் கொள்கிறீர்கள்? தமிழகத்திலே 100
முறை நீங்கள் கலைத்தாலும் கூட உங்களால் தமிழகத்தில்
ஆட்சிக்கு வர முடியாது. உங்கள் கையிலே தமிழகத்து மக்கள்
ஆட்சிப் பொறுப்பை அளிக்க மாட்டார்கள். அப்படி இல்லாத
ஒரு நிலைமையில் நீங்கள் ஏன் வீணான ஒரு வேலையிலே
உங்களுடைய சக்தியை விரயம் ஆக்கிக் கொள்கிறீர்கள்,
என்பதைக் கூறாமல் இருக்க முடியாது.

12-50 மணி

அதோடு மட்டுமல்லாமல் கடற்கரைப் பிரதேச நிலைமைகளைப் பற்றியெல்லாம் இங்கே காங்கிரஸ் கட்சியின் உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள். கடற்கரைப் பகுதியிலே அவர்கள் மட்டும்தான் இருப்பதாகக் கருதி இங்கே குறிப்பிடுகிறார்கள். என்னுடைய தொகுதி கூட கடற்கரை ஓரப் பகுதியான நாகையிலே இருக்கிறது. ஆனால் குற்றம் சொல்வதற்குக்கூட ஒரு தகுதி வேண்டும். குற்றம் சாட்டும் போது அதற்கான ஒரு தகுதி காங்கிரஸ் கட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உண்டா என்பதை அவர்கள் சீர் தூக்கிப் பார்த்துச் சொல்ல வேண்டும் என்பதை இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக்

[திரு. கோ. வீரையன்] [1991 சனவரி 23

கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்கு நான் கூறிக்கொள்ள
விரும்புவது கண்ணாடி வீட்டுக்குள்ளே இருந்து கொண்டு எதிரிகள்
மீது கல்லை வீசாதீர்கள். இன்றைக்கு விடுதலைப் புலிகளை பற்றி
பேசக் கூடிய நீங்கள் கோடிக்கணக்கான ரூபாய்களை ஆயுதம்
வாங்குவதற்கு தமிழகத்திலே விடுதலைப் புலிகளுக்கு
கொடுத்தது யார்? ராணுவப் பயிற்சிகளை அவர்களுக்குக்
கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத்தது யார்?
அதேபோல தமிழகத்திலே ராணுவப் பயிற்சிக்கான இடங்
களைக் கொடுத்து உதவியது யார்? இவையெல்லாம் தமிழ்
நாட்டு மக்களுக்குத் தெரியாது என்று நினைப்பில் பேசுவது
சரியானது அல்ல. இவைகளையெல்லாம் நான் சொல்லும்
போது, அந்தக் கட்சித் தலைவர்களைப் பார்த்துப் பேச
விரும்புகிறேன், இந்திய இலங்கை ஒப்பந்தத்தை நீங்கள்
ஏற்றுக் கொள்கிறீர்களா, மறுக்கிறீர்களா? (குறுக்கீடு).

திரு. குமரி அனந்தன் : இந்திய இலங்கை ஒப்பந்தத்தை
ஏற்றுக் கொள்கிறீர்களா இல்லையா என்று காங்கிரஸ் கட்சி
யினுடைய தலைவர்களைக் கேட்கிறேன் என்று சொன்னார்.
இந்திய இலங்கை ஒப்பந்தத்தை ராஜீவும், ஜெயவர்த்தனேவும்
செய்து கொண்டார்கள். அதை நாங்கள் ஏற்கிறோம், நீங்கள்
ஏற்றுக் கொள்கிறீர்களா இல்லையா?

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சிக்கும் எங்களுக்கும்,
மத்திய அரசாங்கத்திலே காங்கிரஸ் கட்சி இருந்தபோது அந்த
ஆட்சிக்கும் எனக்கும் தனிப்பட்ட சொந்த விரோதம் அல்ல,
பிரச்சினை அடிப்படையிலே அந்த ஆட்சியினுடைய கொள்கை
களை எதிர்ப்பவர்கள் நாங்கள். அந்த முறையிலே இந்திய
இலங்கை ஒப்பந்தத்தை, உடன்பாட்டை இன்றைக்கும் ஏற்றுக்
கொண்டு சரியாக நிறைவேற்றப்பட வேண்டும் என்று சொன்ன
கட்சி இந்திய நாட்டிலே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி என்றும்
இன்றைக்கும் அதை நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம் என்பதை
யும் இந்த நேரத்திலே கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏதோ சிதம்பர ரகசியம் தன்னிடத்திலே இருக்கிறது என்று
நம்முடைய சிதம்பரம் அவர்கள் கூறிக் கொண்டிருக்கிறார்.
பெரிய இரகசியம் நாட்டுக்கே தெரியாத இரகசியம் தன்னிடம்
இருக்கிறது என்று கூறிக் கொண்டிருக்கிறார். நான் அவர்களைக்
கேட்க விரும்புகிறேன், ஏதோ எல். டி. டியினர்கள் அஸ்ஸாமில்
இருக்கக் கூடிய காடுகளில் 'உல்பா'விற்கு ஆயுதப் பயிற்சி
அளிக்கிறார்கள் என்று இங்கே சிலர் கூறி அதை இந்த மாநில



1991 சனவரி 23] [திரு. கோ. வீரையன்]

அரசு ஏன் கண்டு பிடிக்கவில்லை என்று கேட்டதாகப் பத்திரிகை
யில் செய்தி வந்திருக்கிறது. அஸ்ஸாம் காடுகளிலே உல்பாவிற்கு
எல்.டி.டி.யினர் பயிற்சி அளிப்பது பற்றி கண்டு பிடிக்க வேண்டி
யவர்கள் யார்? தென்னை மரத்திலே தேள் கொட்டினால்
பனை மரத்திலே போய் அண்டை கட்டும் என்று சொல்லுவார்
கள். அப்படி அஸ்ஸாம் காடுகளிலே நடக்கக் கூடிய பயிற்சியை
கண்டு பிடிக்கக் கூடியவர்கள், அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்
டியவர்கள் தமிழ்நாடு அரசா என்பதை அவர்கள் தெளிவு படுத்த
வேண்டும். எங்களைப் பொறுத்தமட்டில் இலங்கைத் தமிழ் மக்க
ளுடைய நலம் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்
என்பதில் என்றைக்கும் கருத்து வேறுபாடு கொண்டவர்கள் அல்ல
நாங்கள். அதேபோல வடக்கு, வடகிழக்கு தமிழ்ப் பகுதிகளை
ஒரு மாநிலமாக மாற்ற வேண்டும். அந்தத் தமிழ் மாநிலம் முழு
சுயாட்சி பெற்ற மாநிலமாக இருக்க வேண்டும். தமிழ் மொழி
அந்த நாட்டினுடைய ஆட்சி மொழியாக ஏற்கப்பட வேண்டும்.
அதை ஏற்படுத்தித் தருவதற்கு இந்திய அரசு தன்னால் ஆன,
தன்னுடைய சக்தியையும் செல்வாக்கையும் பயன்படுத்தி இலங்
கையில் இருக்கக் கூடிய தமிழர்களின் நலன் பாதுகாக்கப்பட
வேண்டும் என்பதே எங்களுடைய இறுதியான நிலை.

ஏனென்று சொன்னால் இன்றைக்கு இந்த நிலைமைகளைப்
பற்றி கடல் ஓரப் பிரச்சினைகளைப் பற்றி பேசக் கூடியவர்கள்
எப்படி திரிபுராவிலே காங்கிரஸ் கட்சியினுடைய ஆட்சியிலே
என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? தினசரி நூற்றுக் கணக்
கானவர்கள் கொல்லப்படுகிறார்கள். நூற்றுக் கணக்கான பெண்
களை, தாய்மார்களை கூட்டம் கூட்டமாகக் கற்பழித்து நாசப்
படுத்துகிறார்கள். பங்களா தேஷிலிருந்து ஆட்களைக் கொண்டு
வந்து அந்த மாநிலத்து மக்களுடைய பலாபலன் நிலைகளை
மாற்றுவதற்கான முறையிலே குடியேற்றம் செய்து இருப்பதுமான
காரியத்தை செய்து கொண்டிருக்கக்கூடிய ஒரு கட்சி இப்படிப்
பேசுவது என்பது எந்த வகையிலே நியாயமானது, சரியானது
என்பதை நான் கேட்க விரும்புகிறேன்.

அதோடு மட்டுமல்ல. இன்றைக்கு இந்தியத் திருநாட்டில்
பூட்டிக் கிடந்த மசூதியைத் திறந்து விட்டு, சர்ச்சைக்குரிய
இடத்திலே அன்றைக்கு உள்துறை அமைச்சராக இருந்த திரு.
பூட்டாசிங் மூலமாக அடிக்கல் நாட்டுவதாகச் சொல்லி, மத
வெறியர்களுக்குத் தீனி போட்டுவிட்டு, இன்றைக்கு நாடு பிணக்
காடாகக் ஆகக் கூடிய காட்சியை யார் உருவாக்கியது ?

12-55 மணி

திரு. குமரி அனந்தன் : துணைத் தலைவரவர்களே, மன்னிக்க
வேண்டும். சில நேரங்களிலே அவர்கள் சில குற்றச்சாட்டுக்
களைச் சொல்லுகிறபோது நாங்கள் அமைதியாக இருக்க முடி
யாது. அடிக்கல் நாட்டுகின்ற சம்பவத்திற்கு முந்தைய ஆண்டு
நவம்பர் மாதம் 7-ந் தேதி அடிக்கல் நாட்டிய சம்பவம் நடை
பெற்ற போது ஒரு தடியடி நடக்கவில்லை; ஒரு சண்டை நடக்க
வில்லை; துப்பாக்கிச் சூடு நடக்கவில்லை. இன்னும் சொல்லப்
போனால் மசூதியினுடைய நிழலைக் கூட யாரும் மிதிக்கவில்லை.
அதற்கு நேர் மாறாக இப்போது நடந்திருக்கிறது என்பதைத்
தான் நாங்கள் சுட்டிக் காட்ட விரும்புகிறோம்.

திரு. கோ. வீரையன்: மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் துணைத்
தலைவர் அவர்கள் அந்தக் கல் நாட்டப்பட்ட போது எந்தவித
மான தடியடியும் நடக்கவில்லை என்று குறிப்பிட்டார்கள்.
அந்தக் கல் நாட்டப்படுவதற்கு முன்னால் பகல்பூர் நிகழ்ச்சியி
னை இந்த நாடு மறந்திருக்காது என்பதை அவர்களுக்குச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. அன்றைக்கு உள்துறை அமைச்சராக
இருந்த திரு. பூட்டாசிங் அவர்களும், உ.பி. மாநிலத்தினுடைய
முதலமைச்சர் திரு. திவாரி அவர்களும் இந்த விஸ்வ ஹிந்து
பரிஷத்தும் என்னைக் கைவிட்டு விட்டார்கள் என்றெல்லாம்
கூறியிருப்பது வந்திருக்கிற செய்தி என்பதை மறுக்க முடியாது.
அதன் பிறகு நடந்த வன்முறையும் அதையொட்டி நடந்த
உயிர்ச் சேதமும் அதனுடைய தொடர்பாக பிரச்சினைக்குரிய
இடத்திலே கல்லை நடச் செய்து விட்டு, இன்றைக்குக் கூட . . . .

திரு. குமரி அனந்தன்: கல் நட்டது பகல்பூரிலா, அயோத்தி
யிலா? அயோத்தியைப் பற்றி கேட்டார்கள்; அதற்கு நான் பதில்
சொன்னேன்.

திரு. கோ. வீரையன் : கல் நட்டது அயோத்தியிலே; நடை
பெற்ற சம்பவங்கள் பகல்பூரிலே. அதைத் தொடர்ந்து, அந்தக்
கல் நட்ட இடத்திலே இப்போது கோயில் கட்ட அனுமதிக்க
வேண்டும்; அந்த அமைதியை திரு. மொலாய்சிங் மறுத்தால்
அவருக்குக் கொடுத்து வந்த ஆதரவை வாபஸ் பெறுவோம்
என்று திரு. மொலாய்சிங்கை மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.



அது மட்டுமல்ல. டில்லியிலே காங்கிரஸ் கட்சியும் ஜனதா
தள் (எஸ்) கட்சியும் சேர்ந்த கூட்டாட்சி. இராஜஸ்தானிலே
ஜனதா தள் (எஸ்) கட்சியும், பி.ஜே.பி. யும் சேர்ந்து கூட்டாட்சி.
தமிழ்நாட்டிலே காங்கிரஸ் கட்சியும் அண்ணா தி.மு.க.-வும்
சேர்ந்து கூட்டு, கலகத்திற்கான திட்டங்கள், இது என்ன மதச்
சார்பற்ற அரசியல் என்பதை இந்த நாட்டு மக்களுக்கு விளக்க
வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டுமல்ல. மண்டல் கமிஷன் அறிக்கை பற்றி நம்
முடைய மேதகு ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அது சம்பந்தமாக வழக்கு நீதிமன்றத்திலே நடைபெற்று, அது
வரவேற்கப்பட வேண்டுமென்று வலியுறுத்தப்பட்டிருக்கிறது.
நாங்கள் அதை ஏற்றுக் கொள்கிறோம்; பாராட்டு
கிறோம்.

அதோடு மட்டுமல்ல. அந்த மண்டல் கமிஷன் பரிந்துரையில்
27 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்கப்பட்டிருக்கிறது; அது கூட
போதாது. 50 சதவீதம் இட ஒதுக்கீடு அளிக்க வேண்டும்.
10 வருடமாக அந்தப் பரிந்துரையைக் கூட வெளியே காட்டா
மல் பூட்டிப் போட்டு வைத்திருந்த காங்கிரஸ் கட்சியும், 27
சதவீத இட ஒதுக்கீட்டைக் கூட எதிர்க்கக்கூடிய காங்கிரஸ்
கட்சியும் 50 சதவீத இட ஒதுக்கீடு கேட்கிற அண்ணா தி.மு.க.
வும் கூட்டு சேர்ந்திருப்பது 'எலியும் தவளையும் போல' சேர்ந்து
தமிழ்நாட்டு மக்களை குழப்பிக் கொண்டிருக்கிறார்கள். இது
தான் பின்தங்கிய மக்களுக்கு அண்ணா தி.மு.க. அளிக்கும் சமு
தாய நீதியா என்று கேட்க கடமைப் பட்டிருக்கிறேன்.

இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், தேசிய முன்னணியும் இடது
சாரி கட்சிகளும் மண்டல் கமிஷன் பரிந்துரையின் அடிப்படையில்
மதச் சார்பற்ற ஆட்சியை இந்த நாட்டு மக்களுக்கு அளிப்பதில்
உறுதியாக இருப்பதில், இதனால் ஆட்சியே போனாலும் பரவா
யில்லை என்று உறுதியாக இருக்கின்ற நிலையை இந்த நாட்டு
மக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காக
இலட்சோபலட்சம் மக்கள் அணி திரண்டு கொண்டிருக்கிறார்
கள். அதனுடைய பிரதிபலிப்பாகத்தான் திரு. வி. பி. சிங்
அவர்களுடைய வருகையின் போதும் அதோடு தமிழ்நாடு
முதலமைச்சர் அவர்களும் மற்ற இடதுசாரி கட்சிகளும் மேற்
கொண்ட பயணத்தின்போதும் தமிழக மக்கள் மத்தியிலே
ஏற்பட்ட எழுச்சியை நாம் பார்க்க முடிந்தது. ஆகையால்தான்
இவற்றை மறைப்பதற்கான முயற்சியிலே இந்தக் குழப்பங்களை
உண்டாக்கி அவர்கள் ஒரு சதியில் ஈடுபட்டிருக்கிறார்கள். 28-ந்

தேதி தமிழ்நாட்டிலே கலகத்தை உண்டாக்குவதற்கு ஏற்பாடு
களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைக் கவனத்தில்
எடுத்துக் கொண்டு, தமிழக மக்களுடைய உயிருக்கும் உடைமைக்
கும் பாதுகாப்பு அளிக்கும் முயற்சிகளைத் தமிழக அரசு மேற்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல. நம்முடைய மேதகு ஆளுநர் உரையில்
வறட்சி பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதாவது
7 மாவட்டங்களில் பருவமழை குறைந்திருப்பதாகக் கூறியிருக்
கிறார்கள். எங்களுக்குக் கிடைத்துள்ள தகவல்படி புதுக்
கோட்டை மாவட்டம், தருமபுரி மாவட்டம், சேலம் மாவட்டம்,
வடாற்காடு—அம்பேத்கார் மாவட்டம், திண்டுக்கல் காயிதே
மில்லத் மாவட்டம்—இதைப் போன்ற பகுதிகளிலே பெருமளவு
பருவமழை தவறி, ஏறத்தாழ 12,000 ஏக்கர் நிலத்தில் விவசாயப்
பயிர்கள் காய்ந்துவிட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : **பேரவையின்**
ஒப்புதலுடன் அலுவல் நேரம் சற்று நீட்டிக்கப் பெறுகிறது.

13-00 மணி

திரு. கோ. வீரையன் : வறட்சியினால் அப்பகுதி பாதிக்கப்
பட்டது என்று புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித் தலைவரே
அறிவித்து இருக்கிறார்கள். இப்படி வறட்சியினால் பாதிக்கப்
பட்டு இருக்கக்கூடிய அந்தப் பகுதிகளில் வாழக்கூடிய மக்களை,
அந்த விவசாயிகளை பாதுகாக்க அரசு ஒரு போர்க்,
கால அடிப்படையிலே வறட்சி நிவாரணப் பகுதி என்று
அறிவித்து வறட்சி நிவாரண வேலைகளைத் தொடங்க
வேண்டும். இந்த வறட்சியினால் குடிநீருக்கு ஏற்பட்டு இருக்
கக்கூடிய கஷ்டங்களை போக்குவதற்கும் இப்போதே நடவடிக்கை
எடுக்க வேண்டும். குடிதண்ணீர் வழங்கும்போது கிராமப்
புறங்களுக்கு லாரிகள் மூலமாக வழங்கக் கூடாது என்ற ஒரு
நியதியைக் கடைபிடிக்கிறார்கள். லாரிகள் மூலமாக குடி
தண்ணீர் முனிசிபல் நகரங்களுக்கு மட்டும் வழங்கப்பட்டு,
கிராமங்களுக்கு வழங்க முடியாத ஒரு நிலை இருக்கிறது. இந்த
வறட்சிப் பகுதிகளில் அந்த விதியைத் தளர்த்தி கிராமங்களுக்கும்
நகரங்களுக்கும் குடிதண்ணீர் கிடைக்கச் செய்யவும், அப்படி
கிடைக்கவில்லை என்றால் அந்தப் பகுதிகளுக்கு லாரி மூலமாக
குடிதண்ணீர் கிடைப்பதற்கான முயற்சியை அரசு எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



அதேபோல ஏறத்தாழ 500 கோடி ரூபாய்க்கு மேல்
விவசாயிகளுடைய கடனை இந்த அரசு தள்ளுபடி செய்
திருப்பதை நான் வரவேற்கிறேன். அதற்கு விவசாயிகள்
சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அதிலே
1989 அக்டோபர் மாதம் 2-ந் தேதி வரை உள்ள கடன்கள்
தள்ளுபடி செய்யப்படும் என்று முதலிலே அறிவிக்கப்பட்டது.
அதற்குப் பிறகு சில நிபந்தனைககள் விதிக்கப்பட்டன. 1986
ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தவணை தவறியிருக்கக்கூடிய
கடனுக்கு மட்டும்தான் இந்த நிவாரணம் என்று அறிவிக்கப்
பட்டது. அதனால் அதற்குப் பின்னால் கடன்பட்ட அந்த
விவசாயிகள் ஒரு அதிருப்தியோடு, மனக்குறைவோடு இருக்
கிறார்கள். அதையும் இந்த அரசு கவனத்தில் எடுத்துக்
கொண்டு 1989 அக்டோபர் 2-ந்தேதி வரையில் நிலுவையில்
இருந்த கடன்களுக்கு அந்தத் திட்டத்தை விஸ்தரித்து அந்த
விவசாயிகளுக்கும் அந்தக் கடனை தள்ளுபடி செய்து தர
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்
கிறேன்.

அதேபோல இந்த விவசாய விளைபொருள்களின் விலையைப்
பற்றிச் சொல்லும்போது இங்கே நம்முடைய மாண்புமிகு முத
லமைச்சர் அவர்கள் சமர்ப்பித்து இருக்கக் கூடிய துணை மானிய
கோரிக்கையிலேகூட குறிப்பிடப்பட்டிருக்கிறது.. கரும்புக்கு
10 ரூபாய் அவர்களுக்கு மானியம் வழங்கியிருக்கிறோம். அத
னால் வந்திருக்கக்கூடிய செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டு
மென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இன்றைக்கு 50 ரூபாய்
அடிப்படை விலை உயர்வும் 10 ரூபாய் மானியமாகச் சேர்த்து
60 ரூபாய் கூடுதலாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்
டிருக்கிறார்கள். உண்மைதான். சென்ற ஆண்டு இருந்ததை
விட 60 ரூபாய் கூடுதலாக விலை நிர்ணயிக்கப்பட்டிருக்
கிறது என்பது உண்மைதான். சென்ற ஆண்டு 250 ரூபாயாக
இருந்தது இந்த ஆண்டு 290 ஆக அறிவிக்கப்பட்டிருக்கிறது.
டன்னுக்கு 40 ரூபாய் கூடுதலாக அறிவிக்கப்பட்டிருக்கிறது
என்பது உண்மைதான். அதிலே சென்ற ஆண்டு ஆலைகள்
முழுவதும், அவற்றின் உற்பத்தியில் ரெக்கவரியைக் குறைத்து
காட்டியதன் விளைவாக இந்த ஆண்டு உயர்த்திக் கொடுத்து
இருக்கக்கூடிய விலை அந்த விவசாயிகளுக்கு டன்னுக்கு 40
ரூபாய் என்ற அளவிற்குக் கிடைக்கும் வாய்ப்பை அவர்கள்
இழந்து இருக்கிறார்கள். குறிப்பாக பெண்ணாடம் சர்க்கரை
ஆலையில் சென்ற ஆண்டு கிடைத்ததை விட இந்த ஆண்டு
கூடுதலாகக் கிடைப்பது வெறும் 12 ரூபாய்தான். அடிப்படை
விலையை 40 ரூபாய் என ஆட்சி உயர்த்திக் கொடுத்தாலும்
அவர்களுக்குக் கிடைப்பது சென்ற ஆண்டு கிடைத்ததைவிட
டன்னுக்கு 12 ரூபாய் மட்டுமேதான். ஏனென்றால் ரெக்க
வரியை ஆலை நிர்வாகம் குறைத்துக் காட்டியதன் விளை
வாக இந்த உயர்த்தப்பட்ட விலையை அந்த விவசாயிகள்

[திரு. கோ. வீரையன்] [1991 சனவரி 23

பெற முடியவில்லை. எனவேதான் நாங்கள் கேட்டுக் கொண்டோம். அடிப்படை விலையை ரூ. 280 என்பதற்குப் பதிலாக அடிப்படை விலையை ரூ. 300 என்று ஆக்கி அந்த விவசாயிகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலவச மின்சாரம் அளித்து விவசாயிகளுக்கும் வழங்கியிருப்பதற்கு நாங்கள் எங்களுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

குடிமனைப் பட்டா வழங்குவதிலே இந்த அரசு துரிதமான நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதை நான் நேரடியாகவே பல இடங்களில் பார்த்து இருக்கிறேன். குடிமனைப்பட்டா வழங்குவதற்கான முயற்சிகள் முழுவதும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும் நிர்வாக இயந்திரத்தில் சில தயக்கம் இருக்கிறது. அரசு மனையை அவர்களுக்குக் கொடுக்க முன்வந்தாலும் அங்கிருக்கக்கூடிய எல்லா அதிகாரிகளையும் நான் சொல்லமாட்டேன்—சில குறிப்பிட்ட அதிகாரி காரிகள் இந்த மனையை அவர்களுக்குச் சொந்தமாக கொடுக்கக் கூடிய நிலையைத் தவிர்ப்பதற்கு, தாமதப்படுத்துவதற்கு முயற்சி செய்கிறார்கள். அவைகளைத் தவிர்த்து அந்த குடிமனைப் பட்டாக்கள் அந்த ஏழை எளிய மக்களுக்கு கிடைக்கச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

அதுமட்டுமல்ல, நகரங்களில் பொது இடத்தை, அரசுக்கு சொந்தமான இடத்தை, சில தனியார் அபகரித்து வைத்திருக்கிறார்கள். அவைகளிலிருந்து அவர்களை அப்புறப் படுத்தி அந்த இடங்களை நகரங்களிலே குடிமனை இல்லாத ஏழைகளுக்கு வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல் விவசாயத் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலியை அமுலாக்குவதற்கான முயற்சிகள் கடுமையாக எடுக்கவேண்டியிருக்கிறது. உதாரணமாக சட்டக் கூலி கேட்டால் அந்த விவசாயத் தொழிலாளர்கள் மீது பொய் வழக்குகள் போடப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம், வலங்கைமான் வட்டம், தொழுதூர் என்ற கிராமத்தில் சட்டக் கூலி கேட்டதற்காக அவர்களுக்கு வேலை மறுக்கப்பட்டு அவர்கள்மீது வேறு ஒரு பொய் வழக்கு தொடுக்கப்பட்டு அந்த வழக்கில் 30 பேருக்குமேல் கைது செய்யப்பட்டு தீபாவளியை அவர்கள் திருச்சி சிறையில் கொண்டாடினார்கள். இன்றைக்கும் அறுவடை வேலை உள்ளூர் ஆட்களுக்கு மறுக்கப்படுகிறது. அப்படி எங்கே சட்டக்கூலி கேட்கிறார்களோ—அங்கெல்லாம் அவர்கள்மீது வேறு தவறான பொய் வழக்கு போட்டு அவர்கள் தாக்கப்படுகிறார்கள். எனவே தமிழகத்திலே விவசாயத்



1991 சனவரி 23] [திரு. கோ. வீரையன்]

தொழிலாளர்களுக்காக அறிவிக்கப்பட்டு இருக்கக்கூடிய அந்தக் குறைந்தபட்சக் கூலிச் சட்டத்தை நியாயமாக, உறுதி யாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டுவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

13-05 மணி

அதோடுமட்டுமல்லாமல், இந்தக் குத்தகை விவசாயிகளுக்கு 1990 ஆம் ஆண்டு ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, குத்தகை பாக்கி நிலுவைக்கு ஒரு நிவாரணம் அளித்ததற்கு நான் அன்றைக்கு நன்றி சொன்னேன். அந்த அறிவிப்பில் அவர்கள் காலத்தைத் தெரிவிப்பதற்காக இன்றும் 2 மாதம் காலம் நீட்டித்துத் தரவேண்டும் என்பதற்கான ஒரு சட்டத்தை இங்கே முன்மொழிந்து இருக்கிறார்கள். அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1974 ஆம் ஆண்டில் இந்த அவையிலே குத்தகை விவசாயிகளின் நிலத்தை அவர்களுக்கே சொந்தமாக்கக்கூடிய முறையில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு அது மத்திய அரசின் ஒப்புதல் பெறமுடி யாமல் திருப்பி அனுப்பப்பட்டது. அந்தச் சட்டம் இப்போது அரசினுடைய நிலுவையில் இருக்கிறது. அப்படி ஒரு சட் டத்தை மீண்டும் கொண்டுவந்து, தமிழகத்தில் இருக்கக்கூடிய குத்தகை விவசாயிகளுக்கு அந்த நிலத்தின் சொந்தக்காரர் களாக்குவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல், மலைவாழ் மக்களுக்கு ஏற்படக்கூடிய தொல்லை கள் பற்றி பலமுறை இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். கீழே இருந்து மேலே சென்று அவர்களை அந்த இடத்திலிருந்து வெளியேற்று காட்டு இலாக்கா அதிகாரிகளாலும், மற்றவர்களாலும், அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய தொல்லைகள் ஏராளம். மலைவாழ் மக்கள் இதனால் பெரும் துன்பத்திற்கும், துயரத்திற்கும் ஆளாக்கப்படுகிறார்கள். குறிப்பாக நீலகிரி மாவட்டத்தில் பூர்வ குடிமக்களாக இருப்பவர்கள் அவர்கள் குடியிருக்கக்கூடிய இடத்திலிருந்து விரட்டப்படுகிறார்கள். அவர்கள் குடியிருக்கக்கூடிய இடங்களை அவர்களுக்குச் சொந்தமாக்கிக் கொடுத்து அவர்களைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக, இந்தத் தமிழகத்தில் கிராமப்புற மக்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்தை—அவர்கள் வாங்கும் சக்தியை—ஏற்படுத்தித் தருவதற்கு அடிப்படையான ஒரு நிலச் சீர்திருத்தச் சட்டத்தை கொண்டு வந்து, சட்டத்தினுடைய சந்துபொந்து களை வைத்து பினாமிகள் எல்லாம் ஓடிவிடாமல் செயல்படுத்தக் கூடிய முறையில் இன்றைக்குத் தமிழகத்தில் விவசாயத்தில்

இருக்கக்கூடிய நிலங்களை எல்லாம் வரையறுத்து ஒரு குடும்பத்திற்கு இவ்வளவு என்று கொடுத்துவிட்டு மீதி முழுவதையும் எந்த நிபந்தனையும் இல்லாமல் உபரி என்று அறிவித்து அந்த நிலங்களை எல்லாம் எடுத்து நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்கு ஒரு உறுதியான சட்டத்தைக் கொண்டு வந்து அந்தச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான உறுதியான நடவடிக்கைகளை இந்த அரசு எடுப்பது என்பது தமிழகத்திலே இந்த ஆட்சியின்மீது நம்பிக்கை வைத்து இருக்கக்கூடிய அந்த கிராமப்புற மக்களுக்கு இடையிலே யார் அவர்களை திசைத் திருப்ப முயற்சித்தாலும் ; தவறான பாதையில் கொண்டு செல்ல முயற்சித்தாலும் அதிலிருந்து அவர்களை நல்ல பாதையில் கொண்டு செல்வதற்கு ஒரு சரியான ஜனநாயக இயக்கத்தோடு கிராமப்புற மக்களை இணைத்துக் கொண்டு வருவதற்கு இந்த மக்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களைப் போக்குவதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கூறக்கூடிய அதேநேரத்தில் (மணியடிக்கப் பெற்றது).

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இறுதியாக என்று ஏற்கெனவே சொல்லிவிட்டீர்கள்.

**திரு. கோ. வீரையன் :** ஒரே ஒரு விஷயம், 2 நாட்களாக கூட்டுறவுத் தேர்தல்பற்றி விவாதங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஒரு பக்கத்திலே தேர்தல் சரியாக நடக்கவில்லை என்று சொல்கிறார்கள். இன்னொரு பக்கத்திலே தேர்தல் சரியாக நடந்தது என்று சொல்கிறார்கள். அரசு அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். என்னுடைய நினைவு முன்னால் உள்ளாட்சி மன்றத் தேர்தல் நடந்தது. உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆதி திராவிடர்கள், பெண்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் போனால், அவர்களை அரசு நியமிப்பது என்று முன்னால் இருந்த ஆட்சி நியமித்தது, அந்த உறுப்பினர்கள் பொறுப்பில் அமர்ந்து இருந்தார்கள். அந்த நேரத்தில் நாங்களும், திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து இப்படி ஆட்சியே நியமனங்களைச் செய்வது சரியல்ல என்று கண்டித்தோம்.

அதற்குப் பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு நியமிக்கப்பட்ட நியமனங்கள் பூராவும் ரத்து செய்து விட்டன. அந்த இடத்திலே தாழ்த்தப்பட்டவர்கள், இருக்க வேண்டும் ; பெண்கள் இருக்க வேண்டும் என்பதிலே யாருக்கும் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. மார்க்சிஸ்டு கம்யூனிஸ்டு கட்சிக்கும் அதிலே ஆட்சேபணை இல்லை. ஆனால் யார் அந்த இடத்தை நிறைவு செய்யவேண்டும் என்கிறபோது தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் வராவிட்டால் அந்த ஊராட்சி மன்றமோ அல்லது ஊராட்சி ஒன்றியமோ அவர்களே அந்த



இடங்களைப் பூர்த்தி செய்து கொள்ளலாம். அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் • என்று விதிகளை மாற்றி முன்னால் அரசு நியமித்து இருந்ததை ரத்துசெய்து அவர்களே தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்ற முறையிலே விதியை மாற்றி; ஏற்பட்ட தவறை நிறைவு செய்து இந்த அரசு உள்ளாட்சி அமைப்புகளிலே அப்படிப்பட்ட இடங்களைப் பூர்த்தி செய்தது. ஆனால் இன்றைக்கு அப்படி மறுத்த அதே நிலை கூட்டுறவுத் துறையிலே 2 பெண்களை, ஒரு ஆதி திராவிடரைக் கட்டாயம் தேர்ந்தெடுக்கவேண்டும். 'அப்படித் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால் அதற்கு அவர்கள் நியமிக்கப்படுவார்கள். அதிலே யாருக்கும் ஆட்சேபணை இல்லை. இந்த நியமனத்தை தேர்ந்தெடுக்கப்பட்ட அந்த மெஜாரிட்டி போர்டு கூடி தீர்மானித்துக் கொள்வதா ; இந்த நியமனத்தை அரசே நியமிப்பதா என்பதுதான் இன்றைக்கு இருக்கக்கூடிய பிரச்சினை. எங்களுடைய கருத்து அரசு நியமிப்பது என்பது சரியல்ல. தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு யார் மெஜாரிட்டியாக இருந்தாலும் அவர்கள் அந்த இடத்தை நிறைவு செய்ய வேண்டுமென்ற முறையிலே சரி செய்ய வேண்டுமென்ற மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்தைக் கூறி வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி முடிக்கின்றேன். வணக்கம்.

13-10 மணி.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரை மீது நடைபெறுகின்ற இந்த 'விவாதத்திலே கலந்துகொண்டு என்னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு வாய்ப்பளித்த உங்களுக்கு என்னுடைய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வளைகுடாப் போரினால் நாட்டிற்குப் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ள இன்றைய காலக்கட்டத்தில் இந்திய அரசு எடுக்கும் எல்லாவகையான முயற்சிகளுக்கும், தேசிய நலனில் அக்கறை கொண்டுள்ள நமது தமிழக அரசு உறுதுணையாக இருந்து முழு ஒத்துழைப்பு வழங்கும் என்று ஆளுநர் தெரிவித்து இருப்பது வரவேற்கத்தக்கதாகும். அதற்காக அவருக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப் பட்டிருக்கிறேன். அதேபோன்று இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னால், ஆளுநர் உரையில் தவறாமல் இடம்பெறுவது மாநில சுயாட்சி. அதற்காக ஒரு மாநாட்டை திருச்சியிலே கூட்டி, தீவிரமாக அதற்காக வாதாடி இருக்கிறீர்கள். ஆனால், இந்த மாநில சுயாட்சி கோரிக்கைக்கும் அகாலி தளம், அஸ்ஸாம் கன பரிஷத் போன்ற இயக்கங்கள் வைத்துள்ள கோரிக்கைகளுக்கும் இடையேயுள்ள ஒற்றுமையை எடுத்துரைத்தும் அவற்றில் மறைந்து கிடக்கும் பிரிவினைவாதத் தன்மையைச் சுட்டிக்காட்டியும் தேசிய சக்திகள் எச்சரிக்கை

விடுத்தன. இந்த ஆண்டு ஆளுநர் உரையில் அந்தக் கோரிக்கையை தவிர்த்து இருப்பது ஒரு மாற்றத்தைக் காட்டுகிறது. அதுவே ஒரு ராஜதந்திர நடவடிக்கையாக இல்லாமல் உண்மையான மனமாற்றமாக இருந்தால் வரவேற்கத்தக்கதாகும்.

மாநிலங்களுக்கிடையேயான குழு, இண்டர்-ஸ்டேட் கவுன்சில் அமைக்கப்பட்டிருப்பதைப் பற்றி மாறுபட்ட கருத்து நிலவி வருகிறது. நமது நீண்ட நாளைய வேண்டுகோள் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இந்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாக ஆளுநர் உரையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அரசியல் அமைப்புச் சட்டம் 263-ஆவது பிரிவின் கீழ் அமையக் கூடிய இத்தகைய குழு, எந்தவித பலனும் இல்லாததாகவும், எந்த நோக்கத்தையும் நிறைவேற்ற முடியாததாகவும் இருக்கும் என்று கூறி அதனை நிராகரித்து இந்த அவையில் 16—4—1974 அன்று முதலமைச்சர் இத்தீர்மானத்தை முன்மொழிந்து பேசும் போது வலியுறுத்தியிருக்கிறார். அதன் பின்னர், தற்போதைய நிலையினை எப்போது முன் வைத்தார் என்பதை என்னாலே புரிந்துகொள்ள இயலவில்லை. நீண்டநாளைய வேண்டுகோள் என்பதால் அதை விளக்குமாறு மாண்புமிகு முதல்வர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

இலங்கையிலேயிருந்து ஒரு இலட்சத்து 22 ஆயிரம் பேர் அகதிகளாக இங்கே வந்திருப்பதாகவும் அதற்கு மத்திய அரசு இது வரை 13 கோடியும் மாநில அரசு 8 கோடியும் அனுமதித்து இருப்பதை ஆளுநர் உரை சுட்டிக் காட்டுகிறது. ஆனால் அதற்குக் காரணமாக இருந்த தேசிய முன்னணி அரசின் கொள்கைகளையும் மாநில அரசின் நடவடிக்கைகளையும் இரும்புத்திரை போட்டு இந்த உரை மூடுகிறது. இந்திய—இலங்கை உடன்பாட்டை அமல் படுத்தத் தவறியதோடு அதற்கு உத்தரவாதமாக இருந்த இந்திய அமைதி காக்கும் படையையும் தேசிய முன்னணி அரசு திரும்பப் பெற்றது. அதன் விளைவாக உடன்பாடு சிதைக்கப்பட்டது. வடகிழக்கு மாகாண அரசு கலைக்கப்பட்டு அதன் முதலமைச்சராக இருந்த வரதராஜபெருமாள்.... ....(குறுக்கீடு) I am not yielding; there is no Point of order. அகதியாக்கப்பட்டார். அவருடைய இயக்கத்தின் முன்னணித் தலைவர்கள் தமிழகத்தின் தலைநகரில் படுகொலை செய்யப்பட்டார்கள்............(குறுக்கீடு).

திரு. செ. நூர்முகமது : பாயிண்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு தவறான தகவல் இந்த அவைக்குத் தெரிவிக்கப்படுகின்ற காரணத்தால் நான் தலையிடுகிறேன். இந்த இந்திய அமைதிப்படையைத் திரும்பப் பெறவேண்டுமென்ற முடிவு காங்கிரஸ் ஆட்சியினால் எடுக்கப்பட்டதா? அல்லது தேசிய முன்னணி ஆட்சியினால்





எடுக்கப்பட்டதா என்பதைத் தெளிவு படுத்த வேண்டும். காங்கிரஸ் ஆட்சி எடுத்த முடிவைத்தான் தேசிய முன்னணி ஆட்சி நிறைவேற்றிருக்கிறது என்பதை நான் அவையிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முடிவு எப்படி எடுக்கப்பட்டது என்பதைவிட, இந்திய—இலங்கை உடன்பாட்டை அமல்படுத்துவதற்காகவும் தமிழர்களைப் பாதுகாப்பதற்காகவும் அந்தப் படை அங்கே அனுப்பப்பட்டது. இந்திய—இலங்கை உடன்பாடு முழுமையாக நிறைவேற்றப்படாத கட்டத்தில் அதைத் திரும்பப் பெற்றிருக்கக் கூடாது என்பதுதான் எங்களுடைய நிலை. அதையேதான் மீண்டும் மீண்டும் நாங்கள் வலியுறுத்திக் கொண்டு வருகிறோம். இந்தப் படுகொலைகள், தமிழ்நாட்டிலே நடைபெற்ற படுகொலைகள் எப்படி சாத்தியமாயிற்று? ..............(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் கேட்டார்; அதற்குப் பதில் சொல்லிவிட்டார். நீங்கள் உட்காருங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, படையை வாபஸ் வாங்குகிற விஷயத்தில் யார் முடிவெடுத்தார்கள் என்பதல்ல. தேதிவரைக்கும் தீர்மானிக்கப்பட்டு, 1990-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதி வாபஸ் வாங்கப்படும் என்று அறிவித்தது அன்றைக்கு இருந்த காங்கிரஸ் அரசு, ராஜீவ்காந்தி பிரதமராக இருந்த போதுதான். அதற்குப் பிறகு புதிய அரசு இரண்டு மாதங்கள் நீடித்து, மார்ச் மாத கடைசியிலேதான் வாபஸ் வாங்கப்பட்டது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, ராஜீவ் காந்தியினுடைய அரசாங்கம், படையை வாபஸ் வாங்குகிறோம் என்று சொல்கிற ஒவ்வொரு நேரத்திலும், அந்த ஒப்பந்தத்தில் இருக்கிற ஷரத்துக்கள் அத்தனையும் நிறைவேற்றப்பட்ட பிறகுதான் அந்தப் படைகள் வெளியே வரும் என்பதையும் சேர்த்தே சொல்லிக் கொண்டு வந்தார்கள். இன்றைக்கு ஏன் ஒரு பகுதியை நீங்கள் முதலிலே இங்கே வருவித்துக் கொண்டீர்கள் என்று சொன்னால், நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற, கொடுக்க வேண்டிய காரியங்களையெல்லாம் கொடுத்ததற்குப் பிறகு ஒரு கணமும் எங்கள் படை அங்கே இருக்காது என்பதற்கு சிம்பாலிக்காக வரவழைக்கப்பட்டதே தவிர முற்றிலும் அவர்களுடைய உரிமையைப் பெறாமல் அத்தனையும் இங்கே வாபஸ் வாங்கப்படும் என்று எப்பொழுதுமே சொன்னதில்லை.

13—15 மணி.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : தலைவரவர்களே, எங்களுக்கு வேண்டிய பதில், தேசிய முன்னணி அரசு அந்தப் படையை வாபஸ் வாங்கியதா? இல்லை, ஏற்கனவே இருந்த ராஜீவ் காந்தியினுடைய அரசு வாபஸ் வாங்குவதற்கு உத்தரவிட்டதா என்பதற்குத்தான் பதிலே தவிர, இதையெல்லாம் வளைத்து, வளைத்து, வளைத்துச் சொல்வதற்காகக் கேட்கவில்லை.

திரு, குமரி அனந்தன் : தயவு செய்து, அந்த ஒரந்துக்களை நிறைவேற்றாமல் திரு. வி. பி. சிங் அரசு படையை வாபஸ் வாங்கிவிட்டது என்பதுதான் எங்களுடைய கருத்து.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களே, ஏற்கனவே இரண்டு நாடுகளுக்கும் உள்ள ஒப்பந்தம், பீஸ்கீப்பிங்ஃபோர்ஸ்—அதை வாபஸ் வாங்கவேண்டும் என்று சொல்லி அந்த அரசும் இந்த அரசும் செய்து கொண்ட ஒப்பந்தத்தை மீறியது போல் அல்லவா ஆகும் ? இந்தியாவும் இலங்கையும் சேர்ந்து போட்ட ஒப்பந்தத்தை இவர் மீறவில்லை. அந்த ஒப்பந்தப்படியே அப்படியே நடந்து கொண்டிருக்கிறாரே தவிர இவர் போட்ட உத்தரவு அல்ல.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவரவர்களே. . . . . . . .

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இரண்டு பேர் பேசியாகிவிட்டது. மூன்றாவது பாய்ண்ட் ஆப் ஆர்டரா ?

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே. . . . . . . . . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மோகன் நிற்கிறார். உங்கள் ஊர்க்காரர்.

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இதுவரை காங்கிரஸ் கட்சியினர் சொல்லி வந்த கருத்து (குறுக்கீடு) மிஸ்டர் பாலசுப்பிரமணியம் அவர்களே, நீங்கள் எத்தனையோ முறை குறுக்கிட்டிருக்கிறீர்கள். நான் கேட்கிறேன். உங்களுடைய பேச்சில் குறுக்கிடவில்லை. திரு. குமரி அனந்தன் அவர்கள் சொன்னதாலே ஒரு விளக்கம் கேட்கிறேன். அவ்வளவுதான். இதுவரை காங்கிரஸ் கட்சி சொல்லி வந்ததற்கும் இன்றைக்கு நம்முடைய எதிர்க்கட்சியின் துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் அவர்கள் சொல்வதற்கும் ஒரு வேறுபாடு காணப்படுகிறது. அதற்குத்தான் எழுந்தேன். காங்கிரஸ் கட்சி அன்றைக்கு படையை அனுப்பி,



அந்தப் படையை அங்கேயிருந்து திரும்பப் பெறுவது என்ற முடிவெடுத்த நேரத்தில், அவர்கள் திரும்பத் திரும்பச் சொன்னது, தமிழர்களுக்கு நாங்கள் என்னவெல்லாம் உறுதி மொழி தந்தோமோ அதை முழுவதுமாக நிறைவேற்றி விட்டோம். வரதராஜப் பெருமாளை அங்கே முதலமைச்சராகக் கொண்டு வந்து அமர வைத்து விட்டோம். கேட்டதற்கும் மேலாக யாழ்ப்பாணத் தமிழர்களுக்குச் செய்துவிட்டோம்; ஆகவே, நாங்கள் படையைக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள். இப்பொழுது அவர்கள் சொல்வது வேறு மாதிரியாக இருக்கிறது. அன்றைக்குச் சொன்னதற்கும் இன்றைக்குச் சொல்வதற்கும் ஒரு முரண்பாடு காணப்படுகிறது.

திரு. குமரி அனந்தன் : தமிழ் மக்கள் கேட்டதற்கும் மேலாக நாங்கள் கொடுத்துவிட்டோம் ; அவர்களுக்காகக் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் சொன்னவைகளெல்லாம் இன்னும் கொடுக்கப்படவில்லை. அவைகளையும் வாங்கிக் கொடுப்போம் ; கேட்பதற்கு மேலும் வாங்கிக் கொடுப்போம் என்பதுதான் தமிழர்கள்மீது பற்றுகொண்ட இராஜீவ் சொன்ன சொல்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியம் : துணைத் தலைவரவர்களே, சென்னை நகரத்திலே திரு. பத்மனாபா அவர்கள், அவர்களுடைய சகாக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். இது எப்படிச் சாத்தியம் ஆயிற்று ? தமிழகத்திலே எல்.டி.டி.இ. யினுடைய நடமாட்டம் தாராளமாக இருக்கிறது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக அமைந்தது. மக்களவையிலே பிரதமர் திரு. சந்திரசேகர் அவர்கள், தமிழ்நாட்டிலே பயிற்சி முகாம்கள் நடைபெறுவதாகக் குற்றம் சுமத்தினார்கள். முன்னாள் அமைச்சர் திரு. சிதம்பரம் அவர்கள் இதே குற்றச்சாட்டைக் கூறி, நேற்றைய தினம் இங்கே சுட்டிக்காட்டப்பட்டது. இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் மறுக்கிறீர்கள் என்றாலும் அண்மையில் ஒரு பயிற்சி முகாம் போலீஸ் தலையீட்டின் பேரில் பாதியில் நிறுத்தப்பட்டதாகப் பத்திரிகை செய்தி வந்திருக்கிறது. அந்தப் பயிற்சி முகாம் குறித்து நோட்டீஸ் வெளியிட்டிருக்கிறார்கள். அதிலே பிரபாகரன் படம் இருக்கிறது. தமிழ் ஈழம் வெல்க என்ற முழக்கம் இடம் பெற்றிருக்கிறது. அந்த நோட்டீசை நான் ஏற்கனவே பேரவைத் தலைவர்களிடத்திலே காட்டி இங்கே வாசிக்கலாம் என்று அனுமதி பெற்றிருக்கிறேன். ''வாழ்க பெரியார், வளர்க பாவேந்தர் புகழ், வெல்க தமிழ் ஈழம்''—பிரபாகரன் படம் இருக்கிறது—'' ஒரு மக்கள் சமுதாயத்தின் சுதந்திரத்தை அவர்கள் எழுச்சியை எந்த ஆயுதப் படைகளைக் கொண்டும் அடக்கி விட முடியாது. இது மனித வரலாறு பகரும் உண்மை ,, என்று அதிலே போட்டிருக்கிறார்கள்.
—தளபதி பிரபாகரன்

டிசம்பர் இறுதியில், திராவிடர் கழக இளைஞர் அணி
கொள்கை விளக்கப் பயிற்சி முகாம், திருமூர்த்தி மலை,
உடுமலை என்று போட்டு இருக்கிறார்கள். அந்த ஊர்காரர்
கள்தான் மற்ற நோட்டீஸ்களையும் அடித்திருக்கிறார்கள்.
இப்படி நோட்டீஸ் போட்டு பயிற்சி முகாம் நடைபெற்றிருக்
கிறது. எங்கே நடைபெற்றிருக்கிறது என்று சொன்னால்,
நான் முன்பு இதே அவையிலே சொன்னேன் அல்லவா,
அதே பகுதியிலே. இதே அவையிலே பேசியிருக்கிறேன்.
வெளியிலே சொல்லியிருக்கிறேன். அதே மலைத் தொடரில்
தான் இந்தப் பயிற்சி முகாம் நடைபெற்றிருக்கிறது.

13-20 மணி.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, விடுதலைப் புலிகளினுடைய
பயிற்சி முகாம் என்பது வேறு. திராவிடர் கழகத்தினுடைய,
அந்த அணியிலே இருக்கிற அவர்களுடைய இயக்கக் கொள்கை
களைப் பரப்புவதற்கு ஒரு பயிற்சி முகாம். எங்கள் இளைஞர்
அணி பயிற்சி முகாம். மாணவர் அணி பயிற்சி முகாம்.
இது எல்லா இயக்கத்திலேயும் கொள்கை விளக்கங்களைத் தர,
கட்சியினைப் பற்றி சொல்லிக் கொடுக்க இளம் தலைமுறை
யினருக்கு அமைப்பது. ஆனால் பிரபாகரன் படத்தை
அவர்கள் போட்டிருக்கிறார்களே என்றால், பிரபாகரனை
வெறுக்கவில்லை. யாரும் அந்தக் கொள்கையை வெறுக்க
வில்லை. ஆனால், அவர்கள் இங்கே வந்து முகாம்
அமைத்து, வன்முறையில், ஈடுபடக்கூடாது என்பதுதானே
தவிர, அவர்கள் 'தனி ஈழம்' கேட்பதை எந்த உணர்ச்சி
உள்ள தமிழனும் இந்த நாட்டிலே மறுக்க மாட்டான்
என்பதை நண்பர் மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிர
மணியம் அவர்கள் உணரவேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தமிழ் ஈழம் அமைவதை
காங்கிரஸ் கட்சி ஏற்றுக்கொள்ளவில்லை. உங்களோடு இருக்கிற
கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. நிச்சயமாக மார்க்சிஸ்ட்
கம்யூனிஸ்ட் கட்சி ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தியக் கம்யூ
னிஸ்ட்டு கட்சியும் ஏற்றுக்கொள்ளவில்லை. எந்த தேசியக்
கட்சியும் அந்த நிலையை ஏற்றுக் கொள்ளவில்லை என்பதை
நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அந்தப் பயிற்சி
முகாமில் தவறு எதுவும் இல்லையென்று சொன்னால், போலீஸ்
தலையிட அவசியம் என்ன? போலீஸ் தலையிட........

* திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, தனித் தமிழ் ஈழம் அல்ல
தமிழர்களுக்கு சுயாட்சி உரிமை கொண்ட வடகிழக்கு



மாகாணம் என்பதுதான் எங்களுடைய கொள்கை. அதில்
மாற்றம் இல்லை. ஆனால், அவர்களோடு இருக்கிறார்களே,
அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம்— அவர்களுடைய
நிலைபாடு தமிழ் ஈழம் பற்றி என்ன என்பதை விளக்க
வேண்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தமிழ் ஈழம்
கொள்கையை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைச்
சொல்லியாகிவிட்டது. இதே அவையிலே, பொறுப்பேற்ற
தற்குப் பின்னால் முதலமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்
தமிழ் ஈழம் பிரச்சினையை மத்திய அரசுக்கு நாங்கள் விட்டு
விட்டோம் என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அவை
எல்லாவற்றையும் இங்கே நினைவுபடுத்திக் கொண்டிருக்க
வேண்டிய அவசியம் இல்லை. ஏன் சொல்கிறேன் என்று
சொன்னால், அந்தப் பக்கத்திலே சில நாட்களுக்கு முன்னால்
குறுமலைக்குக் காவலர்கள் சென்றிருந்தார்கள். போலீஸ்
காரர்கள் சென்றிருந்தார்கள்.

அதேபோல், 'ஃபாரஸ்ட் ரேஞ்சர்கள்' சென்றிருந்தார்கள்.
அவர்கள்மீது துப்பாக்கிப் பிரயோகம் குறுமலையிலே நடை
பெற்றது. அந்த துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றி புகார்
செய்யப்பட்டிருக்கிறதா? புகார் தாக்கல் ஆகியிருக்கிறதா?
புகார் தாக்கல் ஆகியிருக்கிறது என்று சொன்னால், யார் மீது
புகார்? கிரைம் நெம்பர் என்ன? என்ன நடவடிக்கை
எடுக்கப்பட்டிருக்கிறது? ஏனென்றால், எனக்குப் பதில்
சொன்ன டி.ஐ. ஜி. சொல்கிறார் : மேலே சின்னாருக்குப்
பக்கத்திலே ஒரு முறை இவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம்
நடைபெற்றதாகவும், அதன் மீது புகார் தாக்கல் செய்யப்பட்
டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார். புகார் யார் தாக்கல்
செய்தது? அதனுடைய கிரைம் நெம்பர் என்ன? எடுக்கப்
பட்ட நடவடிக்கை என்ன? அடையாளம் தெரிந்தவர்களால் சுடப்
சுடப்பட்டார்களா? அடையாளம் தெரியாதவர்களால் சுடப்
பட்டார்களா? இதையெல்லாம் சொல்லியிருக்க வேண்டும்.
எதையுமே சொல்லாமல், அந்தப் பக்கத்திலே நடைபெற்ற
துப்பாக்கிப் பிரயோகம் இவர்களாலே அல்ல. வேறு நபர்கள்
காவலர்களை நோக்கி சுட்டார்கள். எனவே, அவர்கள் வந்து
விட்டார்கள் என்று சொல்லியிருக்கிறார்கள். அது முதல்
'இன்சிடெண்ட்'. நான் சொல்வது, குறுமலையில் நடை
பெற்றது இரண்டாவது சம்பவம். இந்த இரண்டு சம்பவங்களும்
அடுத்தடுத்து நடை பெற்றிருக்கின்றன.

இன்றுகூட காலைப் பத்திரிகையிலே பார்த்தால் என்ன
வருகிறது? புதுக்கோட்டைப் பகுதியில் ஈழப் புலிகள் அங்கு
இருக்கிற மக்களை, மீனவர்களை மிரட்டி, "எங்களுக்கு
டீசல் வேண்டும்; பெட்ரோல் வேண்டும்; சோறு வேண்டும்;

அரிசி வேண்டும் '' என்று நேற்று 'எக்ஸ்டார்ஷ'னில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது. எனவே தமிழகம் இந்தியாவின் பிற பகுதிகளிலே இருக்கின்ற பிரிவினைவாதிகளுக்கும், பயங்கரவாதிகளுக்கும் ஆயுதச் சந்தையாக மாறி வருவதாகக் குற்றம் சுமத்தியிருக்கிறார்கள். தமிழகத்திலே இன்று அனைவரும் அறிந்திருக்கிற ஆயுதத்தின் பெயர் ' ஏ.கே. 47 ''. அந்த ஆயுதத்திற்கு வடிவம் கொடுத்த '' கலாஷ்னிகோர்வின் '' என்ற பெயராலே அது அழைக்கப்படுகிறது. இதற்கு இன்றைக்குப் புதிதாக பல பெயர்கள் வந்திருக்கின்றன. ' இம்ப்ரூவ்டு வெர்ஷன்ஸ் ' நிறைய வந்திருக்கின்றன. 56 இருக்கிறது : வேறு ' வெர்ஷன் இருக்கிறது. இன்று தமிழகத்திலே தயாரிக்கப்படுகிற இவ்வகை ஆயுதத்திற்குப் பெயர் 'அருள் 89 '. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அதன் பாகங்கள் தயாரிக்கப்படுவதாவும், வேறு இடத்தில் 'அசெம்பிளிங் ' செய்வதாகவும், சொல்கிறார்கள். இதன்மீது எடுக்கப்பட்டிருக்கிற நடவடிக்கை என்ன என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன். இவை அனைத்திற்கும் பொறுப்பேற்க வேண்டியது நமது மாநில அரசும், முந்தைய மத்திய அரசும் ஆகும். இலங்கை தமிழர் பிரச்சினையில் தமிழக அரசுக்கு என தனியாக ஒரு கொள்கை இருப்பதைப் போல இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது (குறுக்கீடு).

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'செய்தி சொல்கிறார்கள் ; இங்கே செய்யப்பட்டிருக்கிறது ;' என்று சொல்கிறார். இதற்கு ஏதாவது ஆதாரம் இருக்கிறதா ? சொல்லிக்கொண்டே இருக்க வேண்டுமென்றால், நாம் எல்லோரும் சொல்லிக்கொண்டே போகலாம். இன்றைக்கும், மாண்புமிகு அமைச்சர் திரு. சுப்பிரமணியசுவாமி அவர்கள் ஸ்டேட்மெண்ட் கொடுக்கிறபோது, ' தமிழ் ஈழம் என் உள்ளத்திலே பதிந்து விட்டது. என்று ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்கிறார். மத்திய அரசாங்கத்திலே இருக்கிற திரு. சுப்பிரமணியசுவாமி ஸ்டேட்மெண்ட்' கொடுக்கும்போது—'தமிழ் ஈழம் என் உள்ளத்தில் பதிந்திருக்கிறது ' என்று குறிப்பிட்டுக் கோடிட்டுக் காட்டியிருக்றார் ; செய்தி நிருபர்களுக்குப் பேட்டித் தருகிறார் ; அவர்; மத்திய அரசாங்கத்தினுடைய அமைச்சர்: அவரே, இப்படிச் சொல்லிக் கொண்டிருக்கும்போது,—இவர், ' இருக்கிறது சொல்லப்படுகிறது; வருகிறது ' என்று சொல்கிறாரே ! எங்கே வருகிறது ? எதிலே என்ன இருக்கிறது என்பதை விளக்குவாரா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அதாவது, துப்பாக்கியின் உதிரி பாகங்கள் தயாரிக்கப்படுவதகாக ஒரு வழக்கு போடப்பட்டு, அந்த வழக்கின் நிலை என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. வழக்கு நடைபெறவில்லை.





அதையெல்லாம், நான் சொல்ல வேண்டாமென்று சொல்லவில்லை. எல்லோருக்கும் தெரியும். அமைச்சருக்கும் தெரியும் ; முதலமைச்சருக்கும் தெரியும். டி.ஐ. ஜி. ஒப்புக்கொண்டிருக்கிறார். இல்லாததை எதையும் நான் சொல்லவில்லை. இருப்பதைத்தான் நான் சொல்கிறேன். இங்கே இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு என, தமிழக அரசுக்குத் தனியாக ஒரு கொள்கை இருப்பதைப் போல இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதில் தமிழ் ஈழ மக்களுக்கு நிலையான அமைதி, உரிமை கிடைத்திட வேண்டுமென்று கோடிட்டுக் காட்டப்பட்டிருக்கிறது. அப்படியானால், அதன் விவரங்களையும் இந்த அரசு வெளியிட வேண்டுமென்று வற்புறுத்துகிறேன்.

சென்ற ஆண்டில் நமது நாட்டில் பல பகுதிகளில் கலவரங்கள் கோரத் தாண்டவம் ஆடி பல உயிர்களைப் பலி கொண்டிருக்கின்றன. அதற்கு தி. மு. க. பொறுப்பில்லையா ? தி.மு.க பொறுப்பு இல்லாமலே மத்திய அரசில் அங்கம் வகித்தார்களா ? தமிழ்நாட்டில் எதுவுமே நடக்கவில்லையா? பிறகு, மிகுந்த மன நிறைவு எப்படி ஏற்பட்டது என்பதை நான் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

13–25 மணி.

அதேபோல் இந்த ஆளுநர் உரையில் மதுவிலக்கு பற்றி மௌனம் சாதிக்கப்பட்டிருக்கிறது. மலிவு விலை மதுவை எதிர்த்து அரசாங்கத்தினுடைய கொள்கையை ஒட்டி சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட காந்தியவாதிகள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு இருக்கிறார்கள். அவர்களைச் சிறையில் அடைக்கிற சூழ்நிலையில் திரு. ஜகந்நாதன் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் சி வகுப்பில் இடம் கொடுக்கப்பட்டது. ஏன் ? உயர் வகுப்பு கொடுக்கக்கூடாதா ? அவர்களை விடுதலை செய்யக்கூடாதா ? மற்றவர்கள் மீது இருக்கிற வழக்குகளை எல்லாம் வாபஸ் வாங்குகிறீர்கள். பல அரசியல் கட்சிகள் மீது இருக்கிற வழக்குகள் எல்லாம் வாபஸ் பெறப்பட்டிருக்கின்றன. எங்களுடைய துணைத் தலைவர் திரு. அனந்தன் அவர்கள் மீது இருக்கிற வழக்கும் சரி, அதேபோல் திரு. ஜகந்நாதன் மீது இருக்கிற வழக்கும் சரி இன்று வரை வாபஸ் பெறப்படவில்லை. ஏன் ? அப்படி வாபஸ் பெறுவதற்கு ஏதேனும் தனியான நியதிகளைப் பின்பற்றுகிறீர்களா என்பதைத் தெளிவாக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

நீங்கள் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தவுடனே இங்கே பல புகார்கள் கூறப்பட்டன. திரு. எம். ஜி. ஆர். அரசின் மீது பழி போடுவதற்காக பல குற்றச்சாட்டுகள் கூறப்பட்டன. சாராய சாம்ராஜ்யம் நடப்பதாக வருணிக்கப்பட்டது. அவற்

றின் ஊற்றுக்கண்களை மூடிவிட்டதாக மார்தட்டினார்கள்.
ஆனால் இன்றைய தினம் என்ன நடைபெறுகிறது ? தமிழ்
நாட்டுத் தெருக்களில் கள்ளச் சாராயம் ஆறாகப் பெருகி
ஓடிக்கொண்டிருக்கிறது. நீங்கள் ஒரு ஒன்றியத்திற்கு
20 கடைகள் திறக்கிறீர்கள் என்று சொன்னால் அதிலே
10 கடைகள்தான் ஏலம் எடுக்கிறார்கள். மற்ற இடங்களிலே
கள்ளச்சாராயம் விற்கப்படுகிறது. அரசுக்கு கடைகளிலேயே
கள்ளச்சாராயம் விற்கப்படுகிறது. இதில் காவல் துறை
உடந்தையாக இருக்கிறது. அரசுக்கு இதிலே ஏதாவது
இலாபம் உண்டா ? சமூக நீதி கிடைக்கவேண்டும் ; நல்ல
சாராயம் கிடைக்க வேண்டும் ; கள்ளச்சாராயம் குடித்தால்
மக்களுடைய உடல் எல்லாம் பாழாகிறது என்று சொன்னீர்
களே, ஆனால் இன்றைக்குக் கள்ளச்சாராயம் அதேபோல்
தான் இருக்கிறது. எனவே ஏன் இந்தக் கொள்கையை
மாற்றியமைக்கக்கூடாது ? மீண்டும் மறு பரிசீலனை செய்ய
வேண்டும் என்று உங்களை நான் பணிவோடு கேட்டுக்
கொள்ள விரும்புகிறேன்.

மக்களாட்சித் தத்துவத்தின் மாட்சிமைக்கு மாசு நேரா
வண்ணம், உயர்ந்த மரபுகளைக் கட்டிக் காத்திடவும் வழி
காட்டிடத் தக்க ஜனநாயகக் கலங்கரை விளக்கமாகத் திகழவும்
உறுப்பினர்களை ஆளுநர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கின்
றார்கள். ஆனால் இந்த நெறிமுறை இந்த அரசுக்கு மட்டும்
பொருந்தாது; இது ஊருக்கு உபதேசம் செய்யும் அரசு.
அண்மையில் நடந்த கூட்டுறவு நிறுவனங்களுக்குக்கான
தேர்தல்கள் இதை வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றன.
தில்லுமுல்லுகள், திருகுதாளங்கள் ஆகியவற்றின் மொத்த
உருவமாக இந்தத் தேர்தல்களை மாநில அரசு மாற்றிவிட்டது.
கூட்டுறவு இயக்கத்தின் கோட்பாடுகளையும், ஜனநாயக
நெறி முறைகளையும் கேலிக்கூத்தாக்கிக் காற்றில் பறக்க
விட்டுவிட்டது. உறுப்பினர்களைச் சேர்ப்பது, நியமனங்
களைச் செய்வது, தேர்தல் நடத்துவது, விதிமுறைகள்
வகுப்பது போன்ற அனைத்திலுமே முறைகேடுகள் மலிந்து
விட்டன. எப்படியாவது ஆளும் கட்சிக்காரர்களைப் பொறுப்
பில் வைக்கவேண்டும் என்ற அரிய இலட்சியத்தோடு இந்த
தேர்தல் நாடகங்கள் நடைபெற்றிருக்கின்றன. என்னுடைய
சொந்தத் தொகுதியில் நான் உறுப்பினராக இருக்கிற செஞ்சேரி
மலையடிபாளையம் உழவர் பணிக் கூட்டுறவுச் சங்கத்தில்
ஆகஸ்ட் மாதம் 22-ஆம் தேதி நிர்வாகக் கூழு உறுப்பினர்கள்
தேர்தல் நடத்தப்பட்டது. தேர்தல் வாக்குப் பதிவு முழுமை
யான அளவில் நடத்த முடியாத அசாதாரண சூழ்நிலை
ஏற்பட்டதாகக் கூறி அந்தத் தேர்தல் மறு தேதி குறிப்பிடா
மல் நிறுத்தி வைக்கப்படுவதாக அறிவித்துவிட்டுச் சென்றார்கள்
அந்தத் தேர்தல் அலுவலர். ஆனால், 4,000 பேர் ஓட்டுப்
போடவேண்டிய இடத்தில் 200 பேர்தான் ஓட்டுப் போட்
டிருக்கிறார்கள், அன்று இரவே ஆளும் கட்சியின் நிர்ப்பந்தத்





தின் காரணமாக 11 பேர் வெற்றிபெற்றதாக அறிவித்திருக்
கிறார்கள். யாருக்கும் தெரியாது. சங்க உறுப்பினர்கள்
யாருக்கும் இன்னின்னார் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று
அறிவித்தார்களா என்றால் இல்லை. யாருக்கும் தெரியாமல்
அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் 1988-ஆம் ஆண்டு பால்
உற்பத்தியாளர்கள் சங்கத்திற்கு முறையான தேர்தல் நடந்தது,
நீங்கள் ஆட்சிக்கு வந்தவுடனே அந்தச் சங்கங்களை.
எல்லாம் கலைத்தீர்கள்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு
பேரவைத்துணைத்தலைவர் அவர்களே, கூட்டுறவுத் தேர்தல்களில்
பல தவறுகள், கேலிக் கூத்துகள் நடந்திருப்பதாக மாண்புமிகு
உறுப்பினர் அவர்கள் தெரிவித்தார்கள். அதற்கு அவர்கள்
எடுத்துச் சொல்கிற ஓரே சங்கம் செஞ்சேரி மலையடிபாளையம்
அதிலே ஏதோ 11 பேர்களை யாருக்கும் தெரியாமல் அறிவித்து
விட்டார்கள். என்ற பழைய கதையைச் சொல்கிறார்கள்.
இப்போது உள்ள நிலைமை என்ன என்பதை விளக்கினால்
அரசு நடுநிலையோடு நடந்து இருக்கிறது என்பது நாட்டுக்கும்
இந்த மன்றத்திற்கும் நன்றாகத் தெரியும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, நான் நேரடியாக அமைச்சர் மீது
இந்த விஷயத்தில் குற்றம் சொல்ல முடியாது. காரணம்
பின்னாலேதான் எனக்கு அந்தத் தகவல் வந்தது. 3 நாட்
களுக்குப் பின்னாலேதான் அந்த தகவல் வந்தது. அமைச்ச
ரிடத்திலே சொல்லி, அதற்கு நோட்டீஸ் வந்தது. ''1988ஆம்
வருஷம் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்க விதி 18(ஏ)ன் கீழ்
தேர்தல் வாக்குப் பதிவுகளை முழுமையாக நடத்த முடியாத
அசாதாரண சூழ்நிலை ஏற்பட்டதால் சங்கத்திற்கு நிர்வாகக்
குழு உறுப்பினர்கள், தேர்தலை நடத்த நியமனம் செய்யப்
பட்ட தேர்தல் அலுவலராகிய நான் எல்லாம் 22—2—1990
அன்று நடத்தி முடிக்கவேண்டிய சங்கத்தின் நிர்வாக உறுப்பினர்
கள் தேர்தலை இதன்மூலம் மறு தேதி குறிப்பிடாமல் நிறுத்தி
வைக்கிறேன்'' என்று தேர்தல் அலுவலரின் நோட்டீஸ்
தெளிவாகவே தெரிவிக்கிறது. தேர்தல் அலுவலகத்திலே
நோட்டீஸ் போடப்பட்டிருக்கிறது. அன்று இரவே, 22-ம்
தேதியில் விதி 52 உப பிரிவு 17-இன் கீழ் நிர்வாகக் குழு
தேர்ந்தெடுக்கப்படுவதாக அறிவிப்பு வந்திருக்கிறது. அதுவும்
என்னிடத்திலே இருக்கிறது. 4 ஆயிரம் பேர் உள்ள
சொசைட்டியிலே முதல் டாப் வோட் எவ்வளவு தெரியுமா ?
126. கீழ் வோட்டு எவ்வளவு தெரியுமா ? 3. இது
தேர்தலாக இருந்திருக்க முடியாது. இது தேர்தல் என்று
மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்றாரா என்று
அறிய விரும்புகிறேன்.

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1991 சனவரி 23
13–30 மணி.

அதே போல பால் சொசைட்டிகளைப் பொறுத்த வரையில் 1988-லே தேர்தல் நடைபெற்றது. அதற்குப் பின்னாலே நீங்கள் வந்த உடனே ரத்து செய்தீர்கள். தனி அதிகாரிகளை நியமித்தீர்கள். அதற்கு ஆலோசனை வழங்க குழு நியமித்து உத்தரவிடப் பெற்றது. பின்னால் புதிய தேர்தல் நடத்துவதற்கு முன்பு உறுப்பினர் சிறப்பு அலுவலர் என்ற பெயரிலே ஒரு பதவியை உருவாக்கி, யாரையெல்லாம் போட வேண்டுமோ அவர்களை எல்லாம் திணித்தீர்கள், அதிலே எல்லாம் தகுதிகளை நிர்ணயிப்பதில் மாறி மாறி ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஏதாவது முறை கையாளப்பட்டதா ? அதெல்லாம் கிடையாது.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த செஞ்சேரி மலையடிபாளையத்தைப் பொறுத்தவரையில் மறு தேர்தல் அறிவிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் என்ன நினைத்தார்களோ அந்த அடிப்படையிலே மறு தேர்தல் இன்றைக்கு அறிவிக்கப்பட்டு உயர்நீதி மன்றத்திலே பாதிக்கப்பட்டவர்கள் தடை உத்தரவை வாங்கியிருக்கிற காரணத்தாலே இந்தத் தேர்தல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறதே அல்லாமல் வேறு எந்தவிதமான தவறான சலுகைகளைப் பயன்படுத்தி அந்தத் தேர்தல் நடைபெறவில்லை அல்லது நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முறையான மறு தேர்தல் நடத்தப்பட்டு, அந்த முறையான தேர்தலிலே வந்த வாக்குப் பதிவின்படி உங்களுடைய அறிவிப்பு இருக்குமேயானால் நிச்சயமாக அதை நான் வரவேற்கிறேன் என்று உறுதி கூறுகிறேன். ஏனென்றால், இந்தக் கட்டத்திலே யார் வெற்றி பெறுவார்கள் என்று எல்லோருக்கும் தெரியும். பால் சொசைட்டிகளைப் பொறுத்த வரையில் 24 ஆம் தேதி கெசட் எக்ஸ்ட்ரா ஆர்டினரியில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னால் செப்டம்பர் 14, 1990-ல் முதலிலே எஜுகேஷன் குவாலிபிகேஷன், யார்? மெம்பர் ஸ்பெஷல் ஆபீசர். Educational qualification—He should have passed atleast Higher Secondary Course Education என்று சொல்லப்பட்டிருக்கிறது. அத்துடன் he should have supplied milk to the Society for 120 days or 300 litres of milk in the preceeding Co-operative year as required in the by-law of the Milk Producers Co-operative Societies. This is applicable to Milk Producers Co-operative Societies only. என்று தெளிவாகப் போடப்பட்டிருக்கிறது. நீங்கள் யாரை எல்லாம்



1991 சனவரி 23] [திரு .எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

சொசைட்டிகளிலே உறுப்பினர் அல்லாதவர்
போடுகிறீர்கள்? சொசைட்டிகளிலே உறுப்பினர் என்று போட்டிருக்கிறார்கள்.
களை எல்லாம் ஸ்பெஷல் ஆபீசர் என்று போட்டிருக்கிறார்கள். 15 நாள் கழித்து வருகிறது,
இதற்கு மறுப்பு வருகிறது. 15 நாள் கழித்து வருகிறது,
அதாவது அக்டோபர் மாதம் மீண்டும் ஒரு ஜீ. ஓ. வருகிறது.
அது என்ன? Educational qualification. He should have passed at
least 8th Standard. Plus 2 எங்கே? 8th Standard எங்கே? ஏன் மாற்ற
வேண்டும்? 15 நாட்களுக்குள் மாற்ற வேண்டிய அவசியம் என்ன
வந்தது? அதுமட்டுமல்ல. He should have supplied milk of 300 litres.
120 நாட்கள் சப்ளை செய்ய வேண்டும். இல்லாவிட்டால் 300
லிட்டர் என்ன ஆகிறது? இந்த ஸ்பெஷல் ஆபீசர் என்ன
பண்ணுகிறார்? ஒரு நாளிலே 100 லிட்டர் கூட 2 வேளையாகக்
கூட சேர்த்து வராத சொசைட்டிகளிலே ஒரே நாளைக்கு 2,500
லிட்டர் பால் வாங்கப்பட்டது என்று எழுதப் பெற்றிருக்கிறது.
எங்கே பால் உற்பத்தி ஆயிற்று? ஆனால் எழுதப்பட்டிருக்கிறது.
அப்படி வாங்கிய பால் எங்கே விற்பனை ஆயிற்று ? ஆனால்
எழுதப்பட்டிருக்கிறது. அதைத்தான் சொல்கிறேன். ஒரு
குறிப்பிட்ட சொசைட்டியிலே..............

**மாண்புமிகு திரு. கே. என்.. நேரு :** மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பால
சுப்பிரமணியம் அவர்கள் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்
களில் எல்லாம் முறைகேடுகள் நடந்திருப்பதாக இங்கே எடுத்துச்
சொன்னார்கள். 1988 ஆம் ஆண்டு தேர்தல் நடைபெற்ற
தாகவும், இன்று இந்த ஆட்சி பொறுப்புக்கு வந்த பிறகு அவை
களை எல்லாம் கலைத்துவிட்டு தனி அதிகாரிகள் நியமித்ததாக
வும் சொன்னார்கள். . நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற
போது, அதிலே நாங்கள் ஆராய்ந்து பார்த்தபோது, 200 உறுப்
பினர்கள் அந்த பால் உற்பத்தியாளர் சங்கத்திலே இருந்தாலும்
வோட்டு போடக்கூடிய தகுதியைப் பெற்றவர்கள்7 பேர் அல்லது 9
பேர் என்று ஒரு நிலை இருந்தது. அந்த அளவிலே அவர்களே
இந்தச் சங்கத்தைக் கைப்பற்றி வைத்திருக்க வேண்டும் என்ற
எண்ணத்திலே கடந்த 10 ஆண்டுகளாக சங்கம் முழுக்க முழுக்க
அவர்கள் கையிலேயே இருந்தது. இதை எல்லாம் போக்க வேண்டு
மென்ற எண்ணத்தோடு தான் அன்றைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட
தலைவர்களை நீக்கி அரசு அதிகாரிகளை தனி அலுவலர்களாக
நியமிக்கப்பட்டது. அதன் பிறகு தேர்தல் நடைபெற வேண்டு
மென்று முடிவு எடுக்கப்பட்டு அப்படித் தேர்தல் நடைபெற
வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்ட உடனேயே அதிகாரிகள்
அதிகமான அளவிலே தேவைப்படும் என்ற காரணத்தினால்
அங்கே தனி அலுவலர்கள் நியமிக்கலாம் என்று சொன்ன போதும்
முதலிலே பிளஸ் 2 அளவிலே படித்தவர்களை நியமிக்கலாம்
என்று முடிவெடுத்து, அதன் பின்னர் கிராமங்களிலே பிளஸ் 2
படித்தவர்கள் அதிகமாகக் கிடைக்காத காரணத்தினால் 8-வது
வகுப்பு வரை படித்திருந்தால் போதும் என்று சொல்லி இருக்கி
றோம். அதிலே தவறான எண்ணம் இல்லை.

[திரு. கே. என். நேரு] [1991 சனவரி 23

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள், இவர்களுடைய தொகுதியிலே காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பல பேர்கள் வெற்றி பெற்று இருக்கின்றார்கள். அந்த வெற்றி பெற்றவர்கள் தலைவர் அனைவருமே முறைகேடாகத்தான் தேர்ந்தெடுக்கப்பட்டார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். கோவையிலே இன்றைக்கு எந்தக் கட்சியையும், இயக்கத்தையும் சாராதவர்கள் 20 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். காங்கிரஸ் இயக்கத்தைச் சார்ந்தவர்கள் 20, 25 சதவிகிதம் பேர் வெற்றி பெற்றிருக்கிறார்கள். அது போல் அண்ணா தி.மு.க. வைச் சார்ந்தவர்கள் வெற்றி பெற்றிருக்கிறார்கள். யாரை வேண்டுமானாலும் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்ளலாம், யார் வேண்டுமானாலும், எப்போது வேண்டுமானாலும் பால் ஊற்றிக் கொள்ளலாம் என்றால் அவர்கள் எல்லாம் வெற்றி பெற்றிருப்பார்களா என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

13-35 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே வெற்றி பெற்றிருப்பதாகச் சொன்னார்கள். ஆனால் அதற்கு இவர்கள் எவ்வளவு தொல்லை கொடுத்தார்கள் என்று நான் சொல்ல வேண்டாமா? (சிரிப்பு).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: "Election" என்றாலே தொல்லைதான். (சிரிப்பு).

மாண்புமிகு திரு. கே. என். நேரு. : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இனிமேல் இவர் வீட்டுக்குச் சென்று, மாலையிட்டு நீங்கள்தான் தலைவர் என்று சொல்லி விட்டு வந்து விடுகிறோம். (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது வெற்றி பெற்ற இடங்களில், 18 இடங்களில் ஒன்பதுக்கு ஒன்பது டைரக்டர்கள் காங்கிரஸ்காரர்கள், எங்கள் அணியைச் சார்ந்தவர்கள் தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள். இன்று வரை அதற்குத் தலைவர் தேர்தல் நடைபெறவில்லை. விதியின்படி தலைவர் தேர்தல் நடைபெற்றிருக்க வேண்டும். அதற்கு யாரும் தடை விதிக்க முடியாது. ஏன் தடை விதிக்க வேண்டும்? யூனியனுக்கு உங்கள் ஆட்கள் வர வேண்டும். இங்கே 18-க்கும் நாங்கள் வந்துவிட்டதால் எங்களுக்கே வந்துவிடும் என்ற பயம்தான்



1991 சனவரி 23]

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து அவைக்குத் தவறான தகவல்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். உச்சநீதிமன்றத்தில் தடை வாங்கியிருக்கிறார்கள். 31 ஆம் தேதிக்குள் தேர்தலை நடத்தி முடிக்க வேண்டுமென்கிற உத்தரவு இட்டிருந்தாலும், 30 ஆம் தேதிக்குள் ஒரே நேரத்தில் தமிழகம் முழுமைக்கும் நடத்த முடியாது என்கிற காரணத்தினாலே ஒரு மாத காலம் அவகாசம், அதாவது ஜனவரி 31 ஆம் தேதிக்குள் அனைத்துச் சங்கங்களுக்கும் தேர்தலை நடத்திட வேண்டுமென்று உத்தரவு தரப்பட்டிருக்கிறது. இன்னும் 8 நாட்கள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பாக எந்தச் சங்கம் என்கிற குறிப்பினைத் தருவார்களேயானால் நிச்சயமாக அதனுடைய தலைவர் தேர்தல் நடத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். நீங்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சங்கத்திற்கு தலைவர் தேர்தல் நடைபெற்றாலும், நீங்கள் அந்தச் சங்கத்திற்குத் தலைவராக வந்தாலும் நிச்சயமாகப் பெருந் தலைவராக வரக்கூடிய வாய்ப்பு எங்களுக்குத் தான் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் எந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கும் போட்டி போட்டதும் இல்லை, ஓட்டுப் போட்டதும் இல்லை. நிச்சயமாக போட்டியிட மாட்டேன் என்று உறுதியளிக்கிறேன். ஏன் என்றால் அதிலே எனக்கு ஆசை கிடையாது. நீங்கள் நியமன முறையில் பல உறுப்பினர்களை வெற்றி பெற அனுமதித்ததற்காகச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அட்வகேட் ஒரு "clarification" கேட்கிறார். (சிரிப்பு).

திரு. நா. கணபதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேர்தலில் போட்டி போடுகிறது இல்லை என்று சொல்கிறார்களே, எல்லாமே நாமினேசன் தானா? (சிரிப்பு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒன்பது டைரக்டர்களிலே நாங்கள் 6 இடங்களில் வெற்றி பெற்றாலும், 5 பேரை உங்களிலேயே நீங்கள் நாமினேசன் செய்து கொள்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. கணபதிக்கு நான் நன்றி சொல்ல வேண்டும். என்னுடைய பழைய நீண்ட நாள் வக்கீல் நண்பர் அவர். அவர் எனக்கு பாயின்ட் எடுத்துக் கொடுக்கிறார். ரொம்ப மகிழ்ச்சி. நன்றி. நீங்கள் உங்கள் ஆட்களைக் கொண்டு வந்து, அதிலேயே எங்கே எல்லாம் நீங்கள் வர முடியுமோ அங்கே எல்லாம், செஞ்சேரியிலேயும் அதுபோல முறைகேடுகள் நடைபெற்ற பல இடங்களையும் நான் சொல்ல முடியும்.

[1991 சனவரி 23

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நியமனத்தைப் பற்றி. நாமினேசன் பற்றிச் சொன்னார்கள். அவர்களே, 30 சதவிகிதத்திற்கு பெண்கள், 18 சதவிகிதத்திற்கு ஆதிதிராவிடர்கள் என்று தேர்தலில் நிறுத்தி வெற்றி பெற்று விடுவார்களானால் நாமினீஸ் என்கின்ற பேச்சுக்கே இடமில்லை. அந்த முறையை அவர்கள் கையாண்டிருக்க வேண்டும். இப்போது நாமினேசன் செய்தபிறகு நாமினேசன் செய்கிறார்களே, நாமினேசன் செய்கிறார்களே என்று சொல்வது சரியல்ல. ஆரம்பத்திலேயே, சட்டமன்றத்தில் இது வந்த நேரத்திலேயே 30 சதவீதம் என்பது அனைத்து உறுப்பினர்களாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இந்தச் சட்டத் திருத்தம் என்ன சொல்கிறது என்றால், தேர்தலில் 30 சதவிகிதம் பேர், 18 சதவிகிதம் பேர் வெற்றி பெற்று வந்து விடுவார்களானால் நாமினேசன் என்ற பேச்சுக்கே இடம் இல்லை. அதை விட்டுவிட்ட காரணத்தினால் அவர்களுக்கு வாய்ப்புத்தர வேண்டுமென்ற அடிப்படையிலேதான் நாமினேசன் செய்கிறார்கள்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்திய அதே நிலையை வலியுறுத்துகிறேன். கோ—ஆப்ட் செய்ய அனுமதியுங்கள். 5 பேரும் நீங்கள் சொல்கிறவர்கள்தான் இருக்க வேண்டுமா ?

அதேபோல முக்கியமான, விடுபடக் கூடாத விஷயம் என்னவென்றால், உறுப்பினராக இல்லாத ஒருவரை அல்ல, பலரை நீங்கள் நாமினேட் செய்திருக்கிறீர்கள். இங்கே எந்த சொசைட்டி என்று சவால் விடுவது போலக் கேட்டார்கள். அதை இங்கே சொல்கிறேன். உடுமலைப்பேட்டை தாலுக்காவில் குடிமங்கலம் பிளாக்கில் சோமவாரப்பட்டி- இங்கேதான் பஞ்சாயத்து யூனியன் ஆபீஸ் இருக்கிறது—அங்கே திரு. பி. எம். குருசாமி என்பவர் தனி அலுவலராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இருக்கின்ற மொத்தம் 39 பேரில் அவர் உறுப்பினராகக் கூட இல்லை. ஆகவே, உறுப்பினராக இல்லாத ஒருவரை நியமித்து இருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அமைச்சர் ஒரு '' Inf.:mation '' கேட்க விரும்புகிறார்.

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் பால் சங்கத்தைப் பற்றி தானே கூறுகிறார்கள் ?

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் :** ஆம், நான் பால் சங்கத்தைப் பற்றித்தான் சொல்கிறேன். ஆக இந்தத் தேர்தல்களைக்கூட ஏன் நடத்துகிறார்கள் என்று சொன்னால், கூட்டுற



1991 சனவரி 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

இயக்கத்தினுடைய, என். டி. டி. பி. யினுடைய நிர்பந்தத்திற்காக நடத்துகிறார்களே தவிர வேறு காரணத்திற்காக நடத்தவில்லை. இப்படிப் பொறுப்புக்கு வந்தவர்கள் தங்கள் கைவரிசையை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இதைப்பற்றி ஒரு உயர்மட்ட நீதி விசாரணைக்கு உத்தரவிடவும், மறு தேர்தல்களை முறையாக நடத்தவும் இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

13-40 மணி

நீர்ப்பாசனத்தைப் பொறுத்தவரையில் இந்த அரசு ஒரு இரட்டை நிலையைக் கையாள்கிறது. காவிரியிலே இருந்து தண்ணீர் பெறுவதற்கு காங்கிரஸ்காரர்கள் குறுக்கே நிற்பது போல ஒரு குற்றச்சாட்டு இங்கே சுமத்தப்படுகிறது. ஆனால் கர்நாடக மாநிலத்தினுடைய முன்னாள் முதலமைச்சரும், மக்கள் அவை உறுப்பினரும், என்னுடைய அருமை நண்பருமான திரு. குண்டு ராவ் அவர்கள் தஞ்சையிலே வாடும் பயிர்களைக் காப்பாற்ற காவிரி நீரைத் திறந்துவிடுமாறு கர்நாடக அரசைத் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறார்கள். ஏன் அது இந்த உரையிலே இடம் பெறக்கூடாது ? ஏன் அதைப்பற்றி நீங்கள் பேசக்கூடாது ? அதை நீங்கள் செய்யத் தவறிவிட்டீர்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போல பரம்பிக்குளம்—ஆளியாறு, பாண்டியாறு, புன்னம்புழா பாசனத் திட்டங்கள். கேரளாவிலிருந்து தேவையான தண்ணீரைப் பெறுவதற்கு, பேச்சு வார்த்தை நடத்துவதற்கு போதிய அக்கறை இந்த அரசு செலுத்தவில்லை. மாறாக இருக்கிற தண்ணீரைத் தங்கள் விருப்பம்போல் சில பெரும் புள்ளிகளின் அரசியல் ஆதாயத்திற்காகத் திறந்து விட்டுவிட்டு மற்றப் பகுதிகளைக் காயப் போடுகிறது. பி.ஏ.பி. இரண்டாம் மண்டலத்திற்கு, பாசனத்திற்கு முறையாகத் தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். இன்றுவரை திறந்துவிடவில்லை என்பது மட்டுமல்ல. நிச்சயமாக இந்த ஆண்டு இரண்டாவது மண்டலத்திற்குத் தண்ணீர் கிடைக்கப் போவதில்லை.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஏதோ சில பெரும் புள்ளிகளினுடைய வசதிக்காக தண்ணீர் திறந்துவிடப்பட்டதாக இங்கே குறிப்பிட்டார்கள். அந்தப் பெரும் புள்ளிகள் யார் என்பதையும், எந்தப் பகுதி என்பதையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் வசதியாக இருக்கும்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** பெரும் புள்ளிகளின் வசதிக்காக என்று நான் சொல்லவில்லை. அரசியல் ஆதாயத்திற்காக என்றுதான் சொன்னேன். நீங்கள் ஏன் கோபித்துக் கொள்கிறீர்கள் ? பல விஷயங்கள் நடைபெற்றிருக்கின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : அரசியல் ஆதாயத்திற்
காக எந்தப் பகுதியில் தண்ணீர் திறந்து விடப்பட்டது? யார்
அதனால் பயன் அடைந்தார்கள்? அதைத் தெளிவாகச் சொல்
லுங்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இப்போது அனேக
மாக 10, 15 நாட்களுக்கு முன்னாலேயே 2ஆம் மண்டலத்திற்
குத் தண்ணீர் திறந்து விட்டிருக்க வேண்டும். கிட்டத்தட்ட
இன்றைக்கு 25 நாட்களுக்கு முன்னாலேயே முதல் மண்டலத்
திற்கு விடப்பட்ட தண்ணீர் நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்.
முதல் மண்டலத்திற்கு நேற்றுவரை தண்ணீர் பாய்கிறது. எந்தப்
பகுதி ஆயக்கட்டு இல்லாத பகுதியோ, எந்தப் பகுதி விரிவாக்கப்
பட்ட பகுதியோ, அந்தப் பகுதிக்கு கடந்த 25 நாட்களாக
தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அதுவும் போக விரிவாக்கப்பட்ட
பகுதிகளிலே இன்றுவரை பாசனமே கிடைக்காத ஒரு பகுதி,
கிளுவங்காட்டூர் என்ற பகுதிக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்ட
தாக தினசரி செய்தி வருகிறது. அதற்கு நான்தான் ஏற்பாடு
செய்தேன் என்று பகிரங்கமாகச் சிலர் அறிவித்துக் கொண்டிருக்
கிறார்கள். அதைத்தான் நான் அரசியல் ஆதாயம் என்று சொல்கி
றேனே தவிர தனிப்பட்ட முறையிலே இதைப்பற்றி குற்றம்
சொல்ல வேண்டுமென்று அல்ல. நான் இதிலே நேரடியாகப்
பாதிக்கப்படுகிறேன். என்னுடைய தொகுதி நேரடியாகப் பாதிக்
கப்படுகிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பி
னர் அவர்கள் குற்றச்சாட்டாக சொன்ன காரணத்தாலே விளக்கம்
சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பர்ஸ்ட் ஜோன்-க்கு
தண்ணீர் 4¼ மாதங்களுக்கு முன்னாலேயே விடப்பட்டு,
அதிலே ஏற்கெனவே செய்து இருந்த பயிர்கள் முழுமையாக
விளைவதற்கு மேலும் 15 நாட்கள் தண்ணீர் திறந்துவிட வேண்டு
மென்ற அந்தப் பகுதி விவசாயிகளினுடைய கோரிக்கையை ஏற்
றுக்கொண்டதற்குப் பிறகுதான் பொதுப்பணித் துறை அமைச்சர்
அவர்கள் அதற்கான உத்தரவைப் பிறப்பித்து, 15 நாட்கள்
தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இன்றோ,
நாளையோ, அது முடிவடையக்கூடிய தேதியாக இருக்கும் என்று
கருதுகிறேன். அதல்லாமல் குடி தண்ணீர்ப் பிரச்சினை ஏராள
மாக இருக்கக்கூடிய பகுதிகளில், கிணத்துக்கடவு வட்டாரத்தில்
சில குளங்களுக்குத் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது. அதைத்தான்
உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள் என்று நான் கருது
கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு உறுப்பினர்
திரு. பாலசுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரியும். மான்சூன்
இந்த வருஷம் டிஃபர் ஆகி வந்தது. அதனாலே நடவு நடுவது
கொஞ்சம் லேட்டாக ஆகிவிட்டது. அதனால் மாறி மாறி





வருகிறது. நான் நேற்றே சொன்னேன். ஜூன் மாதம் திறக்க
வேண்டியது ஆகஸ்டு மாதம்தான் திறந்திருக்கிறோம்— காவிரி.
ஆகையாலே இப்போது நிலைமைகள் மாறியிருக்கின்றன. அந்தப்
பகுதிகளுக்கு விட வேண்டும். கூடுமான வரையில் எல்லாப்
பகுதிகளுக்கும் இருக்கிற தண்ணீரைப் பகிர்ந்து அளிக்கிறோம்.

பரம்பிக்குளம்—ஆளியாறு பற்றி ஒன்றுமே செய்யவில்லை
என்று சொன்னார்கள். திரு. பாலசுப்பிரமணியும் அவர்களுக்குத்
தெரியாதது அல்ல. நான் பொறுப்பு ஏற்ற பிறகு 4 முறை,
கேரள அமைச்சர் திரு. பேபி ஜான் அவர்களோடு பேசி இருக்கி
றேன். மீண்டும் டெல்லியிலே கூட பேசியிருக்கிறேன். பல்வேறு
பிரச்சினைகள் அதில் உள் அடங்கி இருக்கின்றன. ஆரணியாறு,
நல்லாறு திட்டங்கள் எல்லாம் அதிலே சேர்க்கப்பட வேண்டி
இருக்கின்றன. அதுபற்றி எல்லாம் விரிவாகப் பேசுவது நல்ல
தல்ல என்பதால்தான் அமைதியாக உட்கார்ந்து இருக்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நேற்றைய தினம்
அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அங்கே நாக்கு
நனைகிற அளவுக்கு மழை பெய்து இருக்கிறது என்று சொன்னார்
கள். எங்களைப் பொறுத்தவரையில் நாக்கு நனைவதற்குக் கூட
அங்கே மழை பெய்யவில்லை. அந்த நிலைமையில்தான் எங்க
ளுடைய பகுதி இருக்கிறது. தண்ணீர் முறைப்படி பாய்ந்து இருக்க
வேண்டுமென்று சொல்கிறேன். பாசனத்துக்கு விடவில்லை என்று
சொன்னீர்கள். அந்தக் குறையை நான் சொல்கிறேன் (குறுக்கீடு).
அந்த மழை கூட எங்களுக்கு இல்லை. குடிப்பதற்கு அங்கு தண்ணீர்
இல்லை. அதற்காகத் தான் கேட்கிறோம். ஆக, கேரளாவில்
உங்களுடைய தோழமைக் கட்சி ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்
பொழுது, கடலிலே வீணாகக் கலக்கும் தண்ணீரை தமிழகத்துக்குத்
திருப்பிவிடுமாறு கேட்டுக்கொள்வதில் தயக்கம் ஏன்?

13-45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கேரளாவில் எங்க
ளுடைய தோழமைக் கட்சி இருக்கிறது. அவர்கள் தண்ணீர்
கொடுக்கவில்லை என்கிறார்கள். ஆனால் கர்நாடகாவில் உங்கள்
கட்சியே இருக்கிறது! ஏன் தண்ணீர் கொடுக்கவில்லை?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முதலமைச்சர் அவர்கள்
நான் முதலிலே பேசும்போது இங்கு இல்லை. நான் முதலிலே
சொன்னேன். எங்களுடைய முன்னாள் முதல்வர், இன்றைய
மக்களவை உறுப்பினர், என்னுடைய அருமை நண்பர் குண்டு
ராவ் அவர்கள் தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று ஒரு முறைக்கு
இரு முறை பத்திரிகையிலே அறிக்கை விட்டு இருக்கிறார்.
நேரடியாக அவர்களைக் கேட்டுக்கொண்டும் இருக்கிறார்.
இன்னும் சொல்லப்போனால் நான் அவரைச் சந்தித்தபோது

'நீங்கள் போராடியாவது இந்தத் தண்ணீரை வாங்குவதற்கு
உங்களுக்கு நியாயம் இருக்கிறது' என்றார். நான் சொல்லக்
கூடாது ; இருந்தாலும் சொல்கிறேன் (குறுக்கீடு). கொஞ்சம்
இருங்கள் ; எவ்வளவு நேரம் பேசப் போகிறேன் ? ஒவ்வொரு
வரும் இந்த மாதிரி குறுக்கிட்டால் எப்படி ? இதற்குக் கூடவா
ஒரு குறுக்கீடு ? இதற்கு என்ன குறுக்கீடு ?

திரு. கே. ரமணி : தலைவர் அவர்களே, குண்டு ராவ் அவர்கள்
முன்பு முதலமைச்சராக இருந்தவர் ; செல்வாக்கு உள்ளவர் ;
காங்கிரஸ் கட்சியிலே தலைவர். அவர், இங்கே தண்ணீர் விட
வேண்டும் என்று சொன்னார்; அதற்கு மின்சாரத்தைக் கொடுத்து
விட வேண்டும் என்று கூட சொல்லவில்லை. (குறுக்கீடு) அன்
கண்டிஷனலாகத்தான் கொடுக்கட்டுமே ; (குறுக்கீடு) நானே சொல்
கிறேன். அவர் சொன்னார். அப்படி இருந்தும் காங்கிரஸ் கட்சியின்
தலைவர். பெரிய காங்கிரஸ் கட்சியினுடைய முதலமைச்சராக
இருக்கிறவர், அவர் மறுக்கிறார். அது அவர்களுக்குள்ளே இருக்
கிற சண்டையினாலேயா ? அதற்கு ஏன் காவிரியிலே தண்ணீர்
இல்லாமல் பண்ண வேண்டும் ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தயவுசெய்து அதை
யெல்லாம் இங்கே சொல்லாதீர்கள். அவர் இன்னும் சில விவரங்
களைக் கூட என்னிடத்திலே சொன்னார். நான் டில்லியில் அவரைச்
சந்தித்தபோது உடல்நிலை சரியில்லாமல் இருந்தபோது கூட,
' நீங்கள் பெறுவதில் நியாயம் இருக்கிறது ' என்று என்னிடத்திலே
சொன்னார். 'அதிலே நீங்கள் ஒன்றிலே தவறி விட்டீர்கள்.
அதைச் செய்தால் இப்போது கூட தண்ணீர் திறந்து விட வேண்டிய
அவசியம் வரும். யாரோ அதிகாரிகள், இன்ஜினியர்கள் சொல்
வதைக் கேட்டுக்கொண்டு இப்போது முதலமைச்சர் இருக்கிறார்.
தண்ணீர் திறந்து விடாமல் இருக்கிறார். அவர் சொல்கிற நிலை
சரியல்ல. போதிய அளவிற்குத் தண்ணீர் இருக்கிறது. உடனடியாக
5 டி.எம்.சி. தண்ணீர் விட முடியும். 5 டி.எம்.சி.-க்கு மேலே
நாங்கள் எப்போதும் கொடுக்கிற பழக்கம் உண்டு'. அவருக்குத்
தெரியாத ஜனதா மெம்பர்கள் சொன்னார்கள். அதே வரவிலே
வைக்க வேண்டுமே தவிர, உங்களுக்கு உள்ளே இருக்கின்ற சண்டை
என்று பேசிக்கொண்டு —.........— (குறுக்கீடு) ..........
நல்லது அல்ல. நல்லது அல்ல.........தயவுசெய்து நான் சொல்
கிறேன், இந்த மாதிரி பேசாதீர்கள். முதல்வர் அவர்கள் இப்போது
வந்தார்கள். சொன்னதற்குப் பதில் சொல்லிவிட்டேன்.

போதிய தண்ணீரைப் பெறுவதற்கு உத்தரவாதம் இல்லாமலே
தேர்தலை மாத்திரம் கருத்தில் கொண்டு பாசனப் பகுதிகளை
விரிவுபடுத்த முயன்றால் பலன் எதுவும் ஏற்படப் போவதில்லை
என்பதற்காகத்தான் பரம்பிக்குளம்—ஆளியாறு பற்றி நான்
இவ்வளவு தூரம் சொன்னேன். அதன் விளைவாக ஏற்கனவே
பாசன வசதிகள் பெற்றுவரும் பகுதிகளில் விவசாயம் பாதிக்கப்



படும் நிலைமை ஏற்படும் என்பதை அரசுக்கு நான் எடுத்து
உரைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே போதிய நீரை
கேரளாவிடம் கேட்டுப் பெறும்வரை, இருக்கும் உரிமைகளைப்
பறிக்காமல் பாதுகாக்க வேண்டும் என அரசாங்கத்தை நான்
கேட்டுக் கொள்கிறேன். அங்கே அச்சம் இருக்கிறது.

நீங்கள் கேட்டுவிட்டதாலே சொல்கிறேன். 4 மண்டலங்கள்
என்று திடீரென்று அறிவித்து விட்டதால் இப்போது
1½ ஆண்டுக்கு ஒரு முறை தான் தண்ணீர் பெறுகிறோம்.
(குறுக்கீடு) அவர் தஞ்சாவூர்க்காரர் ; அவருக்குத் தெரியவில்லை,
அதனாலே சொன்னார் அவர். ஆண்டுதோறும் எங்களுக்கு
பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்காது. 3 மண்டலத்திலே 1½
ஆண்டுக்கு ஒரு முறை நல்ல மழை பெய்து அணை நிரம்பி இருந்
தால் எங்களுக்குத் தண்ணீர் கிடைக்கும். அதிலே சில நேரங்களிலே,
சென்ற முறை எங்களுக்கு எப்படி வந்தது என்றால், 3 ஆண்டுகள்
கழித்து வந்தது. இந்த முறை 4 மண்டலங்கள் என்று வந்தால் —
இப்போது 3 மண்டலமும் சேர்த்து, ஆயக்கட்டு என்பது 2 இலட்சம்
ஏக்கர் ; அது 4 மண்டலங்களாக ஆகும்போது, நான் முன்பு
தவறாக எண்ணிக்கொண்டு இருந்தேன் ; இப்போது கணக்குச்
சொல்கிறேன். 4 இலட்சத்து 40 ஆயிரம் ஏக்கர் ஆகும் என்று
சொல்கிறார்கள். அப்போது என்ன ஆகும் என்று சொன்னால்,
அனைத்து அணைகளும் — அது பெரிய திட்டம். அது சின்னத்
திட்டமல்ல ; பல அணைகள் கொண்ட திட்டம், அனைத்து
அணைகளும் நிரம்பி வழிந்தால்தான் ஒரு முறை இந்த ஒரு
மண்டலத்துக்கு தண்ணீர் திறந்துவிட முடியும். இல்லாவிட்டால்
முடியாது. அந்த நிலைமை ஏற்படுமேயானால் ஒரு சுற்று வரு
வதற்குக் குறைந்த பட்சம் 6 ஆண்டுகள், 7 ஆண்டுகள் ஆகிவிடும்.
எனவே தயவுசெய்து அதைப்போல இருக்கின்ற, விவசாயத்தைக்
கெடுக்கின்ற வகையிலே ............

மாண்புமிகு திரு. துரைமுருகன் : அதாவது நீங்கள் 4-வது
ஜோனுக்கு தண்ணீர் கொடுக்கக் கூடாது. என்று சொல்லு
கிறீர்கள். அது தானே ? 32 கோடி ரூபாய்க்கு மேலே செலவு
செய்து கால்வாய்கள் வெட்டப்பட்டு இருக்கிற 4-வது ஜோனுக்கு
பரம்பிக்குளம் — ஆளியாறிலிருந்து தண்ணீர் தர வேண்டுமா,
வேண்டாமா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் அப்படிச் சொல்ல
வில்லை. நீங்கள் கலந்துகொண்ட மாநாட்டிலே நானும் கலந்து
கொண்டு இருக்கிறேன். உங்களுக்கு நினைவு இருக்கும் என்று
நினைக்கிறேன். அந்தக் குறள் கூட எனக்கு நினைவு இருக்கிறது.
ஏனென்றால் செய்யுள்கள் எல்லாம் சீக்கிரமாக மறந்துவிடுவேன் ;
எங்களுடைய இலக்கியச் செல்வர் போல் எனக்கு நினைவு இருக்
காது.

"விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பது அரிது."

[திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்] [1991 சனவரி 23

என்ற குறளைச் சொல்லி நான் பேச ஆரம்பித்தேன் என்பது
உங்களுக்கு நினைவு இருக்கும் என்று நினைக்கிறேன். 30 கோடி
ரூபாய் செலவு செய்து வாய்க்கால் வெட்டப்பட்டதிலே தண்ணீர்
இல்லாமல் காயப்போடுவது முறையல்ல என்று அங்கேயே நான்
சொல்லி இருக்கிறேன். அன்றைய தினம் நம்மிடத்திலே இன்ஜினி
யர்கள் சொன்னது, 4 மண்டலம் என்றால் ஆறு மாதம்தான்
காலதாமதம் ஆகும் என்று சொன்னார்கள். அது இப்போது
நீங்கள் பார்த்தால் எப்படி இருக்கிறது என்று சொன்னால்,
ஆறு மாதம் அல்ல, பல வருடங்கள் காலதாமதம் ஆகும் நிலைமை
இருக்கிறது என்று சொன்னால், இந்தப் பாசனம் பெறும் பகுதி
காயப்போடப்பட்டுவிடும். எனவே நீங்கள் தண்ணீர் வரத்துக்கு,
நீர் ஆதாரத்தைச் சேகரிப்பதற்கு வழி செய்துவிட்டு திறந்து
விடுங்கள் ; நான் வேண்டாம் என்று சொல்ல மாட்டேன் ; இப்
போது இரண்டாம் ஜோன் விடுங்கள் .......

மாண்புமிகு திரு. துரைமுருகன் : ஒரு தவறான தகவலைத்
தரக்கூடாது. நான்கு மண்டலங்களுக்கும் தண்ணீர் கொடுத்தால்
ஒரு சுற்று வருவதற்கு ஆறு, ஏழு ஆண்டுகள் ஆகும் என்பது
மிகப் பெரிய கற்பனை. 24 மாதம்தான் ஆகும், ஒரு சுற்று
வருவதற்கு என்பது பொறியாளர்கள் நமக்குத் தந்திருக்கிற
அறிக்கை. அதுதான் நடைமுறைக்கு வருமே தவிர ஆறு, ஏழு
ஆண்டுக் காலம் ஆகும் என்று இங்கே பேசுகின்ற பேச்சு மூலமாக
அங்கேயுள்ள விவசாயிகளை உசுப்பி விடுவதாக அமையக் கூடாது
என்பதற்காகத்தான் சொல்லுகிறேன்.

13-50 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முதலிலே சொன்ன
அதே பொறியாளர்கள் என்னிடத்திலே இரண்டாவதாகச்
சொன்னதை நான் சொல்லுகிறேன். அணைகள் அத்தனையும்
நிரம்பி வழிய எத்தனை டி.எம்.சி. தண்ணீர் தேவை? இது
வரையில் 18 டி.எம்.சி.க்கு மேல் நாம் தண்ணீரைப் பார்த்ததே
யில்லை. 30 டி.எம்.சி. என்று சொன்னாலும் கூட, 18 டி.எம்.
சி-க்கு மேல் நாம் பார்த்ததே இல்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சீக்கிரம் முடித்து
விடுங்கள்..

திரு. எஸ். ஆர் பாலசுப்பிரமணியம் : முடித்துக் கொள்
கிறேன். மீண்டும் அமைச்சர் கேட்டதால் பதில் சொல்லுகிறேன்.
எங்களைக் காயப் போடாதீர்கள், எங்களை வயிற்றில் அடிக்
காதீர்கள் என்றுதான் நான் சொல்லுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,
இது ஒரு மிக முக்கியமான பிரச்சினை. இதிலே தவறான
கருத்துக்கள் வந்துவிடக் கூடாது. அதைத்தான் பொதுப்பணித்



1991 சனவரி 23] [டாக்டர் மு. கருணாநிதி]

துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே
இருந்த பரம்பிக்குளம்-ஆளியார் பற்றி முன்பு கழக ஆட்சி இருந்த
அந்தக் காலக் கட்டத்திலே, எங்கெங்கே ஆயக்கட்டுகள் வேண்
டும், எங்கெங்கே இந்த தண்ணீர் பாசனம் வேண்டும் என்ப
தைப் பற்றி எல்லாம் யோசிக்க, அரசு தானாகவே முடிவு
எடுத்துவிடாமல் அந்த மாவட்டத்திலே இருக்கின்ற எல்லாக்
கட்சி சார்புடைய சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து
வைத்துப் பேசி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அப்போதுதான்
சில எம்.எல்.ஏ.க்கள், காங்கிரஸ் எம். எல். ஏ.க்கள் கூட
அவரவர் தங்கள் தொகுதிகள் எல்லாம் பாராமுகமாக ஆகி
விடக்கூடாது என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். பொதுப்பணித்
துறை அமைச்சரும், நானும் இருந்து அந்த நிலைமைகளை
யெல்லாம் ஆராய்ந்து அந்தத் திட்டங்கள் வகுக்கப்பட்டன.
இப்போதும் ஒன்றும் ஆகிவிடவில்லை. அந்த மாவட்டத்திலே
யுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பொதுப்பணித்
துறை அமைச்சரிடமும், அந்த மாவட்டத்திலேயுள்ள அமைச்ச
ரிடமும் கலந்து பேசுவதற்கு ஒரு வாய்ப்பு ஏற்படுத்திக் கொண்டு
அதிலே வருகிற சாதக பாதகங்களை எண்ணிப் பார்த்து ஒரு
நல்ல முடிவை எடுக்கலாம் என்று கருதுகிறேன். அதற்கு உறுப்
பினர் சம்மதித்தால் அப்படிப்பட்ட கூட்டத்தைக் கூட்டுவதற்கு
அரசு தயாராக இருக்கிறது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : முதல்வருடைய
விளக்கத்திற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பரம்பிக்
குளம்-ஆளியாறோடு நின்றுவிடாமல் பாண்டியாறு புன்னம்புழா
வில் நீர் பெற்று எங்கள் வறண்ட பகுதிகளுக்கு நீங்கள் நீர்ப்
பாசனத்திற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மண்டல் கமிஷனைப் பொறுத்த வரையில் தங்கள் குறுகிய
அரசியல் லாபத்திற்காக தவறாக கையாளப்பட்டு வருகிறது.
தமிழகத்தைப் பொறுத்த வரையில் வகுப்புவாரி பிரதிநிதித்
துவம் நடைமுறைக்கு வந்து எல்லோராலும் ஏற்கப்பட்டுவிட்டது.
இன்னும் சொல்லப் போனால் 1884ஆம் ஆண்டிலேயே இங்கே
வகுப்புவாரி பிரதிநிதித்துவம் அமுலுக்கு வந்திருக்கிறது. ஆனால்
யாரும் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. பெருந்தலைவர்
காமராஜ் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அன்றைய தினம்
ஜவஹர்லால் நேரு அவர்கள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை
ஊர்ஜிதப்படுத்துவதற்காக முதல் அரசியல் நிர்ணய சட்டத்
திருத்தத்தைக் கொண்டு வந்தார்கள். இந்த மாநிலத்திலே
தான் வழக்கு போடப்பட்டது. ஒரு சிறிய வழக்கு போடப்
பட்டது. State of Madras Vs Chemparam Durairaj சரியாக
இருக்கும் என்று கருதுகிறேன். அந்த வழக்கின் அடிப்படையில்

[1991 சனவரி 23

செல்லுபடியாகாமல் போய்விடக் கூடாது என்பதற்காக 1951 ஆம் ஆண்டிலேயே முதலாவது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வந்திருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : வரலாறுகளைச் சொல்லும் போது வரலாற்று முக்கியச் சம்பவங்களை விட்டுவிடக் கூடாது. அப்படிப்பட்ட நிலைமை வந்தபோது பெரியார் அண்ணா தலைமையில் ஒரு பெரிய போராட்டம் நடந்தது என்பதை பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் பாராளுமன்றத் திலேயே திருத்தம் கொண்டு வரும்போது—அப்போது தமிழ்நாடு என்று பெயர் இல்லை, சென்னை மாகாணம் என்ற பெயர் இருந்தது—சென்னை மாகாணத்திலே ஏற்பட்டிருக்கிற நிகழ்ச்சி களையொட்டித்தான் இந்தத் திருத்தம் கொண்டு வரப்படுகிறது என்று சொல்லியிருக்கிறார்கள் என்பதை மறந்துவிடக் கூடாது. பெருந்தலைவர் காமராஜ் அவர்களுக்கு உள்ள பங்கை நான் மறுக்கவில்லை. ஆனால் பெரியாரை, அண்ணாவை நீங்கள் மறந்துவிடக் கூடாது.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : பழைய வரலாறு என்பது நீண்ட நெடிய வரலாறு. நான் சிறியதாக எழுதியிருப் பதைப் பார்த்தாலே ஆறு, ஏழு பக்கத்திற்கு வருகிறது. 1884-லே துவங்கி 1919, 1921, 1921-ல் செப்டம்பரில் ஒரு தீர்மானம் 1922, 1928—டாக்டர் சுப்பராயன் அமைச்சரவை, 1947 என்று வரிசையாக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ஏற்றிருக் கிறார்கள் என்று இருக்கிறது. அதற்காகத்தான் நான் சொல்லு கிறேனே தவிர இதிலே நான் எதுவும் ஆதாயம் தேட விரும்ப வில்லை. நாங்கள் அதற்கு எதிர்ப்பாகவும் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிலே நீதிக் கட்சிக் காரர்களை மறந்துவிடுகிறீர்கள் என்பதற்காகத்தான் நினை வூட்டினேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நீங்கள் காங்கிரஸ் கட்சியை மறந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் நான் சொல்லுகிறேன். இதிலே பல பின்தங்கிய மக்கள் நன்மைபெறும் வகையில் மண்டல் கமிஷனில் சில பரிந்துரைகள் இருக்கின்றன. இல்லையென்று நான் மறுக்கவில்லை. ஆனால் காங்கிரஸ் அரசால் நியமிக்கப் பட்ட பல கமிஷன்கள் இதிலே இருந்திருக்கின்றன. ஹவானூர் கமிஷன் என்பது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த கமிஷன். சின்னப்ப ரெட்டி, காகாசாகிப் காலேல்கர் போன்ற பல்வேறு கமிஷன்கள் பரிந்துரைகளைச் செய்திருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அந்த காலேல்கர் கமிஷன் பரிந்துரையைச் செய்துவிட்டு, அதன் தலைவரான காலேல்கர் அவர்கள் அந்தப் பரிந்துரையைப் பற்றி என்ன எழுதினார்?



1991 சனவரி 23]

13-55 மணி

திரு. எஸ். ஆர், பாலசுப்பிரமணியம் : எவ்வளவோ சம்பவங் கள் நடைபெற்றிருக்கின்றன. ஹவானூர் கமிஷன் ரிப்போர்ட் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது உடனடியாக அமல்படுத்தப்பட்டது. அது முதல்வர் அவர்களுக்கும் தெரியும், அப்போது அவர்கள் முதல்வராக இருந்த நேரத்தில். ஹவானூர் கமிஷன் ரிப்போர்ட் நம்முடைய அண்டை மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டு அது அமல்படுத்தப்பட்டது. அதேபோல கலேல்கர் கமிஷன் பற்றியும் சொல்லியிருப்பார்கள். நான் இல்லையென்று சொல்லவில்லை. எப்போதும் முழுமையாக அதற்கு எதிராக நாங்கள் இருந்த தில்லை.

காந்தியடிகளுடைய நிர்மாணத் திட்டத்திலேயே இதற்கு இடம் இருந்தது. காங்கிரசுடைய வேலைத் திட்டங்கள் அந்த அடிப்படையில்தான் அமைந்தன. இந்த அடிப்படையில் கிராமப் புற ஏழைகளைக் கை தூக்கி விடுவதை நோக்கமாகக் கொண்டு தேசிய ஊரக வேலை வாய்ப்புத் திட்டங்கள், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டங்கள், ஊரக நிலமற்றோர் உறுதித் திட்டங்கள் போன்றவை காங்கிரஸ் அரசால் உருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டன. அந்த அடிப்படையில்தான், பஞ்சா யத்து ராஜ் சட்டமும் அன்றைய தினம் கொண்டுவரப்பட்டது. அரசுப் பணிகள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றில் இட ஒதுக்கீடு செய்தால் மட்டுமே பின்தங்கிய சமூகத்தினருக்கு சமூக நீதி கிடைத்துவிட முடியாது. ஏனெனில், அரசுப் பணிகளிலும் சரி, பொதுத் துறை நிறுவனங்களிலும் சரி, நிரப்பப்படவேண் டிய காலியிடங்கள் எதுவும் இல்லை என்பதையும், புதிதாக உருவாக்கும் வாய்ப்பு இல்லை என்பதையும் 9-வது நிதிக்குழு மிகவும் [illegible]தளிவாக சொல்லிக் காட்டியிருக்கிறது என்பது கசப் பான உ[illegible]மை. நமது சட்டமன்றத்தில் 1989லே நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினோம். 1990லே கவர்னர் உரை யாற்றும்போது மீண்டும் அதையே சுட்டிக் காட்டியிருக்கிறீர்கள். மத்திய அரசுத் துறைகளில், கல்வி, வேலை வாய்ப்பு ஆகியவற் றில் இட ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று கவர்னர் உரையில் வற்புறுத்தப்பட்டது. ஆனால் கல்வியில் குறிப்பிட்ட அளவு இட ஒதுக்கீடு செய்யவில்லை. திரு. வி. பி. சிங் அரசு செய்யவில்லை. பல பதவிகளுக்குத் தேர்ச்சி பெற்றவர்கள் கிடைப்பதில்லை. அவை நிரப்பப்படாமல் காலியாக விடப்பட்டிருக்கின்றன. இந் நிலையில் பின்தங்கியவர்களுக்குக் கல்வியில் இட ஒதுக்கீடு இல்லாமல் பணிகளில் மட்டும் இட ஒதுக்கீடு செய்து என்ன பயன்? இதேபோன்று, விஞ்ஞானம், தொழில்நுட்பம், பாதுகாப்புத் துறை, ஆராய்ச்சி போன்றவற்றில் பதவி உயர்வு போன்ற வற்றில் பின்தங்கியோருக்கு இட ஒதுக்கீடு இல்லை. மேலும், மாநிலங்களில் உள்ள அரசுப் பணிகளுக்கு (குறுக்கீடு). . . நமது

யவர் முதல்வர்தான். தலைமைச் செயலாளர் அல்ல. அந்தப் பொறுப்பை ஏற்று அதற்கான அரசியல் விலையை முதலமைச்சர் தர வேண்டும். மற்றவர்களைப் பலிகடா ஆக்குவது நல்ல மரபு ஆகாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் ஆளுகிற கர்நாடகா மாநிலத்தில் தலைமைச் செயலாளர் மாற்றப்பட்டிருக்கிறார். அதற்கு திரு. பங்காரப்பா பொறுப்பேற்க வேண்டுமா ?

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்களுக்குள்ளே ஒரு தகராறு வந்து அதுபற்றி பத்திரிகைகளில் வந்திருக்கின்றன. ஆனால் இங்கே சொல்லுங்கள். நீங்கள் எந்த அடிப்படையில் மாற்றினீர்கள், எந்தச் சூழ்நிலையில் மாற்றினீர்கள் ? சரியாக இருக்குமானால் ஏற்றுக்கொள்கிறேன்.

கடைசியாக,

'செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்'

என்னும் வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப செய்ய வேண்டியது என்ன என்பதை நன்குணர்ந்த முதல்வர் அதைச் செய்து முடிப்பதே சூழவிருக்கும் கேட்டிலிருந்து தன்னை காத்துக்கொள்ள உதவும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (24-1-91) காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை 14-01 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 10. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

86. குரோம் தோல் பதனிடும் பொருட்களுக்கு சலுகை முறையில் வரிவிதிப்பது குறித்து வணிகவரிகள் மற்றும் சமய அறக்கட்டளைகள் துறையின் 25-7-1990 ஆம் நாளிட்ட 463 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1959-ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].





87. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நாட்டு மதுபான (சில்லரை விற்பனை) விதிகளை வகுப்பது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 28—5—1990 ஆம் நாளிட்ட 632 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

88. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும்வளர்ச்சிக் கழகத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ்—ஆங்கிலம்).

89. தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி வளர்ச்சிக் கழகத்தின் 1989-90-ஆம் ஆண்டிற்கான பதினாறாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

90. தமிழ்நாடு கரும்பு பண்ணைக் கழகத்தின் 1986-87ஆம் ஆண்டிற்கான பதின்மூன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

### ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

24. பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்பதாவது அறிக்கை, 1990-91 (தமிழ், ஆங்கிலம்).

25. பொதுக் கணக்குக் குழுவின் ஐம்பதாவது அறிக்கை, 1990-91 (தமிழ்)

26. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்திரண்டாவது அறிக்கை, 1990-91. (தமிழ்)

27. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாவது அறிக்கை, 1990-91 (தமிழ், ஆங்கிலம்)

28. பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி நான்காவது அறிக்கை, 1990-91 (தமிழ்).

[1991 சனவரி 23

29. 1990-91 ஆம் ஆண்டு கூடுதல் செலவுக்கான துணை மானியக் கோரிக்கைகளும் விரிவான துணை மதிப்பீடுகளும் (தமிழ், ஆங்கிலம்)

30. 1990-91-ஆம் ஆண்டிற்கான கூடுதல் மானியக் கோரிக்கைகள் மீதான அறிவிப்பு (தமிழ், ஆங்கிலம்)

31. 1990-91 ஆம் ஆண்டிற்கான இரண்டாவது துணை மதிப்பீடுகள் குறித்து மாண்புமிகு முதல் அமைச்சர் டாக்டர் மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரை (தமிழ், ஆங்கிலம்).

32. உடுக்குறியிட்ப் பெறாத வினாக்களும், விடைகளும் (எண்கள் 1 முதல் 50 வரை) (நான்காவது பட்டியல்).

144897

[திரு. எஸ். ஆர்.பாலசுப்பிரமணியம்] [1991 சனவரி 23

ஊரில் இருக்கிறது. வேறு பல இடங்களில் இல்லையென்று
சொல்லிவிட்டார்கள். பொதுத் துறை நிறுவனங்களுக்கு இது
பொருந்தாது என்று சொல்லி இட ஒதுக்கீடு செய்யவில்லை.
தாழ்த்தப்பட்டவர்களுக்கும் பழங்குடியினருக்கும் வழங்கும்
நடைமுறை பின்தங்கியவர்களுக்கு இல்லை. இட ஒதுக்கீட்டிலும்
திரு. வி. பி. சிங் ஒதுக்கீடு ஒரு இடை ஒதுக்கீடாக இல்லையா
என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல், அரசியல் சட்ட நிபுணர் டாக்டர் அம்பேத்கார்
பற்றி முதலிலேயே இந்த உரையில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.
அம்பேத்கார் அவர்கள் அன்றையதினம் ஜவஹர்லால் நேருவால்
அடையாளம் காட்டப்பட்டு, இந்திய அரசமைப்பு சட்ட விதிகள்
வரைவுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார். அதன்மூலம்
அவருடைய ஆற்றலை உலகறியச் செய்தார் பண்டித நேரு.
அவருடன் அரசியல் ரீதியாக மாறுபட்டிருந்தாலும், அவருடைய
அமைச்சரவையில் சட்ட அமைச்சராகப் பொறுப்பேற்கச்
செய்தார். அந்த சிறப்புக்குரிய அம்பேத்காருக்கு பாராளுமன்ற
வளாகத்திற்குள் சிலை வைத்து பெருமையைச் சேர்த்தது
காங்கிரஸ் ஆட்சி. இதேமாதிரி மக்களவைத் துணைத் தலைவர்
போன்ற பதவிகளை எதிர்க்கட்சிகளுக்கு அளிக்க வேண்டுமென்ற
மரபையும் அளித்தது காங்கிரஸ் கட்சிதான். ஆனால் இங்கே
சிலருடைய முகங்களைப் பார்க்கும்போது ஏன் உங்களுக்கு
துணைத் தலைவர் வீற்றிருப்பது பிடிக்கவில்லையா என்று நினைப்
பதுபோல் தோன்றுகிறது. நான் என்ன சொல்கிறேன் என்றால்..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : என்னை
''Subj ct'' -ஆக ஆக்க வேண்டாம். என்னுடைய தகுதிக்கு,
வயதுக்கு இது பெரிய பதவி. (குறுக்கீடு).

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : அவர்கள் தாழ்த்தப்
பட்ட சமுதாயத்தில் பிறந்தவர். அதிலும் (குறுக்கீடு) நீங்கள்
அதைச் சொல்ல வேண்டாம்; தீண்டாமைக் கொடுமைகளை பல
நூற்றாண்டுகளாக பல தலைமுறைகளாகக் கொடுமைகளை
அனுபவித்த ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர். மிகவும் நலிந்த
சமுதாயத்தைச் சேர்ந்தவர். எனவே, வேண்டாம் என்று சொல்ல
மாட்டேன். நான் முதல்வர் அவர்களைக் கேட்டுக் கொள்வது,
முடிந்தால் அவரை அமைச்சராக—கேபினட் அமைச்சராக ஆக்
குங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லாதீர்கள். வேறு எதை
வேண்டுமானாலும் சொல்லுங்கள், நான் உட்காருகிறேன்.
I am scrry.

அதுபோல ஊராட்சி ஒன்றியங்களின் நிதிநிலை குறித்து
ஆராயும் நிபுணர் குழுவில், காங்கிரஸ் மற்றும் அ.இ.அ.தி.மு.க.
ஆகிய பிரதான எதிர்க்கட்சிகளுக்கு இடமே கொடுக்கவில்லை.
அப்படிக் கொடுக்காமல் புதிய மரபை உருவாக்கியிருக்கிறது



1991 சனவரி 23] [திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்]

அரசு. எனவே இந்த அரசாங்கம் சமூக நீதியைப் பற்றியும்
கூசாமல் பேசுகிறது. அந்தக் குழுவில் (குறுக்கீடு).. ஏ. ஆர்.
தாமோதரன் குழுவில் காங்கிரசும் இல்லை, அ.இ.அ.தி.மு.க.
வும் இல்லை.....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புரியாமல் பேசக்
கூடாது. தவறாகக் கூட பேசலாம். புரியாமல் பேசக்கூடாது.
திருவெறும்பூர் சேர்மன் திரு. சாமிநாதன் அவர்கள் காங்கிரஸ்
காரர். அவர் அந்தக் குழுவில் இருக்கிறார்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : இருந்தால் சரி.
மெத்த மகிழ்ச்சி. இல்லையென்று நினைத்தேன் (சிரிப்பு).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இதுமாதிரிதான்
பொதுக் கூட்டங்களில் பேசிவிட்டு மக்களைத் திசை திருப்பு
கிறீர்கள். நல்லவேளை, இங்கே பேசினீர்கள்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர்
அவர்களே, நிச்சயமாக அதுபற்றி தெரியவில்லை. முதல்வர்
அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன். தனி நபர்களைப்
பற்றி பொதுக் கூட்டங்களில் நான் பேசுவதில்லை. தவறான
தகவலாகிவிட்டது. என்னிடம் இருக்கிற பேப்பரில் திரு. ஏ. ஆர்.
தாமோதரன், திரு. பி. மாணிக்கம், திரு. என். வரதராசன்,
திரு. அக்கினிராஜ் போன்ற பெயர்கள் ருக்கின்றன. எப்
படியோ இந்தப் பெயர் விடுபட்டிருக்கிறது. எப்படி விட்டுப்
போயிற்று என்று தெரியவில்லை. அதுதான் உண்மை. நான்கு
வேறு பெயர்கள் என்னிடத்தில் இருக்கின்றன. ஆனால் திரு.
சாமிநாதன் பெயர் இல்லை.

14-00 மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : சென்னை நகரத்தி
னுடைய ஷெரீப்பாக நியமிப்பதற்கு தாழ்த்தப்பட்ட, பின்
தங்கிய மக்களில் தகுதியுள்ளவராக யாரும் இந்த அரசுக்குக்
கிடைக்கவில்லையா என்பதை அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்கு நிலைமைகள் குறித்தும், நிர்வாகச் சீர்
கேடுகள் பற்றியும் பல்வேறு குற்றச்சாட்டுகள் இந்த அரசுக்கு
எதிராக எழுந்தன. அதைத் தொடர்ந்து தலைமைச் செயலாளர்,
காவல் துறை அதிகாரிகள் பதவிகளில் சில மாற்றங்கள் செய்யப்
பட்டுள்ளன. டி.ஜி.பி. கதி என்ன என்று பத்திரிகைகளில் எழுதிக்
கொண்டிருக்கிறார்கள். சட்டமன்றம் கூட்டப்பட்ட பிறகு,
தலைமைச் செயலாளர்களுடைய கூட்டம் டெல்லியில் கூட்டப்
பட்ட நேரத்தில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. உண்மையில்
அரசினால் ஏற்பட்ட தோல்விகளுக்குப் பொறுப்பு ஏற்க வேண்டி